கோரிக்கை மற்றும் இதர பிரச்சினையில் ஒப்பந்த ஷரத்துக்களைப் பொதுவாக ஏற்றுக்கொள்ள இசைந்து இருப்பதாவும், திருமண உதவி கோரிக்கைப் பிரச்சினையில் ஒரு இணக்கம் ஏற்படாத நிலையில் தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்துவது தாமதமாகி வருகிறது எனவும் அறியப் பட்டது.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை கோவை தொழிலாளர் அலுவலர் முன்பு 5-4-1990 அன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. எனவே வேலை நிறுத்தம் ஏற்படக்கூடிய நிலைமை தற்போது இல்லை என்றும் நிலைமை அமைதியாக உள்ளதாகவும் அறியப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்திரெண்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1990-91 விவாதமும் வாக்கெடுப்பும் — (தொடர்ச்சி)

கோரிக்கை எண் 17—கல்வி (தொடர்ச்சி)—

*பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்கு நன்றி.

பொதுவாக கல்விக்காக மிக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றாலும் கூட அந்த நிதி கிராம மக்களுக்குச் சென்று சேர்கிற வகையில் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டாகவேண்டும். கிராமப்புறங் களில் பள்ளிகள் மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகின்றன. இங்கே கூட புகைப்படங்களை நான் வைத்திருக்கிறேன். மரத்த டியில் பள்ளிக்கூடங்கள் நடப்பது என்பது வாடிக்கையாக ஆகிவிட் டது, எந்தத் தொகுதியில் பார்த்தாலும் தொடக்கப்பள்ளிகள் பெரும்பாலும் மரத்தடியில் நடப்பதைப் பார்க்கிறோம். பள்ளி களைச் சீரமைக்க நிதி ஒதுக்கப்படுகிறது என்று முன்பே இந்த அவையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு, 14 விழுக்காடு நிதியை அதாவது ஒன்றியத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதியில் 14 விழுக்காட்டை இதற்காகச் செலவிடவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் குறிப்பாக எந்த ஒரு ஒன்றியத்திலும் அந்த நிதி பயன்படுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பள்ளிக் கட்டடங்களுக்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகவும் குறைவு. அதைச்சற்று உயர்த்தி பள்ளிக்கட்டடங்கள் அதிகமாக வருவதற்கும், வகுப்பறைகள் இல்லாத இடங்களில் வகுப்பறைகள் கட்டித் தருவதற்கும் முயற்சியை இந்த அரசு துரிதமாக எடுக்க முன்வரவேண்டும்.

(10.40 மணி)

இடைநிலை ஆசிரியர்கள் 1,200 பேர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். தொகுப்பு ஊதியத்திலே நியமிக்கப்பட இருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். தொகுப்பு ஊதியம் வேண்டாம் என்று இப்போது எல்லோருமே இங்கே சொல்லியிருக்கிறோம். அதைத்தயவுசெய்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். சமவேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாட்டுக்கு எதிராக இந்த அரசு செயல்படாமல் இதற்கு முன்பே இந்த அரசு அப்பிரண்ட்டீஸ் டீச்சர்ஸ் என்று முன்பு இருந்தபோது நியமித்தது மீண்டும் அந்த கொள்கையை கைவிட்டுவிட்டது, அதை இங்கே நினைவுப்படுத்தி, அப்படிப்பட்ட சூழ்நிலை மீண்டும் வராமல் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுபோலவே ஆசிரியர் பயிற்சி மேல்நிலைப் பள்ளிகளிலே மீண்டும் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யவேண்டும். அங்கீகாரம் பெறாத சில நிறுவனங்கள் தொடர்ந்து. . . .

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில செய்திகள், அவ்வப்போது நான் விடை சொல்வதன் மூலமாக மேலும் தெளிவுபடும் என்று நான் நம்புகிறேன். இந்த இடைநிலை ஆசிரியர்கள் 30 ஆயிரம் பேர்கள் வேலையில்லாதவர்களாகப் பதிவு செய்து கொண்டிருக்கின்றார்கள். வேலை இல்லாதவர்களாகப் பதிவு செய்து கொண்டிருப்பவர்களில் பலபேர் தகுந்த முறையில் பயிற்சியைப் பெறாதவர்கள். அதை மறுக்க முடியாது. அப்படிப் பதிவு செய்துகொண்டு இருக்கின்றவர்களை தகுதி இல்லை என்று அறிவிக்கவும் அரசாங்கத்தால் முடியாது. எனவே மேலும் மேல்நிலைப் பள்ளியிலே அந்த பயிற்சியை, குறைபாடான பயிற்சியை வைத்து வழங்கி அந்த எண்ணிக்கையைப் பெருக்குவது சமுதாயத்திற்கு நல்லதுதானா என்பதைக் கல்லூரி ஆசிரியராக இருந்த காரணத்தினால் உறுப்பினர் விளக்குவார் என்று நம்புகிறேன்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரத்தடியிலே பள்ளிக்கூடங்கள் நடைபெறுவதாக உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். எந்த ஆண்டிலிருந்து என்பதைக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : முன்பு திராவிட முன்னேற்றக் கழக....

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கென்று எந்த, ஆண்டு எந்த ஆட்சி என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை, குருகுலமே மரத் தடியிலேதான் தொடங்கியது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சி இருந்தாலும் இந்த நிலை நீடித்துக் கொண்டே இருக்கிறது என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக் கின்றார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு கல்விக் கடன் வழங்கு வதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு இருந்தாலும்கூட அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் அது தரப்பட வில்லை என்றும் புகார்கள் சொல்லப் படுகின்றன. அதை வழங்குவதற்கு அரசு முன் வரவேண்டும்.

தொடக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளி இவற்றிலே பணியாற்று கின்ற இடைநிலை ஆசிரியர்கள், சில இடங்களிலே தலைமை ஆசிரியராக பணியாற்றுகின்றவர்கள், உயர்நிலைப் பள்ளியிலே பணியாற்றுகின்ற இடைநிலை ஆசிரியர்களை விட அதிகமான ஊதியத்தைப் பெறுகிறார்கள் என்று ஊதிய முரண்பாடு பற்றி பரவலாகப் பேசப்படுகிறது. அதைக் களைவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும். இன்னும் சொல்லப்போனால், பள்ளி ஆய்வாளர்கள் ஏ.ஈ.ஓ.ஸ் இவர்கள் எல்லாம் இந்த இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊதியத்தை வாங்கி வழங்குபவர்கள். டிஸ்பர்சிங் ஆபிசர்ஸ். அவர்களுக்கு இந்த இடைநிலை ஆசிரியர்களுக்குக் கிடைக்கின்ற ஊதியத்தைவிட மிகக்குறைவாக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இதையும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

காலியாகவுள்ள 35 டி.இ.ஓ. இடங்கள் விரைவில் நிரப்பப் படுவதற்கு அரசு முயற்சி எடுக்கவேண்டும். விளையாட்டுத் துறை மார்க்கர்களைப் பொறுத்த வரையில் அவர்களது பணியினை நிரந்தரம் செய்யவேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்பு எதிர்க்கட்சியிலே இருந்த போதே குரல் கொடுத்திருக்கிறார்கள், இந்த மன்றத்திலே, அதை நான் சென்ற ஆண்டே நினைவுப்படுத்தினேன். அதையே மீண்டும் இங்கே நினைவுப்படுத்தி, அது இன்னும் ஒரு குறை யாகவே இருக்கிறது. அவர்களை சற்று கவனிக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் 8 ஆம் வகுப்பு வரை இருக்கின்ற புத்தகங்களை தனியாருக்கு ஒப்படைக்கின்ற ஒரு நிலை இருப்பதாக செய்தி பரவிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதற்கு தெளிவான விளக்கத்தைத் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்தைச்சொல்லி அதைப்பற்றி பின்னால் விளக்கம் பெறுவதைவிட உடனே பெறுவது நல்லது, 8 ஆவது வகுப்பு வரையில் உள்ள எந்தப் புத்தகமும் தனியார் நிறுவனத்திற்கு அவர்களே தயாரிக்கவோ, அவர்களே வெளியிடவோ அனுமதிக்கப்பட மாட்டாது. இலவசப் புத்தகங்கள் வழங்குகின்ற பெரும் திட்டம் இருப்பதால அரசாங்கம் தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில் கல்லூரிக்கு வைத்திருப்பதைப் போல ரீஜினல் டைரக்டரேட் (மண்டல இயக்ககம்) உருவாக்கப்படுவது இன்னும் சரியான செயல் முறைக்கு வழிவகுக்கும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதேபோல உயர்நிலைப் பள்ளிகளிலேயும், மேல்நிலைப் பள்ளிகளிலேயும் தலைமையாசிரியர் இடம் நியமனம் பெறும்போது அவர்களுக்கு பணிமூப்பு அடிப் படையிலே வருவதற்கு சில தடைகள் இருப்பதாகவும், பணி மூப்புப்பட்டியல் வெளியிடப்படவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது. அதைப்பற்றியும் மாண்புமிகு கல்வி அமைச்சர் இங்கே விளக்கம் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

10-45 மணி

மேல்நிலைப் பள்ளிகளில், கல்லூரிகளில் பகுதி நேர ஆசிரியர்களாக ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்கு மேலாக பணி யாற்றுகிறவர்களுக்கு இன்னும் அந்தப் பணி நிரந்தரப்படுத்த படுகின்ற வாய்ப்பு இல்லை. இன்னும் ஊதிய உயர்வும் தரப் படவில்லை. ஆகவே, இதில் ஒன்றையாவது தருகின்ற அளவுக்கு, அவர்களைக் காப்பாற்றுகின்ற அளவுக்கு இந்த அரசு ஆவன செய்ய முன்வரவேண்டும். அவர்களுக்கு கருணைத் தொகையாகத் தரப்பட்ட தொகை கூட மீண்டும் வசூலிக்கப் பட்டுவிட்டது. இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்ற அவர்களுக்கு கருணைத் தொகையும் கொடுக்கின்ற அளவுக்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

வாழ்க்கைக் கல்வி புகட்டுவதற்காக பகுதி நேர தொழில் ஆசிரியர்களாக ஏறக்குறைய 1250 பேர் நியமிக்கப்பட்டிருந் தார்கள். மாதம் ரூபாய் 150 ஊதியத்திலே உயர்நிலைப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே அவர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள்.

இப்போது ஓர் அரசு ஆணை மூலம், 1650, அரசாணை மூலம் 31–3–1990-ல் இருந்து இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்றும், அவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. அதற்கு மாற்றுத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை. அதிலே ஏறத்தாழ 800 பேர் பெண்கள். பெண்களுக்காக அதிகமாக சாதித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகின்ற இந்த அரசு, இந்த 800 பெண்களையும் வீட்டுக்கு அனுப்பாமல் அவர்களுக்கு ஏதாவது மாற்றுத் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் ஆற்றுகின்ற பணி மூலம் தகுந்தவகையில் மாணவர்கள் பயன் பெற முடியவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிகிறது. தகுந்த அளவிற்கு மாணவர்களுக்குப் பயன் ஏற்படக்கூடிய முறையில் அந்தப் பயிற்சிகளை உருவாக்க, உயர்நிலைப் பள்ளி அளவிலே இருக்கிற காரணத்தால் தகுந்த வசதியோ அல்லது வாய்ப்போ இல்லை. ஒப்புக்காக ஒரு காரியம் செய்வதை விட அதை நிறுத்துவதன் மூலம் தகுந்த முயற்சிகளை பின்னர் எடுக்கலாம். பகுதி நேர ஆசிரியர்கள் நிரந்தரப் பணியிலே உள்ளவர்கள் அல்ல. அவர்தம் பணியை நிரந்தரப் பணியாக்குவது இந்தத் அரசாங்கத்தால் இயலாத காரியம். எனவே முன்கூட்டியே இயலாமையைத் தெரிவிப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மானியக் கோரிக்கையில், பக்கம் 24–ல், ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களைத் தொகுப்பு ஊதிய முறையிலே பணி அமர்த்த செலவினம் 80 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் 12 மாதங்களுக்கு கணக்கிட்டுப் பார்த்தால் 96 லட்சம் ரூபாய் ஆகிறது. அது போல 6–ஆவது பத்தியில், 200 இடைநிலை ஆசிரியர் பதவிக்காக 19 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால் ஒதுக்கீடு 16 லட்சம் மட்டுமே, அதாவது 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அளவுக்கு குறைவு ஏற்படுகிறது. அப்படிப் பார்த்தால் 10 மாத ஊதியத்தையே கணக்கிட்டிருப்பதாகத் தெரிகிறது. இது ஒப்பந்தப் பணி போல இருக்கிறது. முதலிலேயே தொகுப்பு ஊதியம் என்று சொல்லுகிறீர்கள். இது இருக்கின்ற விதிகளுக்கு முரணாக இருக்கிறது. ஏற்கெனவே இதுபற்றி பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். எனவே, இது ஒப்பந்த அடிப்படையில் வருகிறமாதிரி நிலைமை இல்லாமல் அவர்களுக்கு 12 மாதமும் ஊதியம் தர இந்த அரசு முன்வர வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாக வருவதற்கு நடுநிலைப் பள்ளிகளில் 50 பேருக்கும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 63 பேருக்கும், தமிழ் ஆசிரியர்கள் 50 பேருக்கும் பதவி உயர்வு வரும் என்று இதிலே சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் சொல்லப் போனால் இந்தப் பள்ளிகளை மேம்படுத்த சரியான கல்வித் தகுதி மற்றும் பணி மூப்பு அடிப்படையில் அவர்கள் நியமிக்கப் படுவார்களா என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் தெளிவு படுத்த வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, ஆசிரியர்களைத் தேர்வு செய்கிற முறையிலே ஓர் அடிப்படையான கருத்து கவனிக்கப்படாமல் இருந்தது, கடந்த ஆண்டுகளில் எல்லாம் செப்டம்பர், அக்டோபரில் தொடங்கி டிசம்பர், ஜனவரியில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிற தவறான ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்த ஆண்டுமுதல் அவர்களை ஜூன், ஜூலையிலேயே கூடுமானவரையில் நியமிக்க அந்தத் துறையினர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். ஜூனில் நியமிக்கப்பட்டாலும் கூட, அந்த ஆண்டில் அரசாங்கத்திலிருந்து 10 மாத அளவிற்குத் தான் அவர்கள் சம்பளம் பெற நேரிடும். அடுத்த ஆண்டு தான் 12 மாதச் சம்பளம் பெற நேரிடும். ஏனென்றால் நியமிக்கப்படுகின்ற காலமே இந்த ஆண்டில் 3 மாத காலம் கழித்துதான். ஆனால் பள்ளி திறக்கப்பட்ட உடன், ஒரு மாதக் காலத்திற்குள்ளாக பதவி நியமனங்களை கூடுமானவரை செய்யுமாறு அந்தத் துறை கவனித்துக்கொள்ளும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கட்டிடங்களுக்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை மிகவும் குறைவு. ஏனென்றால் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் வேண்டுமென்ற கோரிக்கை வருகிறபோது எல்லாம் நிதி இல்லை, நிதி இல்லை என்று சொல்கிற நிலை இருக்கிறது. நிதி வந்த பாடில்லை, இன்னும் சொல்லப்போனால், என்னுடைய தொகுதியிலே நடுப்பட்டி, வையம்பட்டி, கோவில்பட்டி ஆகிய இடங்களில் இருக்கிற பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் வேண்டுமென்று கோரிக்கை மேல் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இன்னும் அது கவனிக்கப்படாமல் இருக்கிறது. அதுபோல வளநாடு பகுதியிலே புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நிலங்கள் வாங்கப்பட்டு, அப்படியே இரண்டு ஆண்டுகளாக இருக்கிறது. இதற்கும் ஒரு வாய்ப்பு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

10.50 மணி

அரசு கலைக் கல்லூரிகளில் புதிய வகுப்புகள், பாடங்கள் தொடங்குவதற்காக 5 இலட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அது மிகவும் குறைவானது. இன்னும் அதிக அளவில் நிதி ஒதுக்கப்பட வேண்டும். அதுபோல அரசுக் கல்லூரிகளில் நூலகங்கள், வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் அடிப்படை வசதிகள் ஆகியவற்றுக்காக மற்றொரு 5 இலட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவானது. ஏனென்றால் ஏறத்தாழ 55 கல்லூரிகள் இருக்கின்றன; எனவே இந்தப் பணிகளைச் சரியான முறையிலே செய்து முடிக்க முடியாது என்று எங்களுக்குத் தெரிகிறது. எனவே சற்று அதிகமாக ஒதுக்குவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய நூலகங்கள் தொடங்க 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நூலகங்கள் தொடர்பாக ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நூலகங்களில் வாங்கப்பட்ட ஒரு சில புத்தகங்கள் ஆபாசமானவை என்ற கருத்து வெளியிலே இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, புத்தகங்கள் வாங்குவது என்பது வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு முறைகளில் வாங்கப்படுகிறது. பொது நூலகத்திற்காக வாங்கப்பட்ட புத்தகங்கள் பற்றி அப்படிப் பட்ட கருத்து வரவில்லை. ஏற்கெனவே பேசப்பட்டது. துவக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளிகளுக்காக வாங்கப்பட்ட 200 புத்தகங்களில் 2 புத்தகங்கள் பற்றி இங்கே விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினருக்கு, ஆபாசமான புத்தகங்கள் என்று தெரியுமானால், அதை எனக்குத் தெரிவிப்பாரானால், உடனடியாக அந்தப் புத்தகங்களை வாங்குவது நிறுத்தப்படும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன். அப்படித் தெரிவிக்கப்பட்டால், புத்தகங்கள் வாங்குவதை நிறுத்துவதைவிட, வாங்கிக் கொடுத்த புத்தகங்களைத் திரும்பப் பெற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஊதிய நிலுவைத் தொகை வழங்குவதிலே பெருவாரியான தாமதம் நிலவுகிறது. பல்வேறு தனியார் கல்லூரிகளில் இன்னும் இந்த ஊதியமே வழங்கப்பட தொடங்கவில்லை. ஊதிய உயர்வு பற்றி அவர்கள் கவலைப்படவேயில்லை. இதையெல்லாம் சற்று

கவனிக்க வேண்டும். இன்னும் ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ஊதிய நிலுவைத் தொகையை வழங்கு வதிலே ஒரு அதிகார எல்லை மீறல் நடந்திருக்கிறது என்று கூடக் குறிப்பிட முடியும். ஒரு தனி நபருக்கு 2 வார காலத் திற்குள்ளாக இந்த ஊதிய நிலுவைத் தொகையைப் பெற்று அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கல்வித் துறைச் செயலாளர் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் போயிருக்கிறது. அதன் அடிப்படையில் தனிப்பட்ட ஒருவருக்குத் தரப்பட்டிருக் கிறது. இதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் என்பதால் அவருக்காக அவசரமாகச் செய்யப்பட்டதா அல்லது இந்த முறையிலே அதிகார துஷ் பிரயோகம் ஆகியிருக்கிறதா என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, விவரத்தைச் சரியாகச் சொல்லாமல், ஒரு குற்றச் சாட்டுபோல வடிவம் தருவது அவ்வளவு சரியல்ல. என்ன நடைபெற்றது, எப்படி நடைபெற்றது என்பதை அறிந்துகொள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உண்மையான ஆர்வம் இருக்குமானால் அந்த விவரத்தை எங்களுக்குத் தர வேண்டும். தந்ததற்குப் பின்னால் சொல்ல வேண்டுமே தவிர, ஏதோ தவறு நடைபெற்று விட்டதுபோல ஒரு எண்ண ஓட்டத்தை மட்டும் ஏற்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல. எனவே அவர்களே எழுதி அனுப்புவார்களானால் பரிசீலித்து, உரிய பதிலை அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் துணைத் தலைவர வர்களே, அந்தக் கடிதத்தின் எண் கூட என்னிடத்தில் இருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டும், பார்க்க வேண்டுமென்றுதான் நான் சொல்லுகிறேன்.

Letter No. 39049/F1/B9/2, dated 25-5-1989 from the Education Secretary to the Director of Collegiate Education, Madras and to the Principal, Government Arts College, Villupuram and the name is one, Mr. K. Deivasigamani (மணி அடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்ன படிக்கிறீர்கள்? என்னிடம் அனுமதி வாங்கியிருக்கிறீர்களா?

பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர் களிடம் இதையும், ஒரு புகைப்படம் தரவும் அனுமதி கேட்டேன். ஆகவே, இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக் கழகங்கள் பல இருந்தாலும், அதிலே பணி யாற்றிக் கொண்டிருக்கிறவர்களது ஊதிய விகிதத்திலே பெருத்த மாறுபாடுகள், வேறுபாடுகள் இருப்பதைச் சொல்லியிருக்கிறோம். முன்பு சென்னைப் பல்கலைக் கழகமாக, தனியாக இருந்த நேரத்தில் இங்கே இருந்தவர்களை, பிரித்து பல்கலைக் கழகம் பிரிந்த நேரத்தில், பல்வேறு பல்கலைக் கழகங்களிலே பணி யாற்றிக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அவர்களுக் கெல்லாம் சென்னைப் பல்கலைக் கழகத்திலே உயர்த்தப்பட்ட ஊதியம் தரப்படுகிறது. ஆனால் அந்தந்தப் பல்கலைக் கழகங்கள் அவர்களாக பணி அமர்த்தியுள்ள அதே நிலையில் உள்ள ஊழியர்களுக்குக் குறைவான ஊதியம்தான் தரப்படுகிறது. சம வேலைக்கு சம ஊதியம் என்பது அங்கே மீறப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விரைவிலே முடியுங்கள்.

(10-55 மணி)

பேராசிரியர் க. பொன்னுசாமி: கண்காணிப்பாளர்களுக்கு ரூ. 1160 அடிப்படை ஊதியமாக இருந்தால், பாரதியார் பல்கலைக் கழகத்தில் அது ரூ. 905 ஆக இருக்கிறது. உதவி யாளருக்கு இங்கே ரூ. 905 இருந்தால், அங்கே ரூ. 705 ஆக இருக்கிறது. ஆக ஒரே பதவிக்கு ஒரே பல்கலைக் கழகத்தில் இரண்டு ஊதிய விகிதம் இருப்பதை, முரண்பாட்டை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த நேரத்திலே கவனிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் பேராசிரிய ராகப் பணியாற்றியவர். ஒரே பல்கலைக் கழகத்தில் இரண்டு ஊதியம் இருக்க முடியாது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒரு ஊதியம், பாரதியார் பல்கலைக் கழகத்தில் ஒரு ஊதியம், பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலே ஒரு ஊதியம் என்று அவரவர்களுடைய பொருளாதார நிலைக்குத் தகுந்தாற்போல் தான் ஊதிய வரையறை செய்கிறார்கள். இரண்டாவது தன்னாட்சி அமைப்பு என்ற ஒரு தகுதி அவர்களுக்கு இருக்கிறது. அந்தத் தன்னாட்சி அமைப்புக்குள் அவரவர்களும் தங்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு வேண்டியதை எடுத்துச் சொல்லி நியாயத்தைப் பெறலாம். ஆனால் தன்னாட்சி அமைப்பு என்ற அந்தத் தகுதியை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அரசாங்கம் மொத்தமாக உத்தரவிடுவது இயலாத காரியம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது இங்கே சரியாக இருக்கலாம். ஆனால் பாரதியார் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, சென்னையிலிருந்து அங்கு பணிக்கு அனுப்பப்பட்டவர்களுக்கு, அவர்கள் சென்னையில் இருந்தபோது அவர்களோடு சகப் பணி யாளர்களாகப் பணியாற்றியவர்களுக்கு என்ன ஊதியம் தரப் படுகிறதோ அது பாரதியார் பல்கலைக் கழகத்திலே தரப்படுகிறது. ஆனால் அதே பதவிக்கு பாரதியார் பல்கலைக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியில் அமர்த்தப்பட்டவர்களுக்கு குறைந்த ஊதியம் தரப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து சரி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வலியுறுத்துகிறேன்.

எம்.காம். பட்டப் படிப்பைப் பொறுத்தவரையில் 1987 வரையில் எம்.காம்., எம்ஃபில் படித்தவர்களுக்கு கல்லூரியில் பணி கொடுக்கப்பட்டது. அதற்கு இரண்டு அரசு ஆணைகள் கூட இடப்பட்டன. ஆனால் டிசம்பர் 1989, ஜனவரி 1990-ல் 500 பேர்களுக்கு நேர்முகத் தேர்வு நடந்து இருக்கிறது. ஆனால் அதற்கு எம்.காம் படித்தவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். எம்.ஃபில். படித்தவர்கள் அழைக்கப்படாமல் இருக்கிறார்கள். அந்த மேல்நிலைப் படிப்புக்கு அதிக முக்கியத் துவம் தரவேண்டும்; முன்னுரிமை தரவேண்டும்.

அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளில் 40 விழுக்காடு வரை தான் தேர்வு முடிவுகள் வருகின்றன. ஆனால் அரசு உதவி பெறாத பள்ளிகளிலே 90-லிருந்து 100 விழுக்காடு வரை ரிசல்ட் வருகிறது. அவர்கள் அப்படித் தேர்ச்சியைக் காட்டுகிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிகளிலே இருக்கிற ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அந்தப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுவ தாகச் சொல்லி இருக்கிறார்கள். இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

அதோடு ஒப்பந்த ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதை நான் மறுத்துச் சொல்லவில்லை. நிறையப் பேருக்கு கொடுத்து இருக்கிறார்கள், தேர்தல் அறிக்கையிலே ஒப்பந்த முறை நியமனம் நிறுத்தப்படும் என்று கூடச் சொல்லி இருப்பதாக நான் நினைக்கிறேன். ஆனால் இப்போது பள்ளிகளைப் பொறுத்தவரையில் இன்னும் 10 பேருக்குக் கொடுக்கப்பட வில்லை; கல்லூரியைப் பொறுத்தவரையில் இன்னும் 40 பேருக்குக் கிடைக்கவில்லை என்று வெளியிலே சொல்லுகிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் பட்டதாரி, முதுகலைப் பட்டதாரியாக

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியவர்களைக் கட்டாயப் படுத்தி, அவர்கள் இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்ற விரும்புவதாக விருப்பம் எழுதி வாங்கிக்கொண்டு, அவர்களை இடைநிலை ஆசிரியர்களாகப் பணியில் அமர்த்தி இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான, உண்மைக்கு மாறான செய்தியைப் பேசுவது நியாயம் அல்ல. ஏனென்றால் யாரையும், எந்த ஆசிரியரையும் கட்டாயப்படுத்தி செகன்டரி கிரேடு ஆசிரியர் பணி தர வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. அடல்ட் எஜுகேஷன் வயது வந்தோர் கல்வித் துறையில் 600 ரூபாய் சம்பளத்தில் 8 ஆண்டுக் காலம், 10 ஆண்டுக் காலம் கஷ்டப்பட்டும் ஒரு நிலையான பணி கிடைக்காத நிலையில் இருக்கிறோம் என்று தெரிவித்த பட்டதாரிகளுக்கும் மற்றவர்களுக்கும், உங்களுக்குத் தகுதி இருக்குமானால், செகன்டரி நிலை ஆசிரியராகப் பணியாற்ற விருப்பம் இருக்குமானால், நீங்கள் அந்தப் பணியை ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்து, உடனடியாகப் பணி வழங்குகிற நோக்கத் திற்காகவும், நிலையான பணி வழங்குவதற்காகவும் அந்தக் கடமை நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. அந்த நல்ல எண்ணத் தோடு கூடிய கடமையைக் கூடத் தவறான நோக்கத்தோடு எடுத்து வைப்பது நியாயம் அல்ல.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, வெளியிலே வந்த கருத்துகளை மட்டும் நான் சொன்னேனே தவிர மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து களை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இப்போது ஊதிய நிலுவை பெறும்போது அவர்கள் வீட்டு வசதி வாரியக் குடி யிருப்பில் தங்கி இருந்தால் அதற்கான வீட்டு வாடகைப் படியைப் பிடித்தம் செய்து விட்டார்கள். அதற்காக கல்லூரிக் கல்வி இயக்குநரால் அனுப்பிய ஆணையின்படி வீட்டு வாடகை பிடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் மற்றொரு அரசு ஆணை அதைப் பிடித்தம் செய்யக் கூடாது என்று வந்து இருக்கிறது. பிடித்த பணத்தை மீண்டும் தங்களுக்குத் தாருங்கள் என்று அவர்கள் கேட்கிறபோது, முன்பு பிடிக்கப்பட்ட பணம் எதிர் காலத்தில் வீட்டு வாடகையில் சரி செய்துகொள்ளப்படும் என்று பதில் சொல்கிறார்கள். இது ஒரு அநீதியாக இருக்கிறது. இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வு பெறுகின்ற வயதை 60 ஆக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. பீகார் பல்கலைக் கழகத்திலே அதைப் 'பிரிவிலெஜ்ட்டு ரிட்டையர்மெண்ட்' என்று சொல்லி 62 வயது வரை அனுமதித்து இருக்கிறார்கள். இங்கே 60 வயது வரையாவது அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்போது லெக்சரர், சீனியர் கிரேடு லெக்சரர், செலக்ஷன் கிரேடு லெக்சரர் என்று இருக்கின்ற பெயர்களை மாற்றி—பெயர் மாற்றுவதிலே மிகவும் பெயர் போன இந்த அரசு—அவர்களுக்கு அசிஸ்டன்ட் புரபசர், அசோசியேட் புரபசர், புரபசர் என்று வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பீகார் பல்கலைக் கழகம், நியூ டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் ஆகியவை இப்போது பணிக்காக பத்திரிகையில் விளம்பரம் செய்து இருக்கிறார்கள். அதில் அவர்கள் கேட்கும்போது, அசிஸ்டன்ட் புரபசர், அசோசியேட் புரபசர், புரபசர் என்று தான் கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, அங்கே வழங்கப்படுகின்ற அந்த நீதி இங்கேயும் வழங்கப்பட வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

11.00 மணி

டியூட்டர், டெமான்ஸ்ட்ரேட்டர் ஆகிய இவர்களுடைய பணிக் காலத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. முதல் மூன்று ஆண்டுகள் எடுக்கப்படப் போவதில்லை என்று பரவலாக வெளியிலே ஒரு கருத்து இருக்கிறது. அதில் நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1975ஆம் ஆண்டுக்கு முன்னாலே பணியில் சேர்ந்தவர்களுக்கு எந்தப் பலனும் அதனால் வரவில்லை. ஆகவே, அவர்களுக்கும் ஊறு நேராதவாறு கணக்கீடு இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலைப் பளுவைப்பற்றி முடிவு செய்ய இருக்கின்ற குழுவில் அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியர் இயக்கங்களையும் அழைத்துப் பேச வேண்டும். அப்பொழுதுதான் அது சரியாக இருக்கும்.

நான்—டீச்சிங் ஸ்டாஃப்— ஆசிரியரல்லாப் பணியாளர்கள் — அவர்களுடைய விகிதாச்சாரம் இருபது ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்ததைப் போலவே இப்பொழுதும் இருக்கிறது. ஆனால் பணிப் பளு அதிகரித்திருக்கிறது. ஆகவே, அதற்கேற்றவாறு அவர்களுக்குப் பதவிகள் தர வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இராஜராஜன் விருதைப்பற்றி நான் அதிகமாகப் பேசக் கூடாது. இருந்தாலும் ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். படைப்பிலக்கியத்திற்குத் தர வேண்டிய பரிசு ஒரு தழுவல் புத்தகத்திற்குத் தரப்பட்டிருக்கிறது என்ற கருத்து பரவலாக வெளியிலே இருக்கிறது. அதுவும் பதவியில் இருக்கும் பொழுது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தகுதியானவர், அதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் எந்தப் புத்தகம் அதைத் தருவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டதோ அது ஒரு தழுவல் என்ற பேச்சு வெளியிலே அடிபடுகிறது. அவர்களுடைய முன்னுரையிலே கூட, ''எனது இளவல் தென்னரசு எழுதிய செம்மாதுளை என்னும் நூல் தொண்ணூறு பக்கங்களைக் கொண்ட உணர்ச்சித் தொகுப்பு. அந்தச் சிறு கதையைத் தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாற்றின் பின்னணியோடு வீரமும், காதலும், பாசமும் பெருக்கெடுக்கும் கற்பனைப் பெட்டகமாக உருவாக்க விரும்பினேன். அந்த விருப்பத்தின் விளைவே இந்தத் தென்பாண்டிச் சிங்கம்'' என்று சொல்லியிருக்கிறார்களாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இது வெளியிலே தவறாகப் பேசப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை வராத அளவிற்கு...

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவரவர்களே, தழுவல் என்பதற்கு வேறு பொருள். இது தழுவல் அல்ல. ஒரு மூலக் கருவை எடுத்து, விரிவாக எழுதப்பட்ட ஒரு நூலுக்கு, அந்த நூலினுடைய தரத்தை நோக்கித்தான், ஒரு பல்கலைக் கழகத்திலே உள்ள ஆய்வாளர்கள், தகுதியுடையவர்கள் தீர்மானிப்பார்களே தவிர, திரு. பொன்னுசாமி அவர்கள் சொல்வதைப்போல அந்த நூல் எழுதியவருக்குத் தகுதி இருக்கிறதா அல்லவா என்ற அடிப்படையில் அது பேசப்படக் கூடிய ஒன்று அல்ல. அவர்களுக்குத் தகுதி இருக்கிறது என்று பொன்னுசாமி அவர்களே சொன்னார்கள். அவர்களுக்குத் தகுதி இருக்கிறது. அவர்கள் எழுதிய நூலுக்குத் தகுதி இல்லை என்றால், அவர் அதைப் பட்டிமன்றத்திலே வாதிக்க வேண்டுமே தவிர, ஒரு பல்கலைக் கழகத்தினுடைய முடிவைப் பற்றி அவ்வளவு எளிதாக ஒரு கருத்தை ஒரு உறுப்பினர் சொல்வது, இந்த அவை ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல.

பேராசிரியர் க. பொன்னுசாமி: தலைவரவர்களே, இறுதியாகத் தெரிவு செய்யப்பட்ட நான்கு புத்தகங்களில் ஒரு புத்தகத்தின் பெயர் மட்டும்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் மூன்று புத்தகங்கள் என்ன என்று வெளியிலே தெரியவில்லை என்று சொல்கிறார்கள். அதைத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 3] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் பலயிடங்களில் கூரைகள் இல்லாமல், பழுது சரி செய்யப்படாமல் இருக்கின்றன. அவற்றைச் சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

என்பூலாம்பட்டி, அரசு நிலைபாளையம் போன்ற இடங்களிலே மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அங்கே மாணவர் விடுதி அமைத்தால்தான் சரியாக வரும் என்பதால், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதியை அமைத்துத் தர வேண்டும்.

எல்லா உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளிலேயும் கழிப்பறை வசதியும், குடிநீர் வசதியும் நிச்சயமாக இருக்கவேண்டுமென்ற முடிவெடுத்து இந்த அரசு செயல்பட்டால் சரியாக இருக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்திலே இருக்கின்ற பேராசிரியர் கட்சித் தொடர்பான பேட்ஜ் அணிந்து கொண்டு செயற்குழுவிலே அமர்ந்திருக்கிறார் என்றுகூட வெளியிலே பேச்சு வருகிறது. தை அரசு அனுமதிக்கிறதா? இப்படிப்பட்ட அனுமதியை எல்லோருக்கும் தருமா என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு பேராசிரியர் நியமனம் செய்யப்பட்டபொழுது சில தவறுகள் நடந்ததாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் தயவுசெய்து அந்தக் கோப்புகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அங்கே ஒரு பேராசிரியர் அல்லது ஒரு கல்லூரி பிரின்சிபால்தான் போர்ட் ஆப் ஸ்டடீஸ் சேர்மனாக இருந்து தேர்வு செய்ய வேண்டுமென்ற விதி இருக்க, ஒரு ரீடர் அங்கே போர்ட் ஆப் ஸ்டடீஸ் சேர்மனாக வந்து அவர் மூலமாக ஒரு பேராசிரியர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒரு பேராசிரியர் இப்படிப்பட்ட விளக்கங்களை இங்கே சொல்வது அவ்வளவு முறை அல்ல. பல்கலைக் கழக விதிமுறைகள் எப்படி எப்படி இருக்கின்றனவோ அதற்கேற்ப துணைவேந்தர் பொறுப்பு ஏற்று அவற்றை நடத்த வேண்டும். துணைவேந்தருக்கு உரிய அந்த உரிமையை ஒரு அமைச்சர் எடுத்துக் கொள்ளக் கூடாது. துணைவேந்தருக்கு ஆலோசனை வழங்கலாமே தவிர, நடைபெறுகின்ற காரியங்கள் எந்த முறைப்படி நடைபெற வேண்டுமோ அப்படி நடத்துவதற்குத் துணைவேந்தருக்கும், ஆட்சிக் குழுவுக்கும்—சிண்டிகேட் உறுப்பினருக்கும் முழு உரிமை இருக்கிறது. அப்படி ஏதேனும் குறையிருக்குமானால் உறுப்பினர் அவர்களுக்கே சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கடிதம் எழுதி தகுந்த பதிலை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: தலைவரவர்களே, நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இந்த அவையிலேயே பேராசிரியர்கள் பதவி நியமனம் குறித்து முன்பே விவாதம் நிகழ்ந்திருக்கிறது. நான் கடந்த ஆண்டுகளிலே நடந்தவற்றையெல்லாம் படித்துப் பார்த்திருக்கிறேன். நான் சொல்வதில் தவறில்லை என்றால் சொல்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கூட இங்கே வாதிட்டு இருக்கிறார்கள். அதை நான் படித்து இருக்கிறேன். அந்த அடிப்படையில்தான் சொல்கிறேன். தயவுசெய்து கோப்புகளை வரவழைத்துப் பாருங்கள். பல்கலைக் கழகத்தில் முடிவு செய்ய முடியாது என்றால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். முன்பு பல்கலைக் கழகம் தொடர்பான விவாதத்தில் கூட நான் சொன்னேன்.

11.05 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படி சொல்ல வேண்டுமென்றால் முன்கூட்டி எனக்குத் தெரிவித்து அது பற்றி என்னுடைய கருத்தைத் தெரிந்துகொண்டு, அதற்குப் பிறகு இங்கே பேச வேண்டுமே தவிர, எனக்கே விவரம் தெரியாத ஒரு செய்தியைக் குறித்து அவர் ஏறத்தாழ ஒரு மூடுபொருளாக, மறைபொருளாக இங்கே பேசிக்கொண்டிருப்பது இந்த அவையினுடைய நேரத்தை வீணாக்குவது ஆகும். தேவையானால், விரும்பினால் மாண்புமிகு உறுப்பினர் எனக்கு விவரத்தை எழுதி அனுப்பி, நான் அவர்களிடத்தில் உரையாடிய, பின்னர் துணை வேந்தரைக் கேட்பது நியாயமாக இருக்கும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் நல்ல வேளையாக சட்டமன்ற உறுப்பினராக ஆகிவிட்டீர்கள், மாணவர்கள் தப்பித்து விட்டார்கள் உங்களிடமிருந்து. (குறுக்கீடு) ஒரே ஒரு மணித்துளிதான் என்னால் தரமுடியும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் இதை ஆலோசனையாகத்தான் சொல்கிறேன். நான் இதை முன்பே சொன்னேன். பல்கலைக்கழகம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டபோது பேசினேன். பல்கலைக்கழகத்திற்கு சட்டங்களை இயற்றி இந்த மன்றம் தந்து விடுகிறது. அந்த சட்டங்கள் அங்கே மீறப்படுகிறபோது, அதைத் தடுப்பதற்கு இந்த மன்றத்தால் முடியவில்லை என்ற நிலை இருப்பது சரியாக இல்லை. ஆகவே சரியாக அந்தச் சட்டங்களை இயற்றவேண்டும், அதற்கான வரைமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டுமென்று முன்பே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் பற்றி பேசுவதில் தவறு இல்லை. நான் இந்த மன்றத்தில் பேசியிருக்கிறேன்என்றால் ஆதாரத்தோடு, இன்னார், இன்னார், இப்படி இப்படி, இன்னின்ன வகையில் என்று பேசியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் பேசியது அப்படியல்ல, ஒரு பூடகமாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே

பல்கலைக் கழகத்தினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு நடவடிக்கை அங்கே எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நான் பேசிய பேச்சுக்கள் சிமெண்ட்—ரொம்ப கெட்டியானது—கான்கிரீட். (மேசையைத் தட்டும் ஒலி).

பேராசிரியர் க. பொன்னுசாமி : துணைத் தலைவர் அவர்களே, இங்கே ஆதாரத்தோடு பேசுவதற்கு எனக்கு அனுமதி கிடைக்குமானால், ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன, நான் பேசத் தயாராக இருக்கிறேன். எப்படி நடந்தது, எங்கெங்கே என்ன நடந்தது, யார் யார் அங்கே கொண்டு வரப்பட்டார்கள், யாரை நியமித்தார்கள், எதனால் நியமித்தார்கள் என்பதைக்கூட சொல்ல நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதுவல்ல பிரச்சினை. அவர்கள் ஏதாவது ஆதாரம் வைத்திருப்பதாகச் சொன்னால், முன்கூட்டியே எனக்குத் தெரிவித்து, நான் புரிந்துகொண்டதற்குப் பிறகு, விவாதிக்க வாய்ப்பு கிடைத்தால் அதை விவாதிக்கலாமே தவிர, நினைத்தபோது, நினைத்த செய்தியை விவாதிக்க நேரத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது. அது உறுப்பினர் போன்று, அனுபவத்தோடு எண்ணிப் பார்ப்பவர்களுக்கு ஏற்றதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்..

பேராசிரியர் க. பொன்னுசாமி : துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன்.................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியாது. 30 மணித்துளிகளுக்கு மேலே எடுத்துக் கொண்டீர்கள். ஓர் உறுப்பினருக்கு 10 மணித்துளிகள் என்ற அளவில்தான் அனுமதித்து இருக்கிறேன். நீங்கள், திரு. செங்கோட்டையன் கூடப் பேசமுடியாத அளவிற்கு நேரத்தை எடுத்துக் கொண்டு விட்டீர்கள். உங்கள் ஆதாரத்தை வைத்துக் கொண்டு அடுத்த வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பேசுங்கள். இப்போது உட்காருங்கள்.

திரு. வே. பெரியசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது தொகுப்பு ஊதியம் 800 ரூபாய் பற்றி சொன்னார்கள். அதிலே ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மட்டும்தான் கிராமங்களில் ஆரம்பிக்க இருப்பதாகவும், அங்கேயுள்ள பள்ளிகளில் பெண் ஆசிரியர்களை நியமிக்க இருப்பதாகவும் சொன்னார்கள். அந்த ஆசிரியர்களுக்கு 800 ரூபாய் சம்பளம்தான் கொடுக்க முடியும் என்றும், அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சி பெற்ற காரணத்தால், சரியான பயிற்சி பெறவில்லை என்றும் சொன்னார்கள். கடந்த 4, 5 மாதங்களுக்கு முன்பு இதே..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Point of order. Point of clarification ஆகிய இந்த இரண்டிற்கும் வித்தியாசம் தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள்.

*திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'செலவத்துள் எல்லாம் தலையாய செல்வம், என்று செந்நாப் போதரால் சிறப்பிக்கப்பட்ட கல்வியின் சிறப்பைக் கருதி மற்றெல்லா துறைகளைக் காட்டிலும் முன்னுரிமை தந்து அதற்காக இந்த ஆண்டிற்கு 1,050 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு இந்த அரசையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வி மானியக் கோரிக்கையில் எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Learning follow various roads
But we note the start not to an end.

என்று தத்துவக் கவிஞர் கலீல் கிப்ரான் பாடிய வரிகள் எனக்கு நினைவிற்கு வருகிறது.

11.10 மணி

கல்வி தொடக்க நிலையில் இருந்தாலும் கூட, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அதுவும் நமது இனமானப் பேராசிரியர், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கல்வி அமைச்சரானவுடன், தொடக்க நிலையிலிருந்த கல்வி, இன்றைக்கு மெல்லமெல்ல படிப்படியாக உயர்ந்து வருவது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல, மெக்காலே தொடங்கி வைத்த இந்தக் கல்வி இன்றைய நிலையில், எவ்வளவோ மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் கண்டிருக்கிறது. "A teacher should begin by teaching himself before teaching others" என்று என்னுடைய பேராசிரியர் அடிக்கடி நான் கல்லூரியில்படிக்கின்ற காலத்தில் குறிப்பிட்ட அந்த வரிகள்தான் எனக்குநினைவுக்கு வருகிறது. அந்த இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில், பயிற்சி தருகிற வகையில், இன்றைக்கு ஆசிரியர் பணி பயிற்சி இயக்கம் என்று ஒன்றை உருவாக்கி இருப்பது உண்மையிலேயே நல்லபலனைத் தரும் என்று நான் நம்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இடைநிலை ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 600 ரூபாய் என்று இருந்ததை இன்றைக்கு 1200 ரூபாய் என்று உயர்த்தி இருப்பது உண்மையிலேயே ஆசிரியர்களை ஊக்கப்படுத்துகின்ற ஒரு செயலாகும் என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, தனியார் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் மருந்துச் செலவுக்காக, மருத்துவ படியாக, ரூபாய் 15 தந்து நீண்ட கால கோரிக்கையை இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றியிருக்கிறது. அது மட்டுமல்ல, ஆசிரியர்களுடைய பல்வேறு மட்டங்களிலே பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க குழுக்கள் அமைக்கப்பட்டு இருப்பது, பாராட்டப் படவேண்டிய ஒன்றாகும். கல்வித்துறையை வழிநடத்த, பேராசிரியரைக் காட்டிலும் பொருத்தமானவர், பொருத்தமான அமைச்சர் யாரும் இல்லை என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. கடந்த சில ஆண்டுகளாக கல்வி சந்தைச் சரக்காகி இருந்த நிலை மாறி இன்றைக்கு நல்ல நிலையை எய்திருக்கிறது. காளான்களைப் போல முளைத்த தனியார் கல்வி நிறுவனங்கள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு விட்டாலும்கூட, சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து, மீண்டும் நுழையத் துடிப்பதைக் கண்டு, இந்த அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியின் மாண்பினை உணர்ந்துள்ள இந்த அரசு, உறுதியாக நின்று கல்வி வியாபாரிகளை விரட்டியடிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அக்கால குருகுல மாணவனுக்கு இருந்த ஒழுக்கம், சான்றாண்மை கீழ்ப்படிதல் எல்லாம் காலப்போக்கில் மாறி வருவதைப் பார்க்கிறோம். பேரவைத் தலைவருடைய காலத்திற்கும், நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்களுடைய மாணவப் பருவத்திற்கும் என்னுடைய மாணவ பருவத்திற்கும், என்னுடைய குழந்தையினுடைய மாணவப் பருவத்திற்கும் நிச்சயமாக நிறைய வேறுபாடு இருக்கின்றது. இப்போது தனியார் பள்ளிகளிலே குறிப்பாக கிறிஸ்துவர்களால் நடத்தப்படுகின்ற பள்ளிகளிலே நல்லொழுக்க போதனை பாட வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அதைப்போல நம்முடைய அரசுப் பள்ளிகளிலே நல்லொழுக்கப் போதனை வகுப்புகளை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதையெல்லாம் விட, சிந்தனை வகுப்பு 'மாரல் இன்ஸ்ட்ரக்சன்ஸ்' என்று சொல்வதை விட, சிந்தனை வகுப்பு ஒன்றைத் துவக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற தமிழ்நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கை நெறிமுறைகள், அவர்களுடைய சிந்தனைகள், தமிழகத்தின் ஓரே

தலைவராம் கலைஞரின் இலக்கியச் சிந்தனைகள், பகுத்தறிவுக் கொள்கைகள், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் பேராசிரியர் போன்றோர்களின் சட்டமன்ற வாதங்கள் போன்றவற்றைக் கொண்டு, பொதுவான சிந்தனைக்குச் சுவையான வகுப்புகளை நடத்த முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மணி 11.15

இதே சட்ட மன்றத்தில் அண்ணா அவர்கள் முதல்வராக இருக்கும்போது, காங்கிரஸ் கட்சியில் இருந்த மறைந்த சட்ட மன்ற உறுப்பினர் விநாயகம் அவர்கள் அனல் பறக்கப் பேசி முடிவாக ''Your days are numbered'' என்று கூறவும், அனல் மேல் வீசிய புனலாய் அண்ணா அவர்கள் எழுந்து நின்று, ''my steps are measured'' என்று அடக்கமாக விடை அளித்ததும், பசுமரத்தாணியைப் போல இன்றைக்கு ஒவ்வொருவர் நெஞ்சிலும் பதிந்து இருக்கிறது. இத்தகைய அரசியல் நாகரிகங்களை மாறி வரும் சூழ்நிலையில் வளரும் தலைமுறையினர் மறந்துவிடக் கூடாது என்பதாலே வளரும் தலைமுறையினருக்கு ஏட்டுக் கல்வியுடன் இத்தகைய வாழ்க்கை கல்வியும்கூட சேர்த்து பயிற்றுவித்து பயனடைய செய்யவேண்டுமென்ற வகையிலே இந்தச் சிந்தனை வகுப்பு செயல்படத் தொடங்க வேண்டுமென்று பேராசிரியர் அவர்களை இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம் என்று நெல்லையில் தோன்ற இருக்கும் பல்கலைக் கழகத்திற்குப் பெயர் சூட்டியவர் அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆவார். பெயர் சூட்டி அழகு பார்ப்பதிலே அவருக்கு நிகர் அவரே. அண்ணாவிற்கு ஓர் பல்கலைக் கழகம், தந்தை பெரியாருக்கு ஓர் பல்கலைக் கழகம், பெருந்தலைவர் காமராசருக்கு ஓர் பல்கலைக் கழகம் மக்கள் திலகத்திற்கு ஓர் பல்கலைக் கழகம். இப்படி எல்லோருக்கும் அவர்களுடைய நினைவாக பல்கலைக் கழகம் இருந்த போதிலும் அவற்றுக்கு எல்லாம் காரண கர்த்தாவாக விளங்கும கலைஞர் புகழ்பாட ஒரு பல்கலைக் கழகம் அமையவில்லையே என்ற ஏக்கம் இந்த அவையிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கின்ற தமிழர்களுக்கு மட்டுமல்லாமல், உலகத்திலே வாழ்கின்ற உலகத் தமிழர்கள் அத்தனை பேருக்கும் இந்த ஏக்கம் இருப்பதை மறக்கலாகாது என்பதனை இந்த நேரத்திலே பேராசிரியர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நம்முடைய தலைவர் அவர்கள் வரவு-செலவு திட்டத்திலே ஒரு இடத்திலே குறிப்பிட்டிருக்கின்றார். பாலை வனத்தில் ஓர் பசும்சோலை. —an oasis in the desert. நிதிநிலை அறிக்கையில் ஒரு வருவாயைச் சுட்டிக்காட்டிய கலைஞர் இன்று அரசியல் வனத்தில் ஓர் அழகிய பசுஞ்சோலையாகக் காட்சியளிக்கின்றார். As a faithful servant of our land, he is an oasis in the desert, ready to quench the thirst of the wayfarer. இம்மாபெரும்

தலைவரை மறவாது போற்றும் வகையிலே அவர் உயிருக்கு உயிராக விரும்பும் அந்தத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அவரே மறுத்தாலும் அவருடைய பெயரைச் சூட்டி பெருமைப் படுத்த வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை, பேராசிரியரை நான் இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக 'மொழி ஞாயிறு' தேவநேயப் பாவாணரை முழுமையாகப் பயன்படுத்தவேண்டுமென்ற அவாவில் கலைஞரால் கொண்டுவரப்பட்ட 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் இயக்ககம்' இடையிலே போய்விட்டது. தமிழை வைத்து பிழைத்துக் கொண்டிருக்கும் போலிகள் எல்லாம், எல்லா வசதிகளுடன் பவனி வர அந்தத் தேவநேயப் பாவாணர் தமிழாகவே வாழ்ந்த மொழி ஞாயிறு, தன்னுடைய ஆராய்ச்சி பணிக்காக அங்கிங்கு சென்றுவர ஒரு சிற்றுந்துகூட அமைத்துக் கொடுக்கமுடியாமல், தன்னுடைய அலுவல்களை பார்ப்பதற்குக் கூட அலுவலக கட்டிடம் இல்லாமல், இருந்த காலக்கட்டத்தில், மிகப் பரிதாப கரமாக இறந்தது இந்த அரசின் கவனத்தில் நன்கு நினை விருக்கும். இருந்தாலும்கூட, கலைஞர் அவர்களால் துவக்கப் பட்ட அந்தச் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் இயக்ககம்' அகர முதலி திட்டத்தை முந்தைய ஆட்சியாளர்களால் மூலையில் கிடந்த அந்தத் திட்டத்தை செயல்படாமல் கிடந்த அந்தத் திட்டத்தை இன்றைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டி வளர்ப்பது மிகவும் பாராட்டிற்குரியது. அதேசமயம் 1977-ல் தொடங்கப் பட்டு, மக்கள் வரிப் பணத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு 1988 வரை இந்த இயக்ககம் என்ன சாதித்து வந்தது என்பதை அரசு விசாரிக்கவேண்டும்.

மேலும் இத்தகைய மொழிசார் ஆய்வுப் பணிகள் அரசுப் பணி போல் அமையாது, கலைஞரால் தொடங்கப்பட்ட உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம் போன்ற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டால் விளைவுகள் அதிகமாயிருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாணவச் செல்வங்களுக்கு இலவச உணவு, உடை, புத்தகம் காலணி, பயணச் செலவு அனைத்தையும் தந்து, தலைவாரி பூச்சூட்டி பாடசாலைக்கு அனுப்பி வைத்த நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே நேரு பெரு மகனார் நினைவாக தொடங்கப்பட்ட ஜவகர் சிறுவர் இல்லம், அதற்கு ஒரு கட்டிட நிதி ஏற்படுத்தி அதிலிருந்து வரும் வட்டித் தொகையை அங்கேயுள்ள குழந்தைகள் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தது அகியவை பாராட்டத்தக்கதாகும். சென்னை நகரிலுள்ள தனியார், அரசினர் நகராட்சிப் பள்ளகளில் பயிலும் மாணவ மாணவியர் பள்ளிகளில் கிடைக்காத வாய்ப்புகளை இங்கு வந்து பயன்படுத்தினர்.

அதைப் போன்று மாவட்டங்களிலும் இத்தகை நிறுவனங்கள் பண்டித நேரு மாணவர் மன்றம் என்று அமைக்கப்பட்டு, கல்வித் துறையின் கண்காணிப்பில் வளரவேண்டும்.

11-20 மணி

அத்தோடு எனது தொகுதிப் பிரச்சினை ஒரு சிலவற்றையும் நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் கூடலூர் இராஜாங்கம் அவர்கள் நினைவாக கூடலூரிலே ஒரு உயர்நிலைப் பள்ளி நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்கு இன்னும் சுற்றுச் சுவர் கிடையாது. பள்ளிக் கட்டிடங்கள் எல்லாம் மிகவும் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. ஒரு வகுப்பிற்கு 100 மாணவர்களுக்கு மேல் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் பரிசீலனை செய்து அவர்கள் நினைவு புகழ்பாட அந்தப் பள்ளியைசீர் படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அதே போல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் கே.பி. கோபால் அவர்கள் தாயார் நினைவாக துவக்கப்பட்ட என்.எஸ்.கே.பி. தொடக்கப்பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது.

அதே போல முன்னாள் சட்டமன்ற என்.கே. பாண்டிய ராஜன் அவர்களுடைய குடும்பத்தார் சார்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கிற கஸ்தூரிபாய் உயர்நிலைப் பள்ளியி லேயும் போதுமான ஆசிரியர்கள் இல்லாதது குறித்தும் பேரா சிரியர் அவர்கள் கவனத்தில் கொண்டு, இது போன்று தொகுதியிலே உள்ள பல பள்ளிகளிலும் இது போன்ற பிரச் சினைகள் குறித்தும் செம்மை படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, எனது தொகுதியில் நிலையூக பெண்களுக்கு என்று மகளிர் கல்லூரி இல்லை. மகளிருக்கான தொழில் நுட்பக் கல்லூரி இல்லை. எனது தொகுதியிலே அந்த மகளிர் கல்லூரி யையும் தொழில்நுட்பக் கல்லூரியையும் அமைக்க அரசு முன் வருமேயானால் எனது குடும்பத்தின் சார்பாக மறைந்த கம்பம் நடராசன் அவர்கள் நினைவாக நிலத்தை இலவசமாக தரு வதற்கு என்னுடைய குடும்பம் முன் வரத் தயார் என்று கூறி அமைச்சருடைய பதில் பின் வரும் என்று எதிர் பார்த்து வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

THIRU OSCAR C. NIGLI : Hon. Mr. Deputy Speaker Sir at the very outset I must congratulate the Government for giving the highest priority to Education by allocating about Rs.1050 crores,-- thanks to our Hon. Education Minister, an eminent Educationsist. Hundred per cent enrolment in the age group of 6-11 years is, I would say, extremely gratifying. It is a model to other States in the country. So also the idea of a single teacher primary school is a good one, because, considering the resources constraint, this is possibly one

of the best solutions. The idea of every literate person coming forward to educate another illiterate person is really a novel idea--each one teach one idealogy, Perhaps if we proceed at this rate we will be able to out-shine the neighbouring State of Kerala as far as literacy is concerned. However, unfortunately the dictum of 'each one teach one' has become 'each one cheat one'. But let us hope that all these schemes will go a long way in benefiting the people. Among these schemes, I would say, the particular scheme which deserves mention, is the drive to retain the girl children in schools. Various schemes like the marriage grants, starting of I.T.I. schools in Coimbatore, Trichy and Salem will definitly help the people to great extent. There is a high infant mortality rate, particularly among the female children. Female children are being killed becuase of the problem of dowry and because of the faet of not wanting to have a female child. But the idea of this Government is really far-sighted and it would help in preventing the infant mortality. particularly as far as female children are concerned.

About the U.G.C. scales I would like to say a few words These scales were being denied to the teachers for so many years. The previous Government were dragging their feet for many years and within one month of this Government assuming power, U.G.C. scales were given to 16,000 teachers at a cost Rs. 57.38 crores apart from A.I.T. scales at a cost of Rs. 19.45 crores.

The other schemes of School Improvement Programme, District Library Conferences, are indeed good schemes, which will promote teacher development, library development, and ovell development of education.

There is one aspect which has been spoken abont much by almost all the Hon. Members is, with regard to the poor performance at the I.A.S., I.P.S. and other Central Services Examinations. This is not something new and we were talking about it for the fast ten years, but nothing really has been done about it. what has to be done really is, I would say, that the syllabus has to be re-oriented to suit the I.A.S. Examination. We have to find out what is happening in the Northern Universities. In Northern Universities the syllabus is more or less in line, or in keeping with the I.A.S. syllabus: whereas our syllabus to a large extent is out-dated even today. It has to be revised, reviewed and changed in the face of changing syllabi at the Central level. So, we have to do some serious thinking on this. Apart from this, we should also think in terms of starting more and more good I.A.S. Training Institute

Of course, there are plenty of them in Tamil Nadu, but they are not serving the purpose which they are bound to. We still find people from Tamil Nadu going all the way to Delhi Rau's I.A.S. Training Institute to prepare for I.A.S. examination. Last year only two students from Tamil Nadu got through I.A.S. but they attended the Rau's I.A.S. Training Institute, Delhi. This is really a very sad state of affairs. Something has to be done. In Madras if we go back to 1960, out of 80 I.A.S. Officers, 50 per cent of them were from Tamil Nadu and I think many of the I.A.S. Officers sitting here are from Tamil Nadu itself. So, what has happened now and what is going to happen in the near future, we have to ponder over. If we do not have I.A.S. officers from our own state, it will create a real problem. These are some aspects of the question.

((11.25 மணி

About Book Banks, the Government should take steps to increase the quantum of book banks, so that the poorer children and children in the rural areas are benefited Those children cannot afford to have their own books. Then the Tamil Nadu Government has started a separate recruitment of teachers. There is also a move to expend this system to other areas as well. This is indeed a very good step, because it will create a sense of fairness in the recruitment. I must say that the Education Department has done a very good thing in this, because it will create a greater sense of confidence and a greater sense of fairness. I would also request the Government to think in terms of more Deemed Universities in our state. We have only one Deemed University in Tamil Nadu. One autonomous College has been converted into a Deemed University. I think definitely we could have one or two more Deemed Universities in future.

About autonomous colleges, I think the concept itself has to be reviewed. Autonomous colleges do not have the freedom which they are supposed to have, except framing of syllabi and a few other things. There should be a review of autonomous colleges at our State level.

About Libraries, I have already mentioned that there has been enrolment in libraries. We must see that the existing libraries in Madras and other parts of Tamil Nadu are improved. For example, one model library is the British Council Library. We can make a study into its working and see how there is so much demand for the books in that Library and what the service conditions are there, etc.

Then, I would like to move on to another burning topic which has been discussed, debated and disputed by so many people and which has been raised time and again during question hour in this house and that is about the matriculation schools and C.B. S.E. schools. As per our estimates, there are about 700 matriculation schools and 300 CBSE schools in Tamil Nadu. Out of these 700 matriculation schools, only 192 schools are higher secondary schools. The rest of the schools are just part of the mushroom growth of such schools and the Government have no control over those schools, I was myself wondering at the rate at which they were coming up, since at every street they are having a matriculation school. In fact I would like to ask a question. There are three Inspectors of matriculation schools. what are those people doing? Are they not able to control the matriculation schools? Why do we have three officers who are not able to control these schools? I would like to make certain recommendations on this. One is that the norms on which recognition is granted should be reviewed, They should be tightened. It should not be so easily given Recognition to matriculation schools should not be given so easily, unless they have the required persons and facilities. Secondly, the service condi ions of the teachers have to be looked into in these matriculation schools, be cause the service conditions are really awful. Thirdly, the infrastructure they have, as all of us know, some of these schools are located just in huts and thatched sheds. This has to be reviewed. Then there is the question of fee regulation. These schools have a tendency to raise the fee as and when they please. Now the latest excuse for raising the fees, of course, is that the salaries of teachers have gone up and so they have to raise the fees. Even then, there can be only a limited increase. Whatever may be the increase, it should be done with the concurrence of the Government. These schools cannot raise the fees four, five or ten times. That is one aspect of the matter. The other aspect is donation. This subject has already been talked about. This is becoming cancer in our institutions. I think ultimately it will ea up, unless we do something about it. In fact I would say that we can even make it a cognisable offence. The collection of donation by any of these managements should be deemed to be a cognisable ffence and these people should be arrested. Only then they will think twice before collecting donation.. not in hundreds but in thousands—25,000 or 40,000. About self-finance institutions, I will refer to them later.

11.30 மணி

These Matriculation Schools should not be a burden on the Government. They are too many in number and, so, the Government can't bear the financial burden. But, I think that, at least, one thing could

be done. A sum of Rs. 5 per month could be collected from every teacher and the management should be asked to pay a matching amount of Rs. 5. The amount so collected should be remitted into the Government Treasury. At the time of retirement of the teachers, they could be given some amount as a lump-sum gratuity which is now being denied to teachers, working in these schools. I would like the Hon. Minister to think about this particular aspect because, as we all know, something has to be done to improve the service conditions of the teachers working in these Matriculation Schools. But, at the same time, I would say that what we should ultimately do if we are really and genuinely interested in solving this problem of mushroom growth of Matriculation and CBSE Schools is that we should appoint a high-power committee to go into the working and review the working of these Schools. As the Hon. Minister has pointed out, we have no control over the CBSE Schools. But I would like to say one thing in this regard. We can do one simple thing. We can just withdraw the No-objection Certificates which were given to these CBSE Schools. If that is done, these schools will crawl on their knees. Secondly, it has been mentioned even by the Central Board of Secondary Education that the State Government has a right to appoint an officer in case the Central Board has not already done so. So, we can appoint an officer to look into the working of the CBSE Schools. Sir, I think I have explained in detail my four-point charter about these schools. However, I would like to repeat the points briefly. They are: (i) the norms of recognition are to be tightened; (ii) the service conditions of teachers should be improved: (iii) the infrastructure should be improved; and (iv) fee-regulation should be done only with the concurrence of the Government and donations should not be allowed.

Now, I would like to say a few words about the self-finnacing institutions. Here again, the Government appointed a high-power committee to monitor the working of these institutions and the Commi- gave its recommendations. Accordingly, some of these institutions were de-recognised, because they lacked the necessary facilities. Unfortunately, another Central body known as the All-India Council of Technical Education over-ruled the decision of the State Government. The State Government appointed highly qualified persons to look into the functioning of these institutions. But, for cheap political reasons, the AICTE decided to over-rule what this Government had done with in regard to the self-financing institutions. This shows that people are using their political equations to run money-spinning institutions within this State. I think that such institutions and the people running them should not be tolerated. I think that the State Government has every right to over-rule any such thing that stands in its way. We should have htese self-financing institutions well under our control because of the

[Thiru Oscar C. Nigli]

problem of donation. I would like to mention to the Hon. Minister that the donation charged for the admission to an Engineering College ranges from Rs. 50,000 to Rs. 80,000 while the donation for admission to a Medical college is somewhere between Rs. 2.5 lakhs and Rs. 3.5 lakhs. Should the state of affairs be such that these money-spinning stitutions are allowed to do this? How do they expect the poor Sections of the society to pay Rs. 2.5 lakhs or Rs. 3.5 lakhs? Even after spending about Rs. 3.5 lakhs on his medical education and earning his MBBS Degree, the man has to accept a job on only Rs. 800 per month. Eevn if he had put the amount in Fixed Deposit, he would be earning Rs. 3500/- by way of interest. Instead, he has to accept a salary of Rs. 800 per month. So, this problem of donation is something which we have to seriously think about. Just now, I said that these donations are like cancer. But, I would compare the mushroom growth of Matriculation Schools and CBSE schools to AIDS which is now spreading like wildfife, The only way you can arrest AIDS is by eliminating the affected person. At least, cancer can be cured in the early stages. So also donations can be set right in early stages. But, these institutions have to be examinated or removed because they are not rendering service to the country.

Sir, I want to mention one thing about the Mathematics question paper for the recent Plus Two Examination. A large number of questions in that question-paper were out of syllabus. I would like to know how this thing happened especially when the syllabus is given to the Examiner who sets the question-paper. When the syllabus is given to him, how does he set quesions which are out of syllabus? I would like to say that strict action should be taken against such examiners who cause hardship to lakhs of students who take these examinations. I think that the students who are more affected by such out-of-portions quetions are only the better students. Therefore, strict action is called for against the examiners concerned. I would also suggest that watch-dog committee should be set up to look into the question-papers. Such a watch-dog committee should consist of the Director of School Education, the Director of Government Examinations, the Joint Director of Higher Secondary Education and one expert for each subject. This should be done to ensure that such question papers do not reach the student-community. What is the point in having a question paper which is out of syllabus?

I must congratulate the Government of Tamil Nadu for allowing the students belonging to the linguistic minorities who have studied in the medium of their mother tongue to opt for English as the medium of instruction wherein they do not have to pay any tuition fees. 11.35.

There is another aspect about which I would like to say a few words, and that is with regard to the behaviour of the lower level officials in some of the Government offices. I have already given a complaint to the Hon. Minister about the behaviour of some officials and I am very happy to say that he has taken action on that (Ranging of Bell). I want five minutes more to speak on a few aspects. Normally I do not take much time....

Mr. DEPUTY SPEAKER: You have alredy availed 15 minutes

THIRU OSCAR C. NIGLI: I request the Hon. Deputy Speaker to ple se permit me five minutes more. Normally I do not take much time.

Mr. DEPUTY SPEAKER: I can only give you one minute. Please finish before that.

THIRU OSCAR C.NIGLI: Five minutes please,

M. DEPUTY SPEAKER: Please finish early.

THIRU OSCAR C. NIGLI: With regard to the behaviour of the lower level of officials the Hon. Education Minister has already informed them that they have to behave properly towards M.L.A. and M.Ps. But unfortunately some of these people do not really know how to respond to the M.L.As, M.Ps and even the general public when they come to meet the higher officials. For example whether he be a Director of School Education or Director for Government Examinations, or whatever be the office the lower level of official do not allow the public to see these officers. Why cannot the public see these officials? They have every right to see them. There should be more accessibility for them to see the higher officers.

I would like to know from the Hon. Minister what now is the stand of the Government about the Navodaya schools? Now the Central Government has asked for a review of the whole policy of Navodaya schools. How is our Goverment going to view it, in the context of a review which is being called for by the Central Government?

1990 ஏப்ரல் 3] [Thiru Oscar C. Nigli]

Before winding up, I would also like to mention one aspect which I wanted to mention in the zero hour, but I could not do so. The Uttar Pradesh Government has decided to ban the use of English. They say that it is against the language policy of the State Government and the practice of using English should be stopped immediately, and English should be banned. I would like to ask one question. How can a State Government language policy go contrary to the two language policy. As far the two language formula is concerned, the use of the regional language and English is allowed. So, what has happened to the Nehru's formula? What has happened to Nehru's assurance? Nehru's Assurance is that English will continue as long as non-Hindi speaking people so desire. The non-Hindi speaking people

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறுபான்மை சமுதாயத்தின் பிரதிநிதியாக இங்கே இருக்கிற அவர் ஒரு நல்ல கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அவருடைய தாய் மொழி ஆங்கிலம். அவருடைய தாய் மொழி மட்டும் அல்லாமல் சர்வதேச மொழியாகவும், விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவு மொழியாகவும் அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். நம்மைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் நீடிக்கவேண்டும், மத்தியிலே நீடிக்கவேண்டும், மாநிலங்களினுடைய தொடர்பு மொழியாக நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இன்றையதினம் உத்திரப் பிரதேச அரசாங்கம் முழுமையாக ஆங்கிலத்தைத் தடை செய்திருக்கிறது. அதைப்போல் இன்று காலையில் வந்திருக்கிற செய்தி மத்திய பிரதேச முதலமைச்சர் திரு. சுந்தர்லால் பட்வா அவர்கள் ஆங்கிலம் இங்கே தடை செய்யப்பட்டிருக்கிறது, ஆட்சி மொழியாக இந்தி மட்டுமே இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசினுடைய நிலை; தமிழக அரசின் நிலை என்பது "English ever" என்று நாம் சொல்லுகிறோம். "English never" என்று சொல்லுகின்ற உத்திரப் பிரதேசத்தினுடைய அந்த அரசினுடைய ஆணை, மத்திய பிரதேசத்தினுடைய உத்திரவு இவைகளை மாற்றுவதற்கு நம்முடைய அரசு மத்திய அரசிடத்திலே தனக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன் படுத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதேபோல் இந்த அரசின் கொள்கை, மாண்புமிகு டாக்டர் முதலமைச்சர் அவர்களுடைய அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதையும் தெளிவுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நேரடியாகக் கல்வி மானியத்திலே எழாது என்று சொன்னாலும் அதனுடன் தொடர்புள்ளது என்ற காரணத்தால் ஒரு விளக்கம் நான் சொல்ல

விரும்புகிறேன். தமிழக அரசு மத்திய அரசோடும் சரி, வேறு எந்த மாநில அரசுகளோடும் சரி ஆங்கிலத்தின் மூலமாகத்தான் தற்காலத்தில் தொடர்பு வைத்துக்கொள்வதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழில் தொடர்பு வைத்துக்கொள்ள அவர்களால் முடியாது என்ற காரணத்தால், மத்திய அரசாக இருந்தாலும், வேறு எந்த மாநில அரசுகளாக இருந்தாலும் நாம் ஆங்கிலத்தின் மூலமாகத்தான் தொடர்பு வைத்துக்கொள்ளுவது என்ற முடிவிலே இருக்கிறோம். உத்திரப்பிரதேசமோ மத்தியப் பிரதேசமோ நம்மோடு தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பினால் அவர்கள் ஆங்கிலத்திலே நம்மோடு தொடர்பு வைத்துக் கொண்டால்தான் முடியும். இல்லையானால் தமிழில் வைத்துக் கொள்ள தயாரானால்தான் நாம் அவர்களிடத்தில் நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொள்ள முடியும். இந்தக் கொள்கையை தொடர்ந்து நாம் கடைப்பிடிப்போம்.

(11-40 மணி)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது, நம்முடைய அதிகாரிகளுடைய குழந்தைகள் அங்கே இருக்கிறார்கள்—கல்வி மானியம் தொடர்புடையது என்கிற காரணத்தினால்தான் கேட்கிறேன் — அவர்களுடைய பிள்ளைகளுக்கு, மொழி சிறுபான்மையினர் என்கின்ற முறையில் அங்கே குறைந்த பட்சம் தமிழ் படிக்க முடியாவிட்டாலும்கூட ஆங்கிலமாவது படிப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். ஆங்கிலம் அங்கே கற்றுத் தர வேண்டும். ஆனால் உத்திரப்பிரதேச முதல்வருடைய ஆணையிலே அந்த கடைசி இரண்டு வரிகளைப் படித்துப் பார்த்தால் தெரியும். நண்பர் நிக்லி அவர்கள் சொன்னதிலே கடைசி இரண்டு வரியில் dual language system இருக்கக்கூடாது என்பதையும் அதிலே சொல்லியிருக்கிறார்கள். எனவே, நேருவினுடைய உறுதிமொழி என்ன ஆயிற்று? அதை நிறைவேற்றவேண்டுமென்று நீங்கள் வலியுறுத்துவீர்களா என்பதையும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது பற்றி அரசியல் கண்ணோட்டத்தில் கடைசிவரையில் செல்ல விரும்புகிறார். நேருவின் உறுதிமொழி என்றைக்கும் காப்பாற்றப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த அரசு எந்தப் பிரச்சினையையும் அணுகும். அந்த மாநில அரசு அந்த மாநிலத்தில் மேற்கொள்கிற நடவடிக்கைகளைப் பற்றி அந்த மாநிலத்திலே உள்ள மக்கள் கவனித்துக் கொள்வார்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மாநில அரசு தனக்குரிய உசிதப்படி சில கொள்கைகளை வகுத்துக்கொள்வதற்கு உரிமை படைத்ததாக இருக்கிறது என்பது நம்முடைய அடிப்படை கொள்கை

நம்மைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெளிவாக்கி இருக்கிறார்கள்: நம்மோடு கடிதப் போக்கு வரத்து, அவர்கள் வைத்துக் கொள்வதாக இருந்தால், ஒன்று தமிழிலே வைத்துக்கொள்வதற்கு தயாராக இருக்கவேண்டும் இல்லையென்றால் ஆங்கிலத்தை அவர்கள் பயன்படுத்தவேண்டும்; இல்லையென்றால் எந்தக் கடிதப் போக்குவரத்தையும் அந்த மாநிலத்தோடு இந்த அரசு வைத்துக் கொள்ளாது என்று குறிப் பிட்டிருக்கிறார். ஆனால், இதிலே இருக்கக்கூடிய மையக்கருத்து ஒரு மாநில அரசுக்கு இந்த உரிமை இருக்கிறதா இல்லையா என்பதுதான் அந்த அடிப்படையான கருத்தாகும். எனவே, அதை அடிப்படையாக வைத்துத்தான் நாம் இந்தப் பிரச் சினையை அணுக முடியும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு மணிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச இருக்கிறார்கள். நீங்கள் பேசும்போது இதையும் பேசிக்கொள்ளலாம். உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அடுத்ததாக நீங்கள் தான் பேச இருக்கிறீர்கள்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில் எந்த மொழியிலே நிர்வாகம் நடைபெறவேண்டுமென்று, ஆங்கிலமும் தமிழும் இந்த மாநிலத்தின் நிர்வாக ஆட்சி மொழி யாக இருக்கும் என்று நாம் முடிவெடுத்து ஏறத்தாழ 20 ஆண்டு களுக்கு மேலாக எப்படி அமல் நடத்துகிறோமோ அதேமாதிரி முடிவெடுக்கக்கூடிய உரிமை அந்தந்த மாநிலங்களுக்கு, மொழி யைப்பற்றி முடிவெடுக்கக்கூடிய உரிமை உண்டு என்பதை நாம் மறுக்க முடியாது. மத்தியப்பிரதேச அரசு அந்த மாநிலத்திற் குரிய ஆட்சி மொழியைத் தீர்மானித்து இருக்கிறதே தவிர மற்ற மாநிலங்களில் எல்லோரும் நாம் இந்தி மொழியோடுதான் தொடர்பு கொள்வோம் என்று அவர்கள் தீர்மானித்து இருக் கிறார்களா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் நேரடியாக நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கவில்லை. ஆனால் ஒன்று பண்டித நேருவினுடைய உறுதிமொழியைத் தொடர்ந்து இந்த அரசு வலியுறுத்துவதே அகில இந்தியாவிலேயும் தொடர்பு கொள் வதற்கு, இந்தி மொழி பேசாத மாநிலங்கள் ஆங்கிலத்தையே பயன்படுத்துவது உறவுக்கு வலிமை சேர்க்கும் என்ற அந்த அடிப் படையிலேதான், ஒருவேளை அதாவது அந்த ஆங்கிலத்தை கைவிட்டுவிட்டு ஒரு பெரிய நாட்டில் மாநிலங்களிடையே உறவை வளர்த்துவிடக் கூடிய வாய்ப்பு இருக்குமேயானால் அப்படி அந்த உறவை வளர்ப்பது பற்றி நமக்கு ஒன்றும் தடையில்லை. நம்முடைய மாநிலத்தின் உறவு, நாம் மேற்கொள்ளக்கூடிய உறவு, ஆங்கிலத்தின் மூலமாகத்தான் இருக்கும் என்பது நம்மைப் பொறுத்தவரையில் உறுதியானது.

Thiru. OSCAR C. NIGLI: I thank the Hon. Minister for that assurance, because what I was trying to emphasis was that. I just need two minutes and I will finish up. This kind of Hindi fanaticism

Mr. DEPUTY SPEAKER: Mr. Nigli. Ten members have to address. Kindly restrict your address.

Thiru OSCAR C. NIGLI: Sir, I shall restrict it to the minimum. This is an issue of burning public importance. So this sort of Hindi fanaticism, linguistic chauvanism will never pay. It ultimately boils down to one thing——you are going to have one language formula——Hindi only. We cannot accept this. You cannot have one language formula in the whole country. Hindi is hardly spoken by 25 per cent of the population. What they give us is false statistics. They say that 60 per cent of the population speak in Hindi. Dialects like Oriya, Bihari, Bengali and others are included in Hindi and it is not at all Hindi but only Gadiboli. They are giving us fiated figures. Therefore, in reality, Hindi speaking people are only in a minority. They cannot claim such a status over others. They cannot impose their language Hindi on any other State within the country. There has always been a cynical travesty of truth which has defied all comprehension. Even in 1954, in the Judgement of the Supreme Court in what is known as the 'Bombay Schools case', the Hon. Judge has pointed out that English is as much Indians as any other language, as it is the mother tongue of Anglo-Indians. Besides the minority community, English is spoken by people in Nagaland, Mizoram, Arunachal Pradesh and other North-Eastern States. I therefore, request the Government to see that these Hindi zealots do not get the place which they are trying to achieve.

(11-45 மணி)

With these words, I conclude my speech. Thank you, Sir.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படை முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களை மீண்டும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களாகவும், தமிழாசிரியர்களாகவும்

நிரந்தரமாக நியமனம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒப்பந்த அடிப்படையில் 1987-ல் பணியில் சேர்ந்தவர்களின் பணியை வரன்முறை செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். எம்.ஏ., எம்.காம், எம்.எஸ்.சி., பி.எட்., எம்.எட்., படித்த பட்டதாரிகள் முன்பு எந்தப் பள்ளிகளில் எந்தெந்தப் பணிகளில் பணிபுரிந்திருந்தாலும், அவர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப ஊதியம் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆரம்பக் கல்வியில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணிபுரிந்து கொண்டு, பி.ஏ., எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., போன்ற பல பட்டங்களைப் பெற்றவர்களை பட்டதாரி ஆசிரியர்களாகப் பணி உயாத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களைப் பணி உயர்வு செய்தால் 20 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டரைக் கோடி ரூபாய்தான் ஆகிறது. அதை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பட்டதாரிகளை தலைமையாசிரியர்களாக நியமிக்கவேண்டும். உடனடியாக ஒரே ஒரு உத்தரவு மூலம் இந்த நியமனங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பக் கல்வியில் உள்ள பட்டதாரிகளை பள்ளித் துணை ஆய்வாளர்களாக நியமிக்க ஏற்கெனவே இந்த அரசு உத்தரவிட்டது. ஆனால், அந்த அரசு உத்தரவு இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. கல்லூரிகளில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட முதுகலைப் பட்டதாரிகளை பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் தாலுக்காவுக்கு ஒரு கலைக்கல்லூரியும், ஒரு பாலிடெக்னிக்கும் தொடங்க வேண்டும். பேராவூரணியில் கலைக்கல்லூரியும் பாலிடெக்னிக்கும் அமைக்க பேராசிரியர் அவர்கள் முழு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். தமிழகத்தில் கல்வித்தரம் குன்றிவிட்டதால், கல்வியின் தரம் உயர நான் சில யோசனைகளை இந்த அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வகுப்புகள் 1 முதல் 4 வரை உள்ளதற்கு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களையும், 5-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பட்டதாரி ஆசிரியர்களையும், 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை முதுகலைப் பட்டதாரிகளையும் ஒழுங்குபடுத்தி நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நியமித்தால் கல்வியின் தரம் உயரும். அதேநேரத்தில் 75 சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளிகளுக்கும், அந்த ஆசிரியர்களுக்கும் பரிசோ அல்லது சிறப்பு ஊதியமோ வழங்கினால் அவர்கள் ஆர்வத்தோடு மேலும் சிறப்பாகப் பணி புரிவார்கள். கல்வியின் தரம் உயருவதற்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் தரத்தையும் உயர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளியில், இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சியை மீண்டும் தொடங்க வேண்டும். பழுதடைந்த பள்ளிகளை உடனடியாக சீர்படுத்த

வேண்டும். குறிப்பாக பேராவூரணி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கீற்றுக் கொட்டகை மிக மோசமாகப் பழுதடைந்திருக்கிறது. உடனடியாக அதைப் பழுது பார்க்கவேண்டும். அந்தப் பள்ளியின் நிலையை போட்டோ எடுத்து துணைத்தலைவர் மூலமாக கல்வியமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்து இருக்கிறேன். பேராசிரியர் அவர்கள் அதைப் பார்த்து ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளி மட்டுமல்ல, பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், மாவட்டத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளுமே என் தொகுதியில் உள்ள எல்லாப் பள்ளிகளுமே அப்படி மோசமாக பழுதடைந்த நிலையில்தான் உள்ளன. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தொகுதி என்பதால் அவை நிராகரிக்கப்படுகின்றனவோ என்னவோ தெரியாது. அதைப் பேராசிரியர் அவர்கள் கவனித்து....

மாண்புமிகு டாக்டர். க. அன்பழகன்: தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் என்ற காரணத்தால் அல்ல; எல்லா உறுப்பினர்களுக்குமே ஒரே மாதிரிதான் நிராகரிக்கிறோம். (சிரிப்பு) ஏனென்றால் அரசாங்கம் நேரடியாக ஆங்காங்கே உள்ள சிறு குறைகளைக் கவனித்து செயலாற்றுகின்ற நிலையை இழந்து 15 ஆண்டுகளாகிறது. இனி தொடர்ந்து உள்ளாட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் எல்லாம் இந்தப் பள்ளிக் கட்டிடங்கள் அளவுக்காவது, இருப்பதைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய அளவுக்காவது பொறுப்பேற்றுக் கொண்டால் தவிர, உடனுக்குடன் கவனித்துச் செயலாற்றக் கூடிய நிருவாக அமைப்பு முறை அரசாங்கத்தில் இல்லை என்பதையும் கருதிப்பார்க்க வேண்டும்.

(11-50 மணி)

திரு. ஆர். சிங்காரம்: நன்றி. பேராவூரணி கிழக்கில் தொடக்கப் பள்ளி ஒன்று இருக்கிறது. அதிலே 1,200 பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆனால், அங்கே இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மேற்கொண்டு விஸ்தரிப்பதற்கு பக்கத்தில் இடம் கிடையாது. ஆகவே, இருக்கின்ற பக்கா கட்டடத்தை மாடிக் கட்டடமாகக் கட்டினால் நிச்சயமாக இன்னும் ஆயிரம் பிள்ளைகள் படிக்க வசதியாக இருக்கும். ஆகவே, விரைவில் மாடிக் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவேண்டும். கட்டட வசதி, தளவாட வசதி ஆகியவற்றைச் செய்து தர வேண்டும்.

அடுத்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் உடனடியாகக் கழிப்பிடம் கட்டித் தரவேண்டும். குறிப்பாகப் பேராவூரணி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடம் இல்லை. அங்கே நிறைய பெண்கள் படிக்கிறார்கள். சுமார் 2,000 பெண்கள் படிக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடமே இல்லாமல் எப்படி நடக்கும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் 300 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்பப்பள்ளி என்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இந்த அரசு 500 மக்கள் தொகை கொண்ட ஒரு ஊருக்கு ஒரு ஆரம்பப் பள்ளி அதாவது ஓராசிரியர் பள்ளி துவக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறது. அதனை மீண்டும் 300 மக்கள் தொகைக்கு ஒரு பள்ளி என்று ஆக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பேராவூரணி தொகுதியில் உள்ள மாவிடிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆண்டிக்கச்சிலி என்று அழைக்கப்படும் இந்திரா நகரிலும் மற்றும் புக்கரை ஊராட்சியைச் சேர்ந்த மேல்மூடிக்காடு என்ற ஊரிலும் ஓராசிரியர் பள்ளி தொடங்குவதற்கு மூன்று ஆண்டுக்காலமாக முயற்சித்து வருகிறோம். ஆனால், இதுவரையில் நடக்கவில்லை. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கவனிக்கின்ற இந்த கல்வித்துறை தயவு செய்து இந்த ஆண்டாவது அந்தப் பள்ளிகளைத் துவக்குவதற்கு முயற்சிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு சாதாரண எலிமென்டரி ஸ்கூல் ஆரம்பிக்க வேண்டுமென்றால் உடனடியாக அந்த ஒன்றியத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அங்கே இருக்கிற ஒன்றியத்தாலேயே உத்தரவு பிறப்பிக்கப்படுகிற சூழ்நிலை இருந்தது. ஆனால், இப்போது மாவட்ட கல்வி அதிகாரியை மீறி, முதன்மைக் கல்வி அதிகாரியை மீறி தமிழக அரசுக்கு அதாவது சென்னைக்கு ஓடோடி வந்து பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஒரு சாதாரண பள்ளி ஆசிரியரை மாற்றுவது என்றால் கூட சென்னைக்குத்தான் வர வேண்டி இருக்கிறது. ஏன் மாநில சுயாட்சி பெறவேண்டும் என்று விரும்புகிறீர்கள். அப்படி என்றால் மாவட்டத்திற்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் சுயாட்சி வழங்கக்கூடாதா? சாதாரண சிங்கிள் டீச்சர்ஸ் ஸ்கூல்ஸ் ஆரம்பிக்கவேண்டும் என்றால் கூட சென்னைக்குத்தான் ஓடோடி வரவேண்டிய நிலைமையை மாற்றி, மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களால் ஒன்றிய அளவிலேயே ஏற்படுத்துகிற வகையில் நிலைமையை உருவாக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பணிப்பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லிக்கொள்ளும் தமிழக அரசு பள்ளிக் கல்வி சம்பந்தமான அரசாணையைத் தமிழில் பிறப்பிக்கவேண்டும். பெரும்பாலும் எல்லா அரசு அதிகாரிகளும் அதாவது எலிமெண்டரி ஸ்கூல்ஸ், மிடில் ஸ்கூல்ஸ் ஆகிய அனைத்து பள்ளிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஆங்கிலத்தில்தான் கல்வியைத் தந்துகொண்டிருக்கிறார்கள். அவற்றைத் தமிழில் அனுப்ப வேண்டும். தமிழ் தென்றல் திரு வி.க. அவர்களின் பெயரை திருவாரூர் கலைக் கல்லூரிக்குச் சூட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு பெயர் சூட்டுவதற்கான முயற்சியை பேராசிரியர் அவர்கள் எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கலைக்கல்லூரிக்கு இதற்கு முன்னதாக நம்முடைய கலைஞருடைய பெயர் சூட்டப்பட்டது.

திரு. துரை சந்திரசேகரன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, திருவாரூரில் இருக்கின்ற அரசு கலைக் கல்லூரிக்கு முன்பு தமிழக முதல்வர் அவர்களின் பெயர் வைக்கப்பட்டு கலைஞர் கருணாநிதி கலைக் கல்லூரி என்று வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இடையில் ஏற்பட்ட அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அந்தப் பெயரை நீக்கியது. மீண்டும் அந்தக் கல்லூரிக்கு தமிழக முதல்வர் அவர்களின் பெயர் சூட்டப்படவேண்டும். இப்படி பொது இடத்திற்கு அப்படி சூட்டப்பட்ட பெயரை மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் மாற்றவேண்டுமென்று அடிக்கடி கூறுவது எந்த வகையில் நியாயம் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, திருவாரூர் கலைக் கல்லூரிக்கு இப்போதும் திரு.வி.க. அரசு கலைக் கல்லூரி என்றுதான் பெயர் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ முந்தைய அரசு காழ்ப்புணர்ச்சி காரணமாக பெயரை மாற்றியிருக்கிறது என்று சொன்னார்கள். காழ்ப்புணர்ச்சி காரணமாக அல்ல. உயிரோடு இருப்பவர்களுடைய பெயரை வைக்கக்கூடாது என்று முடிவு எடுத்ததன் காரணமாகத்தான் அவ்வாறு பெயர் மாற்றப்பட்டதே தவிர வேறு நோக்கம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, திருவாரூரில் உள்ள கலைக் கல்லூரிக்கு கலைஞருடைய பெயர் முன்னால் வைக்கப்பட்டு அவர் உயிரோடு இருக்கிறார் என்பதற்காக பெயர் மாற்றப்பட்டது; திரு.வி.க. பெயர் வைக்கப்பட்டது.

அதற்காக ஒன்றும் அவர் உயிரை விட முடியாது. (சிரிப்பு) உயிரோடு உள்ளவர்கள் பெயரை இந்த அரசு பல இடங்களில் பின்னர் வைத்தது. அன்னை தெரசா அவர்களுடைய பெயரை ஒரு பல்கலைக் கழகத்திற்கு வைத்தார்கள். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பெயரை அவர் இருக்கிறபோதே ஒரு கட்டடத்திற்கு வைத்தார்கள். அந்தப் பெயரை எல்லாம் நான் சொல்ல விரும்ப வில்லை. அது முக்கியமும் அல்ல. ஆனால் உயிரோடு உள்ளவர் களின் பெயர் அந்த அரசின் ஆட்சிக் காலத்தில் வைக்கப்பட்டது. திரு. மோகனரங்கம் அவர்களுடைய பெயர் ஆலந்தூர் நகராட்சி மன்றக் கட்டடத்திற்கு வைக்கப்பட்டது. அதே போல் அன்னை தெரசா பெயர் கொடைக்கானல் பல்கலைக்கழகத்திற்கு வைக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு நிலையில் கொள்கை மாற்றம் ஏற்பட்டுவிட்டது. எனவே அந்த அரசே கொள்கையை மாற்றிக்கொண்டபோது, முன்னாலே செய்த தவறுகளை அவர் களே திருத்தி இருக்கலாம். திருத்தவில்லை.

(11-55 மணி)

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மோகனரங்கம் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று சொன்னார்களே ஒழிய ஆனால் வைக்கப் படவில்லை. அதற்கான ஜி. ஓ. எதுவும் போடவில்லை அன்னை தெரசா அவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள், நம்முடைய தமிழகத்திற்கு மட்டும் சொந்தமானவர்கள் அல்ல. உலகம் போற்றுகின்ற ஒரு தலைவர். நம்முடைய மாநிலத்திலே அவர்கள் வசிக்கவில்லை. அந்த காரணத்திற்காக அவருடைய பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அதிலேயிருந்து சுற்றி சுற்றி வந்து, எதிர்கட்சிக்காரர்கள் மட்டும்தான் உலகத்திலே ஒதுக்கப் பட்டவர்கள் என்பது அவர்களின் கொள்கை. மற்றொன்று இறந்துபோனது என்பது எல்லோருக்கும் பொது. மறைந்து போனவர்கள், மறையாதவர்கள் என்று இலக்கணம் நம் எல்லோருக்கும் பொது. அந்த இலக்கணத்தை ஆளுக்குத் தகுந்தபடி மாற்றக்கூடாது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த தமிழக அரசு, தமிழ்நாட்டில் தமிழ் தனக்குத் தான் சொந்தம் என்ற அளவில் சொல்கிறார்கள். அதே நேரத்தில் தமிழுக்காக தமிழ் படித்த பட்டதாரிகளாக, முதுநிலை பட்ட தாரிகளாக இருக்கின்றவர்களுக்கு இந்த அரசு என்ன மாற்று

உத்தரவை பிறப்பித்திருக்கிறது. என்ன சலுகை கொடுத்திருக்கிறது. தமிழிலேயே படித்தவர்கள் பி.ஏ. லிட்டரேச்சர், எம்.ஏ. லிட்டரேச்சர் எல்லாம் படித்தவர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதே நிலைதான் இருக்கிறது. ஆகவே முன் உரிமை வழங்கி இந்த தமிழ் அரசு தமிழ் படிக்கின்றவர்களுக்கு, தமிழ் ஆர்வம் கொண்டவர்களுக்கு ஏதாவது ஒரு சலுகை கொடுத்தால்தான் அவர்கள் முன்னுக்கு வருவார்களே தவிர, எல்லோருக்கும் ஆவரேஜ் அப்பாயின்ட்மெண்ட் என்று சொன்னால் நிச்சயமாக அவர்கள் முன்னுக்கு வரமாட்டார்கள். தமிழிலே ஆர்வம் இருக்கின்றது என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள். ஆகவே, நீங்கள் ஏன் இதைச் செய்யவில்லை என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தயவுசெய்து பேராசிரியர் அவர்கள் உடனடியாக படித்த பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகளுக்கு, தமிழ் வித்வான்களுக்கு எல்லாம் அங்கே பதவி உயர்வு கொடுக்க வேண்டும். அதே நேரத்திலே நியமன உத்தரவு உடனடியாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளிலே மேல்நிலைப் பள்ளிகளிலே பகுதி நேர தொழில் கல்வி ஆசிரியர்களை நிரந்தரம் செய்து ஊதியம் வழங்கவேண்டும். பேராவூரணி ஆண்கள் உயர்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி காம்பவுண்ட் சுவர் அமைக்க வேண்டும். 6 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த பேராவூரனி பிளே கிரவுண்டுக்கு 6 ஏக்கர் நிலம் இருந்தது. ஆனால் சுற்றிலும் வீடுகள் இருக்கின்ற காரணத்தினால் இப்போது 5 ஏக்கர் இருக்கிறது. என்க்ரோச்மெண்ட். ஒரு காம்பவுண்ட் சுவர் அமைத்தால் நிச்சயமாக அந்த இடம் பறிபோகாது. பாதுகாப்பாக இருக்கும் பிள்ளைகளுக்கும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பேராவூரணி தொகுதி முதுகாடு தொடக்கப்பள்ளியில் 33 ஆண்டுகளாக ஒரு தொழில் ஆசிரியர் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். 33 ஆண்டுகளாகப் பணியாற்றிய ஒருவரை தற்போது 6 ஆண்டுகளுக்கு முன்னதாக அவர் வாங்கிய சம்பளம் செல்லாது என்று சொல்லி ரெக்கவரி போட்டிருக்கின்றார்கள். ஆடிட் அப்ஜக்ஷன் இருக்கிறது. அந்த ரெக்கவரி பற்றி அப்பீல் செய்திருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் க. **அன்பழகன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்தில் பேசுகின்றபோது, அவர்கள் பலபேர்களுக்கும் பொருத்தமாக இருக்கக்கூடிய பிரச்சினை பற்றி, பேச வேண்டுமே தவிர ஒரு தனிப்பட்ட ஒருவரின் பிரச்சினை பற்றி அது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், எவ்வளவு நியாயமானது என்று இருந்தாலும் பேசுவது பயனற்றது. துறையினருக்கு அந்தக் கருத்தை தெரிவிக்கவேண்டும். துறையினர் கவனிக்க

மாட்டார்கள் என்ற எண்ணம் இருக்குமானால், எனக்குத் தெரிவித்து, நானும் துறைக்கு எழுதி, அதுபற்றி தனிப்பட்ட விளக்கம் பெறவேண்டுமே தவிர, அதைப் பொதுப்பிரச்சினை யாக ஆக்குகின்றபோது, இந்த அவையில் அவற்றையெல்லாம் விவாதிக்க போதுமான நேரம் இல்லை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குமரி அனந்தன்): இன்னும் இரண்டே மணித்துளிகளில் உறுப்பினர் தயவுசெய்து முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இது போன்று, 6, 7 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு எல்லாம் ரேடிபிகேஷன் கொடுத்து சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை நான் டைரக்டரைப் பார்த்துக்கொடுத்திருக்கிறேன். அந்த நிலையைக் கவனிக்க வில்லை என்பதற்காக தங்களைப் பார்த்து நேரில் கொடுத்திருக்கிறேன். கொடுத்து 6 மாதம் ஆகியிருக்கிறது. 6 ஆண்டுக் காலமாக அந்த ஆசிரியர் சம்பளம் இல்லாமல் பணியாற்றிக் கொண்டு இருக்கின்றார். விரைவிலே கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் அரசியல் பொது வாழ்வில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் இவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கு வாய்ப்பளிக்கின்ற வகையில் எம். பி. பி. எஸ்., பி. ஈ. போன்ற கல்விகளுக்கு சிறப்பு ஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி வழங்க வேண்டும் என்று சொன்னால் அந்த என்ட்ரன்ஸ் முறையை நீங்கள் ஒழிக்கவேண்டும். என்ட்ரன்ஸ் முறை என்பது தேவையற்ற ஒன்று. ஆகவே என்ட்ரன்ஸ் முறையை ஒழித்தால், நிச்சயமாக தகுதி உள்ளவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

இராமச்சந்திரா மெடிக்கல்-ஐ அரசு எடுத்துக்கொண்டது. அதுபோலவே, ஏனைய மருத்துவக் கல்லூரிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். ஏதோ இராமச்சந்திரா மெடிக்கல் கல்லூரி யாரோ ஒருவருக்கு சொந்தம் என்ற காரணத்தினால், அவரைப் பழிவாங்குவதற்காக அந்த எண்ணத்தில்தான் எடுத்துக்கொண்டதாக மக்கள் நினைத்துக்கொண்டு இருகிறார்கள். நான் நினைக்கவில்லை. மக்கள்தான் நினைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டால், 2 லட்சம், 3 லட்சம், 4 லட்சம் ரூபாய் என்ற எண்ணமே இருக்காது. ஆகவே அது அந்த அளவிற்கு மிகவும் காஸ்ட்டிலியாக ஆகிவிட்ட ஒன்றாக இருக்கிறது. ஆகவே தயவு செய்து அதையும் நேஷனலைஸ் செய்ய வேண்டும்...

12-00 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவரவர்களே, சில கருத்துக்களைத் தவறான அடிப்படையில் வளர்த்துக்கொண்டு செல்வது இந்த அவைக்கு ஏற்றதல்ல. அதனால் இந்த உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கல்லூரியை எடுத்தது, அந்தக் கல்லூரியை எடுக்க வேண்டுமென்ற கொள்கை-நோக்க அடிப்படையிலே எடுக்கவில்லை. அந்தக் கல்லூரி கட்டப்பட்ட இடம், ஏறத்தாழ ஒரு பகுதிக்குமேலே, ஏறத்தாழ மொத்தத்தில் பாதிக்குமேலே, அரசு அனுமதி பெறாமலே, அரசாங்க நிலத்தையும் சேர்த்து வளைத்துக் கட்டப்பட்டுவிட்டது என்ற ஒரு அடிப்படையிலும், அந்தக் கல்லூரி அந்த இடத்தைத் திருப்பித்தர முடியாத அளவுக்கு ஆக்கிரமித்துக்கொண்டுவிட்ட காரணத்தாலும், அந்த அத்துமீறலை அடிப்படையாக வைத்து, அரசு எடுத்துக்கொண்டது. மற்றக் கல்லூரிகளை எடுக்க வேண்டி அது போன்ற தவறுகளை மற்றவர்களும் செய்யும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூண்டுவார் என்று நான் கருதவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குமரி அனந்தன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் உடனே தயவு செய்து முடிக்கவேண்டும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அந்த அடிப்படையிலே சொல்லவில்லை. இருக்கிற நிலைமையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய கலைஞர் அவர்கள் சொன்னார்கள், இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டினால் நான் திருத்திக்கொள்வேன் என்று. அதனால் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்பட்டவர்கள், மிகவும் பிற்பட்டவர்களுக்குக் கல்லூரிப் படிப்பு வரை இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். யு. ஜி. சி. ப்ரோக்ராம் டி. வி. யில் அதிகமாகக் காண்பிக்கப்படுவதால் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை, மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்கு அரசு இலவசமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க வேண்டும். ஆசிரியர்கள் பணி மாற்றம் அந்தந்த மாவட்ட அளவிலே முடிந்துவிட வேண்டும். அதிகாரங்கள் பரவலாக வேண்டுமென்று சொல்கிற இந்த அரசு, தயவு செய்து மாவட்ட, ஒன்றிய அளவில் அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க வேண்டும். இடைநிலை ஆசிரியர்கள் சமீபத்தில் நியமிக்கப்பட்டார்கள். 30 வயது ஆனவர்களுக்கு இடமில்லை. 19 வயதானவர்களுக்கு இடமுண்டு, இதன் மர்மம் என்னவோ தயவு செய்து பேராசிரியர் அவர்கள் தான் விளக்க வேண்டும்.

1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாற்றுத் தலைவர் அவர்களே இதில் ஒன்றும் மர்மம் இருக்க அவசியமே இல்லை. வயதையே வெளிப்படையாகச் சொல்கிறபோது இதிலே என்ன மர்மம்? வயதுக்காக, மட்டும் ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கிற ஒரு முறை இல்லவே இல்லை. வயதுக்காக அந்தத் தகுதி அடிப்படையில் அதிக நாட்கள் காத்திருந்தவர்கள் என்று ஒருகுறிப்பிட்ட மதிப்பெண்கள் தான் அவர்களுக்குத் தரப்படுகிறது. வேறு பல தகுதிகளுக்காகவும்- வகுப்பு உரிமை அடிப்படையில் பிற்பட்டவர்கள், மிக பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலும், இப்படி பல வகையிலே தேர்வு செய்யப்படுகிறது மேலும், 29,000 பேர் நேர்முகத் தேர்வுக்கு வந்து, 3,250 பேர் தேர்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ ஒன்பது பேருக்கு ஒருவர், பத்து பேருக்கு ஒருவர் என்ற அளவில்தான் வேலை கிடைத்திருக்கிறது. எனவே இதிலே மர்மமே தேவையில்லை. வெளிப்படையாகவே பலர் வருத்தப்பட இடமிருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். தமிழகத்திலுள்ள கல்லூரிகளில் மாணவர்களெல்லாம் போதை மாத்திரைகளை அருந்தும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலை ஏன் வந்தது என்று உங்களுக்குத் தெரியும். எல்.டி.டி. இ-னர் அதிகமாக தமிழகத்திலே நடமாடுகின்ற காரணத்தாலே தான் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பேராசிரியர் அவர்களே இங்கே அமைச்சராக இருக்கிற காரணத்தால், தயவு செய்து இதையெல்லாம் நீங்கள் உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு தேர்வுத் துறை தினப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து தஞ்சையில் பல்கலைக் கழகம் இருக்கிறது 'தமிழ்நாடு' என்ற அளவில் அந்தக் கட்டிடம் அமைய வேண்டுமென்று முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர் அவர்கள் திட்டமிட்டு, மதிப்பீடு தயார் செய்தார்கள், ஆனால் 'தமிழ்நாடு' என்ற வார்த்தையில் 'ழ்' அளவுக்கு மட்டும்தான் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. மீதி கட்டிடத்திற்கு நிதியில்லை என்று நிறுத்தி விட்டார்கள். அது விரைவில் கட்டப்படுமா, தொடர்ந்து செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாற்றுத் தலைவர் அவர்களே, முதலிலே நிதி முழுவதும் ஒதுக்கப்படவில்லை. மிகப் பெரிய திட்டத்தைப் போட்டுவிட்டு, குறைவாக நிதி ஒதுக்கிய முறையில் அது தொடங்கப்பட்ட காரணத்தால், அந்த நிதி முழுவதையும் கட்டிடத்திற்கே செலவிடுவது என்பது இயலாத காரியம். ஆனால் 'ழ்' மட்டும் இடம் பெற்றிருக்கிறது என்று சொன்னார்கள். 'ழகரம்' தான் தமிழுக்கே சிறப்பு. அந்தச் சிறப்பு காப்பாற்றப்பட்டிருக்கிறது. மற்றது தொடர்ந்து நிதி வசதி, வாய்ப்பு ஏற்படுகிறபோது நிறைவேற்றப்படும்.

திரு. ஆர். சிங்காரம் : ஆகவே கொடுத்த வாய்ப்புக்கு நன்றி.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் முன்பு பேசிய நேரத்தில் ஒரு கருத்தை தவறாக மற்றவர்கள் புரிந்துகொள்ளக்கூடாது என்பதால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அன்றையதினம் உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை வைத்தால், அவர்கள் இறந்துவிட வேண்டுமா என்று பேராசிரியர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த நோக்கத்தில் அது செய்யப்படவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள் தான் கொண்டுவந்த உத்தரவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று, பல்கலைக் கழகத்திற்கு அவர் பெயரை வைப்பதற்கு முன்னே அவர்கள் மறைந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

12-05 மணி

திரு. ந. இராமச்சந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் கல்வி மானியக் கோரிக்கையில் கழகத்தின் சார்பில், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே என்னுடைய கருத்தை முன் வைக்க விரும்புகிறேன். இந்தக் கல்வி மானியக் கோரிக்கையில் ஏறக்குறைய 1042 கோடி ரூபாயை, மொத்தச் செலவில் 22 விழுக்காடு நிதி ஒதுக்கி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற கல்வி அமைச்சர் அவர்களையும் நான் பாராட்ட விரும்புகிறேன். 1980–81ஆம் ஆண்டு கல்விக்கு 199 கோடி தான் ஒதுக்கப்பட்டது. அதன் பிறகு படிப்படியாக அத்தொகை உயர்ந்து 1989-90-ஆம் ஆண்டில் 668 கோடி ஒதுக்கப்பட்டது. தற்போது 1990-91-ஆம் ஆண்டுக்கு 1042கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கின்ற நிலை என்பது தமிழகத்தின் கல்வி மறுமலர்ச்சிக்கு மிகப் பெரிய ஒரு சான்று ஆகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏறக்குறைய 15 ஆண்டுக் காலமாக கல்வித் துறை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. கல்வித் துறை வியாபாரக் கூடமாக ஆக்கப்பட்டு, கல்வி நிலையங்கள் எல்லாம் தரம் இல்லாத மாணவர்களை உருவாக்கி, மிக மோசமான நிலைக்குப் போன பிறகு இன்றைக்கு கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகவும், மாணவர்களை அகில இந்திய நிலையில் போட்டி போட்டு வளர்க்கும் அளவுக்கு மிகச் சிறப்பான முறையில் நிதி ஒதுக்கி இருக்கின்ற நம்முடைய தமிழக முதல்வர் அவர்களையும், பேராசிரியர் அவர்களையும் நான் மனதாரப் பாராட்ட விரும்புகின்றேன்.

இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் ஏறக்குறைய 35,142 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் 5651 பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகள். குறிப்பாக ஏழை மக்கள், படிக்க முடியாத நிலையில் வாழ்கின்ற மக்கள், பயன் பெறும் வகையில் குக் கிராமங்களில் பள்ளிக்கூடமே இல்லாத நிலைமையை உருவாக்கும் நோக்கத்தோடு, எல்லா மக்களும் எல்லாமும் பெற்றாக வேண்டும். சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டும். ஏழை-பணக்காரர் என்ற நிலை இல்லாமல், கல்வி வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்து ஆகவேண்டும். பணக்காரர்கள்

தான் படிக்க முடியும், ஏழைகள் படிக்க முடியாது என்ற நிலையை மாற்றுகிற முறையில் இன்றைக்கு இந்த அரசாங்கம் 500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு எல்லாம் புதிய ஓராசிரியர் பள்ளி திறக்கின்ற முடிவு பாராட்டுக்கு உரியது; போற்றுவதற்கு உரியது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆசிரியர் பணியில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. எல்லா கிராமத்திலும் ஆசிரியர் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்படவில்லை, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் முழுமையான உபகரணங்கள் இல்லை. எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் போதிய கட்டிட வசதி இல்லை. இதையெல்லாம் உருவாக்குவதற்கு ஏறக்குறைய 15 ஆண்டுக் காலம் ஆண்டு கொண்டிருந்த ஆட்சியில் எந்த ஒரு முறையான திட்டமும் இல்லாத காரணத்தால் உருவாகவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். எல்லா மாணவர்களும் மரத்தடியில் படிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு யார் காரணம்? 13 ஆண்டுக் காலம் இந்த நாட்டை ஆண்டவர்கள் மரத்தடியில் படிக்கின்ற நிலையை உருவாக்கிய காரணத்தால் தான் இன்றைக்கு அந்த நிலை தொடர்ந்து கொண்டு இருக்கிறது. அப்படித் தொடர்ந்த நிலையை மாற்றுவதற்காக முழுமையான முயற்சியை இந்த ஆட்சி எடுத்துக்கொண்டு இருக்கிறது. எல்லா மக்களுக்கும் எல்லாக் கல்வியும் கிடைக்க வேண்டும் என்பது தான் இந்த இயக்கத்தினுடைய கொள்கை. அந்த அடிப்படையில் கல்விக்கு இன்றைக்கு அரசாங்கம் அதிக நிதியை ஒதுக்கித் தந்து இருக்கிறது. 1042 கோடி என்று சொன்னால் இதுவரை இந்த அளவுக்கு கல்விக்காக பெரும் நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் பாட நூல் நிறுவனம் என்று ஒன்று இருந்தது. அன்றைக்கு மாணவர்கள் எல்லாம் கல்லூரியிலே, பள்ளியிலே சேர்ந்து படிக்கும் தருவாயில் பள்ளிக்கூடப் பாடப் புத்தகம் வராது. ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட நிலை இல்லை. உடனடியாகப் பாடப் புத்தகங்களை வழங்குகின்ற திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். ஆதிதிராவிட மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சிறப்பான நிலையை நம்முடைய கழகத் தலைவர் உருவாக்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு 7½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 8.11 கோடி ரூபாய் விளையாட்டுத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. விளையாட்டுத் துறை என்பது உடற் பயிற்சிக் கலையை கற்றுத் தருகிற துறை, மாணவர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்

என்பதற்காகவும், நல்ல மனப் பக்குவம் உள்ளவர்களாக வளர வேண்டும் என்பதற்காகவும் விளையாட்டுத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசு வெளிநாட்டில் வாழுகின்ற தமிழர்களுக்கு, அவர்கள் தமிழர்களாக வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது. மொரீசஸ், தென் ஆப்பிரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் எல்லாம் 'தமிழன்' என்ற பெயரை மட்டும் தாங்கிக் கொண்டு, தமிழைப் படிக்கவோ, பேசவோ, எழுதவோ முடியாத நிலையில் இருக்கிறார்கள், அவர்களுக்கு முழுமையாகத் தமிழைக் கற்றுத் தருவதற்காக தமிழ்ப் புத்தகங்களை அனுப்புவது, தமிழாசிரியர் களை அனுப்புவது, எந்த நாட்டிலே அப்படி உதவிகளைக் கேட்கிறார்களோ அதையெல்லாம் செய்வது என்ற முறையில் நம்முடைய அரசாங்கம் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

12.10 மணி

இந்த அரசு மொழிப் போருக்காகத் தன்னை ஈடுபடுத்தி தியாகம் புரிந்த தியாகிகளுக்கெல்லாம் இன்றைக்கு மொழிப் போர் அடிப்படையில் நிதி உதவி தருகிறார்கள். அதை 350 ரூபாய் அளவுக்கு நம்முடைய கழக அரசு தருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிதியை வழங்கு கின்ற நம்முடைய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று—தமிழகத்தினுடைய வரலாறு—ஏறக்குறைய தமிழ்நாட்டு வரலாற்றை இதுவரை முழுமையாக யாரும் எழுத வில்லை. தமிழ்நாட்டு வரலாற்றை முழுமையாக, ஆலயங்களின் அடிப்படையில், சுவடிகளின் அடிப்படையில், கல்வெட்டுக்களின் அடிப்படையில், வரலாற்றின் அடிப்படையில் பல்வேறு பன்னாட்டு வரலாற்றுப் பேராசிரியர் அடிப்படையில் முழுமை யான சுயமான ஒரு நல்ல வரலாற்றை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அன்றைக்கு வரலாற்றுத் திட்டம் அறிவிக் கப்பட்டது, அதைத் தொடர்ந்து இன்றைக்கு, சென்னை பல்கலைக் கழகத்தினுடைய பேராசிரியர் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எந்தவிதமான குறைபாட்டுக்கும் இடமில்லாமலும், யாருடைய ஏற்புக்கும் இடமளிக்காமலும், முழுமையான அளவில் ஆய்ந்து உணர்ந்து தமிழ்நாட்டு வரலாற்றை எழுத வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர்களை இந்த அளவுக்கு நியமித்த அரசையும் நான் பாராட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு, மழலைப் பள்ளிகள் என்று பெரும்பாலான நர்சரிப் பள்ளிகள் வந்திருக்கின்றன. அதைப்பற்றியெல்லாம் உங்களுக்கு நிறையத் தெரியும். பேரவை உறுப்பினர்கள்

நிறைய பேர் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு நர்சரிப் பள்ளிகளெல்லாம் மிகப் பெரிய மஸ்டர்ரோல் போன்று வளர்ந்திருக்கிறது. இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை? ஏறக்குறைய 10, 15 ஆண்டுகளாக ஆங்கிலத்திலே பிடிப்பு ஒரு மோகம், ஆங்கிலத்திலே படித்தால்தான் வேலை, ஆங்கிலத்தில் படித்தால்தான் மதிப்பு என்ற நிலையிருக்கிறது. இந்நிலையை மாற்றியாக வேண்டும். இன்றைக்குப் பல்கலைக் கழகத்திலே படிக்கின்ற மாணவர்கள், பி.ஏ., பி.எஸ்ஸி., பி,காம். போன்ற படிப்புகளைத் தமிழிலே படிக்கிறார்கள். அதைத் தொடர்ந்து எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம் ஆகிய படிப்புகளைப் படிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் பல்கலைக் கழகம் அதை பயிற்று மொழியாக ஏற்கவில்லை. அதைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல. அவர்களுக்கு என்ன உதவித் தொகை வேண்டுமென்ற முறையையும் நமது அரசு சிந்தனை செய்து பார்க்க வேண்டும், குறிப்பாக தமிழே படிக்காமல், தமிழே தெரியாமல், தமிழ்நாடு தேர்வாணைக் குழு, மூலமாக அரசு வேலைக்கு வருகிறார்கள். அந்த நிலை இருக்கக் கூடாது. கண்டிப்பாக அதை ரத்து செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கின்ற தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய வேலை வாய்ப்பிலே வருகின்றவர்கள் தமிழ் தெரியாமல் யாராக இருந்தாலும் அவர்களை அனுமதிக்கக் கூடாது. அதற்கான உத்தரவை நம்முடைய அரசு பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்தால்தான் தமிழைப் பயிற்சி மொழியாகப் படிக்கின்ற மாணவர்கள் தமிழ்நாட்டிலே உள்ள தமிழர்கள் வேலை வாய்ப்பைப் பெற முடியும். வேற்று மொழிக்காரர்கள் இங்கே வந்து வேலை பார்க்கின்ற சூழ்நிலையை உருவாக்குவதைத் தடுக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு நிலையை நமது அரசு தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. மழலைப் பள்ளிகள், பிரைமரி ஸ்கூல்ஸ், துவக்கப் பள்ளிகள் இவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும். இன்றைக்கு கல்வி நிறுவனம் என்பது மிகப் பெரிய வியாபாரப் பணிக் கூடமாக ஆகியிருக்கிறது. ஏறக்குறைய பத்தாண்டுக் காலம் கட்டவிழ்த்து விட்ட சட்டத்தின் காரணமாக மிகப் பெரிய அளவிலே ஊழல் நடந்து, பல்வேறு பகுதிகளிலே, தொழிற் கல்வி, தொழிற் பயிற்சிப் பள்ளி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, இப்படிப் பல்வேறு பள்ளிகள் உருவாக்கப்பட்டு, அதுவும் சில நேரங்களிலே மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்ஸ் என்ற பெயரிலே, அந்தப் போர்வையிலே செய்து கொண்டிருக்கிறார்கள். மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷனாக இருந்தாலும், அதையும் தடுப்பதற்கு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். எந்த அடிப்படையில்

என்று சொன்னால், ஒரு மைனாரிட்டி என்றால், கிருத்தவர்களாக இருக்கிறார்கள். முஸ்லீம்களாக இருக்கிறார்கள் என்பதற்காக, எத்தனை இன்ஸ்டிடியூஷன்களை வேண்டுமானாலும் நடத்த முடியாது. முஸ்லீமாக இருந்தால் அவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அந்தப் பயிற்சியிலே படிக்கின்றவர்கள் இருந்தால் போதும், மேற்கொண்டு தேவையில்லை என்று செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு நிலையை நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தீர்மானம் மூலமாகத் தெரிவிக்கலாம். ஆகவே, மைனாரிட்டி என்ற அடிப்படையில் அவர்களுடைய உரிமை பாதிக்கப்பட்டால் அதைக் காப்பாற்றலாம், மைனாரிட்டி என்ற அடிப்படையிலே பல்வேறு பள்ளிகளை, கல்லூரிகளை ஆராய்ச்சிப் பயிற்சிப் பள்ளிகளை உருவாக்கி அதனால் பணத்தைப் பெற்றுக்கொண்டு சம்பாதிக்கின்ற நிலையை உருவாக்கக் கூடாது. அதையெல்லாம் தடுக்கின்ற முறையிலே நம்முடைய அரசு புதிய முறையிலே சட்டங்களை இயற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக இன்றைக்கு நம்முடைய கல்லூரிகளிலேயும், பள்ளிகளிலேயும் திருக்குறளைப் போன்று, பாவேந்தர் பாரதிதாசனுடைய நூல்கள், தந்தை பெரியாருடைய கருத்தோவியங்கள், பேரறிஞர் அண்ணாவினுடைய கருத்துக்களெல்லாம் பாடப் புத்தகங்களில் இடம் பெறுகின்ற அளவுக்கு நம்முடைய அரசு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

12.15 மணி

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் செஞ்சியை ஒரு பனிஷ்மெண்ட் ஏரியா என்று சொல்வார்கள். யாரையாவது மாற்ற வேண்டுமானால் செஞ்சிக்கு தான் மாற்றுவார்கள். செஞ்சியில் தொழிற் கல்லூரி இல்லை, பெரிய கல்வி நிறுவனம் இல்லை. தொழிற்சாலை இல்லை. வேறு முன்னேற்றமான எந்த இடமும் இல்லை. அதை கருத்தில் கொண்டு நம்முடைய அரசு அங்கு புதிய கல்வி நிலையங்களை உருவாக்குவதற்கு முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக செஞ்சியில் பெண்களுக்காக தனியாக ஒரு மேல்நிலைப்பள்ளி, அவலூர் பேட்டையில் பெண்களுக்காக ஒரு உயர்நிலைப்பள்ளி, கப்பலாம்பாடியில் உயர்நிலைப்பள்ளி, ஒலக்கூரில் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றை ஏற்படுத்தி, பல்வேறு பள்ளிகளில் இருக்கிற குறைபாடுகளை தீர்க்கும் அளவிற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற கல்வி மானியக் கோரிக்கையில், நான் சார்ந்திருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்

சார்பில் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். நம்முடைய மாநிலத்தில் இந்த ஆண்டு கல்விக்காக ஏறத்தாழ மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் 22 சதவீதம் அளவிற்கு, 1,050 கோடி ருபாயை செலவழிக்க இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் 439 கிராமங்களில் புதிய ஆரம்பப் பள்ளிகளை அரசு துவக்க இருக்கிறது. இதையெல்லாம் நாங்கள் வரவேற்கிற அதே நேரத்தில் நம்முடைய கல்வி மானியக் கோரிக்கை அறிக்கையின் முதல் பக்கத்தில்,

'கண்ணுடையவர் என்பவர் கற்றோர், முகந்திரண்டு
புண்ணுடையவர் கல்லா தவர்'

என்ற வள்ளுவரின் வாக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இதை கருத்தில் கொண்டு நாம் பார்ப்போமானால், இந்த கொள்கை குறிப்பில் கூறப்பட்டிருப்பதைப் போல தமிழ்நாட்டில் இவ் வளவுக்கும் பிறகும், 1,050 கோடி ரூபாயை, ஏறத்தாழ 22 சதவீதம் ஒதுக்கியதற்குப் பிறகும் நீண்டகாலமாக கல்விக்கு முன்னுரிமை கொடுத்து கவனித்ததற்கு பிறகும், 1981 ஆம் ஆண்டு ஜனத் தொகை கணக்கெடுப்பின்படி பார்த்தால் மொத்தத்தில் 46.77 சதவீதம் தான் கல்வி பெற முடிந்திருக்கிறது. இதிலே ஆண்கள் 58.26 சதவீதமும், பெண்கள் 34.99 சதவீதமும் கல்வி பெற முடிந்திருக்கிறது. தமிழகத்தில் ஆண்களில் 40 சத வீதமும், பெண்கள் 65 சதவீதமும், ஏறத்தாழ மொத்த மக்கள் தொகையில் 53.24 சதவீதம் அளவிற்கும் கண்ணில்லாதவர்களாக இருக்கிறார்கள். இதனை அடிப்படையாக வைத்து அந்த நிலையி லிருந்து நாம் பார்த்தால், இதிலே நாம் எந்த அளவிற்கு இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது புரியும், இத்தனைக்கும் பிறகு தமிழகத்தில் 53 சதவீத மக்கள் முகத்தில் புண் உடையவர்களாக, கண்ணில் லாதவர்களாக இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் தான் இந்தப் பிரச்சினையை நாம் பார்க்க வேண்டுமென்று நான் உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

இந்த நிலைமை அடிப்படையில் நாம் பார்க்கும் பொழுது, பள்ளிக்கூடங்கள், மாணவர்கள், ஆசிரியர்கள். கல்வி ஆய்வுக் கூடங்கள் இவைகளையெல்லாம் நாம் கணக்கில் கொண்டால், இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற விஞ்ஞான ரீதியான வளர்ச்சிகள் விஞ்ஞான கல்வி என்று எடுத்துக்கொண்டால், அந்தக் கல்வி வாழ்க்கைக்கு உதவக்கூடிய கல்வியாக, கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த முறையில் இந்த கல்வி முறையில் மாணவர்களின் பாடச் சுமைகளைக் குறைத்து, வாழ்க்கைத் தேவையோடு இணைந்த ஒரு கல்வியாக கொண்டுவர வேண்டும். புதிய கல்வி என்று சொல்கிற போது வசதிபடைத்தவர்களுக்கு மட்டும் இந்த புதிய கல்வி என்று நாம் சொல்லவில்லை, நாட்டில் இருக்கக்கூடிய அடித்தட்டு மக்களுடைய நலனை அடிப் படையாக கருத்திற்கொண்டு, பெரும்பகுதி மக்கள் புண்ணுடைய

வர்களாக இருக்கிறார்கள் என்ற விஷயத்தை கவனத்தில் கொண்டு நம்முடைய கல்வித் துறை கவனிக்க வேண்டிய ஒன்றாக இது இருக்கிறது என்பதை நினைவுபடுத்த கடமைப்பட்டிருக் கிறேன். அதோடு மட்டுமல்லாமல் கல்வியை ஜனநாயகப் படுத்துகிற முறையையும் கல்வி அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

12.20 மணி

இன்றைக்கு கல்வித்துறை, அதிலும் குறிப்பாக கல்வி நிறு வனங்கள் ஜனநாயக ரீதியாக நடத்தப்படுவதற்கு மாநில கல்வி அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே மாநில ஆலோசனைக் குழுவை அமைக்கலாமா என்பதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன். ஏன் இதை நான் குறிப்பிடுகிறேன் என்றால், முன்னாலே இருந்த அரசு மிகப் பெரிய அளவிலே சும்மா சொல்லக் கூடாது அவர்களை— தமிழகத்தினுடைய கலாச்சாரத்தை மாற்றி னார்கள் கல்வித்துறையிலே. என்னிடம் பலர் வருகிறார்கள். பெற்றவர்கள் யாரும் இப்போது, தங்களுடைய பிள்ளைகளை நர்சரி பள்ளிகளிலேயிருந்து கல்லூரி வரையிலும், அல்லது தொழிற் கல்வியிலேயிருக்கக்கூடிய கல்விக்கூடங்கள் வரையிலும், அதிலே எங்களுடைய பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும் என்று சிபாரிசுக்கு வருவதில்லை. அதற்குமாறாக ஐ.டி.ஐ–யிலே, பாலிடெக்னிக்கிலே அல்லது இன்ஜினியரிங் கல்லூரியிலே அல்லது மருத்துவக் கல்லூரியிலே அல்லது கலைக் கல்லூரியிலே எங்களுடைய பிள்ளைக்கு ஒரு இடம் வாங்கித் தாருங்கள் என்றுதான் கேட்கிறார்களே தவிர, யாரும் பிள்ளை களை பள்ளிக்கூடத்திலே சேர்க்க வேண்டும் என்று என்னிடத் திலே வருவதில்லை. எங்கள் பிள்ளைக்கு ஒரு இடம் வாங்கித் தாருங்கள் என்றுதான் வருகிறார்கள். அப்படி தமிழகத்தினுடைய கலாச்சாரத்தை கடந்த ஆட்சி சிறப்பாக மாற்றியிருக்கிறது. எனவே அந்த நிலைமையிலிருந்து ஒரு புதிய நிலைமையை ஜன நாயக ரீதியாக ஜனநாயகப்படுத்தக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் என்றால், அதனுடைய விளைவாகத் தான் ஏறத்தாழ 38 கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அவர்கள் விருப்பம்போல் ஆட்சி நடத்துவார்கள். பணம் கொடுப்பதோடு இந்த ஆட்சியினுடைய வேலை சரி. அதனுடைய நிர்வாகத்திலே இந்த ஆட்சி தலையிட முடியாது. அந்தத் தன்னாட்சிக் கல்லூரிகள் அவர்கள் விருப்பம் போல் செய்யக்கூடிய நடந்துகொள்ளக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன.

திரு. மா. சுந்தரதாஸ்; மாற்றுத் தலைவர் அவர்களே, 1984 வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோடுதான் அவர்கள் தோழமைக் கட்சியாக இருந்தார்கள். அப்போது ஏன் இதைச் சொல்லவில்லை என்பதை அறிய விரும்பு கிறேன்.

திரு.கோ. வீரையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறுக்கீடுகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு, எனக்கு நேரத்தைக் குறைத்துவிடக்கூடாது. 1984-க்கு முன்னாலே இருக்கக்கூடிய சட்டமன்ற அலுவலசுக் குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளட்டும் என்று மட்டும் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

12.25 மணி

ஆகவே இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே இந்தத் தனியார் நிர்வாகங்கள் என்பது, மொத்தமாகப் பார்த்தால் அது ஆரம்பப்பள்ளியாக இருந்தாலும், நடுநிலைப்பள்ளியாக இருந்தாலும் அல்லது கல்லூரியாக இருந்தாலும், தனியார் துறைகளிலே இருக்கக்கூடிய பள்ளிகளினுடைய, கல்லூரிகளுடைய எண்ணிக்கைதான் மேலோங்கி இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

38 கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இதை ஏன் ஜனநாயகப்படுத்தவேண்டும் என்று நான் சொல்கிறேன் என்றால், காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு செனட் சபைக்குத் தேர்தல் நடத்தி, பல வருடங்களாகிறது, அப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது. அதுமட்டுமல்ல, பல கல்லூரிகளில், மாணவர்கள் மன்றங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொன்னால், மாணவர்கள் தெருவிலே நின்று, ஸ்ட்ரைக் செய்து, போராடி, அதற்குப் பிறகு மாணவர் மன்றத் தேர்தலுக்கான உரிமைகளை அவர்கள் பெறவேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, இவைகளைச் சீர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், தனியார் பள்ளிகளை எல்லாம் நிர்வகிக்க ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம் 10 ஆண்டுக் காலமாக முடிவுக்கு வராமல் உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. 10 ஆண்டுகாலமாக இருக்கிற இந்தச் சட்டத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டும். ஏன் என்று சொன்னால், இந்தச் சட்டத்திலே கூட இன்னும் மாற்றங்கள் செய்யவேண்டியதிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டினுடைய முடிவு தெரியாததால் மாற்றங்கள் செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. எனவே இதையெல்லாம் பார்த்து,—அதனுடைய விளைவுதான்—இப்படிப்பட்ட நிலைமைகளை காரணமாக வைத்துத்தான் அவர்கள் ஏராளமான அளவிலே, தனியார் கல்லூரிகளை விருப்பம்போலத் துவக்குவதும், அதுவும் எதிலே துவக்குவது என்றுகூட இல்லாமல், அவர்கள் மருத்துவக் கல்லூரிகளை எல்லாம் துவக்குவதும் என்பது, அவர்களுடைய பிரவேசம் எல்லா இடத்திலும் இருக்கிறது. அதனுடைய விளைவாகத்தான்

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு தள்ளப்பட்டதும, கல்லூரிகளிலே இருக்கிற அந்த நிலைமைகளை எல்லாம் பார்த்து, அந்த முறையிலே அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், இந்தத் தனியார் கல்லூரிகள் அல்லது தனியார் பள்ளிகளில் இருக்கக்கூடிய நிர்வாகங்கள் சட்டவிதிகளைக் கூட அமுல்படுத்துவதில்லை. சட்டவிதிகளை அமுல் நடத்தக்கூடிய தெம்பும் திராணியும் நம்முடைய கல்வித்துறைக்கு இருக்கிறது என்று நான் கருதவில்லை. கல்வித்துறையை அவர்கள் துச்சமாக மதிக்கக்கூடிய போக்கு இன்றைக்கு இருக்கிறது. அவர்களுக்குப் பணியக்கூடிய நிலைமையிலேதான் நம்முடைய கல்வித்துறை இருக்கிறது. எனவே இதைக் கவனத்திலே கொண்டு, இந்தத் தனியார் கல்வி நிலையங்களுடைய சட்டத்தை உச்ச நீதி மன்றத்திலே இருப்பதை முடிவிற்குக் கொண்டுவரவேண்டும் என்றும், அதிலே செய்யவேண்டிய மாற்றங்களைச் செய்வதற்கானமுயற்சிகளைச் செய்யவேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதோடு மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய கல்வி அமைச்சர் அறிந்திருப்பார்கள். இன்றைக்கு ஆசிரியர்கள் மாறுதல்கள், ஆசிரியர்கள் நியமனங்கள், அந்தக் கடிதங்கள் முழுவதும் கட்டாக சென்னைக்கு வந்து திரும்பிப் போக வேண்டிய அவசியம் என்ன? எவ்வளவு பெரிய சிரமங்களை, தவறான எண்ணங்களை அது தமிழகத்திலே உண்டாக்குகிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே கல்வி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, வரப்போகிற ஆண்டில் அந்தக் குறைகள் எல்லாம் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய கல்வி அமைச்சர் அடிக்கடி குறிப்பிட்டார்கள். பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போதுகூட இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள்.

12–25

பள்ளிகளைத் துவக்குவதற்கு எல்லாவிதமான தேவைகளையும் பூர்த்தி செய்து மூன்று ஆண்டுகாலத்திற்குச் சம்பளம் கொடுக்கக் கூடிய பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்கொண்டு அப்படி அவர்கள் முன்வந்தால் மேல்நிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக் கலாம், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக்கலாம், என்ற முறையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த

இந்த நிபந்தனைகளுக்குஉட்பட்டு பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டும் அல்லது பள்ளிகள் துவக்கப்படவேண்டுமென்று சொன்னால், இந்த ஆட்சி இன்னும் 5 ஆண்டுக்காலத்திற்கு எந்த ஒரு பள்ளியும் இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்து ஆரம்பிக்க முடியும் என்ற நிலைமையிலே இருக்காது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(12-25 மணி)

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களை ஆழ்ந்து புரிந்து சொல்லக் கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் ஒரு ஐயுறவை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். குறிப்பாக அரசுப் பள்ளிக்கூடங்கள் தனியார் பள்ளிக்கூடங்கள் எவையாக இருந்தாலும், முன்னுரிமை அடிப்படையில் அந்த பள்ளிக் கூடங்களுக்கு கட்டாயமாக, மேல்நிலைப் பள்ளியாக, உயர்நிலைப் பள்ளியாக, தகுதியளவில் அனுமதி தரவேண்டுமென்று தீர்மானிக் கப்பட்டால் அவர்களுக்கே தரப்படும். அல்லது ஓராண்டிற்கு 50,40 என்ற அந்த அளவு எண்ணிக்கையிலே இடம் பெறும், அந்த ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேல் நிதி தேவைப்படும் நிலையில் பல பேர் அவர்களுடைய உயர்நிலைப் பள்ளிக்கூடத்திலே மேல் நிலைப் பள்ளி நடத்தவேண்டுமென்று ஆரம்பத்திலே கேட்பார் களேயானால், அரசின் நிதிப் பற்றாக்குறை காரணமாக, மூன்று ஆண்டுகளுக்கு அவர்கள் நிதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் அப்படிப்பட்ட பள்ளிகள் உயர்த்தப்படவும் அனுமதிக்கப்படு கின்றன.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஒவ்வொரு ஆண்டுக்கும் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாகவும், எத்தனை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தும் என்று அவர்கள் திட்டவட்டமாக அறிவித்து விட்டார்களே யானால் உதவியாக இருக்குமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: கடந்த ஆண்டுகூட 40, 45 பள்ளிகளைத்தான் ஒவ்வொரு நிலையிலேயும் உயர்த்தமுடியும் என்ற நிதிநிலை இருந்தும்கூட 50, 60 வரையில் உயர்த்தப் பட்டிருக்கிறது. இது கட்டாயமான, தேவை, தகுதி, முன்னுரிமை என்ற அடிப்படையில் மேல் மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அதற்குப் பிறகு அரசு ஏற்றுக்கொள்கிறது. இது மேல் மட்டக் குழு பரிசீலனைக்கு உட்பட்டது.

திரு.கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக 1,050 கோடி ரூபாய் ஒதுக்கிய தற்குப் பிறகும் அவர்களுக்கு இருக்கக் கூடிய நிதிநிலை நெருக் கடியைத் தெரிந்துதான் நான் சொல்கிறேன். ஆரம்பப் பள்ளியிலே

ஏறத்தாழ 76.78 இலட்சம் மாணவர்கள் 5–ஆம் வகுப்பு வரையில் படிப்பதாக உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. சற்றேறக்குறைய 77 இலட்சம் மாணவர்கள் 5–ஆம் வகுப்பு வரையில் படிக்கிறார்கள். அவர்களுக்கு இருப்பதாக சொல்லக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1, 18, 928. ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற வீதத்தின் அடிப்படையில் நாம் கணக்கிடுவோமேயானால், 1,90,000 ஆசிரியர்கள் தேவை, ஆரம்பப் பள்ளிகளுக்கு. ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,19,000 என்ற அளவில் தான் இருக்கிறது. அதிலே டார்த்தீர்களேயானால், 71,000 ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளிகளுக்கு இன்றைக்கு இருக்ககூடிய மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவைப்படுகிறது. அதேபோல் தான் நடுநிலைப் பள்ளிகளை எடுத்துக் கொள்வோமேயானால் 30 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயில்வதாக இதிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. 30.33 இலட்சம். அதற்கு இருக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 65,668. ஆனால் 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று நாம் கணக்கிடுவோமேயானால், 75,000 ஆசிரியர்கள் தேவைப்படுகிறது. இப்படிப் பார்த்தால் இதிலே ஒரு10,000 அளவிற்கும், அதிலே 71,000 அளவிற்கும், இன்றைக்கு ஆசிரியர்கள், இருக்கக் கூடிய மாணவர்களுக்கு தேவைப்படுகிறது. அப்படியிருக்கும்பொழுது அந்த மாணவர்களை எப்படி இந்த ஆசிரியர்கள் பயிற்றுவிக்கமுடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப்பட்ட கேள்வி கேட்ட' பொழுது இவ்வளவு பேர்கள் புதியதாக இரண்டு ஆண்டுக் காலத்தில் நியமிக்கப்படவேண்டுமென்று சொன்னால், எத்தனை கோடி நிதி தேவைப்படும் என்ற அந்தக் கணக்கையும் உறுப்பினரே சொல்லவேண்டும். இல்லையென்றால் ஒரு பொது இயக்கம் நடத்தி ஆசிரியர்கள் எல்லாம் சம்பளம் இல்லாமல் நாட்டிற்காக உழைக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டும்.

திரு.கோ. வீரையன் ; துணைத் தலைவர் அவர்களே, நிலைமைகள் இப்படி இருக்கின்றன. இதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் நான் குறிப்பிடுகிறேனே தவிர, ஒரே ஆண்டுக் காலத்தில் 81,000 பேர்களை நியமித்துவிட முடியும் அதற்கான நிதிநிலை அரசிடம் இருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்பவில்லை. (குறுக்கீடு) நிலைமைகள் அப்படி இருக்க, அந்த அஸ்திவாரம் இந்த அளவிற்கு பலவீனம் அடைந்தால் எதிர்காலத்தில் எவ்வளவு சிரமமாக இருக்குமென்பதை கவனிக்கவேண்டுமென்பதற்காகத்தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இப்படிப்பட்ட நிலைமையில் நாம் இருக்கும் பொழுது இந்த நர்சரிப் பள்ளிகளை தனியார்கள் நடத்துவது எப்படி இருக்கிறது என்பதையும், அதை எல்லாம் ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறோம் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னால் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

12—30 மணி

உதாரணத்திற்கு ஒன்றேயொன்றை மட்டும் சொல்கிறேன். நம்முடைய சென்னை நகரத்திற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கிரோம்பேட்டையில் இருக்கக்கூடிய ஒரு நர்சரி பள்ளி என்.எஸ். என். மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் ஒரு ஆண்டுக்கு அதற்கு வரக் கூடிய வருமானம் ரூ.30 இலட்சம். அது அந்த

பள்ளிக்கு வரக் கூடிய வருமானம். அவர் செய்யக் கூடிய செலவு 10 லட்சம் ரூபாய். நிகர லாபம் 20 லட்சம் ரூபாய் அந்த ஒரு நிர்வாகத்திற்குக் கிடைக்கிறது. அப்படி ஒரு நிலைமையும் ஒரு பக்கத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அத்தோடு மட்டுமில்லாமல் ஆசிரியர்கள் எவ்வித பணிப் பாதுகாப்பும் இல்லாமல் அங்கே இருக்கிறார்கள். ஆசிரியர்கள் அங்கே கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் தும்மினால் கூட வேலை நீக்கம்தான். நர்சரி பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சி. பி. எஸ்.சி. பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு சட்டத்தை அரசு கொண்டு வராததன் காரணமாக இப்படி பணம் பெரும் அளவுக்கு போகிறது என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். அதை ஒழுங்குபடுத்துவற்கான முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். அதே போலத்தான் தனியார் பள்ளிகள் கல்லூரிகள் சிலவற்றில் அவர்கள் வைத்தது தான் சட்டம் என்ற முறையிலே நடக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் சிறுபான்மை சமூகத்தினர் என்ற பெயரால் நடக்கும் பள்ளிகளில் எந்த அளவுக்கு என்ன நடந்தாலும், ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்தாலும், நிர்வாகம் முறைகேடாக அத்து மீறி நடந்தாலும் அப்பிரச்சினையில் நாங்கள் தலையிடமாட்டோம் என்ற அளவுக்குத்தான் தமிழகக் கல்வித்துறையும் கல்வி அதிகாரிகளும் கருதுவது போல் இருக்கிறது. ஏனென்றால் மைனாரிட்டி, சிறுபான்மை என்ற முறையில்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விரைவிலே முடித்துக் கொள்ளுங்கள். ஒரு மணிக்கு அமைச்சர் பதிலுரைக்க வேண்டும்.

திரு.கோ. வீரையன் ; முடித்து விடுகிறேன். அந்தப் பிரச்சினைகளை நினைவூட்டி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப் பற்றி சில செய்திகள். மேல் நிலைப் பள்ளிகளிலே பயிற்றுவிக்கின்ற

பயிற்சி சரியாக இல்லை, அதற்காக அதைக் கட்டுப்படுத்துகிறோம் என்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எண்ணிக்கைக்கு மேல் போகிறது வேலை வாய்ப்பு கொடுக்க முடியவில்லை என்பதற்காக கட்டுப்படுத்துகிறோம் என்று சொன்னார்கள் என்று சொன்னால் நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இன்றைக்குக் கூட 100 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன என்று நம்முடைய கொள்கைக் குறிப்பிலே சொல்லப் பட்டிருக்கிறது. அந்த நூறில் 28 தான் அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன. பாக்கி 72 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தனியாருடைய நிர்வாகத்திலே தான் இருக்கின்றன என்பதையும் நாம் பார்க்கவேண்டியிருக்கிறது.

நம்முடைய சர்வகலாசாலைகளைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் நம்முடைய பல்வேறு சர்வகலாசாலைகளுக்கும் தனித்தனி விதிகளும், ஒன்றுக்கொன்று முரணான நடைமுறைகளும் இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் ஒரு மாணவன் ஒரு சர்வகலாசாலையில் படித்துவிட்டு இன்னொரு சர்வகலா சாலைக்கு வந்தால், அந்த மாணவனை சேர்த்துக் கொள்ளாத நிலைமை இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் அந்த சர்வ கலாசாலைகளில் சமையல் செய்யக் கூடிய தொழிலாளர்கள் ஏறத்தாழ 15 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எந்தவிதப் பாதுகாப்பும் எந்தவித உத்திரவாதமும் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். அரசுத் துறையில் இருக்கிற மற்ற பல்வேறு பகுதிகளில் உள்ள உணவு விடுதிகளில் அல்லது தங்கும் விடுதிகளில் அல்லது தமிழ்நாடு ஹோட்டல் போன்ற இடங்களில் இருக்கக்கூடிய சமையல் செய்வர்களுக்கு கூட பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் சர்வகலாசாலையில் சமையல் செய்பவர்களுக்கு ஏறத்தாழ 15 ஆயிரம் பேர்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறது. அதேபோல மேல்நிலைப் பள்ளியிலே பகுதி நேர ஆசிரியர்களாக பணி புரியும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு 3 வருடமாக சம்பளம் இல்லாமல் இருக்கிறார்கள். (குறுக்கீடு) முடித்து விடுகிறேன்.

கடைசியாக இன்றைக்கு தமிழாசிரியர்களையும் கவனிக்க வேண்டி இருக்கிறது. அத்தோடு தமிழ் மொழி வளர்ச்சி பற்றி எந்த அளவுக்கு நம்முடைய அரசு அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி நான் முடிக்கிறேன். பாலிடெக்னிக்குகளில் பயிலக் கூடிய மாணவர்கள் பத்தாவது வகுப்பு வரை தமிழிலே படித்து விட்டு இங்கே வரும்போது ஆரம்பத்திலேயே ஆங்கிலத்திலே ஆரம்பிக்கும்போது அவர்களால் அந்தப் பாடங்களை நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டு அவர்கள் செமஸ்டரிலே பாக்கி வைத்து அதற்கு தடை வந்து, போராட வேண்டிய நிலையும் கஷ்டமும் ஏற்படுகிறது. எனவே அரசு பாலிடெக்னிக்குகளில்

படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமல்ல அதேமாதிரி மருத்துவக் கல்வியிலே 10 வருஷம் ஆங்கிலத்திலே படித்து விட்டு வரும் மருத்துவர்கள் திரும்பி வந்தவுடன் லீவு லெட்டர் கூட தமிழிலே தான் எழுத வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு எழுதத் தெரிவதில்லை, நீதிமன்றத்திற்குச் சென்று சாட்சியங்களை சொல்லவேண்டுமென்று சொன்னால் அவர்களால் சொல்ல முடிவதில்லை. எனவே தான் அப்படிப்பட்ட தொழில் கல்வி நிறுவனங்களில் தமிழைக் கொண்டு வருவதற்கு எந்த அளவுக்கு முயற்சிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சிக்க வேண்டும், அதேபோல இந்த பாலிடெக்னிக்குகளில் படிக்கும் அந்த மாண வர்கள் முதல் ஆண்டு தியரி படிக்கிறார்கள், பிராக்டிகல் இரண்டாம் ஆண்டுதான் படிக்கிறார்கள், எனவே முதல் ஆண்டிலேயே, இரண்டு செமஸ்டர்களாக வைக்காமல் ஒரே ஆண்டில் நடத்தி முடிக்க முடியுமா என்பதைக் கூட கல்வித் துறை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கடைசியாக என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் ஒரே ஒரு வார்த்தை.

வேப்பஞ்சேரி, வெண்மணச்சேரி, முத்திலியப்பன் என்ற ஊர்களில் இருக்கக்கூடிய பள்ளிக் கூடங்கள் மாணவர்கள் படிக்க முடியாத நிலையில் சீரழிந்து இருக்கின்றன. அதேபோல அந்தணப்பட்டியில் இருக்கக்கூடிய பள்ளிக் கூடம் மிகவும் மோசமான நிலைமையில் இருப்பதால் அந்த மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். திருக்கண்டியிலே இருக்கக்கூடிய ஒரே ஒரு மேல்நிலைப் பள்ளி தான் அரசினுடைய மேல்நிலைப் பள்ளியாக என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அந்த மேல்நிலைப் பள்ளியினுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. 1200-க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். ஒரு கழிப்பிட வசதி கிடையாது. சுற்றுச்சுவர் கிடையாது. அதைச் செய்து தர வேண்டும். அதோடு நாகை நகரத்தில் இருக்கக் கூடிய நூல் நிலையம் தனியாருடைய லாட்ஜ் ஒன்றிலே நடந்து வருகிறது. அதை காலி செய்ய வேண்டுமென்று வலியுறுத்து கிறார்கள் எனவே, நாகை நகரத்தில் இருக்கக்கூடிய அந்த நூல் நிலையத்திற்கு ஒரு அலுவலகம் தனியாக அமைக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

12.35 மணி

*திரு. வே. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தானைத்தலைவரும், தமிழினத்தலைவரும், இன உணர்வு கொண்ட தலைவரும், தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்க்கு மட்டுமல்லாமல், உலகெங்கும் பரவிக் கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயத்திற்கும், அல்லும் பகலும் அயராது ஓடி உழைக்கின்ற ஒப்பற்ற தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி என் உரையைத் துவக்குகிறேன்

இந்தக் கல்வி நிதியாண்டில், கல்வி மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு பெற்றதை எண்ணி பெருமகிழ்ச்சியடைகிறேன். கல்விக்காக இந்த ஆண்டில் ரூ.1042 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமானால், சமுதாயம் விழிப்புணர்ச்சி அடைய வேண்டுமானால், கல்வி மிக மிக அவசியமான ஒன்றாகும். எனவே கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.1,042 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். பொதுவாக, அடித்தளத்திலிருக்கும் மாணவர்களுக்கு நல்ல பல சலுகைகளை வழங்கினால் தான், கல்வித் தரம் உயரும் என்ற நோக்கத்தோடு, 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வசதியைச் செய்திருக்கிறார்கள்.

அதேபோன்று, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும், பாதிக் கட்டணச் சலுகை இருக்கும் என்ற நல்ல வசதியைச் செய்திருக்கிறார்கள். பெண்கள் கல்வி உயர்ந்தால்தான், சமுதாயம் சிறப்படையும் என்ற நோக்கத்தோடு, பெண்கள் 8 ஆம் வகுப்பு வரை படித்திருந்தால், அவர்களுக்கு ரூ. 5,000 உதவித் தொகை வழங்கப்படும் என்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இதை அறிவித்ததன் நோக்கம் பெண்கள் 8 ஆம் வகுப்பு வரையிலாவது படித்தால்தான், அவர்கள் இந்த சமுதாயத்தில் நல்லவர்களாக உருவாக முடியும் என்ற நோக்கத்தோடு இந்த நல்ல ஒரு செயலைச் செய்திருக்கிறார்கள். ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் நலத்தில் அக்கறைகொண்ட கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு 40 விடுதிகளைத் திறப்பதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார். அதேபோன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோர் நலனுக்காக, இந்த ஆண்டு 50 விடுதிகளைத் திறக்க இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

அதேபோன்று, பள்ளியில், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே நல்ல ஒரு சுமுகமான நிலை ஏற்படவும், பள்ளியின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கின்ற கருத்துக்களைத் தகர்த்தெறியவும், பெற்றோர் ஆசிரியர் சங்கம்— பெற்றோர் ஆசிரியர் கழகம் என்ற ஒரு கழகம் பள்ளியில் இருந்து வந்தது. அது பல ஆண்டுகளில் பல்வேறு பள்ளிகளில் தொடங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக பெற்றோர் ஆசிரியர் கழகத்தைக் கூட்டுவதற்கு ஆவனசெய்ய வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பட்டக் கல்வியை மட்டும் உயர்த்துவதனால் எந்தப் பயனும் இல்லையென்றாலும், தொழிற்கல்வியை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தில், திருச்சி, கோவை, சேலம் போன்ற இடங்களில், தொழிற் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், இந்த ஆண்டு 3 நகரங்களிலும், தொழில் கல்வி தொடங்க இருக்கிறது

என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இந்த நிதி ஆண்டில், இடை நிலை ஆசிரியர்கள் 1200 பேர் நியமிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும், இருந்தாலும், எம்.எஸ்.ஸி., பி.எட்., மற்றும் எம்.ஏ., பி.எட். போன்ற முதுநிலை பட்டப்படிப்பைப் படித்துவிட்டு வேலையில்லாமல் பட்டதாரிகள் திண்டாடுகின்ற இந்த நேரத்தில், இடை நிலை ஆசிரியர்களை நியமிக்கின்ற இந்தத்தருணத்தில், முதுநிலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறுபான்மையினர் நலன் என்பதை ஒரு அடிப்படையாக வைத்துக் கொண்டு, பல்வேறு கல்வி நிலையங்கள், தொழிற் கல்வி நிலையங்கள் துவக்குவதற்குஅந்தசலுகையைப் பயன்படுத்திக் கொண்டு வியாபாரமாகப் பல்வேறு நபர்கள் இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இந்துவாக இருக்கின்ற ஒருவர் இத்தகையச் சலுகையைப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் ஒரு கிருத்துவப் பெண்ணை மணந்து கொண்டு இத்தகையச் செயல்களைச் செய்துகொண்டிருக்கிறார். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சிதம்பரத்தில், வேலாயுதம் என்பவர் இந்து. அவர் ஒரு கிருத்துவப் பெண்ணை மணந்துகொண்டு, சிதம்பரத்தை அடுத்து 'அன்னை சத்தியா தொழிற் கல்வி' என்ற ஒரு நிறுவனத்தை நடத்திக் கொண்டு வருகிறார். அதுமட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு கல்வி நிலையங்களை நடத்துவதற்கு, இது போன்ற சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த சிறுபான்மையினர் நலன் என்பது சிறுபான்மையினர் மட்டும் பயன்படுத்தாமல், பொதுவாக எல்லோருக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, அதையும் களையவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கல்விக்கு முக்கியத்துவம் தருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மதுரைக்குத் தென்பகுதியிலுள்ள கல்லூரிகளை எல்லாம் இணைத்து, விடுதலைப் போராட்டத்தில் வீர மரணம் எய்திய வீரபாண்டிய கட்டபொம்மன் சீமையிலே ஒரு பல்கலைக்கழகம் அமைக்க இருப்பதில் கல்வி உலகம் பேருவகை கொள்கிறது.

12.40 மணி

அதுமட்டுமல்லாமல், குறிப்பாக தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடிய மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்க இருப்பதும் உண்மையிலேயே மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும் என்பதை இந்த நேரத்தில் பாராட்டிப் பேச கடமைப்பட்டிருக்கின்றேன்.

கல்வித் தரம் வளருவதற்கும் மேம்பாடு அடைவதற்கும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் பெரும்பாடு பட்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது.

என்னுடைய தொகுதியில் முக்கியமான பல்வேறு பிரச்சினைகளை இந்த நேரத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன், குறிப்பாக மங்களூர் சட்டமன்றத் தொகுதியில் திட்டக்குடி அருகாமையில் அமைந்திருக்கின்ற பெரிய ஏரியான வெலிங்டன் ஏரியின் மூலமாக சுமார் 40,000 ஏக்கர், பாசனவசதி பெற்று வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 5,000 ஏக்கர் 10,000 ஏக்கர் பாசன வசதி பெறுகின்ற ஏரிகளுக்கு எல்லாம் இந்த ஆண்டு நல்லுதவிகளை அளித்திருக்கின்றார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அந்த வெலிங்டன் ரிசர்வாயர்–சுமார் 40,000 ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது. கடந்த 3 ஆண்டுக் காலமாக இயற்கை பொய்த்து விட்ட காரணத்தால், எந்தவித நீர் வரத்தும் இல்லை. காட்டாற்று வெள்ளம் வந்தால் தான் அந்த ஏரிக்கு தண்ணீர் வரத்து வரும். எனவே, தூர்ந்து விட்ட நிலையில் இருக்கின்ற அந்த வெலிங்டன் ஏரியை ஆழப்படுத்தியும், கரைகளை உயர்த்தியும் அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வுக்கு வளம் அளிக்கவேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று என்னுடைய மங்களூர் சட்டமன்றத் தொகுதிக்கென்று, மாண்புமிகு தமிழக முதல்வர் முன்பு முதலமைச்சராக இருந்த காலத்தில், அதற்கு மட்டும் தனியாக பைலட் ஸ்கீம் என்ற ஒரு திட்டத்தைத் தீட்டி, $1\frac{1}{4}$ கோடி ரூபாய் ஒதுக்கி அந்தப் பகுதியினுடைய மக்களின் மேம்பாட்டிற்கு நல்ல ஒரு நிலையை உயர்த்தினார்கள். (மணியடிக்கப்பெற்றது) அதே போன்று, இந்த நிதியாண்டிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாச்சலத்திலிருந்து சின்னசேலம் கூட்டு ரோடு வரை செல்கின்ற சாலை மிகவும் மோசமாக இருக்கின்றது. நெய்வேலி சுரங்கம் இருக்கின்ற காரணத்தால், மிகப் பளுவான வண்டிகள் அடிக்கடி சென்று கொண்டிருக்கின்றன. எனவே அந்தச் சாலையை அகலப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியில் அமைந்துள்ள பாக்கம்பாடி அணைத்திட்டத்தை விரைவுபடுத்துவற்கு நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

1990 ஏப்ரல் 3]

திரு. கோ. பூவராசன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'இந்தக் கல்வி அறிவோம் நன்றாக, குருவாக குருவே துணை', 'மாதா பிதா குரு தெய்வம்' என்று சொல்லிக்கொடுக்கின்றபோது 7 கோடி அளவிலே இருந்தது. இன்றைய தினம் மம்மி, டாடி என்று சொல்கின்ற போது ஆயிரம் கோடிக்கு மேலே தாண்டி விட்டது. இப்போது ஆயிரம் கோடியைத் தாண்டினாலும், எந்த அளவிற்குக் கிராமப் புறங்களில் கல்வி வளர்ந்திருக்கின்றது என்பதைப் பார்க்கின்ற போது, நாம் எல்லாம் வருத்தப்படக்கூடிய அளவிற்கு இருக் கின்றோம் என்றுதான் இந்தச் சமயத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்,

இந்தக் கல்வியை ஊக்குவிப்பதற்காக நாம் எவ்வளவோ முயற்சிகள் எடுக்கின்றோம். மதிய உணவு போடுகிறோம் 18 கோடி ரூபாய்க்கு சீருடை கொடுக்கின்றோம் 7 கோடி ரூபாய்க்கு மேல். செருப்புக் கூட கொடுக்கின்றோம் 3 கோடி ரூபாய்க்கு மேல். ஆனால் ஆரம்பப் பள்ளியிலே சேர்கின்ற மாணவர்கள் 80 சதவிகிதம் என்று சொன்னால், அதற்குப் பிறகு நடுநிலைப் பள்ளியிலே வருகின்றவர்கள் 42 சதவிகிதம். உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளியிலே வருகின்றபோது 22 சதவிகிதம். கல்லூரிக்குப் போகின்றபோது 2 சதவிகிதத்திலே வருகின்றது. 1000 கோடிக்கு மேலே செலவு செய்து, பட்டப்படிப்பு படிக்கின்ற அளவுக்கு வருகின்றபோது 2 சதவிகிதத்திற்கு வருகின்றது என்று சொன்னால் நம்முடைய கல்வி எந்த அளவிற்குப் போய்க்கொண் டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

12.45 மணி

ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் இன்றைய தினம் ஏ.இ.ஓ., அசிஸ்டென்ட் எஜுகேஷன் ஆபீசர் இருக்கிறார்கள். பிறகு டி.ஐ. இருக்கிறார். இருவர் இருக்கின்றார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் அவர்கள் எல்லாம் பார்வைக்குச் செல்கின்றபோது, மதிய உணவுக் கூடங்களைப் பார்க்கின்றார் களே தவிர, பள்ளியிலே எத்தகைய ஆசிரியர்கள் வந்திருக் கிறார்கள், அந்தப் பள்ளி எவ்வாறு நடக்கின்றது, பள்ளி சரியான முறையிலே நடக்கின்றதா என்று பார்க்கின்ற நிலை இல்லாத ஒரு சூழ்நிலை இருப்பதை கண்காணிக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் வருகின்றபோது, ஒரு ஆரம்பப் பள்ளிக் கூடத்திலே இருக்கின்ற பள்ளி மாணவர்கள், உயர்நிலைப் பள்ளிக்கோ, நடுநிலைப்பள்ளிக்கோ, கல்லூரிக்கோ வருகின்ற போது நிறைய இடையிலே நிறுத்தப்படுகிறார்கள். நிறுத்தப் படுவதற்கு யார் பொறுப்பு? அதற்கு என்ன செய்ய முடியும் என்று நாம் கலந்து ஆலோசிக்க வேண்டிய நிலையில் இன்றைய தினம் இருக்கிறோம். இந்த ஆண்டு ஒரு மிக சிறப்பான ஆண்டு. உலக எழுத்தறிவு ஆண்டாக நாம் இன்றையதினம் இந்த ஆண்டைக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். அப்படி

கொண்டாடிக்கொண்டு இருக்கின்றபோது எல்லா மக்களுக்கும் எழுத்தறிவு இருக்க வேண்டும், அந்த உணர்வு நம்மிடம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் இந்த கல்வியில் எந்த அளவுக்கு அதிக அளவிலே மாணவர்களை சேர்க்க வேண்டும் என்பதில் அதிக அக்கறையாக இருக்கிறார்கள். நூற்றுக்கு நூறு இந்த 5 ஆண்டுகளில் மாணவர்களைச் சேர்க்க முடியும் என்ற அந்த எண்ணத்தை நாம் பார்க்கிறோம், ஏதோ சத்து குறைந்து விட்டது அதனால் முட்டை போட்டால்கூட வருவார்களா என்றால் முட்டையும் போடுகிறோம்.

அதோடு அல்லாமல் இன்றைய தினம் ஊக்குவிக்கின்ற அளவிலே ஒவ்வொரு கிராமத்திற்கும் போய் 10 என்று சொல்லுகின்ற அளவுக்கு மாணவர்களைத் தொடர்ந்து அந்த பள்ளிக் கூடத்திற்கு அழைத்து வருகின்றவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 250 ரூபாய் கொடுக்கலாம் என்ற நிலையை இன்றையதினம் நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள், அது வரவேற்கக்கூடிய ஒன்று. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால் எல்லா மக்களுக்கும் எழுத்தறிவு கொடுக்க வேண்டும் என்ற அந்த உணர்வு இன்றைய தினம் வந்து இருக்கிறது. அதைப் பெரிதும் பாராட்ட வேண்டும். ஆனால் ஆங்காங்கு கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆசிரியர்கள் எந்த அளவுக்கு அந்தப் பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள் என்பதை கண்காணிப்பு செய்கிறோம் என்று சொன்னால் சுத்தமாக ஒன்றும் இல்லை என்றே நான் சொல்லமுடியும்.

இன்னும் சொல்லப்போனால் பால்வாடி வகுப்பிலே கூட இன்றையதினம் அதைப்போல வழங்குகிறோம் அல்லது சத்துணவு எல்லாம் வழங்குகிறோம். ஆனால் அந்த அளவுக்கு பால்வாடி கணக்கும் அந்த பள்ளிக் கணக்கும் ஒத்து வரவில்லை. சத்துணவுக் கணக்கும் பள்ளிக் கணக்கும் ஒத்துவரவில்லை. சத்துணவுக் கணக்கிலே இருக்கின்ற மாணவர்கள் பள்ளிக்கூடத்திலே இருப்பது இல்லை, பால்வாடியில் இருக்கின்ற மாணவர்கள் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வருவது இல்லை. இந்த நிலை மாற வேண்டும். கண்காணிப்பு அதிகமாக இருக்க வேண்டும. பள்ளிக் கூடங்களுக்கு குறைந்த பட்சம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு முறையாவது முன்பு இருந்ததைப்போல் இன்ஸ்பெக்ஷன் இருக்க வேண்டும், அது இப்போது இல்லை. அதேபோல் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இன்றையதினம் ஒரு தாலுக்காவில் ஒரு டி,இ.ஒ. இருக்கிறார். அவர்களுக்கு குறைந்தபட்சம் 100 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளுக்கு மேல் இருக்கிறது. அவர்கள் ஒரு ஆண்டுக்குள் அத்தனை பள்ளிகளையும் பார்வையிட முடியாது. என்னைப் பொறுத்தவரையில் நாம் எவ்வளவோ செலவு செய்கிறோம், இன்னும் ஒரு டி.இ.ஒ அந்த வட்டாரத்திலே நியமிக்க முடியுமா என்று பார்க்க வேண்டும் என்று நான் இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 3] [திரு. கோ. பூவராகன்]

அதேபோல் இன்றையதினம் ஒரு புதிய முயற்சியை எடுத்து இருக்கிறோம் 1,200–க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் 800 ரூபாய்க்கு நியமிக்கலாம் என்று. இன்னும்கூட குறைத்துக் கொடுத்து இன்றையதினம் ஆசிரியர்கள் ஏராளமான பேர்க்கு வேலை கொடுப்பதாக இருந்தால் பல இடங்களில் தனியார் பள்ளிகளில் 600 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். நான் ஏதோ அந்த ஆசிரியர்களுக்கு மேலும் பணம் கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை; பணம் கொடுப்பதற்கு வசதி இருந்தால் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை; இருக்கின்ற நிதிநிலையை வைத்துக் கொண்டு அந்தந்தப் பகுதியிலே 800 ரூபாய் அளவிலே 1,200 ஆசிரியர்களை நியமிக்க இருக்கிறோம் இந்த ஆண்டு. சென்ற ஆண்டு ஏகப்பட்ட ஆசிரியர்களை நியமித்து இருக்கிறோம். அது வரவேற்கக் கூடிய ஒன்று. ஆண்டுதோறும் 1,200 பேர் அல்லது மேலும் 200 பேர் என்ற நிலை இல்லாமல் எங்கெல்லாம் அதிக மாணவர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அதிக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். ஒரு ஆசிரியருக்கு 60 மாணவர்களுக்கு மேல் இருந்தால் சொல்லிக் கொடுக்க முடியாது. ஒரு ஆரம்பப்பள்ளியில் 120, 130, 150 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் சொல்லிக் கொடுக்கின்ற நிலை இருக்கிறது. அதை எல்லாம் கணக்கு எடுத்து அந்தப் பள்ளிகளில் 60-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருப்பார்கள் என்று சொன்னால் ஒரு ஆரம்ப ஆசிரியரை அந்தப் பள்ளிக்கூடத்தில் போடுவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஈராசிரியர் பள்ளிகளை நியமிக்கின்றபோது குறிப்பாக எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த ஓராசிரியர் பள்ளிக்கூடத்திற்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அந்த நிலை இல்லை. மேலும் சில ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் அதிக மாணவர்கள் இருக்கின்ற இடத்திலே ஓராசிரியர் வருகின்ற போது அதை நியமிக்க வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்ஜினியரிங் கல்லூரிகள் ஏராளமாக வந்து இருக்கின்றன. பாலிடெக்னிக்குகள் வந்து இருக்கின்றன. அதை எல்லாம் இன்றையதினம் ஒரே நிர்வாகத்தின் கீழே ஒரு டைரக்டரின் கீழே இருப்பதைப் பிரித்து இருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்று. நிர்வாகம் சீராக, செம்மையாக, நல்லபடியாக நடக்கவேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். ஆசிரியர்கள் பயிற்சிக்காக தனியாக ஒரு டைரக்டரை நியமித்து இருக்கிறார்கள். அதேபோல் இன்ஜினியர்களுக்கு ஒரு டைரக்டர் ஏற்கெனவே இருந்துகொண்டு இருக்கிறார். இந்த பாலிடெக்னிக்குகளுக்கு ஒரு டைரக்டர் நியமிப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. அதேபோல் அது சம்பந்தமாக தொழில்நுட்ப கல்வி பரிட்சை வைப்பதற்காக ஒரு டைரக்டரை நியமித்து

இருக்கிறோம். இது வரவேற்கக்கூடிய ஒன்று. வளர்ந்து வந்து இருக்கிறது. ஏராளமான பாலிடெக்னிக்குகள், என்ஜினியர்கள் எங்கு பார்த்தாலும் இருக்கின்றபோது ஒரு டைரக்டரின் கீழே வருகின்றபோது அது சரியான முறையில் நடைபெறவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு உணர்ந்து இந்த ஆண்டு அதைத்தனித் தனியாக பிரிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். இந்த இன்ஜினியரிங் படிப்பும் பாலிடெக்னிக் படிப்பும்நல்லபடியாகநடக்க வேண்டுமானால் அதிலே ஏற்கெனவே இருக்கிறவர்களை, வைத்து அது சம்பந்தமாக நிர்வாகத் துறை யிலே பயிற்சி பெற்றவர்களை நல்ல கல்வித் தகுதியிலே இருப்ப வர்களை நீங்கள் பொறுப்பிலே நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

12-50 மணி

அடுத்து, இந்த கல்வி இலாக்காவிலே செலவு செய்வது மட்டும் அல்லாமல் அதாவது மெடிக்கல் காலேஜிலே, அக்ரிகல்சுரல் காலேஜிலே இன்னும் பல துறைகளிலே சமுதாயத்திலே உள்ள நலத் துறைகள் ஏராளமாக இந்த கல்வியை ஒட்டி பல கோடி ரூபாய்கள் செலவு செய்யப்படுகிறது. அதாவது 150 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்று நான் கருதுகிறேன்; இவ்வாறு ஏராளமாக செலவு செய்கின்றபொது இந்த வருடம் உலக எழுத்தறிவு ஆண்டாக இருப்பதால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க சமயத்திலே இங்கே வந்து இருக்கிறார்கள். இந்த ஆண்டு எல்லா மாவட்டங்களுக்கு ரூ. 1 கோடி வீதம் நிதி ஒதுக்கி — ரொம்ப பள்ளிக் கூடங்களிலே கட்டிடங்கள் இல்லாமல், மிகவும் இடிந்து, பாழ்பட்டு, சங்கடமாக இருப்பதைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ரூ. 20 கோடி சண்டுபிடிப்பதிலே ஒன்றும் கஷ்டம் இருக்காது. இந்தப் பணம் எல்லாம் எங்கே இருக்கிறது, எப்படி கண்டு பிடிப்பது என்று திறமைமிகக முதல் அமைச்சர்—நிதி அமைச்சர் இருப்பதாலே, ரூ. 20 கோடியை இந்த ஆண்டு உலக எழுத்தறிவு ஆண்டை ஒட்டி, ஒதுக்கி, கல்விக் கூடங்களைச் சீரமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். முன்பு ஒரு முறை சத்துணவுக் கூடம் அமைத்தார்கள். அந்தச் சத்துணவுக் கூடம் சாப்பாட்டுக் கூடம்; அது இருக்கிறது. ஆனால், படிப்பதற்குக் கூடம் இல்லை. அவன் தரையிலே இருந்து, வெளியிலே இருந்து படிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதைப் போக்க வேண்டும். இந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி, ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே ஒரு கல்லூரிக்கு ஏற்பாடு செய்து 25 ஆண்டுகளாகின்றன. வெள்ளி விழா கொண்டாட இருக்கிறோம். இந்த வெள்ளி விழா கொண்டாட்டத்தை ஒட்டி, அந்தக் கல்லூரியிலே பிஎஸ்ஸி. (கெமிஸ்ட்ரி), பி.எஸ்.ஸி. (பாட்டனி), எம். காம். போன்ற

வகுப்புகள் தொடங்க அனுமதிக்க வேண்டும். ஆடிட்டோரியம் கட்டுவதற்கு ஓரளவுக்குப் பாதித் தொகையை நீங்கள் அளிப்பீர்களானால், அந்த வட்டாரத்திலே பாதித் தொகையை நாங்கள் நன்கொடையாக வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ள விதிகளின்படி 75 சதவீதம் மாணவர்கள் அந்தக் கல்லூரியிலே உணவு விடுதியிலே தங்கி படித்தால்தான் அங்கே பரீட்சை எழுத முடியும். அந்த நிலை மாறி, இன்றையதினம் 60,000-க்கு மேற்பட்டவர்கள் கரஸ்பான்டன்ஸ் கோர்சில் படிக்கிறார்கள். 4,000 பேர்கள்தான் அங்கேயே தங்கி படிக்கிறார்கள். கரஸ்பான்டன்ஸ் கோர்சில் நிறையப் பணம் வருகிறது. எங்கு பார்த்தாலும் இன்றைய தினம் பெண்களுக்காக நாம் ஊக்கம் அளிக்கிறோம். அவர்களுக்கு நல்ல கல்வியைக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்கிறோம். இந்த ஆண்டு அந்தப் பல்கலைக் கழகத்திலே பெண்களுக்காக ஒரு பட்டப் படிப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதே போன்று, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மாவட்டங்களிலே பெண்களுக்கு பாலிடெக்னிக் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள், ஏனோ தெரியவில்லை. வட ஆற்காடு தென்னாற்காடு, செங்கற்பட்டு போன்ற மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள் விடப்பட்டிருக்கின்றன. அங்கே பாலிடெக்னிக் ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, செங்கல்வராயன் டிரஸ்ட், கோவிந்தப்ப நாய்க்கன் டிரஸ்ட் என்று இரு டிரஸ்டுகள் இருக்கின்றன. அங்கே நிறைய பணம் இருக்கின்றது. நிர்வாகத்தில் தவறுகள் நடந்தால், ஒன்றாகச் சேர்க்கின்றோம். இன்னும் தவறுகள் நடந்தால், தனியாகப் பிரிக்கின்றோம். தனியாகப் பிரித்து, இருக்கிற நிதி வசதியைக் கொண்டு, செங்கல்வராய நாய்க்கன், கோவிந்தப்ப நாய்க்கன் சார்பாக ஒரு இன்ஜினியரிங் கல்லூரி, பெண்கள் பாலிடெக்னிக் ஏன் ஆரம்பிக்கக் கூடாது? அதிலே அரசாங்கத்திற்கு என்ன சங்கடம் இருக்கிறது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதனாலே, குறைந்த பட்சம் இந்த ஆண்டு, இந்த நிதிநிலைமையை வைத்து, இந்த நகரத்திலே,—எத்தனையோ பேர்களுக்கு நூற்றாண்டு விழா எடுக்கிறோம்—அந்த டிரஸ்டை ஆரம்பித்து 100 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. பல அதிகாரிகள் அங்கே இருக்கின்றார்கள், அதிகாரிகளை வைத்து நிர்வாகம் செய்வதிலே எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், அதை தனியாகப் பிரித்து, அதற்கென்று தனி நிர்வாகம் வைத்து, நல்ல காரியங்கள் செய்வதற்கு ஒரு கல்லூரி துவங்குவதற்கு, ஒரு பாலிடெக்னிக் துவங்க ஏன் முன் வரக் கூடாது? அப்படி

முன் வந்தால், நீங்கள் உண்மையிலேயே மிகவும் பின்தங்கிய மக்களிடத்திலே அக்கறை காட்டுகிறீர்கள். அந்த மக்கள் கல்வியிலே பெருவாரியாக முன்னேறி வருவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கிறீர்கள் என்று மக்கள் மத்தியிலே பெருவாரியான நினைப்பு வளரும் என்று சொல்லி, வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. ஆர். வரதராஜன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1990-91-ஆம்ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 1989-90-ஆம் ஆண்டில் கல்விக்காக தமிழக முதல்வர் அவர்கள் ரூ. 900 கோடி ஒதுக்கீடு செய்து தந்தார்கள். ஆனால், 1990-91-ல் கல்விக்கு சுமார் ரூ. 1050 கோடி ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். காரணம், தமிழ் ஆய்ந்த தமிழ்க் கடல், இன்றைக்குத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். எந்த மாநிலத்திலும் கல்விக்காக இவ்வளவு பெரும் தொகை ஒதுக்கப்படவில்லை. எல்லா தரப்பு மக்களும் கல்வி பெற வேண்டும், கடந்த ஆட்சியில் கவனிப்பாரற்றுக் கிடந்த பள்ளிகள் புத்துயிர் பெறவேண்டுமென்ற காரணத்தால், ரூ. 1050 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, கல்வி அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் நான் பாராட்டுகின்றேன். ஆதி திராவிட மாணவ மாணவியருக்குத் தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்துவிட்டு, அவர்கள் கல்லூரி வரை படிக்க இலவச பஸ் பாஸ் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-55 மணி

அரசினர் மாணவர் விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் போதுமான இடவசதி இல்லாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றன. போதிய இடவசதி இருந்தும் விடுதி கட்டடங்கள் கடந்த கால அரசாங்கத்தால் கட்டப்படவில்லை. இந்த ஆண்டு சங்ககிரி தொகுதியில் சங்ககிரி மல்லசமுத்திரம், ஒன்றியம் பாலமேடு ஆகிய இடங்களில் மாணவர் விடுதிகளை அரசு கட்ட வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. கல்வி உதவித் தொகையை அவர்களுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும், விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர், மாணவியர்களுக்கு ஒரு நாளைக்கு வழங்கக்கூடிய உணவு 'அலவன்ஸை' உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாக கேட்டும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதை இந்த ஆண்டு மறு பரிசீலனை செய்து உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியின் தரம் உயரபடித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் 30 மாணவர்களுக்கு ஓராசிரியர் என்ற அடிப்படையில் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வழங்கக்கூடிய பொங்கல் பரிசுத் தொகை 400 ரூபாயை 500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற வீட்டுவாடகைப் படியை வித்தியாசம் இல்லாமல் ஒரே அளவுக்கு வழங்க வேண்டும். ஆசிரியர்களுக்கு மருத்துவ உதவி சலுகையாக மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கவும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வழங்குவார்கள் என்று ஆசிரியர் பெருமக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சங்ககிரி பகுதியில் கிராமங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் 500 மக்கள் தொகை கொண்ட ஒரு கிராமத்திற்கு ஓராசிரியர் பள்ளி அமைக்கப்படும் என்பதை நான் வரவேற்கிறேன். அதோடு என்னுடைய தொகுதியில் கிராமங்கள் அதிகமாக இருப்பதால் 400 மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களிலும் ஓராசிரியர் பள்ளி நிறுவிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிய துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் அரசு அலுவலர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். ஆனால் ஒன்றிய தொடக்கப் பள்ளிகளை அரசு எடுத்துக் கொள்ளாமல் ஒன்றியங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒன்றியங்களில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் கடந்த ஆண்டுகளில் பல பள்ளிக்கூடங்கள் பழுதடைந்து பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. பழுதடைந்த பள்ளிக் கட்டடங்களை எல்லாம் இந்த ஆண்டிலே பழுது பார்க்கவும் ஒன்றியங்களுக்கு அதிக நிதி ஒதுக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு புதிதாகப் பள்ளிக் கூடங்கள் கட்டுவதற்கும் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்ககிரி ஒன்றியத்தில் வடுகுப்பட்டியிலும் மல்லசமுத்திரம் ஒன்றியதத்தில் துத்திபாளையத்திலும் — இந்த இரண்டு இடங்களிலும் உள்ள நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிலேறன். தரம் உயர்த்த வேண்டுமென்று பல ஆண்டுகளாக கேட்டுக்கொண்டும், 1984 ஆம் ஆண்டு அதற்குரிய தொகையைக் கட்டியும் கடந்த ஆட்சிக் காலத்திலே அதைக் கண்டுகொள்ளவில்லை. ஆகையால் இந்த ஆண்டிலே அந்த இரண்டு பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சங்ககிரியில் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் சுமார் 900 மாணவிகள் இருக்கிறார்கள். அதை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்த இந்த ஆண்டில் 25,000 ரூபாய் கட்டப்பட்டுள்ளது. பத்தாவது வகுப்பு தேறிய மாணவிகள் சேலம். ஈரோடு ஆகிய இடங்களுக்கு பிளஸ் 2 படிக்கச் செல்லவேண்டியிருப்பதால் மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, இந்தக் கல்வி ஆண்டிலேயே அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சங்ககிரி கல்வி மாவட்டத்தில் 183 தொடக்கப் பள்ளிகளும் 13 நடுநிலைப் பள்ளிகளும் 11 உயர்நிலைப் பள்ளிகளும் 7 மேல் நிலைப் பள்ளிகளும் உள்ளன, சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில்தான் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகையால் சங்ககிரியில் ஒரு அரசுக் கல்லூரி அமைத்தும், பெண்களுக்கு ஒரு தொழில் பயிற்சிக் கல்லூரி அமைத்தும் ஆசிரியர்கள் பயிற்சி நிலையம் ஒன்றை அமைத்தும் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சங்ககிரி ஒன்றியத்திலுள்ள தொடக்கப்பள்ளிகளில் சுமார் 310 ஆசிரியர்கள் பணி செய்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு முதல் தேதியில் 160 பேர்களுக்கும், 10–ந்தேதி 150 பேர்களுக்கும் இரண்டு தவணைகளில் சம்பளம் வழங்கப்படுகிறது. இதை மாற்றி, எல்லோருக்கும் முதல் தேதியில் சம்பளம் கொடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் குடிநீர் வசதி இல்லாத பல பள்ளிகள் இருக்கின்றன, அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு குடிநீர் வசதிசெய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு குடிசைத் தொழில் போல, பல இடங்களில் நர்சரிப்பள்ளிகள் வியாபார நோக்கத்தோடு தொடங்கப்பட்டிருக்கின்றன. ஓராண்டு காலத்தில் அவற்றை நிறுத்திவிடும் சூழ்நிலையும் இருக்கிறது. அதனால் குழந்தைகளின் எதிர்காலம் வீணாகிறது. ஆகையால் தகுதி இல்லாத அடிப்படையில் இயங்குகின்ற இந்தப் பள்ளிகளுக்கு அரசு தடை விதிக்கவும் அதேநேரத்தில் நல்ல முறையில் செயல்படுகின்ற பள்ளிகளுக்கு அரசு அங்கீகாரம் அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருசில உயர்நிலைப்பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 'பெற்றோர்–ஆசிரியர் சங்கம்' அமைக்கப்படவில்லை. ஆகையால் எல்லாப் பள்ளிகளிலும் பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு எழுதுவதற்கு, மாவட்டத் தலைநகரங்களில் அவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தவும், அதற்கான உதவித் தொகை வழங்கவும்; அரசு நடவடிக்கை மேற்கொள்வதோடு, பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் இடங்களில் இத்தகைய உயர் பதவிகளுக்கு தேர்வு எழுதச் செல்பவர்களை, விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக் கொள்ளவும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, எனது தொகுதியில் சேடர்பாளையம் ஒன்றிய உயர்நிலைப் பள்ளி நன்றாக நடந்துகொண்டிருக்கிறது. அந்தப் பள்ளியினுடைய விளையாட்டு மைதானத்தை தனியார் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்வதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

3-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆர். வரதராஜன்: அங்குள்ள பொதுமக்களே அந்தப் பள்ளியினுடைய சுற்றுச் சுவர் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். இந்த நிலையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து, இந்த நிதிநிலையை வரவேற்று, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கத்திலேயே மிக நல்ல முறையிலே கல்வியினுடைய அவசியத்தை, முக்கியத்துவத்தைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

''எண்ணென்ப ஏனைய எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

என்று சொல்வதோடு, கல்லாத மாந்தரின் கண்கள் புண்களை ஒத்த துன்பத்தை அடைவதற்கே துணையாகிவிடும்.

''கண்ணுடையவர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லா தவர்'' என்று சொல்வதோடு, கல்லாமை இல்லாமையினும் கொடிது என்று அழகாக, இந்தக் கல்லாமை எவ்வளவு மோசமானது, கொடியது என்பதைச்

சொல்வதோடு கல்வி மிக மிகமுக்கியமானது; அத்தனை பேருக்கும் அதை அளிக்க வேண்டுமென்று மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தால் ரொம்ப நேரமாகிவிடும்.

இன்றைக்கு ஏறக்குறைய நம்முடைய மொத்த பட்ஜெட்டிலே 4,814ல் கோடியில், 1,042 கோடி ரூபாயை இனிமேலும் பல செலவுகளையெல்லாம் சேர்த்து, அதாவது மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடைக் கல்வி இவைகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் ஏறக்குறைய 1,500 கோடி வரும். இவ்வளவு அதிகமான தொகையை நாம் செலவழிக்கிறோம். இருந்தாலும்கூட, அடித்தட்டிலே உள்ள சாதாரண ஏழையெளிய மக்கள் இன்னும் கல்வி அறிவு பெறாமல் இருக்கிறார்கள் என்பதை நாம் கவலையோடு பார்க்கவேண்டும். ஏனென்றால், இன்றைக்கு நம்நாடு சுதந்திரம் பெற்று ஏறக்குறைய 42 ஆண்டுகளைக் கடந்து விட்டது. அரசியல் சட்டத்திலே ஏற்கெனவே 15 வயது வரை உள்ள அத்தனை பேருக்கும் நாம் கல்வியை கற்பித்துத் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரை நாம் எத்தனையோ முயற்சிகளை செய்தாலும்கூட இன்றைக்கு நாம் கணக்குப்போட்டுப் பார்த்தால் இந்தியாவினுடைய சராசரியில் ஆண்கள் 46.89 சதவீதம்; பெண்கள் 24.82 சதவீதம், மொத்தத்தில் 36 சதவீதம் இந்தியாவில் சராசரியாக படித்தவர்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே இந்தியாவின் மொத்த சராசரியில் 46.76 சதவீதம் படித்தவர்கள். ஓரளவு பரவாயில்லை. இருந்தாலும்கூட 54 சதவீத மக்கள் இன்னும் படிப்பறிவு இல்லாமல் இருக்கிறார்கள். இதைப் போக்குவதற்கு நாம் என்ன செய்யவேண்டுமென்று கவலையோடு கவனிக்கவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு வீரையன் அவர்கள் பேசும்பொழுது, கல்வியறிவைப் பெருக்குவதற்கு அதிகமாக ஆசிரியர்களைப் போடவேண்டுமென்று சொல்லும்போது எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள்.

சமீபத்திலே, கேரளாவிலேயுள்ள எர்ணாகுளம் மாவட்டத்திலே, ஒரே ஒரு ஆண்டில் எழுத்தறிவு இல்லாதவர்களையெல்லாம் கணக்கெடுத்து அந்த மாவட்டம் பூராவிலும், அத்தனைபேருக்கும் எழுத்தறிவு சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே அரசாங்க அதிகாரிகள், சமூக நலத் தொண்டு நிறுவனங்கள், கட்சிகள் அத்தனைபேரும் சேர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் கூட்டிவைத்துப் பேசி ஒரு சர்வே, ஒரு மாதம் சர்வே செய்து, யார் யார் படிப்பு அறிவு இல்லாதவர்கள் என்று, 5 வயதிலிருந்து 80 வயதுவரையுள்ள அத்தனை பேருக்கும் எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்துவிட்டோம். எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் யாரும் இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமையை அங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேமாதிரி

செய்ய முடியுமா என்று யோசிக்க வேண்டும். சமூகத் தொண்டு நிறுவனங்களோ அல்லது கட்சிகளோ சேர்ந்து எழுத்தறிவு இல்லாமல் இருப்பவர்களுக்கு நாம் அதைக் கண்டிப்பாக கொடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். இல்லாமையைப் போக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எத்தனையோ திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இல்லாமையைவிட கொடியது கல்லாமை என்று சொல்லியிருக்கிறீர்கள். இல்லாமையைப் போக்குவதுகூட பெரிதல்ல; கல்லாமையைப் போக்குவதுதான் பெரிது என்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது யதார்த்த மானது இல்லாமையைப் போக்குவதைவிட கல்லாமையைப் போக்கவேண்டும் ஏனென்றால், ஒரு மனிதனுக்கு வறுமையைவிட கொடியது கல்வியறிவு இல்லாமல் இருப்பது என்று சொல்லி இருக்கிறீர்கள் எனவே, இதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை என்று பார்க்கும்போது, இன்றைக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மொத்தத்திலே, இன்றைக்கு ஆரம்பப்பள்ளிகளிலே படிக்கக் கூடிய மாணவர்கள் 54 இலட்சம் பேர். ஆசிரியர்கள் 1 இலட்சத்து 19 ஆயிரம் பேர். 45 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர். இன்னும் சில இடங்களிலே, பள்ளிக்கூடங்களிலே உட்காருவதற்குக்கூட சரியான தரை கிடையாது இன்னும் சில இடங்களில் பார்த்தால் பள்ளிக்கூடத்திலே ஒரு வகுப்பிலே சராசரி 120 பிள்ளைகள் இருக்கிறார்கள் எப்படி ஒரு ஆசிரியர் அந்தப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கமுடியும்? ஆகவே, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வியெல்லாம் ஓரளவு பரவாயில்லை என்று இருந்தாலும்கூட ஆரம்பக் கல்வியிலே நாம் கவனம் செலுத்தவேண்டும், அதைத்தான் நான் பணிவன் போடு சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு 54 இலட்சம் மாணவர்களுக்கு சராசரியாக, 45 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்கிறார். ஒரு சில இடங்களிலே 100 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் இருக்கிறார். சில இடங்களிலே 40 பேருக்கு ஒரு ஆசிரியர்; 30 பேருக்கு ஒரு ஆசிரியர் என்றுகூட சில இடங்களிலே இருக்கலாம். 100 மாணவர்கள் இருக்கக்கூடிய வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளைப் போக்குவதற்கு வழிவகை செய்யவேண்டும்.

இப்போது ஒரு திட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். 800 ரூபாய் சம்பளத்திலே 2 ஆண்டுகள் வரை பணியாற்றினால் முழு ஊதியம் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிற. போதிய ஆசிரியர் களை நியமித்தால் பல பேருக்கு வேலைவாய்ப்பு அளித்ததாக இருக்கும். பயிற்சி பெறுவது மாதிரி இருக்கும். இரண்டு

ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுக்கு பர்மனென்ட் வேலையும் கிடைக்கும். அதிகமான ஆசிரியர்களை தேவையான அளவு நியமனம் செய்ய வேண்டுகிறேன். இப்படி 3 பேர்களுக்கு ரூ. 800 வீதம் சம்பளம் கொடுக்கலாம். ஒரு ஆசிரியருக்கு 2,000 ரூபாய் சம்பளம் கொடுப்பதை இரண்டாண்டுக்கு ரூ 800 வீதம் ஆசிரியர் களை நியமிக்க இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. இதையாவது அதிகமானவர்கள் வேலைவாய்ப்பு பெற போதுமான ஆசிரியர்களை நியமனம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு' 1 முதல் 5 வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களை எடுத்துக் கொண்டால், 76 லட்சம் பேர் படிக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் இருக்கிறது. ஆனால் அவர்கள் மேல்நிலைப்பள்ளிக் கல்விக்கு அதாவது 11வது, 12வது வகுப்புக்கு வருகிறபோது கிட்டத்தட்ட நாலரை லட்சம் பேர்தான் படிக்க வருகிறார்கள். அதாவது ஆரம்பக் கல்வியியல் படிக்கும் மாணவர்களில் 15 சதவீதம் மாணவர்கள்தான் உயர்கல்விக்கு வருகிறார்கள் என்பது ரொம்பவும் வருத்தத்திற்குரியதாகும் மீதம். உள்ளவர்கள் ஏதாவது ஒரு வகையில் படிக்கமுடியாதவர்களாகி விடுகிறார்கள். ஆகவே ஐந்தாவது வகுப்பு வரையாவது எல்லோருக்கும் கல்வி கிடைக்கிறதா? அதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோமா என்பதைப் பற்றி நாம் எல்லோரும் கவலையோடு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

13—05 மணி

அடுத்ததாக, 500 மக்கள் தொகை கொண்ட ஊர்களில் ஓராசிரியர்பள்ளியை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மத்திய அரசு பள்ளிகளுக்கான கைடன்ஸ் கொடுத்திருக்கிறது. அதில் 300 மக்கள் தொகை என்று சொல்லியிருப்பதாக எனக்கு ஞாபகம். ஆகவே 300 மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஓராசிரியர் பள்ளி கட்டாயமாக துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் நான்கு கிராமங்களில் பள்ளிகளே இல்லை. ஒரு மைல் இரண்டு மைல் போகவேண்டி யிருக்கிறது. இதுபற்றி சென்ற ஆண்டே கேட்டேன். பள்ளிகள் குறித்த சர்வே நடந்து. எல்லா கிராமங்களுக்கும் பள்ளிகள் இருப்ப தாக சர்வே இருக்கிறது ஆகவே புதிய பள்ளிகள் திறக்க தடை யிருப்பதாக போன வருஷம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது அந்தத் தடையை நீக்கி, 500 மக்கள் தொகை உள்ள இடங்களுக்கு பள்ளிகள் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை 300 ஆகக் குறைக்கவேண்டும். 300 மக்கள் தொகை இருக்கிற இடத்தில் ஒரு பள்ளி அதாவது ஓராசிரியர் பள்ளி கட்டாயம் இருக்கவேண்டும், அதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 3] [திரு. சோ. அழகர்சாமி]

அதேமாதிரியாக, தேவையான ஆசிரியர்களை நாம் பள்ளிகளில் நியமிக்கவேண்டும். ஆசிரியர்கள் இல்லையென்றால் எப்படி பள்ளிக்கூடம் நடக்கும்? வ.உ.சி. மேல்நிலைப்பள்ளி எங்கள் மாவட்டத்திலேயே முதன் முதலாகத் துவக்கப்பட்ட பள்ளி என்கிறார்கள். அதிலே 12 வகுப்பறைகள் மரத்தடியில் நடக்கின்றன. அதேமாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மழை பெய்தால் அந்தப் பள்ளிக்கு லீவு விட்டுவிடுவார்கள். நாங்களும் எவ்வளவோ முயற்சி செய்தும் அதற்கு ஒரு கட்டிடம் கட்டிக்கொடுக்க நீங்கள் முன்வரவில்லை. அங்கே கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்து, போதுமான ஆசிரியர்கள் நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆரம்பக்கல்வி, தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில் கூடுமான வரையில் ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதையடுத்து ஆசிரியர்கள் மாறுதல் அதை ஆங்காங்குள்ள மாவட்ட கல்வி அதிகாரிகள் பொறுப்பில் விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம் என்பது ஏலம் விடுவதைப் போல 30,000 ரூபாய், 40 ஆயிரம் ரூபாய் என்று போகிறது. செவிலியர்களை நியமிக்க எப்படி பயிற்சி கொடுத்து சீனியாரிட்டி லிஸ்ட் வைத்துக்கொண்டு அதன் படி போடுகிறோமோ, அப்படியே ஆசிரியர் பயிற்சியில் தேர்வு பெற்றவர்களை மார்க் அடிப்படையில் சீனியாரிட்டி வைத்து, மாவட்டங்களிலும், மற்ற இடங்களிலும் வேகன்சி வரும்போது அவர்களை சீனியாரிட்டி அடிப்படையில் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சரியான பயிற்சி அளிக்காத பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில்தான் ஆசிரியர் பயிற்சி பெறவேண்டும் என்று கட்டாயமாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பள்ளியாக இருந்தாலும், தனியார் பள்ளியாக இருந்தாலும், ஆசிரியர்கள் நியமனத்தில் ஒரு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும். அதை ரேஸ் மாதிரிவிட்டு 30,000, 40,000 ரூபாய் என்று ஆகிற அளவுக்கு விட்டுவிடக்கூடாது. இன்றைக்கு ஏழைகள் வேலைக்குப் போக முடியாத நிலை இதனால் ஏற்பட்டுவிட்டது. அதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, கிராமங்களில் வேலைக்குப் போகிறவர்களுடைய பிள்ளைகள் படிப்பதில்லை. அவர்களையும் வேலைக்கு அனுப்பிவிடுகிறார்கள். வேலைக்கு சிறுவர்கள் போனால்தான் சோறு என்ற நிலைமை. அப்படிப்பட்ட சிறுவர் சிறுமிகளுக்காக சென்னையிலும், சிவகாசியிலும் அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக ஆசிரியர்களை நியமித்து முதியோர் கல்வி போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தமாதிரி,

[திரு. சோ. அழகர்சாமி] [1990 ஏப்ரல் 3

கோவில்பட்டியில் தொழிலில் ஈடுபட்டுள்ளகுழந்தைகளுக்கும் கல்வி அளிக்கவேண்டுகிறேன் (மணியடிக்கப் பெற்றது). மொத்தம் 1,000 கோடி ரூபாய் மானியக் கோரிக்கை இது. அதிலே பேசுவது முக்கியம் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதும் முக்கியமானதுதானே.

திரு. சோ. அழகர்சாமி: 1,040 கோடி ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கல்வி மானியத்தில் பேசுவது முக்கியம். கல்விதான் எல்லாவற்றிலும் முக்கியம் என்று அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வேலைக்குப் போகிற சிறுவர், சிறுமிகள் மற்றும் ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்கு மாலையில் படிக்கிற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர் களைப் பயிற்சி அளிக்க பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இலவச பாடப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. அது ஜனவரி மாதம் வருகிறது. எதற்கு? ஆண்டு முடிவடைகிற நேரத்தில் கொடுக்கிறார்கள். இப்படி கொடுப்பது பயனளிக் காது, ஆகவே காலா காலத்தில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொன்று; பெற்றோர் ஆசிரியர் கழகம் என்ற அமைப்பு முன்பு இருந்தது. இப்போதும் இருக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளில் அந்த அமைப்பை அமைக்க விடுவதில்லை. அவைகளை தனியார் பள்ளியிலும் அமைத்து, அந்தப் பள்ளியின் முன்னேற்றத் திற்கும் ஆலோசனைகளைப் பெற்று, அதற்குத்தக்கவாறு நடக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்வதோடு, அங்கீகாரம் இல்லாத ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

(13-10) மணி

அடுத்ததாக, நர்சரிப் பள்ளிகள். கட்டுப்பாடு இல்லாமல் நடக்கின்றன, அதற்கு அரசு மேற்பார்வை கட்டுப்பாடு கிடையாது அரசாங்க சார்பில் விதிகளை அமைத்து முறைப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு புதிய பாடத் திட்டத்தில் புதிதாக சில நடைமுறைகள் சேர்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. முன்கூட்டியே புத்தகங்களைத் தயார் செய்து ஜூன் மாதத்திற்குள்ளாகக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைக் செய்யவேண்டும். அதாவது இலவசமாக எஸ்.சி., எஸ்.டி. ஆகியோருக்குக் கொடுக்கப்படுகின்ற புத்தகங்களை காலா காலத்தில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

1990 ஏப்ரல் 3] [திரு. சோ. அழகர்சாமி]

அடுத்து ஆசிரியர்களின் சம்பளங்களில் பல முரண்பாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். தமிழாசிரியர் மற்றும் ஹயர் எலிமெண்டரி ஸ்கூல்லிலே இருக்கின்ற ஹெட்மாஸ்டர் போன்றவர்களுக்கு சம்பளம் 1,640. அவரே ஹை ஸ்கூலில் பணியாற்றினால் 1,400. 240 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அவர் எந்தப் பணியில் இருக்கிறாரோ அதற்குத்தான் சம்பளமே தவிர, அவர் என்னப் படித்து இருக்கிறார் என்பதற்குச் சம்பளம் இல்லை. அவர் எந்தப் பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறாரோ அதற்குரிய சம்பளம்தான் அவருக்குக் கிடைக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப உயர்நிலைப் பள்ளியில் அதாவது ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் இருக்கின்ற ஹெட்மாஸ்டராக இருக்கிற பட்டதாரி அல்லது தமிழ் ஆசிரியருக்கு 1,640 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறீர்கள். ஹை ஸ்கூலுக்குப் போனால், அங்கேயும் தமிழாசிரியர்கள் பி.டி. ஆசிரியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இது எலிமெண்டரி ஸ்கூல். அது உயர்நிலைப்பள்ளி. அங்கே போகும்போது 240 ரூபாய் குறைகிறது என்று சொல்கிறார்கள். அதை நீங்கள் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தலைமையாசிரியர் பொறுப்பு என்பது ஒரு தனி சிறப்புள்ள பணியாக ஏற்படுத்தப்படுகிறது. இந்தத் தலைமையாசிரியர் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக அந்த 200 ரூபாய் அதிகம் தரப்படுகிறது. எனவே அது தனிச் சிறப்புடைய பணி என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இப்படி ஏதோ பலவிதமான முரண்பாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். எனவே அவர்களைக் கூப்பிட்டுப் பேசி அந்த முரண்பாட்டைத் தீர்க்க வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 35 டி.இ.ஓ. பதவிகள் அதாவது மாவட்ட கல்வி அதிகாரிகளின் பதவிகள் நிரப்பப்படவில்லை என்று சொல்கிறார்கள். இதனால் பணியில் ஒரு தொய்வு ஏற்படுகிறது. எனவே உடனடியாக அந்தப் பதவிகளை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எல்லா செய்திகளுக்கும் இறுதியாக நான் பதில் சொல்வது என்று காத்துக்கொண்டிருந்தால் பல செய்திகள் விடுபட்டுப் போகும். ஆகவே சொல்கிறேன். இது டிரிபியூனலிலே இருக்கிறது. அந்த

வழக்கில் முடிவு தெரிவிக்காத நிலையில் இடையிலே நாம் நியமனம் செய்யக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அரசாங்கமே மறுபடியும் டிரிபியூனலை அணுகி விரைவாகத் தீர்ப்புத் தரக் கேட்டும், இன்னும் கிடைக்காத காரணத்தால்தான் தாமதம் ஆகிறது. தீர்ப்புக் கிடைத்தவுடன் அல்லது அனுமதி கிடைத்தவுடன் உடனடியாக அவர்கள் நியமிக்கப் படுவார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : மிக்க நன்றி, அடுத்து செங்கற் பட்டுக்குப் பக்கத்தில் திருவேணி அகாடமி என்று சொல்லி ஒரு கல்வி நிறுவனம் நடத்தப்படுகிறது. அதிலே விஜயவாடாவைச் சேர்ந்தவர் நன்கொடையாக 23,000 ரூபாய்....

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதெற்கெல்லாம், அவையினுடைய நேரத்தை, நீண்ட கால அளவில் அனுபவம் உள்ள உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. புகாராக இருந்தாலும் அவர்கள் அனுப்புவார்களேயானால் உரிய முறையில் விசாரித்து விடை தரலாம். (குறுக்கீடு) அது தனி அகாடமி. நேரடியாக அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே உள்ளதல்ல. அதன்மீது ஏதாவது பிரச்சினை இருந்தால் விசாரித்துத்தான் தெரிவிக்க வேண்டும். ஆகவே அவர்கள் அந்தக் குறிப்பினை எங்களுக்கு அனுப்பவேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நான் புகார் சொல்லவில்லை. அந்தக் குழந்தை ஒரு தெப்பத்தில் விழுந்து இறந்ததாகச் சொல்கிறார்கள். அவர்களுக்குச் சந்தேகம் வந்து முதலமைச்சர் அவர்கள் விசாரணை செய்யவேண்டும் என்று மனு அனுப்பி இருக்கிறார்கள். இப்படி பாதுகாப்பு இல்லாத நிலைமையிலே பள்ளிக்கூடம் நடத்துகிறவர்கள் 23,000 ரூபாய் 30,000 ரூபாய் என்று வாங்கிக்கொண்டு இப்படியெல்லாம் நடக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இதில் கல்வி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதாவது பொறுப்பு இல்லாமல் கல்வி நிறுவனங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத்தான் நான் சொல்கிறேன் (மணியடிக்கப்பட்டது). ஆரம்பப் பள்ளிக் கூடங்களை ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்து அரசாங்கம் எடுத்துக்கொண்டது. ஆனால் அவற்றுக்கான கட்டடங்கள் பற்றி ஒன்றும் இல்லை. அது அனாதையாக இருக்கிறது. அந்தக் கட்டடத்திற்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிறீர்கள், அது போதாது. அந்தக் கட்டடங்களைப் பராமரிப்பதற்கு தனி அமைப்பு வேண்டும்.

அடுத்து இன்றைக்கு பல இடங்களில் மாவட்ட கல்வி அதிகாரி களுக்கு டெலிஃபோன் வசதி இல்லை. மாவட்டத் தலைநகரங் களில் இருக்கின்ற டி.இ.ஓ.-க்களுக்கு மட்டுமே டெலிஃபோன்

வசதி இருக்கிறது. கோவில்பட்டி போன்ற இடங்களில் அதாவது மாவட்ட தலைநகரங்களாக இல்லாத இடங்களில் டீ.இ.ஓ.-க்களுக்கு டெலிஃபோன் வசதி இல்லை. அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொகுதியைப்பற்றி..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே தொகுதியைப் பற்றிப் பேசிவிட்டீர்கள்.

திரு. சோ. அழகர்சாமி: கடைசியாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தொடர்ந்து நாங்கள் சொல்லிக் கொண்டு வரக்கூடிய கோரிக்கை என்னவென்றால் என்னுடைய தொகுதியிலே ரங்கராஜபுரம் மிகவும் பின்தங்கிய மக்கள் வசிக்கக் கூடிய ஒரு கிராமம். அங்கே பள்ளிக்கூடம் நீண்ட நாட்களாக இல்லை. கேட்டிருக்கிறோம். இதுவரையில் கிடைக்கவில்லை. இது சங்கரன்கோயிலில் தாலூகா. அடுத்து காத்திப்பட்டி, இது கோவில்பட்டி யூனியன். குமரி குளம் என்ற பகுதி முழுவதும் அரிஜனங்கள் இருக்கக்கூடிய ஒரு கிராமம். வடக்குச் செமப்புதூர் போன்ற இந்த இடங்களில் எல்லாம் புதிய ஆரம்பப் பள்ளிக் கூடங்களைத் துவக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னொரு விஷயம் நடமாடும் மருத்துவ உதவித் திட்டம் என்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 15 மணித்துளிகள் ஆகிவிட்டன, இன்னும் மூன்று தலைவர்கள் பேச இருக்கிறார்கள் முடித்துவிடுங்கள்.

13-15 மணி

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ உதவி திட்டம் இருக்கிறது. அதிலே ஹை ஸ்கூல், ஹையர் செகண்டரி பள்ளிகளில் மாணவர்களிடம் வருடத்திற்கு ஒரு ரூபாய் வாங்குகின்றார்கள். அதை பூராவும் டீ.இ.ஓ., சி.இ.ஓ., ஹெட்மாஸ்டர் அடங்கிய கமிட்டி இதற்காகச் செயல்படுகிறது. அதிலே டாக்டர்களுக்கு ஒரு கான்ட்ராக்ட் ஆக 50 பைசா கொடுத்துவிடுகிறார்கள். பிள்ளைக்கு 50 பைசா என்று கொடுக்கிறார்கள். அது அவ்வளவு பயன் அளிக்கவில்லை. இதை அரசாங்கமே பொறுப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால் மாணவர்களுக்கு உடம்பிலே என்ன நோய் இருக்கிறது என்று சொன்னால் வைத்தியம் செய்து கொள்வார்கள். அவர்கள் நன்றாக வளர வேண்டும். ஆகவே அரசாங்கமே இதை பொறுப்பில் எடுத்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். டீ.இ.ஓ., சி.இ.ஓ., ஹெட்மாஸ்டர் எல்லாம் இந்த கமிட்டியிலே இருக்கின்றார்கள். ஆனால் அரசாங்கம் இதற்கு பணம் தனியாக கொடுப்பதில்லை. அவர்களாகவே செய்கின்றார்கள். அதை முறையாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருச்சி பக்கத்திலே பெரம்பலூர் பகுதியிலே ஒரு தனியார் ஸ்கூலிலே ரூ. 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு நடக்கும் பள்ளியில் பரிட்சை எழுதவிடாமல் செய்கின்றார்கள். 15 ஆயிரம் ரூபாய் வாங்கி அந்த ஜெயின் ஸ்கூல் நடத்துவதாக சொல்லி, அங்கே மாணவர்கள் உண்ணா விரதப் போராட்டம் எல்லாம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதை எல்லாம் கவனித்து சீரான ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்கிறேன். நான் என்ன ஏற்பாடு செய்வது? அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பணமும் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் முறையில்லாமல் பள்ளிக்கூடம் நடத்தினார்கள். நீதிமன்றத்திலேயும் வழக்கு இருக்கும். இடையிலே அரசாங்கம் இந்தப் பொறுப்பை எல்லாம் ஏற்றுக் கொண்டு ஏதாவது செய்யமுடியுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

திரு, சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலே இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கத்துக்குத் தெரியாமல் செய்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். யாராவது மக்கள் படிக்கலாம் என்பதற்காகத்தான் ஏமாந்து ரூ.15 ஆயிரம் கூட கொடுக்கின்றார்கள். ஏமாற்றுகின்றவர்களைத் தூக்கி உள்ளே போடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 ஆயிரம் கொடுத்தவனும் சொல்ல மாட்டேன் என்கிறான். வாங்கினவனும் சொல்ல மாட்டார்கள் என்கிறார். இடையிலே இருக்கின்ற நாம்தான் சொல்கிறோம். புகார் கொடுத்தால் தவிர, கொடுத்ததாகச் சொன்னால் தவிர நாம் ஒன்றும் செய்யமுடியாது. காக்னைசன்ஸ் ஆஃப் தி அபன்ஸ்-க்கு உரிய சான்று இன்மையால் அரசால் எதுவும் செய்யமுடியாத நிலைமை இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : அதையெல்லாம் கண்டுபிடித்து அவர்கள் மீது உரிய கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படித்தான் ஏழையெளியவர்களை எல்லாம் ஏமாத்திக்கொண்டு இருக்கின்றார்கள் என்று தெரிவித்துக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன் .வணக்கம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கல்வி மானியம் மனிதனுக்கு கல்வி தேவை என்ற அடிப்படை மட்டுமல்லாமல் நம்முடைய மொத்த நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடுகளில் நான்கில் ஒரு பங்கு கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில் இந்த கல்வி மானியம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட வேண்டும்.

1990 ஏப்ரல் 3] [திரு. எம். அப்துல் லத்தீப்]

இந்த ஆண்டு மொததம் பொதுக் கல்விக்காக 1,042 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மொத்த ஒதுக்கீட்டில் 22 விழுக்காடு என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதனால் கல்வி உயர்வுக்கு எந்த அளவுக்கு இந்த அதிக ஒதுக்கீடு பயன்படப் போகிறது என்பதை நாம் முழுமையாக ஆய்வு செய்து பார்த்தால், மொத்தத்தில் அதிகமான சம்பளம், அதுவும் யூ.ஜி.சி. பரிந்துரை, பல்கலைக் கழகத்தினுடைய பரிந்துரையின் அடிப்படையிலே நாம் ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதிகமாகக் கொடுக்கின்ற சம்பளம் என்ற வகையில் இந்த அதிக ஒதுக்கீடு பயன்படப் போகிறது. அது மட்டுமல்லாமல் புதிய சலுகைகள் அரசு ஆசிரியர்களுக்கு கல்லூரிகளிலே பள்ளிகளிலே பணியாற்றக் கூடியவர்களுக்கும் அறிவித்திருக்கிறது. அந்த அடிப்படையிலே இது பயன்படப் போகிறது என்ற வகையில், கடந்த ஆண்டில் 9 ஆயிரம் கோடி ரூபாய் என்று இருந்தது, இந்த ஆண்டு, இன்றைய புதிய நிலைமைக்கு ஏற்ப 1,042 கோடி ரூபாய் என்று உயர்ந்திருக்கிறது. இந்த ஒதுக்கீட்டால் என்ன பயன் அதிகமாக ஏற்படப் போகிறது? எத்தனை பேர்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புக் கிடைக்கப் போகிறது என்பது நாம் ஆய்வு செய்யப்படக்கூடிய ஒன்றாகும். பொதுவாக இன்றைக்கு கல்லூரிக் கல்வியைப் பொறுத்த வரையில், பல்கலைக் கழகங்களினுடைய இறையாண்மைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கு அந்த கல்வித்துறை ஆளாக்கப்பட்டிருக்கிறது. என்னென்ன பாடங்கள் போதிக்க வேண்டும் என்பதைக் குறித்து பல்கலைக் கழகம் ஆய்வு செய்கிறது. அதற்கான பாடதிட்டங்களை வகுத்துத் தருகிறது. நிர்வாக நெறிமுறைகளை பல்கலைக்கழகம் ஏற்படுத்தி தருகிறது. ஆனால் பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில் அது நிர்வாகத் துறையில்தான் முழுமையாக சார்ந்ததாக இருக்கிறது. அதிகாரிகள் தான் அதிலே தங்களுடைய முழு பொறுப்பையும் வகிப்பவர்களாக அமைகிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதிலே தொடர்பு கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறார்கள். பொது நெறிமுறைகளை வகுத்து ஒரு மையக்கட்டுப்பாட்டு துறை என்று பள்ளிக் கல்விக்கு இல்லை என்பது ஒரு குறை. எனவே அது குறித்தும் பல்கலைக் கழகங்கள் எப்படி கல்லூரி கல்வியை கட்டுப்படுத்துகின்றனவோ முறைப்படுத்துகின்றனவோ, அந்த அளவுக்கு பள்ளிக் கல்வியை முறைப்படுத்துகிற ஒரு அமைப்புத் தேவை என்று உணரப்படுகின்ற இந்த கால கட்டத்தில் அல்லது எந்த வகையில் அமைக்கப்படவேண்டும் என்பது குறித்தும் அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மொத்த ஒதுக்கீட்டில் 1,042 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த துறையிலே சில மாறுதல்கள் தேவை என்று நான் கருதுகிறேன்.

13-20 மணி

உதாரணமாக மற்ற மாநிலங்கள் எல்லாம் பள்ளிக் கல்விக்கு தனி அமைச்சரையும் கல்லூரிக் கல்விக்கு தனி அமைச்சரையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். மினிஸ்டர் பார் ஸ்கூல் எஜுகேஷன்,

மினிஸ்டர் பார் ஹையர் எஜுகேஷன் என்று இப்போது அங்கே யெல்லாம் இரண்டு அமைச்சர்கள் தனித் தனியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரும் தொகையை செலவழிக்கிற ஒரு பெரும் துறையை கவனிக்க ஓர் அமைச்சரால் முடியுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்தாக வேண்டும். இந்த விஷயத்தில் ஏன் மற்ற மாநிலங் களை நாமும் கடைபிடிக்கக்கூடாது? இது இன்றைக்கு மிகவும் தேவை என்பதையும், இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள் கிறேன். அதுமட்டுமல்லாமல், இரண்டு துறை அரசுச் செயலாளர்கள் கல்வித் துறைக்கு நியமிக்கப்பட வேண்டும். ஒன்று ஹையர் எஜுகேஷன், மற்றது ஸ்கூல் எஜுகேஷன். இந்த அடிப்படையில் நியமிப்பதோடுகூட டெக்னிக்கல் எஜுகேஷன் என்று வருகிறபோது அதற்கும் ஒரு அரசுச் செயலாளர் இன்றைக்கு மிக மிகத் தேவை. ஏனென்றால் இவ்வளவு பெரிய துறையை ஒரே செயலாளரும், ஒரே அமைச்சரும் நிர்வகிப்பது என்பது சாத்தியமானதல்ல, மனித சக்திக்கு அப்பாற்பட்டு இந்தத் துறையிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் சரியாக சமாளிக்க வேண்டுமென்றால் மற்ற மாநிலங் களை போல இங்கேயும் நாமும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, இன்றைக்கு கல்வி ஒரு பரவலான தத்துவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கல்வி இருப்பவன் தான் கண் உடையவன், மற்றவன் கண் இல்லாதவன், ஊனக் கண்ணினை உடையவன், ஞானக் கண்ணைப் பெறாதவன் என்ற தத்துவம் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி பரவலாக்கப்படுவது மனிதன் மனிதனாக வாழ என்பது அடிப்படை சிந்தனை என்ற காரணத்தால் அது கொடுக்கப்படுகிறது. ஆனால் இன்றைக்கு அதற்கு மாறாக நாட்டிலே அதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதை முறையாக கொடுத்தால் இப்படிப் பட்ட பிரச்சினைகள் நாட்டிலே ஏற்பட இடமில்லாமல் இருந்திருக்கும். இன்றைக்கு, பள்ளிகளில் எஸ்.எஸ்.எல்.சி. படிப்பவன் கூட சாக்கார் உத்தியோகத்துக்குத்தான் தன்னுடைய கல்வி தேவைப்படுகிறது என்று சிந்திக்கிற ஒரு நிலை ஏற்பட்டிருப்பது நாட்டுக்கு நல்லதல்ல. அந்த அடிப்படையில் கல்வி போதிப்பதால், வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்த கல்வியில் அதிக பாடங்களை கொடுக்க வேண்டுமா அல்லது வேலைவாய்ப்புகள் இல்லாதிருக்கும் சூழ்நிலையில் வேலை வாய்ப்புகளை எதிர்நோக்கி, அப்படிப்பட்ட படிப்புகளைச் சொல்லிக்கொடுத்து அவர்களை உற்பத்தி செய்யவேண்டுமா என்பதுதான் இன்றைக்கு சமுதாயத்தில் எழுந்துள்ள பாரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு சிக்கலான பிரச்சினை. இதில் அடிப்படை பிரச்சினை என்னவென்றால் ஒரு Perspective Assesment

1990 ஏப்ரல் 3] [திரு. எம். அப்துல் லத்தீப்]

தேவை. இன்றைக்கு கல்லூரியிலிருந்து பட்டத்துடன் வெளியேறுகிறார்கள் என்றால், அப்படிப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு வழி என்ன என்பதை திட்டவட்டமாக முன்கூட்டியே போடுகின்ற திட்டம் இல்லாததால் பிரயோஜனம் இல்லாத கல்வியை, ஏட்டுச் சுரைக்காயைப் படித்தவர்களாய் வருகிற மாணவர்கள் தங்களுக்கு எதிர்காலத்திலே ஒன்றுமே இல்லை என்று யோசிக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள், அவர்களும் வகுப்புகளுக்கு வருகிறார்கள், ஆனால் மாணவர்கள் ஒழுங்காக வகுப்பறைகளுக்கு செல்வதில்லையாகையால் ஆசிரியர்களும் முன்கூட்டியே பள்ளிக்கூடத்தை விட்டு செல்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு பொறுப்பற்ற தன்மை இருக்கிறது என்பதை நான் குற்றச்சாட்டாக இங்கே சொல்லவில்லை, ஆனால் இருக்கின்ற யதார்த்த நிலை இது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

13–25 மணி

அடுத்து, தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். 8 ஆம் வகுப்பு வரை படிப்பது, மனிதன் மனிதனாக வாழ மிகவும் தேவையானது என்ற அடிப்படையில் அது முக்கியத்துவம் உள்ளது. இன்றைக்கு எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சை என்று அரசு நடத்துவது போல் பழைய காலத்தில் அரசே ஈ.எஸ்.எல்.சி. என்கிற 8-வது வகுப்பு தேர்வை நடத்திவந்தது. அது மிகவும் முக்கியமானது என்பது என் கருத்து. ஈ.எஸ்.எல்.சி. வரை படிப்பது மிகவும் முக்கியமானது என்ற அளவில் மறுபடியும் ஈ.எஸ்.எல்.சி. படிப்பு தேவை. அதை அனைவரும் பெறும் வகையில், அதைப் பெற்றவர்கள் எழுத்தறிவு படைத்தவர்கள் என்பதற்கேற்ற கல்வித் திட்டமாக அது இருப்பதற்கு, நாட்டு மக்கள் அனைவரும் ஈ.எஸ்.எல்.சி. வரை படிக்க வேண்டுமென்ற நிலையை அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எஸ்.எஸ்.எல்.சி., பி.ஏ., பி.காம்., எம்.ஏ. போன்ற படிப்புகளைப் படித்துவிட்டு உத்தியோகத்துக்காக, எதிர்காலத்துக்காக 10 ஆண்டுகள் 12 ஆண்டுகள் வேலைவாய்ப்புக்காக தங்கள் பெயரை வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துவிட்டு காத்திருக்கக்கூடிய நிலையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லையென்றால் அதனால் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய கொந்தளிப்பான நிலைமை எந்த அளவுக்கு இருக்கும் என்பதைப்பற்றி அரசு தயவு செய்து சிந்தித்துப்பார்க்க வேண்டும். என்னிடத்திலே வருகின்ற இளைஞர்களில் அதிகம் பேர் வேலையின்றி வருகிறவர்கள்தான். எம்ப்ளாய்மென்ட் கார்டுகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். 12 ஆண்டுகளாக பதிவு செய்து, ரெனியூ பண்ணிக்கொண்டிருப்பவர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. பி.ஏ., எம்.ஏ., படித்தவன் நான், எனக்கு வேலை கிடைக்கவில்லை. இவ்வளவு ஆண்டுகளாக என்று சொல்லிக்கொண்டு அவர்கள் வருகிறார்கள் என்றால் நாம் இன்றைக்கு அளிக்கின்ற கல்வியானது ஒழுங்கீனங்களை வளர்க்கவும், கொந்தளிப்பை ஏற்படுத்துவதற்கும்தான் அது பயன்படுகிறதே தவிர நாட்டில் நல்லதொரு சான்றாண்மையை, நல்லதொரு ஒழுக்கத்தை

ஏற்படுத்த அது பயன்படவில்லை என்பதை இன்றைக்கு இருக்கிற அரசு மட்டுமல்ல, என்றைக்கும் வருகின்ற அரசுகள் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

1042 கோடி ரூபாயை இன்றைக்கு செலாவணியாக விடுகிறோம். எதற்காக? ஆசிரியர்கள் அதிகமாகக் கேட்கிறார்கள். நான் கேட்கிறேன், ஆர்கனைஸ்டு செக்டார்தான் அதிகமாகப் போராடி, தேசிய வருமானத்திலே அவர்கள்தான் அதிகமாகப் பறித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அன் ஆர்கனைஸ்டு செக்டார் என்று இருக்கிற பாமரர்களுக்காக யார் பேசுவது? அவர்களுக்காக யார் வாதிடுவது? எந்த அரசு அவர்களைப் பற்றிச் சிந்திப்பது? ''ஆர்கனைஸ்டு செக்டார்' யூனியன் வைத்துக் கொண்டு, ஆர்கனைசேஷன் வைத்துக்கொண்டு போராடுகிறார்கள். எவ்வளவு கொடுத்தாலும் போதுமென்று சொல்லுகிற மனமே அவர்களுக்கு வருவதில்லை. அந்தக் குணமே அவர்களிடத்திலே ஏற்படுவதில்லை. தேசிய வருமானத்தில் பெரும் பகுதியை அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு மனப்பான்மையைப் பெற்றிருக்கிறீர்கள் என்று சொன்னால், I am speaking for the unorganised majority people in this country. மெஜாரிட்டியாக இருக்கிறவர்களுக்கு யார் பேசுவது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் எல்லாம் கல்லூரிகளிலே படித்தவர்கள்தான். இன்றைக்குக்கூட கல்லூரிகளோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள்தான். ஒரு காலத்தில் ஆசிரியர்கள் எப்படி இருந்தார்கள்? மாணவர்கள் எப்படி இருந்தார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும்போது, அந்தக் காலம் மீண்டும் வருமா என்று எண்ணிப் பார்க்கும்போது, ஒரு காலத்திலும் அது வராது என்ற முடிவுக்குத்தான் நாங்கள் வருகிறோம். ஆசிரியர்கள் கல்லூரிகளுக்குச் செல்வதை, அழகாக பேராசிரியர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் பணி செய்வதில்லை, தொழில் செய்வதில்லை. தொண்டு செய்கிறோம் என்ற எண்ணத்தில் அவர்கள் போக வேண்டும். ஆசு இரியர்கள் என்று, குறைகளை நீக்கக்கூடியவர்கள் என்று இருக்கக்கூடிய அந்த ஆசிரியர்கள், ஆசிரியர்களாக இல்லாமல்—மன்னிக்க வேண்டும்—நான் வேறு வார்த்தையை பயன்படுத்தவில்லை. அவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு ஆர்கனைசேஷன் வைத்துக்கொண்டு கல்லூரிகளிலே வகுப்பறைகள் நடக்கின்றனவா என்றால் இல்லை. அவர்கள் வகுப்புகளைப் பற்றி சிந்திப்பதில்லை. மாணவர்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை. இந்த நிலைமைகள் நீடிக்கும் வரையில், நீங்கள் பட்டதாரிகளுடைய எண்ணிக்கையை அதிகமாக்குவீர்களே தவிர, சமுதாயப் பொறுப்பு உணர்வு உள்ள எண்ணங்களை உங்களால் உயர்த்த முடியாது என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணி அடிக்கப்பெற்றது) எனவே இது குறித்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எதற்காக ஒரு டைரக்டோரேட் வைத்திருக்கிறீர்கள்? There should be a separate Directorate to bring about co-ordination as between the different Departmeuts which are presiding over the destinies of the student-community.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ...

Mr. DEPUTY SPEAKER: Another hon. Member riscs on a point of order.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, on a point of order. மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஆசிரியர்களைப் பற்றிப் பேசும் போது, ஒட்டுமொத்தமாக எல்லா ஆசிரியர்ளும் தவறு செய்வது போல் பேசுகிறார்கள். ஒரு சில ஆசிரியர்கள் தவறு செய்யலாம். ஆசிரியர்கள் சம்பளம் இல்லாமல் வேலை செய்ய வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு ஒட்டுமொத்தமான கருத்து. அதிலே நல்லவர்கள் அதிகமாகவும், நன்மை செய்யாதவர்கள் குறைவாகவும் இருப்பார்கள் என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள் கிறேன். ஆசிரியர் சமுதாயத்திலே அந்தப் பொறுப்புணர்ச்சி எல்லோருக்கும் வரவேண்டும். ஒருவர்கூட அந்தப் பொறுப்புணர்ச்சி இல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் பேசு கிறேன். ஆசிரியர் சமுதாயத்தைக் குறை சொல்வதற்காகப் பேசவில்லை. ஆசிரியர் சமுதாயத்தின் மீது உங்களுக்கும் அக்கறை உண்டு. இந்த மானியத்தைக் கோருகின்ற பேராசிரியர் அவர்களே இங்கு உட்கார்ந்திருக்கிறார்கள். எனக்கும் ஒரு காலத்தில் தொடர்பு இருந்தது. இப்போதும் தொடர்பு இருந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர்களை உயர்ந்த அந்தஸ்தில் வைத்து கணிக்க வேண்டும், அவர்களைப் பாராட்ட வேண்டுமென்று உங்களுக்கு இல்லாத அக்கறை எனக்கு உண்டு. எனவே தயவு செய்து திசை திருப்ப வேண்டாமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக தனி டைரக்டரேட் வைக்கவேண்டும். It should be a Directorate of inter-Department 1 co-ordination and perspective assessment. என்று அவரவர்கள் தனித்தனியான பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்தமாதிரியான டைரக்டோரேட் வைத்து எவ்வளவு வேலை வாய்ப்புகள் இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் பட்டங்களைக் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் பட்டம் கொடுக்க வேண்டும், இவ்வளவு பெர்சன்டேஜ் கொடுக்க வேண்டும் என்பது தேவை யில்லை. பெர்சன்டேஜ் காட்ட வேண்டுமென்பதில் ஒவ்வொரு பல்கலைக் கழகமும் அக்கறை உள்ளதாக இருக்கிறது. கிரேஸ் மார்க் போடுகிறார்கள். 10 பர்சன்ட் வாங்கினால் கூட, 35 பர்சன்ட் வரை உயர்த்தித் தருகிறார்கள். இங்லீஷ் கொஞ்சம் கூடப் பேசத் தெரியாது. இன்றைக்கு இங்லீஷ் பற்றிச் சொன்னார்கள். எல்லோரும் தமிழ் தமிழ் என்று சொல்லு கிறார்கள். நாங்களும் தமிழுக்காக வாதாடுகிறோம். ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் நம்முடைய தாய்மொழி.

அதை எந்த நேரத்திலும் கற்றுக்கொள்ள முடியும். அது ரத்தத்தில் ஊறியுள்ள மொழி. நம்முடைய உயிரினும் மேலான மொழி. ஆனால் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது எது? உலகத்தோடு தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடிய மொழி.

13-30 மணி

உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும். நான் தமிழ் பேசுகிறேன்; தமிழ் எழுதுகிறேன். ஆனால் நான் கல்லூரியிலோ, பள்ளியிலோ தமிழைப் படிக்கவில்லை. என்னால் இப்போது தமிழைப் பேச முடியவில்லையா? தமிழை எழுத முடியவில்லையா? ஏனென்றால் தமிழ் என்னுடைய ரத்தத்தில் ஊறியது. அது எனது தாய்மொழி. என்னுடைய இனமொழி. எனவே அதைத் தனிப்பட்ட முறையிலே நான் தானாகவே கற்றுக்கொள்வேன். கற்றுக்கொள்ள வேண்டிய மொழி அது. நீங்கள் ஒரு முடிவுக்கு வாருங்கள். இன்றைக்கு அகில இந்திய அளவிலே போட்டிகளிலே நாம் எவ்வளவு தாழ்ந்துவிட்டு இருக்கிறோம். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இன்றைக்கு எவ்வளவு குறைந்து இருக்கிறார்கள்? அகில இந்திய போட்டிகளில் நாம் எவ்வளவு குறைந்து இருக்கிறோம்? அதிலே நாம் முன்வர வேண்டுமானால், வருங்காலத்தில் நம்முடைய சந்ததியினர் முன்னுக்கு நிற்க வேண்டுமானால், ஒரு மொழி, எந்த மொழி தேவையோ அந்த மொழியிலே ஆக்கம் பெற வேண்டும். அதனுடைய முக்கியத்துவத்தைக் குறைத்துப் பேசுவது பிரயோஜனம் இல்லை என்று நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். யாரோ உத்தரப்பிரதேசத்துக்காரர்கள் செய்கிறார்கள்; அது அவர்களுக்கு இருக்கிற எண்ணம். அதை எந்த வகையிலே நாம் சந்திக்க வேண்டுமோ அந்த வகையிலே சந்தித்துக் கொள்ள நமக்கு என்று ஒரு கொள்கை உண்டு. இப்போது 500 மக்கள் தொகைக்கு மேற்பட்ட 434 சிற்றூர்களில் ஒரு ஆசிரியப் பள்ளிகளை அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) அதிலே கூட தொகுப்பு ஊதியம் கிடையாது என்றெல்லாம் வாதம் செய்யப்பட்டது. ஒன்றுமே இல்லாதவனுக்கு தொகுப்பு ஊதியம் ரூ. 800 கொடுக்கிறோம் என்று சொன்னால், அதுவும் 2 வருடங்கள் வரையில் அவன் 800 பெறப் போகிறான்; அதற்குப் பிறகு அவனுடைய பணி நிரந்தரமாக்கப்படுகிறது என்று சொன்னால் அதைக் கூட குறை கூறக்கூடியவர்கள் இருக்கிறார்கள். எனவே நான் அதனைப் பெரிதும் வரவேற்கிறேன்.

அடுத்து நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், தற்போது 'என்ட்ரன்ஸ் டெஸ்ட்' நடத்தப்படுகிறது. அது நம்முடைய அடிப்படைக் கொள்கைக்கே மாறுபாடானது. அதை குப்பனும், சுப்பனும், சுபானும், அந்தோணியும் எழுதுகிறார்கள். யார் கல்வியிலே சிறந்தவர்களாக, கல்விப் பாரம்பரியத்தில் உயர்ந்தவர்களாக

இருப்பவர்கள் மத்தியிலே என்ட்ரன்ஸ் டெஸ்ட் வைத்தால் அதில் நம்முடைய குப்பனும், சுப்பனும் பாஸ் பண்ண முடியுமா? அவர்களோடு போட்டி போட முடியுமா? அது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கைக்கே முற்றிலும் விரோதமானது. எனவே அந்த என்ட்ரன்ஸ் டெஸ்ட்டை தயவு செய்து நீங்கள் எல்லோருக்கும் வற்புறுத்தக் கூடாது, பொதுவாக அதை எடுத்து விட வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மைனாரிட்டிகளைப் பற்றி எல்லோரும் பேசினார்கள். எனக்குத் தெரியும். இங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள், அரசியல் வாதிகள் ஆகியோர் பலர் மைனாரிட்டி கல்லூரிகளிலே படித்து வந்தவர்கள் தான். அன்றைக்குக் கல்விக் கதவுகள் திறக்கப்படாத காலக் கட்டத்தில் எனக்குத் தெரியும். வட ஆற்காடு மாவட்டத்திலே வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி, வேலூரில் ஊரிஸ் கல்லூரி தவிர வேறு கல்லூரிகள் கிடையாது. அங்கு படித்தவர்கள் எல்லாம் தனியார் கல்லூரிகளில்தான் படித்தார்கள். தெற்கே எடுத்துக் கொண்டால் செயின்ட் ஜோசப், செயின்ட் சேவியர்; மத்தியிலே வந்தால் செயின்ட் ஜோசப் என்று, இப்படி......

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. லத்தீப் அவர்கள் எடுத்துச் சொல்லத் தொடங்குகிற கருத்தில் நான் முன்கூட்டியே சொல்ல விரும்புவது இது மைனாரிட்டி கல்லூரிகள் கூடாது என்றோ, மைனாரிட்டி கல்வி நிலையங்கள் நடத்தக் கூடாது என்றோ அப்படி ஒரு கருத்து இங்கே பேசப்படவில்லை. அனுமதி இல்லாமல் தொடங்கப்பட்டு விடுகிற மைனாரிட்டி கல்லூரிகளைப் பற்றித்தான் இங்கே பேசப் பட்டது. அதுவும், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் என்று மைனாரிட்டி பேரால் தொடங்கிவிடுவதைப் பற்றித்தான் இந்த அவையில் சில பேர் எதிர்ப்புத் தெரிவித்தார்களே தவிர, மைனாரிட்டி கல்லூரிகள், கல்வி நிலையங்கள் நடத்துகின்றவர்களுடைய உரிமைகளை மறுத்து யாரும் பேசியதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கருத்தை தன்னுடைய குறிப்பிலே கூட சொல்லி இருக்கிறார்கள்; முன்னுரையிலும் சொல்லி இருக்கிறார்கள்; அவர்களுடைய எண்ணம், உணர்வு எங்களுக்குப் புரியும். ஆனால் பேசியவர்களில் ஒரு சிலர் கான்ஸ்டிடியுஷன் ஷரத்து 30—ஐக் கூடத்தொட்டுப் பேசினார்கள். அந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று பேசினார்கள். அதை இங்கே மாற்ற வேண்டுமா? அங்கே மாற்ற வேண்டுமா? வேண்டுமானால் இந்த அவையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி, அரசமைப்புச் சட்டத்திலே ஒரு திருத்தத்தை கொண்டுவரவேண்டும் என்று நாம் இங்கே தீர்மானம் நிறைவேற்ற முடியும். ஆனால் அதை எந்த அளவுக்கு (மணி அடிக்கப்பெற்றது.)

செய்கிறோம் என்பதை தயவு செய்து நீங்கள் சிந்துத்துப் பார்க்க வேண்டும். இங்கே இருப்பவர்களில் பலர் தனியார் கல்லூரியிலே படித்தவர்கள். தனியார் கல்லூரிகளின் சேவைனை மறந்து, மைனாரிட்டி இன்ஸ்டிடியுஷன் என்று சொல்லக்கூடிய அவர்களுடைய சேவையை மறந்து, பிறகு ஏதோ ஒரு காரணத்தை, ஏதோ ஒரு உணர்வை வைத்துக்கொண்டு மைனாரிட்டி அமைப்புகளை எல்லாம், நிறுவனங்களை எல்லாம் ஒழித்து விட வேண்டும் என்றும், அவர்கள் மீது சேற்றை வாரித் தூற்றுபவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு சேறாகத் தெரிவது தான் அன்றைக்கு சந்தனமாகத் தெரிந்தது; நம்முடைய முன்னோர்கள் அனைவரும் மைனாரிட்டி கல்லூரிகளிலே படித்துத் தான் ஒளியைப் பெற்றார்கள்; கண்களை பெற்றார்கள், என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே' ஏதோ ஒரு சில இடங்களிலே குறைகள் இருக்கலாம். அதைத் திருத்த வேண்டும். சர்க்கார் கல்லூரியிலே அப்படி நடக்கவில்லையா? அங்கு டொனேஷன்வாங்குகிறார்கள் என்பதை, என்னால் நிருபித்துக் காட்ட முடியாதா? அவனாவது தனக்கு வாங்குகிறான், ஆனால் அரசுக் கல்லூரியிலே வாங்குகிறானே, யார் யாருக்காக வாங்குகிறான்? அரசுக் கல்லூரியிலே டொனேஷன் வாங்காமல் கொடுக்கின்ற சீட்டுகள் எவை எவை என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

13-35 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படியொரு புகார் இதுவரையில் எனக்கு வரவில்லை. மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் அந்தப் புகாரை கொடுத்தால், விசாரணை நடத்த நான் ஏற்பாடு செய்கிறேன்.

திரு எம். அப்துல் லத்தீப்: தலைவரவர்களே, நான் பலருக்காகச் சிபாரிசு செய்பவன். பலரை அழைத்துக்கொண்டு போவேன். கல்லூரிகளோடு நெருக்கமான தொடர்பு வைத்திருப்பவன். எனவே ,மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் என்னிடத்திலே குறிப்புகளைக் கேட்டால் நான் கொடுக்கத் தயார். அது இங்கு அங்கு என்று நான் சொல்லவில்லை. எங்கும் இருக்கிறது அதுவும்' தனியார் கல்லூரிகளைவிட மிகப் பயங்கரமாக இங்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு லத்தீப் அவர்கள் பேசும் பொழுது அங்கும் முறைகேடு இருக்கிறது இங்கும் முறைகேடு இருக்கிறது என்று சொல்கிறார். ஆகவே, ஊழல் இருக்க வேண்டுமென்று சொல்கிறாரா அல்லது ஊழல் கூடாது என்று சொல்கிறாரா? ஆசிரியர்கள் நியமனமோ அல்லது அட்மிஷனிலேயோ ஊழல் இருப்பது சரி என்று வாதிடுகிறாரா? என்று அறிய விரும்புகிறேன்

திரு. எம். அப்துல் லத்தீப். அப்படி நான் வாதிக்கவில்லை என்று அழகர்சாமிக்கு மிக நன்றாகவே தெரியும். ஏதோ ஒரு கேள்வி. அப்படி வாதிப்பார்களா யாராவது? குற்றம் சொல்லும் பொழுது, தாரதம்மியம் அறிந்து குற்றம் சொல்ல வேண்டு மென்பதற்காகத்தான் சொல்கிறேன். குற்றம் எங்கிருந்தாலும் கண்டிக்க வேண்டும். அது இங்கு இருந்தால் மட்டும் கண்டிப்பது அங்கு இருந்தால் கண்டிப்பது இல்லை, கண்ணை மூடிக் கொள்வது என்பது ஏற்புடையது அல்ல. குற்றம் எங்கு இருந்தாலும் கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் அமைச்சர் ஆவதற்கு முன்னரே, அரசுக் கல்லூரிகளில், அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றிலே மாணவர்களை தெரிவு செய்வதற்கு ஒரு முறை வைக்கப்பட்டிருக்கிறது. அதிக எண்கள் வாங்கியவர்கள் என்ற முறைப்படி, அதிலே கம்யூனல் ஜீ.ஓ., வகுப்புவாரி உரிமை, பேக்வேர்ட், மோஸ்ட் பேக்வேர்ட், இந்த உரிமை இடம் பெறக்கூடிய முறையில், அந்த எண்கள் அடிப் படையில் அவர்கள் மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று விதி விதிக்கப்பட்டு, யாராவது சிபாரிசு செய்யுமாறு என்னிடத் திலே வந்து அவர்களுடைய நிலை என்னவென்று நான் கேட்டால் கூட, அவர்களுக்கு அந்த மதிப்பெண்கள் வராத காரணத்தால் அந்த சிபாரிசை இந்தக் கல்லூரி ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது என்று எனக்கே பதில் சொல்லியிருக்கிறார்கள் அது உண்மை என்று நான் நம்புகிறேன். அதுவும் உண்மை அல்ல என்றால் லத்தீப் அவர்களோ, மற்றவர்களோ ஆதாரம் கொடுப்பார்களேயானால், விசாரித்து, உண்மையைப் புரிந்து கொள்ள எனக்கு உதவியாக இருக்கும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவரவர்களே, நான் முடிவுக்கு வருகிறேன். உருது மொழியைப் பற்றி நான் ஒரு கோரிக்கையை அரசினுடைய கவனத்திற்கு வைக்கிறேன். உருதுமொழி இந்த மாநிலத்திலே இலட்சக் கணக்கான மக்களால் பேசப்படுகின்ற ஒரு மைனாரிட்டி மொழி. அதற்காகச் சலுகை களும் இருக்கின்றன. இந்த அரசு அதற்குச் சலுகை செய்ய வேண்டும், அதைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமும் அரசுக்கு இருக்கிறது. ஆனால், நடைமுறையிலே இன்றைக்குச் சொல்கிறேன், பாடப் புத்தகங்களெல்லாம் விரைந்து கிடைக் கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால் உருது மொழிக்கு மட்டும் நிர்ணயிக்கப்பட்ட பாடப் புத்தகங்கள் கிடைப்பதில்லை. இன்றுவரையிலே கிடைக்கவில்லை. இதைப்பற்றி மட்டும் ஏனோ தானோ என்று ஏன் அரசு இருக்கிறது என்று தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால், உருதுப் பள்ளிகளில், சென்னை யிலேயும், தமிழ்நாட்டிலேயும் சுதந்திரத்திற்குப் பிறகு மூடப் பட்டதைப் போல வேறு எந்த மொழி மீதும் இவ்வளவு பெரிய

அக்கிரமம், அநீதி நடக்கவில்லை. உருதுப் பள்ளிகள் ஒவ்வொன்றாக இன்றைக்குச் சென்னையிலே மூடப்பட்டு வருகின்றன. என்னுடைய தொகுதியிலே தாயார் சாகேப் தெரு இருக்கிறது. அங்கே ஒரு பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியை படிப்படியாக அரசுத்துறையினர் ஆக்கிரமித்து வருகிறார்கள். அங்கே வகுப்பறைகளை நடத்த முடியாமல், சர்க்கார் ஆபீஸ்களையெல்லாம் அந்தப் பயிற்சிப் பள்ளிக்குக் கொண்டு வருகிறார்கள் நான் சொல்கிறேன், அது எங்களுடைய பாரம்பரியத்தினுடைய சின்னமாக விளங்குகின்ற ஒரு பயிற்சிப் பள்ளி. அந்தப் பள்ளியில் ஆக்கிரமிப்கபுள் அரசுக்குத் தெரியாமல் ஆக்கிரமிப்புகள் என்றால் அதுவும் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற அந்தப் பள்ளியை ஆக்கிரமிப்பது என்று சொன்னால் அது ஏற்புடையது அல்ல. அதனால் விளைவுகள் நல்லதாக இருக்காது என்பதைச் சொல்லி, இவைகளையெல்லாம் கவனிக்க அரசு, மற்ற மாநிலங்களைப்போல இங்கேயும் ஒரு உருது அகாடமி ஏற்பட வேண்டும். எல்லா மாநிலங்களிலேயும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய நன்மையைக் கவனிக்க உருது அகாடமியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்காக இவ்வளவு நல்ல ஒரு ஒதுக்கீட்டைச் செய்திருக்கின்ற நீங்கள் இதிலே அதிகமான நன்மைகளைப் பெறும் வகையில், நம்முடைய நிர்வாக முறைகளை மாற்றியமைத்து. நிர்வாகத்தின்மீது அதிகமான ஒரு பிடிப்பை ஏற்படுத்தி, யாருக்காக இந்தப் பணம் செலவழிக்கப் படுகிறதோ அந்த வருங்காலச் சமுதாயத்திற்கு முழுமையாகக் கிடைத்திடும் வகையில் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கல்வியில்லாவிட்டாலும், ஒழுக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ஒழுக்கம் இல்லாத கல்வி கடிவாளம் இல்லாத குதிரையைப் போன்றது. அந்த ஒழுக்கம் வரவேண்டுமென்று சொன்னால், என்னைப் பொருத்தவரையிலே ஒவ்வொருவரும் தங்களுடைய மார்க்கக் கல்வியையும் சேர்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அற நீதிகளையும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், நன்றி.

13-40 மணி

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை முன் வைக்கிறேன்.

மைனாரிட்டியைப் பொறுத்த வரையில் அரசியல் சட்டப்படி நாங்கள் மைனாரிட்டி தான் என்று அவர்கள் முதலில் உரிமையியல் மன்றத்தில் உரிமையை நிலை நாட்ட வேண்டும். அப்படி நிலை நாட்டுகிற போது அரசாங்கமே அதிகமான வழக்குகளில் எக்ஸ் பார்ட்டியாகி விடுகிறது. அரசாங்கம் அதை அங்கே எதிர்ப்பது

கிடையாது. ஆகவே, அவர்கள் முதல் கட்டத்திலேயே வெற்றி பெற்று விடுகிறார்கள். அதற்கு பிறகு அவர்கள் அங்கீகாரத்திற்கு இங்கே வருகிறபோது, அதை நம்முடைய கல்வி இயக்குநரோ, அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களோ எக்ஸ்-பார்ட்டியாக அரசாங்கம் இருந்தது தவறு என்று நடவடிக்கை எடுப்பது கிடையாது. ஆகவே, அடிப்படையில் குறைபாடுகள் அரசு செயல்களில் காணப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

உயர் கல்வியை பொறுத்தவரையில் ஒரு டாக்டரோ, என்ஜினியரோ உருவாக்கவேண்டுமென்றால், நம்முடைய ஐ.ஐ.டி. செயல்குறிப்பில் படி $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய், 3 லட்சம் ரூபாய் அரசாங்கம் செலவிடுகிறது. ஒரு மருத்துவரை உருவாக்குவதற்க்கு ஒரு என்ஜினியரை உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்கு செலவாக கூடிய பொதுப் பணம் $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய். இதில் படித்து, பொதுப் பணத்திற்கு அவர்கள் செலவு உண்டாக்கக்கூடிய அளவிற்கு காரணமாகி, பின்னர் சிலபேர் வெளிநாடுகளுக்கு போய் விடுகிறார்கள். அங்கே போய் இந்த அடிப்படை கல்வியை வைத்துக் கொண்டு, அங்கேயும் கல்விச் செல்வத்தை முடிந்த அளவிற்கு அவர்கள் பெற்ற பிறகு, வெளிநாட்டு இந்தியர்களாகி விடுகிறார்கள். இங்கே இந்தியர்களாக, தமிழ் நாட்டில் அடிப்படை கல்வியை அரசாங்கச் செலவில் பெற்று, இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படாமல், இந்த சமுதாயத்திற்குப் பயன் படாமல், இன்னும் சொல்லப் போனால் தனக்கு அதிகமாக பயன்படாமல், இன்னொரு நாட்டிற்குச் சென்று அங்கே பணி புரிகிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்பை, பொது மக்களுக்கு ஏற்படும் இழப்பை தடுப்பதற்கு ஏதாவது வழிவகை காணவேண்டும். இங்கே அதிகமான மதிப்பெண்களை பெற்றவர்கள் வெளிநாட்டிற்குச் செல்வார்களானால் நம்முடைய அவையிலிருந்து நிறைவேற்றப்படுகிற, வழங்கப்படுகிற அந்தப் பணம், வேறு நாட்டிற்கு செல்வதாகும். அந்த அறிவுச் செல்வம் வெளியே போய் சேர்வதை தடுக்கவேண்டும் என்பது தான் என்னுடைய முதல் வேண்டுகோளாகும்.

அடுத்தபடியாக, மருத்துவக் கல்வியில் மத்திய அரசாங்கம் அன்றைக்கு தாங்களாக செய்தால் குறுக்கீடு வரும் என்று எண்ணிப் பார்த்து, மத்திய அரசு ஒரு கொள்கையை கொண்டு வந்தது. ஒவ்வொரு மாநிலமும் 15 சதவீத மருத்துவக் கல்லூரி இடத்தை அகில இந்திய அளவிற்கு கொடுக்க வேண்டும் என்பதை அவர்கள் கொள்கையாக அறிவித்து, அது உச்ச நீதிமன்றம் வரை போய் அங்கே எல்லா மாநிலங்களுக்கும் நோட்டீஸ் அனுப்பி, அவர்கள் அதை நீதிமன்ற உத்தரவாக நிறைவேற்றி, உத்தரவிட்டு, 15 சதவீதத்தை மாநிலங்களிடமிருந்து பறித்து விட்டார்கள். ஆனால், இந்த ஆண்டு அந்த 15 சதவீத இடங்கள் நிரப்பப் பட்டனவா என்பதை இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வார்களானால், அந்த ஒதுக்கீட்டினால் நம்முடைய

தமிழ் நாட்டிற்கு எந்த அளவிற்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் உணரமுடியும். ஆகவே, 15 சத வீதம் அங்கே போய்விட்டது. ஆகவே, நம்மால் அதை எதிர்க்க முடியவில்லை. சாதாரண மனிதன் வேண்டு மானால், தன்னுடைய பணத்தை வைத்துக் கொண்டு, உச்ச நீதிமன்றத்திற்குப் போய், அந்த 15 சதவீத இடத்தை நம் முடைய தமிழகத்திற்கு கொடுத்திருப்பார்கள். ஆகவே, மத்திய அரசு கொள்கையை, நீதிமன்ற கொள்கையாக அன்றைக்கு அறி வித்து, நம்முடைய தமிழ் நாட்டிலிருந்து 15 சதவீதத்தை அவர்கள் பறித்து இருக்கிறார்கள்.

இங்கே சுயநிதிக் கல்லூரிகளைப் பற்றி மாண்புமிகு உறுப் பினர்கள் பேசும்போது எனக்கு எழுந்த ஒரு எண்ணம் என்ன வென்றால், இங்கே நம் மாநிலத்தில் சுயநிதி கல்லூரிகளை ஒரு வேளை நாம் மூடி விட்டால் என்ன ஆகும் என்று நினைத்தேன். இங்கேயுள்ள மாணவர்கள் அண்டையில் இருக்கிற மாநிலங் களுக்குப் போய், பணத்தைக் கொடுத்து, அங்கே இடத்தைப் பெறுவார்கள். கர்நாடகத்திற்குச் செல்வார்கள். அங்கே போய், அவர்கள் என்ஜினியரிங் கல்லூரியில் இடம் பெறுவதற்கு வாய்ப் பைத் தேடுவார்கள். இன்னும் சொல்லப் போனால், தமிழ்நாட்டில் இருக்கிற அடிப்படை மார்க் சதவீதத்தை விட கர்நாடகாவில் சேரவேண்டுமென்றால் குறைவாக எடுத்தால் போதும் 50 சதவீதம் என்று எண்ணுகிறேன். இல்லாவிட்டால் மணிப்பால் செல்வார்கள். மற்ற மாநிலங்களுக்கு செல்வார்கள். ஆகவே இங்கே ஒழுங்காக ஆரம்பிக்கப்பட்டு, நல்லமுறையில் நடத்திக் கொண்டிருக்கிற அந்த சுயநிதி கல்லூரிகள், அரசாங்கம் சொல்லக்கூடிய அந்த கண்டிஷன்களுக்கு ஒத்துவருவார்களானால் அரசாங்கத்திற்கு நிதிச்சுமை இல்லாமல் இருக்குமானால், அதை நீங்கள் கண்காணிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள் ஆகும்.

13-45 மணி.

எப்படியும் உயர் கல்வியைப் பெறுவதற்கு இன்றைக்கு அரசால் மாநிலம் முழுவதும் பொறியியல் கல்லூரிகளைத் திறக்க முடியாது. மாநிலம் முழுவதும் மருத்துவக் கல்லூரிகளை நாம் திறக்க முடியாது. நிதிப் பற்றாக்குறை. ஆகவே எந்த அளவிற்கு சுயநிதிக் கல்லூரிகளை கட்டுப்படுத்த முடியும், ஓரளவிற்கு. எல்லா சுயநிதிக் கல்லூரிகளும் அரசாங்க நிலத்திலே தான் அவர்கள் கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். ஒரு கல்லூரி மட்டுமல்ல. வட ஆர்க்காடு மாவட்டத்திலே ஒரு என்ஜினியரிங் கல்லூரி, 150 ஏக்கர் அரசாங்க நிலம் கோவில் பட்டியில் ஒரு என்ஜினியரிங் கல்லூரி, எவ்வளவு நிலம், எனக்குத் தெரியாது. மலை வரை என்று சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு ஊரிலும் பெரிய பெரிய கல்லூரிகளை உருவாக்கக் கூடியவர்கள் இப்படித்தான் இதைச் செய்வார்கள். இந்த ஒரு

காரணத்தை வைத்துக்கொண்டு, நாம் அத்தனை கல்லூரிகளையும் எடுத்துவிட முடியாது. காரணம் நம்மால் புதிய கல்லூரிகளை உருவாக்க முடியாது. ஒருவேளை அரசாங்கமே சுயநிதிக் கல்லூரிகள் திறந்ததைப் போல, ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 கல்லூரிகள் என்று நீங்களாகவே இன்றைக்கு அறிவித்து அங்கேயிருக்கக்கூடிய கலைக் கல்லூரிகளிலே மாலை நேரங்களிலேயே நம்முடைய பொறியியல் கல்லூரிகளை நடத்த முன்வருவார்களானால், அத்துணை சுயநிதிக் கல்லூரிகளையும் மூடிவிடலாம். அங்கே கலைக் கல்லூரிகளில் நிறைய இடம் இருக்கிறது. அந்தக் கட்டிடங்களைப் பயன்படுத்தலாம். அப்படிப் பயன்படுத்தினால் நாம் இதைப்போன்ற கல்லூரிகளைத் தடுத்துவிடலாம். நம்முடைய பேராசிரியர் அவர்கள் திரு. அழகர்சாமி அவர்கள் பேசும்போது ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அதாவது டொனேசன் கொடுத்தால் நாம் என்ன செய்வது, கொடுப்பவன் கொடுக்கிறான் வாங்குபவன் வாங்குகிறான், நாம் என்ன செய்வது, என்று சொல்லும்போது, எனக்கு எழுந்த ஒரு எண்ணம். அரசாங்கத்தின் பொறுப்பு, protection to life and property of individual ஒருவன் கொடுக்க வேண்டுமென்று இன்னொருவன் கேட்டால், அதைத் தெரிந்து தடுப்பதுதான் அரசாங்கத்தினுடைய கடமையாகும். இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில், இதுபோன்ற எத்தனையோ குறைபாடுகளால், மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் நிதி நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டு இருக்கிறது. நாம் சொல்ல முடியாது, நீ போய் சீட்டு கட்டுகிறாய், அவர்கள் ஏமாற்றிவிட்டால் நாம் என்ன செய்வது என்று. அப்படி ஒருவர் இங்கே நுழையாமல் இருப்பதை பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஒருவர் டொனேசன் வாங்குகிறார் என்று தெரிந்தால், எந்த அளவிற்கு சட்டத்தை வைத்து, நம்முடைய அதிகாரத்தை வைத்து, அவர்களைக் கட்டுப்படுத்த முடியுமோ, அதை தயவுதாட்சண்யம் இல்லாமல், பாரபட்சம் இல்லாமல், செய்வோமானால், அந்தக் குற்றச்சாட்டுக்கு இடம் இருக்காது. முழுவதுமாக அரசாங்கம்தான் பொறுப்பு. யாராவது மக்களை ஏமாற்றினால், பொறுப்பை மக்கள் மீது சொல்ல முடியாது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாண்டியன் அவர்கள், இந்தக் கருத்தைச் சொல்கிறபோது, கருத்தளவில் எனக்கு உடன்பாடு. ஆனால் செயல் அளவில், கொடுத்தவர் சான்று தராமல், வாங்கியதாக குற்றம் சாட்ட எனக்கோ, அரசுக்கோ என்ன வாய்ப்பிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பாண்டியன் அவர்கள் சொல்ல வேண்டும். அல்லது அரசாங்கம் சொன்னாலும் அது நியாயமாகத்தான் இருக்கும் என்று மக்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது என்பது தடை செய்வதாக வாவது உருவாக முடியும்.

திரு. பி. எச்பாண்டியன்: மக்களுக்கு அரசாங்கம் சில கதவுகளைத் திறக்காமல் இருக்கும்போது, வேறு தனி மனிதன் திறக்கும்போது, மக்கள் ஏமாந்து தானாகவே போய்விடுகிறார்கள். மக்களுக்கு அந்த ஆசை இருக்கிறது. தன்னுடைய மகன் என்ஜினியராக ஆகவேண்டும், தன்னுடைய மகன் டாக்டராக ஆகவேண்டும் என்பது மக்களுடைய ஆசை அந்த ஆசையை அரசாங்கம் பூர்த்தி செய்ய முடியாத காரணத்தால் தான் எந்த அரசாங்கமாக இருந்தாலும் மக்கள் ஏமாந்துவிடுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இதற்கும் ஒரு விளக்கம். 6 ஆயிரம் பேர்கள் விண்ணப்பித்து, 2 ஆயிரம் 3 ஆயிரம் பேர்களுக்குத் தான் அரசுக் கல்லூரிகளிலே இடம் தரக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்காகத்தான் அந்தப் போட்டித் தேர்வு, என்ட்ரன்ஸ் டெஸ்ட் நடத்தவேண்டிய கட்டாயமான நிலையிருக்கிறது. ஏன் என்றால், விரும்புகிற பல பேர்களில், இடம் கிடைக்கக்கூடியது சில பேர்களுக்குத் தான். விரும்புகிறவர்கள் ஏராளம்—எனவே இடையிலே தனிப்பட்டவர்கள் தங்களுடைய விருப்பப்படி யாரை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ள இடம் இல்லாமல் ஒரு முறை வைக்கப்பட்டு இருக்கிறது. எனவே இந்த நிலையில் அரசாங்கம் கூட வேறு என்ன செய்ய முடியும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

(13-50 மணி)

திரு. பி. எச். பாண்டியன்: பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, இந்த இரண்டு கல்லூரிகளிலே சேருவதற்கு மாணவர்களிடையே ஒரு மோகம் உண்டு. ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று. ஆகவே இந்த சுயநிதிக் கல்லூரிகள் தோன்றியதைப் போல அரசாங்கமே கல்லூரிகளை அதிகமாக திறக்கவேண்டும். நிதி நிலை நெருக்கடி எனக்குத் தெரியும். ஆனால் தனி மனிதனுடைய நிலை, சுயநிதிக் கல்லூரிகளைத் திறக்க வைத்து, பாமர மக்கள் இன்றைக்கு ஏமாற்றப்படுகிறார்கள், அதையும் மறந்துவிடக் கூடாது. அரசாங்கம்தான் அந்த மக்களைப் பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும். அரசாங்கம், மக்களை, மக்களுடைய பணத்தை, மக்களுடைய உடைமையைப் பாதுகாக்க முடியவில்லை என்றால், நாம் அரசாங்கத்தைத்தான் குறைபட்டுக் கொள்ளவேண்டுமே ஒழிய, மக்களை நாம் குறை சொல்ல முடியாது. மக்களுக்கு இது எல்லாம் தெரியாது.

இங்கே போய் சேர்ந்து விடலாம். பிறகு படித்துவிடலாம் என்ற நம்பிக்கையில்தான் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். எத்தனையோ நிதி நிறுவனங்களிலே மக்கள் இன்றைக்கு ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். கையில் இருந்த பணத்தை இன்றைக்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாதா மாதம் சம்பளத்தை வாங்குகிறவர்கூட இன்றைக்கு ஏமாந்திருக்கிறார்கள், (குறுக்கீடு)

10 நிமிடத்தில் அதிகமான கருத்துக்களைச் சொல்லமுடிய வில்லை. இருந்தாலும் ஒரேயொரு கருத்தை, சட்டக் கல்வியைப் பற்றி மட்டும் சொல்லவிரும்புகிறேன். சட்டக் கல்வியைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்திலுள்ள சட்டக் கல்லூரியில் படித்தவர்கள்தான் இந்த மாநிலத்தில், தமிழ்நாடு பார் கௌன்சிலில் உறுப்பினராகி, அவர்கள் வக்கீல்களாக வரமுடியும் என்ற விதியை அரசாங்கம் முழுமையாக ஏற்று நடத்துவதற்குத் துணையாக நிற்கவேண்டும். அண்டை மாநிலங் களில் கர்நாடகாவில் கல்லூரிக்கே போகவேண்டாம். பி. எல். பட்டம் வருகிறது. இங்கே அவர்கள் எல்லாம் வருவார்களே யானால் நேற்றையதினம் ஒரு வாரப் பத்திரிகையில் பார்த்தேன். போலியாக பல பேர் இன்றைக்கு அந்தத் தொழிலில் நுழைந்திருக் கிறார்கள். அடையாளம் தெரியாது. டாக்டருக்கு பெயர் உண்டு. ஆனால் வக்கீலுக்கு மட்டும் அந்தப் பெயர் கிடையாது. அப்படி போலியாக வரக் கூடியவர்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இனிமேல் தமிழகத்தில் நம்முடைய மாலை நேரக் கல்லூரியில் படித்தவர்கள்கூட வக்கீல்களாக வரமுடியாது, பதிவு செய்யமுடியாது, ஆனால் பெங்களூரில் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலை படித்தவர்கள் மற்ற மாநிலங்களில் படித்துவிட்டு வரக்கூடியவர்கள் இன்றைக்கு சட்டக் கல்லூரியை கேவலமாக ஆக்கக்கூடிய அளவிற்கு கொஞ்சம் தரக் குறைவாக ஆக்கக் கூடிய அளவிற்கு நிலைமைகள் உருவாகியிருக்கிறது. சில பேர் அந்தத் தொழிலையே இன்றைக்கு கேவலப்படுத்தக் கூடிய அளவிற்கு, பத்திரிகைகளே விமர்சிக்கக்கூடிய அளவிற்கு, நேற்றையதினம் ஜூனியர் விகடன் பத்திரிகையிலே பார்த்தேன். அந்த அளவிற்கு இன்றைக்கு நிலைமைகள்போய் கொண்டிருக் கின்றன. அரசாங்கம் அதைப் பார்த்து தமிழ்நாட்டிலுள்ள சிட்டக் கல்லூரியில் இடம் இல்லையென்றால், இன்னொரு கல்லூரியை உருவாக்கலாம். நெல்லையில் நீங்கள் ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்க இருக்கின்றீர்கள். அந்தப் பல்கலைக் கழகத்தோடு சேர்ந்து அந்தப் பகுதியில் ஒரு சட்டக் கல்லூரி யையும் சேர்த்து உருவாக்கித் தாருங்கள்.

தனியார் தமிழ்நாடு மெட்ரிக்குலேஷன் அண்டு சி.பி.எஸ்.சி. ஸ்கூல் டீச்சர்ஸ் அசோசியேஷன். இந்த ஆசிரியர் பெருமக்கள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களி டத்திலே சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நான் பேசும் போதே சொல்லிவிடலாம் என்று கையிலே வைத்துக் கொண்டு இருந்தேன். அந்தச் சங்கத்திற்கு ஒரு அங்கீகாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் அவர்களுக்கு 'செக்யூரிட்டி ஆஃப் சர்வீஸ்' இல்லை. தனியார் பள்ளியில் அவர்கள் வேலை பார்க்கும்போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது அவர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. ஆகவே அந்த முழுமையான பாதுகாப்பைத் தரவேண்டும். நீங்கள் அங்கீகாரம் வழங்கும்போது என். ஓ. சி. வழங்கும்போதே

இப்படிப்பட்ட வகையிலே அந்த கண்டிஷனை நிறைவேற்ற வேண்டுமென்று, கேட்கவேண்டுமென்று வேண்டுகோளை சொல்லியிருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தாருங்கள். அவர்களுக்கு 'பேமிலி பெனிஃபிட் ஸ்கீம்' கிடையாது. அதை நிறைவேற்றுங்கள்.

13-55 மணி

அதுமட்டுமல்ல அவர்களுக்கு பென்ஷன் ஸ்கீம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் வழங்கித் தாருங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு எல்லாம் சட்டவடிவு வேண்டும். தனியார் பள்ளியைக் கட்டுப்படுத்துவதற்கு இன்றைக்கு சட்டத்தைக் கொண்டுவர முடியாது என்பது கிடையாது. அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டாம். அந்த அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நீங்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாம். 'Reasonable Restriction' நீங்கள் ஒரு reasonable கட்டுப் பாட்டைக் கொண்டுவாருங்கள். தனியார் நிறுவனங்களை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து நிறை வேற்றலாம், எல்லோரும் கல்லூரியை, பள்ளியை மைனாரிட்டி என்று அவர்கள் துவங்கமுடியாது, அவர்கள் நாம் வாங்கிவிடலாம் என்று துவக்குகின்றார்கள். அங்கே இருக்கக் கூடிய டீ.ஈ.ஓ., சி.இ.ஓ.க்கள் நடவடிக்கை உடனே எடுத்திருந்தால், இதுபோன்ற கல்லூரிகள், பள்ளிகள் தோன்றி இருக்காது, ஆகவே போலியாக தோன்றியிருக்கிற கல்லூரிகளை மூடுங்கள். போலியாக தோன்றி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிற பள்ளிகளை மூடுங்கள். அரசாங்கமே பள்ளிகளை அதிகமாகத் திறவுங்கள். கட்டிடங்கள் அதிகமாக இருக்கின்றன. சில பெரிய பெரிய கட்டிடங்கள் இன்றைக்கு பயன்படாமல் இருந்துக் கொண்டிருக்கின்றன. அவைகளைப் பள்ளிகளாகத் திறங்கள், அவைகளைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13.56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

16-00 மணி

16.00 மணியளவில், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில், பேரவை மீண்டும் கூடியது.

* திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய உண்மையான உயர்வும், சிறப்பும், கல்வியினுடைய வளர்ச்சியில்தான் இருக் கிறது என்பதை உணர்ந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்

அவர்கள், தமிழ்நாட்டில் கல்வியினுடைய வளர்ச்சிக்கு. கூடுதல் நிதியை ஒதுக்கி, அதற்கு தனிச் சிறப்பு வகுத்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. அதாவது. தமிழகத்தினுடைய மொத்த பட்ஜெட்டில், 22 சதவிகிதம் நிதி ஒதுக்கீடு செய்து, ஏறத்தாழ 1,200 கோடி ரூபாய் அளவிற்கு கல்வி மானியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து, கல்வி வளர்ச்சிக்கு, தமிழக முதல்வர் அவர்களும், தமிழக கல்வி அமைச்சர் அவர்களும் சீரிய உயர்வு காட்டியிருக்கிறார்கள் என்பதை இதன் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். எனவே, இந்த பட்ஜெட்டின் மூலம் தனி சிறப்பாக நிதி ஒதுக்கீடு செய்து கல்வியினுடைய வளர்ச்சிக்கு. தமிழக அரசு செய்திருக்கின்ற, தமிழக முதல்வர் செய்திருக்கின்ற இந்த சிறப்பை, தமிழக மக்கள் எண்ணிப் பார்த்து, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழ் நாட்டினுடைய கல்வித் தந்தை என்று புகழாரம் சூட்டுகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கல்வி மானியத்தினுடைய மற்றொரு சிறப்பாக இன்று ஏறத்தாழ மதியம் ஒரு மணிக்கே முடியவேண்டிய மானியம், மீண்டும் மாலை இங்கே நடக்க வேண்டிய அளவிற்கு, கல்வி மானியம் மீண்டும் தனியாக ஒரு தனிச் சிறப்பைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில், இதற்கு முன்பு, கல்வித் துறையை ஒரு வியாபாரமாக, ஒரு கமர்ஷியலாக, ஒரு பிஸினஸாக நடத்தப்பட்ட நிலை, இன்று அவையெல்லாம் மாற்றப்பட்டு, அன்று எப்படி கல்வியானது ஒரு கமர்ஷியலாக ஒரு பிஸினஸ்ாக ஆக்கப்பட்டு, சுய ஆதிக்கம் பெற்ற கல்வி என்ற பெயரில், சுய நிதி பெற்ற பாலிடெக்னிக் என்ற பெயரில் இருந்த அத்தனை முறைகளையும் இன்று சீர்படுத்தி, செம்மைப் படுத்தி, கல்விக்கு ஒரு தனிச் சிறப்பை, தமிழக அரசும், தமிழக கல்வி அமைச்சர் அவர்களும் இங்கே ஏற்பாடு செய்துள்ளதை நான் மனதார பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். கல்வித் துறையில், ஏறக்குறைய ஆயிரக்கணக்கான ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் ''நமக்கு வேலை கிடைக்குமோ, கிடைக்காதோ'' என்று ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்கள். எனவே ஒரு இருண்ட உலகத்தில் இருந்து கொண்டிருந்தார்கள். எங்களுக்கு வாழ்வு கிடைக்குமா என்று அவர்கள் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த நேரத்தில், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் ஒரு வருடகால ஆட்சியிலே, அவ்வாறு ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாத பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகளுக்கு, ஆசிரியர்களுக்கு, இந்த அரசு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளதை தமிழகத்திலேயுள்ள ஆசிரியர் பெருமக்கள் எல்லாம் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் ஆசிரியர்கள் நியமனம், பெண்களுக்கு 30 சதவிகித ஒதுக்கீடு, வரும் ஆண்டில் 1200 ஆசிரியர்களுடைய நியமனம், இப்படி ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாத

பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு ஆசிரியர்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுத்த அரசு, இந்த அரசு என்ற பெருமையையும் இந்த அரசு பெற்றிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்தும், இன்றைய தினம் மாணவர்களுடைய கல்வியின் தரத்தை எப்படி எடைபோடுகிறார்கள் என்றால், ஒரு மாநிலத்திலே இருந்துவரும் அகில இந்திய அளவில் நடைபெறுகிற ஐ.ஏ.எஸ். பரீட்சை, ஐ.பி.எஸ். பரிட்சை, ஐ. எப்.எஸ். பரீட்சை போன்றவைகளில் எல்லாம் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை சதவீதம் பேர் தேர்ச்சி பெறுகிறார்கள் என்பதை வைத்துத்தான் இந்த மாநிலத்தினுடைய கல்வியினுடைய தரத்தை எடைபோடுகின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு சீரிய முயற்சி எடுத்து, அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்ற இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வதெல்லாம், அகில இந்திய அளவில் தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற அந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., போன்ற பரிட்சைகளில், இங்கே தமிழ் நாட்டிலிருந்து இடம் பெறுகின்றவர்கள் குறுகிய அளவில்தான் இருக்கிறார்கள். எனவேதான், இந்த அரசு ஒரு சீரிய முயற்சி எடுத்து தமிழ்நாட்டிலேயிருந்து அகில இந்தியப் பரிட்சைகளில், இதுபோன்ற பரிட்சைகளில் இங்கே எழுதுபவர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் முதலிடம் பெற்றார்கள் என்ற நிலையை உருவாக்கி அதன்மூலம் தமிழ்நாட்டினுடைய கல்வித் தரம் உயர்ந்திருக்கிறது என்ற நிலையை எடுத்துக்காட்டிட தமிழக அரசு சீரிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

16-05 மணி

இன்றையதினம் தமிழக அரசு, பிற்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்பட்ட, சீர் மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கி இருப்பதை இந்த நல்ல நேரத்தில் பாராட்டுகிறேன். ஆனால், அதே நேரத்தில் இந்த சீர் மரபினர், மிகவும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் முதுநிலைக் கல்வி பொறியியல் கல்வி, மருத்துவக் கல்வி ஆகியவற்றில், பல்லாயிரக் கணக்கிலே, பல இலட்சக் கணக்கிலே படிக்கவில்லை. குறைந்த எண்ணிக்கையில்தான் படிக்கிறார்கள். எனவேதான் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வியை அளித்திருக்கின்ற தமிழக அரசு, இந்த பிற்பட்ட, சீர் மரபினர், மிகவும் பிற்பட்ட அந்த மாணவர்களுக்கு முதுநிலைக் கல்வி, பொறியியல் கல்வி, மருத்துவக்கல்வி வரை இலவசக் கல்வியை நீட்டித்து உதவிட வேண்டும், என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைய தினம் தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரிகளில் பிரேக் சிஸ்டம் என்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்தி, அந்தப் பொறியியல் கல்லூரிகளிலே படித்துக் கொண்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டத்திலே ஈடு பட்டிருக்கிறார்கள். அந்த பிரேக் சிஸ்டம் என்பது, மிகவும் பிற்பட்ட, சீர் மரபினர், பின் தங்கிய மாணவர்கள் எல்லாம் இங்கே பாதிக்கப்படுகின்ற நிலை அதிலே இருக்கின்றது. உயர்ந்த வகுப்பு மாணவர்கள் அந்த பிரேக் சிஸ்டத்தின் மூலம் பாதிக்கப்படுவதே இல்லை. இந்த அரசினுடைய நோக்கமே மிகவும் பிற்பட்ட சமுதாய மாணவர்கள் இங்கே முன்னேற வேண்டும். கல்வி ரீதியாக வளர்ச்சி பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் இருக்கின்ற காரணத்தால், பொறியியல் கல்லூரி களில் இருக்கின்ற பிரேக் சிஸ்டத்தை ரத்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், தொழில் நுட்பக் கல்லூரி களில் மற்றும் பல்வேறு கல்லூரிகளில் இருந்த 'பிரேக் சிஸ்டத்தை' ஏற்கனவே ரத்து செய்து இருக்கிறார்கள் என்பதையும் நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் மாவட்டக் கல்வி அதிகாரி என்று சொல்லப் படுகின்ற டி.இ.ஓ.க்களை நேரடியாக நியமனம் செய்கின்ற ஒரு முறை இருந்து வருகிறது. அந்த முறை நியாயமானது தானா, நல்லதுதானா என்றால் நிச்சயமாக வரவேற்கக்கூடியது அல்ல. காரணம், ஒரு மாவட்டக் கல்வி அதிகாரியாக இருக்கிறவர்களில், நேரடியாக டி.இ.ஓ. பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கும், இங்கே கீழேயிருந்து உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி, பல்வேறு இலாக்காக்களில் பணியாற்றி, பல்வேறு அனுபவங்களைப் பெற்று, வயது முதிர்ந்த நிலையில் அவர் டி.இ.ஓ. வாக வருவாரேயானால். அவருக்கும் இடைபட்ட நிலையை எண்ணிப்பார்த்தால் நிச்சயமாக நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுகின்ற டி.இ.ஓ.க்களினால், அனுபவம் இல்லாதவர்களால் இங்கே ஒரு தலைசிறந்த, உயர்ந்த இடத்தை உருவாக்க முடியாது என்ற காரணத்தால் மாவட்டக் கல்வி அதிகாரிகளை, தலைமையாசிரியர் பதவியிலிருந்து நீண்ட காலம் உழைத்த உழைப்பிலிருந்து அனுபவங்கள் பெற்றவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள் கிறேன்.

இந்த ஆண்டு 'உலக எழுத்தறிவு ஆண்டு' என்பதால் இங்கே தமிழகத்திலே, பள்ளியிலே பயிலாத வயது முதிர்ந்த பெரியவர்கள் பல்லாயிரக்கணக்கிலே இருக்கின்ற காரணத்தால் அத்தனை பேருக்கும்—தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை பேருக்கும்— கல்வி அறிவு புகட்டுகின்ற ஒரு நோக்கத்தோடு 'முறைசாராக் கல்வி'—'ஃபார்மல் எஜுகேஷன்'—ஐ மேம்படுத்த வேண்டும் என்று நான் தமிழக அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதன் மூலம் தான் தமிழகத்திலே இருக்கின்ற மக்களில் கல்வி அறிவு பெற்றவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த முடியும். எனவே, அந்த நிலையை உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, இங்கே கல்வித் துறையில் சர்வீஸ் ரூல்ஸ் என்று சொல்லப்படுகின்ற பணி விதிகள், சீனியாரிட்டி லிஸ்ட் என்று சொல்லப்படுகின்ற பணிப் பட்டியல் இவைகள் எல்லாம் இங்கே முறைப்படி இல்லாத காரணத்தால், இன்றைக்கு கல்வித் துறையினைப் பொறுத்த வரையில் பதவி உயர்வு பெற வேண்டுமென்றால், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தை அணுகவேண்டி இருக்கிறது. இப்படி உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றங்களை அணுகித்தான் எங்களுக்கு உயர் பதவிகளை அடைய முடியும் என்று கூறுகிற அவல நிலை இருக்கின்றது என்று எல்லாம் சொல்லப்படுகிற காரணத்தால், சர்வீஸ் ரூல்ஸ் என்று சொல்லப்படுகின்ற பணி விதிகள், சீனியாரிட்டி என்று சொல்லப்படுகின்ற பணிப் பட்டியல் முறையை வரைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஏ பிரிவு, பி பிரிவு என்றநிலை எல்லாம் அங்கே முரண்பட்ட நிலையை பரிசீலனை செய்து 2 பிரிவுகளுக்கும் சம வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(16.10 மணி.)

இந்த பிரிவு முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் ஏராளமான பேர் 4 பதவி உயர்வு நிலைகளை எல்லாம் இழந்து இருக்கிறார்கள். இதிலும் குறிப்பாக இராமநாதபுரம் தமிழ் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டமன்றத்திலே ஏறக்குறைய என்னோடு சேர்த்து 11 சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தமான் சென்று இருந்தோம். அந்தமானில் உள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள் எல்லாம் 11 சட்டமன்ற உறுப்பினர்கள் வாயிலாக தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் ஒரு சில கோரிக்கைகளை எங்கள் மூலம் வைத்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் அந்தமான் வாழ் தமிழர்களுக்கு மருத்துவ கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் முறையாக ஒரு இடம் தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆகவே அதை உயர்த்தி எங்களுக்கு 2 அல்லது அதற்கு மேற்பட்ட 3 இடங்களையாவது மருத்துவ கல்லூரியிலும், பொறியியல் கல்லூரிகளிலும் கொடுக்க

வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு பரிவோடு பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தீவில் தமிழர்களுக்கு சொல்லிக்கொடுக்கின்ற அந்த பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை, எனவே பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தினை வெளியிட்டார்கள். பிறந்த குழந்தைகளை பிறந்த உடன் சிசுக்களை கொல்லுகின்ற முறை சில பகுதிகளில் இருக்கிறது. எனவே அதை தடை செய்ய சட்டம் கொண்டுவர இருக்கிறேன் என்று சொன்னார்கள். நமது தமிழக முதலமைச்சர் அவர்களையும், நமது கல்வி அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்வது எல்லாம் அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முதலில் வறுமை, ஏழ்மை தான் காரணம் ஆகும். அங்கே அறியாமை ஒரு காரணமாக இருக்கின்ற காரணத்தால் இங்கே சட்டம் போட்டு அவற்றை திருத்துவதை விட சில திட்டங்களைப் போட்டு இந்த அரசு அவற்றை திருத்த வேண்டும். முதற்கண் கல்வி ரீதியாக பின் தங்கி இருக்கின்ற என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியில் அங்கே பல்வேறு இடங்களில் ஆரம்பப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும், நடுநிலைப் பள்ளிகளையும் இப்படி பல்வேறு பள்ளிகளைக் கேட்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; உங்கள் தொகுதியைப் பற்றி நிறைய பேசியிருக்கிறீர்கள்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற பள்ளிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். சிசுவை கொல்லுகின்ற ஒரு கொடிய பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று அரசாங்கம் முயற்சி எடுக்கின்ற நேரத்தில் அதை வேண்டாம் என்று ஒரு தொனியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார். ஒருவேளை அவருடையத் தொகுதியிலே அந்தப் பழக்கம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில பத்திரிக்கைகளின் வாயிலாக அது எனது தொகுதியிலே நடைபெற்றதாக நானே அறிகிறேன். எனவே தான் அது போன்ற நிலை வருவதற்கு ஏழ்மையும், அறியாமையும் காரணமாக இருப்பதால் சட்டம் போட்டு திருத்துவதை விட சில முன்னேற்றமாக திட்டங்கள் போட்டு இந்த அரசு திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. டி. சி. விஜயேந்திரையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற கல்வி மானியத்தின் மீது என்னுடைய தளி தொகுதியின் நிலவரங்கள் சிலவற்றை மட்டுமே குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய தளி தொகுதியிலே அனேகமாக பள்ளிகள் மைனாரட்டி மொழியிலே தான் இயங்கிக் கொண்டு வருகிறது. இந்த பள்ளிகளில் எல்லாம் தமிழ் மொழியை முதல் வகுப்பில் துவக்கி படிப்படியாக மாற்றிக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என் தொகுதியில் உள்ள பள்ளிக்கூடங்கள் காடு அடர்ந்த மலைப் பகுதிகளில் இருப்பதாலும், அன்றாடத் தேவைக்கு வசதி இல்லாத இடமாக இருப்பதாலும் வெளி மாவட்டங்களில் இருந்து பாடம் போதிக்கும் ஆசிரியர்கள் அங்கே போய் சேருவதும் இல்லை, அதே போல் சில பள்ளிகள் மூடி கிடக்கின்றன. அதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நானே இதை நேரில் சென்று பார்வையிட்டு இருக்கிறேன். ஆகவே காலியாக உள்ள இடங்களை நிரப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தேன்கனிக் கோட்டை மற்றும் ஒசூர் வட்டங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இதுவரை மைனாரட்டி மொழிகளான தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் தான் பயின்று வருகிறார்கள். அதில் அவர்கள் பாஸ் செய்து சான்றிதழ் பெறுகிறார்கள்.

(16.15 மணி.)

இப்படியிருக்க, அவர்கள் அரசாங்கத்தின் வேலைவாய்ப்புக்கு அப்ளிகேஷன் போடும்போது சில டிபார்ட்மெண்டுகளில் தமிழில் மட்டும் கடைசிவரை பள்ளியில் படித்து இருந்தால் மட்டுமே விண்ணப்பங்களை போடவேண்டுமென அறிவிக்கப்படுகிறது. மைனாரிட்டி மொழியில் படித்தவர்களுக்கும், தமிழ் பேசவும் எழுதவும் தெரிந்து இருந்தாலும் தேர்வுக்கு அனுமதிக்கப் படுவதில்லை. ஆகவே, தகுதியுள்ள இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, தமிழ்பாடமே இல்லாத இந்த இரண்டு வட்டங்களில் உள்ள பள்ளிகளில் தமிழில் வகுப்பைத் துவங்கும்படியும், மேலும் அவைகளை படிப்படியாக உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இதனால் தற்போது படித்துவரும் வேலையில்லா மக்களின் துயரத்தைப் போக்கமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களில் படித்துவிட்டு இங்கே வந்து எம்ப்ளாய்மெண்ட்டில் பதிவு செய்து அவர்கள் இங்கே படித்ததாக தெரிவித்து வேலை வாய்ப்புகளை அதிகமாகப் பெறுகிறார்கள். இதனால் இங்கே தெலுங்கு மொழியில் படித்த மாணவர்கள் வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள்.

இதைத் தவிர்க்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பு கொடுத்தமைக்கு மாண்புமிகு துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து. விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. குமரி அனந்தன்; மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் தமிழ்நாடு அரசினுடைய சார்பிலே கொடுத்திருக்கின்ற கல்வி பற்றிய திட்டத்தில் சில கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன்.

பெருந்தலைவர் காமராஜர், அவர்கள்' கல்விக் கூடங்கள் இருக்கின்ற இடத்திற்கு மக்களெல்லாம் போங்கள் என்று சொல்வதற்கு பதிலாக மக்கள் இருக்கின்ற இடங்களுக்கெல்லாம் கல்விக் கூடங்கள் போகட்டும் என்று சொல்லுகின்ற ஒரு புரட்சியினைத் தந்தார்கள். இந்தத் திட்டத்திலே கூட இப்போது 500 மக்கள் இருக்கின்ற ஊரிலே ஓராசிரியர் பள்ளியாவது தொடங்கவேண்டுமென்று சொல்லி இருப்பதனை பெருந்தலைவர் காமராஜருடைய தொண்டன் என்ற வகையிலே நான் பாராட்டாமல் இருக்க முடியாது. நான் பாராட்டுகிறேன். சின்னஞ்சிறிய ஊர்களிலெல்லாம்கூட இந்தக் கல்வி வேண்டுமென்பதுதான் நம்முடைய அக்கறையாக இருக்கிறது.

ஔவைப் பாட்டி ''கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்'' என்றாள். ஒரு ஊரிலே கோயில் இல்லையென்றால் அந்த ஊரை விட்டுவிட்டு போய் விடு என்றாள். பாரதியோ, ''தேடு கல்வி இல்லாததொரு ஊரை தீக்கு இரையாக படுத்துதல்'' என்றான். கல்வியைக் கற்றுக் கொள்ள முடியாத ஒரு கிராமம் இருக்குமானால் அதை விட்டுவிட்டுப் போகாதே, சுட்டுவிட்டுப் போ என்றான், எனவே ஔவை அதை விட்டுவிட்டுப் போ என்று சொல்ல, இவர் அதை சுட்டுவிட்டே போ என்று சொல்ல, ஆனால் பள்ளிக்கூடம் வந்துவிட்டது என்று சொன்னால், பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்வோம்'' என்று அவன் பாடிவிட்ட காரணத்தினாலே, இரண்டுக்கும் இணைப்புப் பாலமாகவும் ஒன்று வந்துவிட்டது. அப்படிப்பட்ட ஒரு கல்விக் கூடத்தை சின்னஞ்சிறிய ஊர்களுக்குக்கூட கொண்டு வருவோம் என்று சொன்னதைப் பாராட்டுகிறேன். அந்தப் பாராட்டோடு இங்கே சில செய்திகளைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நமது மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள் நாடகத் தமிழுக்கு செய்திருக்கின்ற அரிய ஒரு தொண்டு யாராலும் மறக்க முடியாத ஒன்று, அப்படிப்பட்ட ஒரு பெருமகனார் 1855–லே பிறந்தவர்; இவ்வளவு நாளைக்கு பிறகு அவருடைய பெயரிலே ஒரு பல்கலைக்கழகம் வருகிறது என்று சொன்னால், நான் அண்ணாமலையிலே படித்துக்கொண்டிருந்த நேரத்திலே கூட அவருடைய நாடகத் தமிழ் எனக்கு ஒரு பாடமாக இருந்தது. 42ஆவது வயதிலேயே மறைந்துவிட்ட ஒரு மாபெரும் மனிதர் அவர். கேரளத்தில் இருக்கின்ற ஆலப்புழையிலே பிறந்தாலும்,

திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலே பாடம் நடத்தியவராக, பிறகு திருவனந்தபுரம் கல்லூரியிலே பேராசிரியராக இருந்த மனோன் மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள் நல்ல நாடகத்தை எழுதினார் என்பதோடு நாகப்பட்டினத்தில் இருக்கின்ற நாராயணசாமி பிள்ளையினுடைய மாணவராக இருந்தார்.

இதனைச் சொல்வதற்கு காரணம், சமஸ்கிருதம், தமிழ் ஆங்கிலம் இந்த மூன்றிலும் புலமை பெற்றிருந்த மறைமலையடி களும் அதே ஆசிரியரிடம் மாணவராக இருந்தவர். எனவே, மறைமலையடிகளாரும் சுந்தரம்பிள்ளை அவர்களும் மாணவர் களாக இருந்தது நாராயணசாமி பிள்ளை என்று சொல்கின்ற நாகப்பட்டினத்தைச் சார்ந்தவரை, அவர் படிக்கின்றபோது தமிழ் தாய்க்கு வணக்கம் சொல்கின்றார்;

16—20 மணி

மற்றவர்கள் சொன்னதைவிட வித்தியாசமாக தன்னை நிலை குலைய வைக்கின்ற, சாகாமல் இருக்கச் செய்கின்ற தமிழ்தாய்க்கு வணக்கத்தைச் சொல்கின்றதைப் போலே, தமிழுக்குத் தொண்டு செய்தவன் சாவதில்லை என்று பாரதிதாசன் சொன்னதைப் போலே, அவர் 42 வயதிலே செத்துவிட்டாலும், இந்த நானிலத் திலே சாவதில்லையப்பா என்று சொல்கிற அளவுக்கு, பல்கலைக் கழகத்திற்கு அவரது பெயரை வைத்ததற்காக நான் முதலிலேயே அவர்களைப் பாராட்டுகின்றேன்.

இந்த உலகத்தை ஒருதாயாகவும்,பரத கண்டம் என்று சொல்லப் படுகின்ற இந்த இந்தியத் திருநாட்டை அவருடைய முகமாகவும். தெக்கணம் என்று சொல்கின்ற தென்னிந்தியாவை அவளுடைய நெற்றியாகவும், திராவிட நாடு அதிலுள்ள தமிழ்நாட்டை அவளது பொட்டாகவும்—திலகமாகவும், தமிழ் மொழியை அதிலிருந்து வீசுகின்ற மணமாகவும் போற்றிப் புகழ்ந்து தமிழ்த் தாயை ஏற்றி வைத்த ஒரு பெருமைக்குரியவர் தான் மனோன் மணீயம் சுந்தரம் பிள்ளையவர்கள். அவருடைய பெயரால் பல்கலைக்கழகம் வைத்ததை நான் பாராட்டுகின்றேன்.

''தமிழ் வாழ்க, வாழ்க'' என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நாம்,—அவன் சொன்னாலே—சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துவமே.... என்று—மனோன் மணீயம் சுந்தரம் பிள்ளையவர்கள் சொல்கின்றபோது, ''தமிழ் மொழியினுடைய சீரிளமை திறம் வியந்து செயல் மறந்து'' என்று சொல்கிறார். தன்னை மறந்து என்று சொல்வதற்குப் பதிலாக நாம் இப்போது தமிழுக்கு சில வேளைகளில் செய்ய வேண்டிய செயலை மறந்து நாம் இருக்கிறோமோ என்ற குறிப்பு கூட இருக்கிறதோ என்ற எண்ணம் கூட நமக்கு வருகிறது. ஏனென்றால், தமிழ் வாழ்க என்று சொல்கின்ற அதே வாயிலே, தமிழ் வளர்க என்ற முறையில் இருக்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

இன்று எழுத்துச் சீர்த்திருத்தம் என்று சொல்கிறோம். இந்த எழுத்துச் சீர்த்திருத்தத்திற்காக குழுக்களைப் போடுகின்றோம். அந்தக் குழுக்கள் மூலம் கிடைக்கின்ற நல்ல கருத்துக்களை எல்லாம் எடுத்து, ஆண்டு, ஒரு கணிப்பொறி மொழி—கம்ப்யூட்டர் மொழி என்று சொல்கின்ற அளவுக்கு, உலகத்தின் தனிச் சிறப்புடைய இந்த மொழி, வளரவேண்டுமென்று ஆர்வம் நமக்கிருக்கின்ற காரணத்தால், தமிழ் வளர்க என்று சொல்கிற திட்டத்தோடு நமது செயல்கள் அமையவேண்டுமென்று நான் சொல்கின்றேன்.

ஏனென்றால் அண்மையில் நடைபெற்ற உலகதமிழ் மாநாட்டுக்கு—இன்றைக்கு தமிழக அரசை தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடன் நானும் செல்கின்ற வாய்ப்பை பெற்றிருந்தேன். அவர் சென்ற இடத்திற்கு நானும் சென்றேன். முதல் நாள் விழாவில் அவர்கள் கலந்து கொண்டார்கள். இறுதி நாள் விழாவில் நான் கலந்து கொண்டேன். அங்கே ஒருவர் கட்டுரை படிக்கிற நேரத்தில் சொல்கிறார்.—

''ஹாரப்பாவில் இருக்கிற சொல்லும் எழுத்தும் இன்றைக்குக் கூட இந்தோனிஷியாவில் சில கிராமங்களில் இருக்கிறது'' என்று.

ஹாராப்பாவில் இருப்பது திராவிட மொழி என்றும், அந்தத் திராவிட மொழி என்பது பழம் தமிழ் மொழிதான் என்றும், உலகத்திலேயே நிர்ணயிக்கப்பட்டு விட்ட காரணத்தாலே, நிச்சயிக்கப்பட்டு விட்ட காரணத்தாலே, அந்த ஹாரப்பாவில் இருக்கிற எண்ணும் எழுத்தும் இன்றைக்கும் இந்தோனிஷியாவில் இருக்கிறது என்று சொல்லப்படுகின்ற நேரத்தில் தமிழ்நாடு அரசு அதற்கு ஒரு பேராசிரியரை அங்கே அனுப்பி அதனைப் பற்றி ஆய்வு செய்யத் தேவை என்பதற்காக நான் இந்தப் பேராசிரியர் அவர்களிடம் சொல்லி வைத்தேன்.

இன்றைக்கும் தாய்லாந்து போகிற நேரத்திலே, அங்கே மன்னர்கள் முடிசூடிக் கொள்கிற நேரத்தில், தேவாரம், திருவாசகம், ஆண்டாள் திருவாய்மொழி இவைகளையெல்லாம் பாடுவதைப் பார்க்கலாம். தேவாரம், திருவாசகத்தைப் பாடுகின்ற பழக்கத்தை அவர்கள் அங்கே வைத்திருக்கின்றார்கள். ஆண்டாளுடைய சூடிக்கொடுத்த சுடர்க்கொடிப் பாடல்களையெல்லாம் அவர்கள் பாடி மகிழ்கின்றார்கள், முடிசூடிக் கொள்கிற நேரத்திலே. அப்படிப்பட்ட பழக்கம் எல்லாம் உலக நாடுகளிலே இருக்கிற காரணத்தாலே தமிழ்நாட்டின் பெருமை எல்லா இடத்திலும் இருப்பதை நாம் எல்லாம் தெரிந்து கொண்டு, இன்னும் கொஞ்சம் நெஞ்சை நிமிர்த்தி நடைபோடுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே பேராசிரியருக்கு முன்னாலே இவைகளையெல்லாம் நான் இங்கே வைக்கிறேன்.

நேரம் இல்லாத காரணத்தாலே நான் அதிகமான செய்திகளைச் சொல்ல மாட்டேன். ஏனென்றால் இது எனக்கு எதிர்பாராமல் கிடைத்த ஒரு வாய்ப்பு. காலையிலேயே எல்லாம் நிறைவு பெற்றிருக்குமானால் பேராசிரியரின் பேச்சையே நான் கேட்டுவிட்டுப் போகலாம் என்றுதான் இருந்தோம். நேரமான காரணத்தாலே மாலையிலும் உண்டு என்று சொன்ன காரணத்தாலே, முற்பகல் கொஞ்சம் பொறுமையாக இருந்ததால் பிற்பகலில் கிடைத்த இந்த வாய்ப்பில், அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள மாட்டேன்.

பலர் மனுக்களைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள், ஏதோ நம்பிக்கையிலே, கல்வி அமைச்சருக்கு ஏற்கெனவே அனுப்பி விட்டோம், அவர்கள் கண்களால் பார்த்திருப்பார்கள், காதாலும் கொஞ்சம் கேட்டால் நன்மை கிடைக்கும் என்ற நல்ல எண்ணத்திலே சில மனுக்களை என்னிடத்திலே கொடுக்கிறார்கள். பொதுவாக இருப்பதில் ஒரு 50 விழுக்காட்டை எடுத்து சொல்ல விரும்புகிறேன். எங்கெங்கே பள்ளிக் கூடங்களின் நிலங்கள் ஆக்கிரமிப்புகளுக்கு ஆளாகியிருக்கின்றனவோ, அங்கங்கே ஆக்கிரமிப்பு செய்தவர்கள் எவ்வளவு பெரிய ஆட்களாக இருந்தாலும் அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். குறிப்பாக ஒன்றிரண்டு என்று சொல்லாமல், பொதுவாகவே சொல்லிவிடுகிறேன்.

1978-ம் ஆண்டு முதல் தொழில் கல்விக்குப் பகுதி நேர ஆசிரியர்கள் 4,328 பேர் நியமிக்கப்பட்டார்கள். அவர்களிலே ஒரு காலத்திலே மட்டும் வேலை செய்பவர்கள், இரண்டு நேரத்தில் மட்டும் வேலை செய்பவர்கள் என்று இரண்டு பிரிவினர் இருக்கிறார்கள். பகுதி நேரத்திலே கூட ஒருவர் அதிக வேலை செய்கிறார் இன்னொருவர் இருமடங்கு அதிகவேலை செய்கிறார், ஒருவருக்கு 400 ரூபாய் ஒருவருக்கு 800 ரூபாய் சம்பளம். 1978-லிருந்தே தொடர்ந்து இந்த நிலைமைதானா இருக்க வேண்டுமென்று . . . (குறுக்கீடு)

16.25 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக சிரமம் எடுத்துக்கொள்ளத் தேவை இல்லாத அளவுக்கு ஒரு விளக்கத்தை நான் சொன்னால் அவரும் மன நிறைவு பெறுவார் என்று நம்புகிறேன்.

இந்த 4,300 பேரில் 1,800 பேர் இருவேளை பகுதி நேரப்பாட ஆசிரியர்கள். ''டபுள் டைம் பார்ட் டைம் டீச்சர்ஸ்'' அந்த இருவேளை பகுதி நேர ஆசிரியர்கள் ஒரு வாரத்திற்கு 12,13 மணி நேரம் பணியாற்றுவதாக ஒரு கணக்கு இருக்கிறது. அவர்கள் எல்லாம் பெரும்பாலும் பட்டதாரிகள். தகுதி உடையவர்கள். வாரத்திற்கு 6 மணி நேரம் மட்டும் வெளியில் வேறு பணி ஆற்றுகிற நிலையில் இடையிடையே பள்ளியில் பணியாற்றுகிற

1990 ஏப்ரல் 3] [டாக்டர் க. அன்பழகன்]

ஒரு நிலையும் இருக்கிறது. அவர்களை எல்லாம் நிரந்தரப்படுத்த முடியுமா என்று ஆலோசனை செய்தபோது இருவேளை பகுதி நேர ஆசிரியர்கள் தகுதி உள்ளவர்களாக இருப்பார்களேயானால் அவர்களை ஆசிரியர்களாக நியமிப்பது என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, இந்த ஆண்டு அவர்களில் 800 பேரை, அதாவது அவர்களில் சீனியர்களாக இருப்பவர்களை பள்ளிக் கூடத்திற்கு ஒருவராக, ஒரே பள்ளிக்கூடத்தில் பணியில் சேர்ந்தவர் களை நியமிக்காமல், ஒரு பள்ளிக் கூடத்திற்கு ஒருவராக அதாவது சீனியராக இருப்பவர்களை, இருவேளை ஆசிரியர்களாகப் பணி யாற்றுகிற 800 பேரை நிரந்தர ஆசிரியர்களாக நியமிப்பது என்றும், மீதம் உள்ளவர்களில் இருவேளை பாடம் நடத்தக்கூடிய தகுதி உள்ளவர்களை, அடுத்த ஆண்டில்—அவர்களையும்—நிரந்தர மாக்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் 8, 9 ஆண்டுக்காலமாக இருக்கிற பழைய கடனுக்குப் புதிய வரவு வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதற்கும் கேட்டதற்கு நன்மை இருக்கிறது என்ப தால் நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளி நிர்வாகத்தை எல்லாம் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்படும் மருத்துவ, மகப்பேறு விடுப்புகளுக்கு எல்லாம் பதில் ஆள் நியமனம் செய்வதில் தாமதம் இருக்கிறது என்றும், சில இடங்களில் அதைச் செய்வதில்லை என்றும் ஒரு குறை இருக்கிறது. பாரதியார், பாரதிதாசன் போன்ற புதிய பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள்அல்லாத 'நான் டீச்சிங் ஸ்டாஃப்' என்கிற பணியாளர்கள் பல்கலைக் கழக ஊதியத்தைக் கேட் கிறார்கள். 'நான் டீச்சிங் ஸ்டாஃப்' தங்களுக்கு அந்த ஊதியம் இல்லை என்று மனு கொடுத்திருக்கிறார்கள். தனியார் பள்ளிகளிலே வேலை பார்க்கிற ஆசிரியர்கள் மிகக் கடுமையான அளவுக்கு உழைத்து 90 சதவீதம் என்றெல்லாம் அவர்கள் ரிசல்ட் காட்டிய பிறகும் கூட அவர்களுக்குப் பணிப்பாதுகாப்பு இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அவர்களுக்கு பயண ஈட்டுப்படி இல்லை என்றும் ஒரு குறை இருக்கிறது. அவைகளை எல்லாம் நான் இங்கே பேராசிரியர் முன்னாலே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

வடாற்காடு மாவட்டம் ஆதிதிராவிடர் நலப்பள்ளி ஆசிரியர்கள் இடைநிலை பணியிடத்தில் நியமிக்கப்பட்டும் அவர்களில் 177 பேர் மட்டும் விடப்பட்டிருக்கிறார்கள்; திருச்சியிலே விடப் பட்டவர்கள் இப்போது சேர்க்கப்பட்டு விட்டார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் 15 ஆண்டுக்காலமாக அப்படி அவர்கள் இருந்தபோதிலும் கூட அவர்கள் பழைய பாக்கியாக இருந்தாலும் கூட 170 பேரையும் அவர்கள் மனதில் கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து நல்லாசிரியர் விருது பெற்றவர்கள் ஒரு குறையை வைக்கிறார்கள். நல்லாசிரியர் விருது பெற்றவர்களுக்குப் பிற மாநிலங்களிலே சில சலுகைகளை அளிக்கிறார்கள். கேரள மாநிலம் இரண்டு வருட பணி நீட்டிப்பு கொடுக்கிறது. பஞ்சாப் மாநிலம் பத்தாயிரம் ரூபாய் பரிசு கொடுக்கிறது. ஹரியானாவிலே இரண்டு வருட ஊதியம் கொடுக்கப்படுகிறது. பீகார் மாநிலத்திலே இரண்டு வருட பணி நீட்டிப்பு கொடுக்கப்படுகிறது. எனவேஅவைகளை எல்லாம் உங்களுடைய கருத்திலே வைக்க வேண்டும்என்று நான் கேட்டுக்காள்கிறேன்.

இசைக்கல்லூரி மாணவர்கள் ஒரு போராட்டம் நடத்துகிறார்கள். அவர்கள் கேட்பது என்னவென்றால் நாங்கள் படித்து பட்டம் பெற்றவுடனே எங்களுக்கு ஒரு சர்ட்டிஃபிகேட் என்ற நிலையில் கொடுக்காமல் யுனிவர்சிட்டி டிப்ளமோ ஒன்று கொடுத்து விடுங்கள்: 'டிப்ளமோ இன் மியுசிக்' என்று தந்துவிடுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்பது மட்டுமல்ல. கல்லூரிகளிலே எல்லாம் பெரிய பெரிய, பேராசிரியர்களைக் கொண்டு வந்து பேச வைக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதிலேயும் அதிக சிரமம் தேவையில்லை. அது இசைப்பயிற்சி மையமே தவிர கல்லூரி அல்ல. இசைப் பயிற்சிக்கு வருகிறவர்கள் 7—வது, 8—வது படித்தவர்கள், அதாவது எஸ்.எஸ்.எல்.சி., ப்ளஸ் டூ என்று படிக்காமல் கூடப் பரம்பரையாக இசைத் துறையிலே ஆர்வம் உள்ளவர்கள் அங்கே சேரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதனைக் கல்லூரியாக உயர்த்திவிட்டால் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த படிக்காத பரம்பரையினர் தங்களுடைய திறமையை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்காது. எனவே அது ஒரு இசைப்பயிற்சி மையமாக நடைபெறுகிற காரணத்தால் பல்கலைக் கழக முறையோடு ஒத்து அங்கே செயல்படுவது அதை முறையாக நடத்துகின்ற நோக்கத்திற்கு ஏற்றதாக இருக்காது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய குறையை உங்களிடம் எடுத்துச் சொன்னேன். அப்படி இருக்குமேயானால் அதை நீங்கள் ஆயுங்கள். டிப்ளமோ என்று சொல்கிற போது ஒரு பெருமை இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். இரண்டாவதாக அவர்கள் கேட்கிற ஒருகோரிக்கை. இப்போது பச்சையப்பன் கல்லூரி என்று சொன்னால் அங்கே படித்துக் கொண்டிருக்கிற மாணவர்கள், பேராசிரியர் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து பேசச் சொல்வதுபோலே அல்லது வேறு ஒரு பெருமகனாரை அழைத்துக்கொண்டு வந்து பேசச் சொல்வது போலே, பெரிய இசைக் கலைஞர்களை எங்களிடம் வந்து பாடச் சொல்லுங்கள்; பெரிய ஓவியக் கலைஞர்கள் வந்தால் அவர்களை எங்களிடத்திலே வந்து பேசச் சொல்லுங்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள்.

1990 ஏப்ரல் 3] [திரு. குமரி அனந்தன்]

அதைப்போலே அரசு விழாக்களிலே எங்கள் திறமையை நாங்கள் காட்டுகிற வகையில் ஒரு 15 நிமிட நேரம் எங்கள் நிகழ்ச்சியை வையுங்கள்; எங்களுக்கு அப்படி ஒரு ஊக்கம் கொடுங்கள் என்றெல்லாம் கேட்கிறார்கள். இவைகளை எல்லாம் நீங்கள் மனதில் வைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து வாழ்க்கைக்கான தொழிற்கல்வி என்று சொல்கிற ஒரு அமைப்பை வைத்து உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் 8, 9, 10—ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிற மாணவ மாணவிகளுக்கு தச்சு வேலை, புக் பைண்டிங், கம்போஸிங் எம்ப்ராய்டரி, ரேடியோ மெக்கானிக், சைக்கிள் ரிப்பேர் போன்றவைகளை எல்லாம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வந்த 1,250 பேர்களை 31—3—90–ல் இருந்து வேலை நீக்கம் செய்வதாக அரசு உத்தரவு சென்றிருக்கிறதாம். கிராமப் புறத்திலே இருக்கின்ற மக்களுக்கு இந்தத் தொழில் கல்வியை அவர்கள் கற்றுக்கொடுக்கிறார்கள்.

16.30 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் அரசு முழு அளவுக்கு விவரங்களைச் சேகரித்துத்தான் கைவிட்டது. ஒன்று பகுதி நேர ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் 125, 150 என்று இருக்கும். ரூ. 125 இருக்கும் என்றுதான் கருதுகிறேன். அவர்களின் பணி மூலமாக எந்த ஒரு தொழிலிலேயும் தகுந்த தேர்ச்சியை மாணவர் கள் பெறமுடியவில்லை. பிளஸ் 2 என்கின்ற 11—வது 12—வது வகுப்பில், அதற்காகவென்றே தொழில் பயிற்சிக் கான வகுப்புகள் நடத்தப்பட்டு அதற்காகவும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, அந்த பயிற்சி முழு நிறைவு அளிக்காத காரணத் தினால் ஏறத்தாழ 75 ஆயிரம், 80 ஆயிரம் பேர்கள் பயிற்சி பெற்றாலும் அதற்குப் பின்னரும் அவர்களுக்குத் தனியாக ஒரு பயிற்சி ஏற்படுத்த வேண்டியுள்ளது. ஏறத்தாழ 1,300 பேர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. ஏனென்றால் தொழில் அடிப்படையிலே அவர்களுடைய மனம் நம்பிக்கை பெறவில்லை. பெறுகின்ற பயிற்சி அந்த நிறைவை அளிக்கவில்லை. ஒரு தொழிலை தாங்களே செய்துவிடக்கூடிய நம்பிக்கையோடு ஈடுபடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்தப் பயிற்சி, 2 ஆண்டு பயிற்சி நடைபெற்றும் நிறைவு அளிக்கவில்லை. அதைவிடக் குறைவானதாக, ஒப்புக்குச் செய்யப்படுகின்ற ஒரு காரியமாக இருக்கின்ற காரணத்தினாலே 8—வது வரை யிலே, 9-வது வரையிலே படித்தவர்கள்கூட ஐ.டி.ஐ. போன்ற பள்ளிக்கூடங்களில் தொழில் பயிற்சி பெறுவது, இதைவிடச் சிறப்பாக அமையும் முறையில் அது தொழிலாளர் நல இலாகா வாலே நடத்தப்படுகிறது. பயன் இன்றி, தெளிவில்லாமல் வீணாக ஒரு பயிற்சி இடையிலே புகுத்தப்பட்டுச் செயல் படுத்துவதிலே குறை இருக்கின்ற காரணத்தினால் இப்போது கைவிடப்படவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் துறையைச் சார்ந்த அறிஞர்கள் தெரிவிக்கிறார்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அதிலே மனதிலே இரக்கத்தோடு நினைக்கவேண்டியது என்னவென்றால் 9 ஆயிரம் பெண்களாம் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்றவர்கள், அநாதைகளாக இருக்கின்றவர்களைத்தான் அப்படித் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஒரு 150 ரூபாய்தான் சம்பளம். ஆகவே எங்களுடைய வாழ்வுக்கு வேறு வழியாவது இருக்கிறதா என்று அவர்கள் கேட்கிறார்கள். என்னவென்றால் கிராமப்புறத்திலே இருக்கின்ற எல்லோருக்கும் ஐ.டி.ஐ-யிலே இடம் கிடைக்கவில்லை என்று சொன்னால், இந்த பயிற்சியை, ஓலை பின்னுகின்றது போன்ற பயிற்சிகளையாவது அவர்கள் பெறுவதற்கு வழியிருக்கிறதா என்பதை மீண்டும் ஆலோசனை செய்து பார்க்கவேண்டும் என்று பரிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, விளையாட்டுத் திடல்களிலே, பள்ளிக்கூடங்களிலே, கல்லூரிகளிலே இருக்கின்ற மார்க்கர்கள், அடையாளம் போடுகின்றவர்கள் அந்த மார்க்கர்கள் தனியார் நிறுவனங்களிலே வேலை செய்து அரசாங்க வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் வரவில்லை என்று சொன்னால் 60 ரூபாய் தொடங்கி 200 ரூபாய் வரை அவருக்கு சம்பளமாம். ஒரு தோட்டக்காரருக்கு, ஒரு காவலருக்கு, ஒரு ஏவலருக்கு கிடைக்கின்ற ஊதியம்கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே இதையும் நீங்கள் அமைச்சர் அவர்களிடம் சொல்லி கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, நான் என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்வதாக இருந்தால் நேரம் ஆகிவிடும். ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்கிறேன். நாங்கள் தொகுதிக்குப் போகின்ற நேரத்திலே என்னென்ன சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை நான் அடிக்கடி அமைச்சர் அவர்களிடம் சொல்கிறேன். அவர்கள் மொத்த ரூபாயிலே இவ்வளவு ரூபாய் அங்கே போகிறது என்ற கணக்கு சொல்கிறபோது மறுக்கமுடியவில்லை. இன்று காலையிலே எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் பேசுகிறபோது காங்கிரஸ் கட்சி உறுப்பினர் என்ற காரணத்திற்காக நிராகரிக்கிறீர்களா என்று கேட்டபோது எல்லா உறுப்பினர்களையுமே நிராகரிக்கிறேன் என்று அதில் சமதர்மத்தை வேறு சொல்லிவிட்டார்கள். எங்களுக்கு இருக்கின்ற சிரமம் என்னவென்று சொன்னால், அவர்கள் சொல்வதுபோல வேறு வழி இல்லாமல் நிராகரிக்க, எங்களுடைய தொகுதியிலே அவர்கள் எங்களை நிராகரித்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தின் அடிப்படையிலே, நாங்கள், எம்.எல்.ஏக்கள் கேட்டால் ஓரளவுக்காவது நீங்கள் செய்து கொடுக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படவேண்டியிருக்கிறது. சூழ்நிலை எப்படி இருந்தாலும் அதற்கு நீங்கள் முயலவேண்டும்.

1990 ஏப்ரல் 3] [திரு. குமரி அனந்தன்]

அங்கீகாரம் பெற்றதற்குப் பிறகு மானியம் கொடுக்கவில்லை என்கிறார்கள். நடுநிலைப் பள்ளியாக இருக்கிறதை உயர்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டுமென்கின்றார்கள். உயர்நிலைப் பள்ளியாக இருப்பதை மேல்நிலைப்பள்ளியாக மாற்றவேண்டும் என்கின்றார்கள். பல ஆண்டுகள் நாங்கள் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மானியம் கொடுக்கவில்லை என்கிறார்கள். போகின்ற இடங்களிலே எல்லாம் இதையே குறையாக சொல்லிக்கொண்டு இருக்கின்ற காரணத்தினாலே, காலையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, நீங்கள் எங்களை கூட்டிவைத்து ஒரு தடவை பேசலாமே என்று கூட நினைக்கிறேன். கட்சியினுடைய தலைவர்களையும் மற்றவர்களையும் கூட வைத்து என்னதான் இதற்கு வழி? தமிழகம் எங்கும் இருக்கின்றன இந்த கல்விக்கூடங்கள், கல்வியைப் பரப்பவேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால் கல்விக்கு அனுசரணையாக இருக்கின்ற பல காரியங்களைச் செய்யமுடியவில்லை என்பதற்கு ஒரு ஆலோசனைக்குழு போட்டால்கூட நான் அதை வரவேற்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

அடுத்தாற்போல், கலையை மேம்படுத்துவதற்கு என்று ஒரு திட்டம். கலையை மேம்படுத்துவது கலைஞருடைய ஆட்சியிலே வருவது என்பதை நான் வரவேற்கிறேன். வரத்தான் வேண்டும் வராமல் இருந்தால்தான் அது ஆச்சரியம். ஆனால் ஓவியம் போன்ற கலைகளை நாம் புகுத்தாமல் இருந்தாலும்கூட அந்த ஓவிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்று சொல்கின்றார்கள். உதாரணமாக சேலம் மாவட்டத்தில் மட்டும் 80 க்கு மேற்பட்ட ஓவிய ஆசிரியர்களுடைய இடம் காலியாக இருக்கின்றது என்று ஒரு மனு இருக்கிறது. இது தமிழ் நாடு முழுவதும் இருப்பதாகக்கூட ஒரு குறிப்பை கொடுத்திருக்கிறார்கள். எனவே இவைகளைப் பற்றி சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நாளை மறுநாள் ஏறத்தாழ 6 லட்சம் மாணவர்கள் 10-வது வகுப்புத் தேர்வு எழுதுகிறார்கள். அவர்களுக்கு நாம் வாழ்த்துக்களைத் தெரிவித்து வெற்றி பெறவேண்டும் என்றும் சொல்வோம். அதுபோல் இந்தத் தடவை பிளஸ் 2, 3 லட்சம் பேர் தேர்வு எழுதியிருக்கிறார்கள். இதனை நான் ஏன் சொல்கிறேன் என்றால் 1980-லே தேர்வு எழுதியவர்கள் 3 லட்சம் பேர்கள். 1990-லே தேர்வு எழுதுகின்ற எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்கள் 6 லட்சம் பேர்கள். 1980-லே பிளஸ் 2 எழுதியவர்கள் 1 லட்சம் பேர். 1990-ல் இப்போது பிளஸ் 2 தேர்வு எழுதியவர்கள் ஏறத்தாழ 3 லட்சம். இவர்களை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது இந்த அளவுக்கு நிர்வாகப் பணியாளர்கள் எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறதா? அந்த அளவுக்கு பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? மாணவர்கள் எண்ணிக்கை கூடுகின்ற அளவுக்கு இவர்களும் நியமிக்கப்படுகிறார்களா? அந்த அளவுக்கு பணியிடங்களின்

எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருக்கிறதா? ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? என்பதைப் பார்க்கவேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லாமலேயே இன்னும் சிறிது நேரத்தில் முடித்துவிடுகிறேன்.

16.35 மணி

அடுத்து, புரபசனல் கோர்சஸ் என்று சொல்லப்படுகிற பட்டப் படிப்புக்கு போகிறவர்கள் எல்லாம், அதற்கு முன்பாக நுழைவுத் தேர்வுக்குச் செல்கிறார்கள். அங்கே அவர்கள் காட்டுகின்ற திறனுக்குத் தகுந்தவாறு மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டு இடமும் கொடுக்கப்படுகிறது. இது பாராட்டக்கூடியதாக இருந்தாலும்கூட கொஞ்சம் சிக்கல்களும் இதிலே இருக்கின்றன. தேர்வில் கலந்துகொள்ளும் சிலருக்கு 'ஆப்டிட்யூட்' இருப்பதில்லை. அவர்களுக்கு அதில் ஆர்வம் இருக்கிறதா என்று பார்க்க நேர்முகத் தேர்வு தேவைப்படுகிறது. இதுகுறித்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது உள்ள முறையில் நன்றாக மனப்பாடம் செய்பவர்கள் நிறைய மதிப்பெண்களைப் பெற்று தேறி, பிறகு நுழைவுத் தேர்விலும் மனப்பாடம் செய்கிற படிப்பினையின் காரணமாக நிறைய மதிப்பெண்கள் பெற்று விடுகிறார்கள். எந்தப்பட்டப் படிப்பிற்கு மதிப்பு உள்ளதோ அந்தப் பட்டப் படிப்புக்கு இடம் வேண்டுமென்று அவன் கேட்கிறான். அப்படி அவன் கேட்கின்ற போது அவனுக்கு ஆப்டிட்யூட் இருக்கிறதா? ஆர்வம் இருக்கிறதா என்பதை சோதித்துப் பார்க்கவேண்டும். அதற்காகத்தான் நேர்முகத் தேர்வு என்கின்ற அளவுக்கு ஒரு தேர்வை நடத்துவது பற்றி சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

அடுத்து, அழகான திருக்குறள் பாடலைச் சொல்லியிருக்கிறார்கள்.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''.

எழுத்துக்கள் சரி, அதிலே சீர்திருத்தம் தேவை என்று சொல்லியிருக்கிற திருக்குறள் சரி. ஆக எழுத்துக்கள் தான் இருக்கின்றன. ஆனால் எண் இல்லை. தமிழில் 'எண்' இல்லாமல் போய்விட்டது. எண் என்று சொன்னால் அது இன்னொரு கண் மாதிரி. அந்த இன்னொரு கண் இல்லாமல் போய்விட்டது மாதிரி தமிழில் 'க' என்று போடுகின்ற அந்த எண் முறையே இல்லாமல் போய்விட்டது என்று நான் நினைக்கிறேன். 'இண்டர்நேஷனல் நியூமரல்ஸ்' என்கின்ற அதை பின்பற்றுகின்ற அளவுக்கு இந்த எண்கள் இருந்தாலும் அது மறைந்து போய்விடுமோ, 'எண்' எல்லாம் போய்விடுமோ என்று சொல்லும் அளவுக்கு இரண்டு கண்ணில் ஒன்று போய்விடுமோ என்கிற அச்சம் இருப்பதால் அதைப்பற்றியும் அரசு பரிசீலிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, நூலகங்கள் இருக்கின்றன. கிராமங்களிலும் நூலகங்கள் வரவேண்டும். ஆனால் இன்றைக்கு பெரிய நூலகங்களில்கூட, குறிப்பாக கன்னிமரா நூலகத்தை எடுத்துக்கொண்டால் 30 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள ஏடுகள் அங்கே இல்லை. 5 வருடங்களுக்கு முன்பு உள்ள நூல்கள் கூட இல்லை. இது பற்றி கேட்டால் 5 வருடத்திற்கு ஒரு முறை டெண்டர் விடுவோம், ஏலம் விடுவோம் என்கிறார்கள். 'நேஷனல் லைப்ரரி ஆப் கல்கத்தா' போல கன்னிமரா நூலகமும் இருக்கவேண்டியது. அப்படிப்பட்ட நூலகங்களில் எல்லாம் குளிர்பதன வசதி செய்து நூல்களைப் பாதுகாப்பதோடு, மைக்ரோ பிலிம் வசதி மற்றும் என்னென்ன வசதி தேவையோ அதை எல்லாம் செய்து கொடுக்கவேண்டும். அதுபோல, அங்கே இருக்கின்ற பெரிய நூல்களை எல்லாம் அங்கே வைக்க இடம் இல்லை யென்று மாவட்டங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். சில மாவட்ட நூலகங்களுக்குப் போய் பார்த்தபோது மிகச் சிறந்த புத்தகங்கள் அங்கே இருந்தன. இங்கே வைப்பதற்கு இடம் இல்லாமல் மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆனால் மாவட்டங்களில் சிறிதும் இடம் இல்லை. கன்னிமரா நூலகத்திலாவது ஓரளவுக்கு வைக்கலாம். ஆனால் இங்கோ சிறிதும் இடம் இல்லை. இப்படிப்பட்ட நிலை தொடர்ந்தால் அரிய நூல்கள் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் இருப்பதால் இதை உங்களிடம் சொல்கிறேன்.

அடுத்து, மாணவர்கள் கல்வி கற்க எவ்வளவோ ஏற்பாடுகள் இருக்கின்றன. ஓராசிரியர் பள்ளிகளைத் தொடங்குகிறீர்கள். ஏற்கெனவே இருக்கின்ற ஓராசிரியர் பள்ளிகளிலேயேகூட அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது என்பதில் திடமாக இருக்க வேண்டும். இப்போது தொடங்குகின்ற இடங்களில் எல்லாம், ஓராசிரியர் இடங்களில் எல்லாம் ஈராசிரியர்கள் வரும் நிலை வரும் என்று உறுதியளித்திருக்கிறீர்கள். மாணவன் முதல் வகுப்பில் எநத ஆசிரியரிடம் படிக்கிறானோ, அதே ஆசிரியரிடம் இரண்டாம் வகுப்பிலும் படிக்கவேண்டும். அதுபோல 4–வது வகுப்பு வரை அதே ஆசிரியரே தொடர வேண்டும். இப்படிப்பட்ட முறை இன்றைக்கு வேறு நாடுகளில் எல்லாம் வெற்றி பெற்றிருக்கிறது. குறிப்பாக நாங்கள் வியன்னாவில் இம் முறையை நேரில் சென்று பார்த்து வந்தோம். மாணவன் முதல் வகுப்பில் சேர்கிறான் என்றால், இரண்டாம் வகுப்புக்கு அவன் தேர்ச்சி பெற்று போகும்போது அதே ஆசிரியரும் சேர்ந்து போகிறார், அதுபோல மூன்றாம் வகுப்புக்கு அவன் தேர்ச்சி பெற்றுப் போகும்போது அதே ஆசிரியரும் மாணவனோடு சேர்ந்து போகிறார். அதுபோல நான்காம் வகுப்புக்கு அவன் தேர்ச்சிப் பெற்றுப் போகும்போது அதே ஆசிரியர் அவனோடு சேர்ந்து போய் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். ஐந்தாம் வகுப்புக்குப் போன பிறகுதான் அந்த மாணவன் வேறு இடத்திற்குபோகிறான்

ஆக, இன்னொரு பெற்றோராக, வீட்டில் பெற்றோர் இருப்பது போல, இன்னொரு பெற்றோராக பள்ளியில் ஆசிரியர் இருக்கிற ஒரு மகோன்னத நிகழ்ச்சி அங்கெல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

16-40 மணி

அதே நேரத்திலே மாணவர்களுடைய ஆர்வத்தைப் புரிந்து கொண்டு, அவர்களுடைய நோக்கத்தைப் புரிந்து கொண்டு, அதற்குத் தகுந்தவாறு மனோதத்துவ ரீதியில் அவர்களை வளர்க்க வாய்ப்பு இருக்கிறது. அதைத்தான் நான் இங்கே சொன்னேன். எல்லா இடங்களிலுமே நீண்ட நெடுங்காலமாக நான் வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் ஸ்டுடன்ட் கவுன்சலர், மாணவ ஆலோசகர் தேவை. அந்த மாணவ ஆலோசகர் தேவை என்று சொல்கிறபோது, தமிழகத்தில் இருக்கின்ற எல்லா கல்வி நிலையங்களிலும் ஒரு மாணவ ஆலோசகரை வைத்தால், அந்த மாணவன் அடுத்துச் செய்ய வேண்டியது என்ன, அடுத்துச் செய்ய வேண்டியது என்ன என்று அவனுக்கு ஆலோசனை கூறுவதற்கு ஒருவர் இருப்பார். மேல்நாடுகளிலே மெத்தப் படித்தவர்கள் இருக்கிறார்கள், செல்வம் உள்ளவர்கள் இருக்கிறார்கள், கம்ப்யூட்டர்கள் எல்லாம் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற கல்வி நிலையங்களிலே எல்லாம் மாணவ ஆலோசகர் இருந்து நீ அடுத்து என்ன படிக்கலாம் தம்பி, உனக்கு ஸ்காலர்ஷிப் எங்கே கிடைக்கும் தம்பி, இலவசமாக ஹாஸ்டலில் எங்கே தங்கலாம் தம்பி என்று சொல்லும் அளவுக்கு ஸ்டுடன்ட் கவுன்சலர்கள் இருக்கிறார்கள். அந்த வசதிகள் இல்லாது இருந்து கொண்டிருக்கிற தமிழகத்திலே, இந்தியத் திருநாட்டிலே இப்படிப்பட்ட மாணவ ஆலோசகர்கள் தேவை என்பதற்கு நீங்கள் ஒரு புரட்சிகரமான முடிவெடுத்து, தமிழகத்திலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களிலும் மாணவ ஆலோசகர் ஒருவரை நியமிக்கிறோமென்று சொல்லும் அளவுக்கு நீங்கள் உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தேர்வு பற்றி ஒன்று சில நாடுகளிலே, பிற நாடுகளைப் பற்றி சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். குறிப்பாக கானடா நாட்டில் என்ன செய்கிறார்கள் என்றால் தேர்வு எழுதி முடித்து, மதிப்பெண்கள் போட்டதற்குப் பிறகு அந்த விடைத் தாள்களை மாணவர்களிடமே கொடுத்து விடுகிறார்கள். அந்த மாணவர்களிடம் கொடுத்து, அவர்கள் அதை 20 நாட்கள் தங்கள் கைகளிலேயே வைத்துக்கொள்ளலாம். அதற்குப் பிறகுதான் கடைசிப் பட்டியல் போட்டு, இறுதிப் பட்டியல் வெளியிடப்படும். அதுவரை பட்டியல் இருக்கும். ஒரு மாணவன் பார்க்கிறான், இந்தக் கணக்கை நான் அந்த மாணவனைப் போலவே செய்திருக்கிறேன். ஆனால் அவனுக்கு 10 போட்டிருக்கிறார்கள். எனக்கு 9 போட்டிருக்கிறார்கள்

என்று ஆசிரியர்களிடம் வந்து கேட்டுக்கொள்ளலாம். அப்படிக் கேட்டு, திருத்திக்கொள்ளலாம். எனவே, ஆசிரியர்கள் தவறு செய்து விட்டார்களோ என்ற எண்ணம் வருவதற்கு வாய்ப்பே இல்லை. சில மாணவர்கள் படிக்காமல், எங்கள் ஆசிரியருக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது என்றெல்லாம் சாதுரியமாக பதில் சொல்ல முடியாத அளவுக்கு, ஆசிரியர்களுக்கு ஒரு வாய்ப்பு.

அதைப்போல கடைசி நாள் தேர்வு எழுதுகிற போது மாணவனிடம் வினாத் தாளோடு சேர்த்து கருத்துரைப் படிவம் ஒன்றைக் கொடுக்கிறார்கள், அந்தக் கருத்துரைப் படிவம் என்ன என்று கேட்டால், உனக்குக் கற்றுத் தந்த ஆசிரியர் பற்றி என்ன கருதுகிறாய் என்று எழுத வேண்டும். உனக்குக் கற்றுத் தந்த ஆசிரியர் பற்றி என்ன கருதுகிறாய் என்று எழுதுகிற அந்த விடை தனியாகப் போகும். அந்த ஆசிரியர் பற்றி எவாலுவேஷன் அங்கே நடக்கிறது, எனவே ஒரு மாணவனைப் பற்றி ஆசிரியரும், ஆசிரியரைப் பற்றி மாணவர்களும் ஒருவருக்கொருவர் திருத்திக்கொண்டு, ஒருவருக்கொருவர் செம்மைப்படுத்திக் கொண்டு வாழ்கிற வாழ்க்கை அங்கே இருப்பது போல, பல்வேறு விதமான சிந்தனைகளைக் கல்வித்துறையிலே நீங்கள் செலுத்தி நல்ல முறையிலே தமிழக மக்களுக்கு வழி காட்ட வேண்டும். ஏற்கெனவே உங்களைப் பாராட்ட வேண்டிய இடங்களிலே பாராட்டி விட்டேன். இன்னும் சில செய்திகளை நான் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்தாலும். இப்போது தற்செயலாகக் கிடைத்த வாய்ப்பை அதிகமாகப் பயன்படுத்திய குற்றத்திற்கு ஆளாவேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைகளை எதிர்பார்த்து, விடை பெறுகிறேன், வணக்கம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது ஓரிரு கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டுவதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கல்வித்துறை குன்றாத தீபமாக, கூண்டிலே ஏற்றி வைத்திருக்கிற தீபமாக ஒளி வீசியது என்பதை இங்கே இருக்கிற அத்தனை பேர்களும் ஏற்றுக் கொள்வோமென்று நான் கருதுகிறேன், அவருடைய ஆட்சிக் காலத்திலேதான் பல்வேறு மாற்றங்கள் உருவாகி, இங்கே இருக்கின்ற அடித்தளத்திலே உழைத்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற மக்கள் கல்வித் துறையிலே ஒரு மாற்றத்தை உருவாக்க முடியுமா என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் தொழிற் கல்வியைக் கொண்டுவந்து, இங்கே பயில்கிற மாணவர்கள் படித்து பட்டம் பெற்றவுடன் வேலை கிடைக்கவில்லையே என்று வேதனைப்படும் நிலையை மாற்றி, அவர்களே பல்வேறு

தொழில்களை உருவாக்கிக் கொள்ளலாம் என்ற நிலையை உருவாக்கித் தந்தார்கள். கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்கள் கிராமங்களிலிருந்து தொலை தூரம் செல்ல வேண்டுமென்ற நிலையை மாற்றி, மேல்நிலைப் பள்ளியைக் கொண்டு வந்து, இங்கேயே ஓரளவுக்கு அவர்கள் கல்வி அறிவு பெறும் அளவுக்கு ஒரு நிலையை உருவாக்கித் தந்தார்கள். ஆசிரியர் பயிற்சியை மேல்நிலைப் பள்ளியில் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு நாம் பெண் உரிமை பற்றிப் பேசுகிறோம். அதைப்போல அன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியில் பெண்களுக்குத்தான் ஆசிரியர் பயிற்சி தர வேண்டுமென்ற நிலையை உருவாக்கித் தந்தார்கள்.

16-45 மணி

ஆனால், இன்றைக்கு ஆசிரியர் பயிற்சி மேல்நிலைப் பள்ளிகளிலே தடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வியிலே இன்றைக்கு நீங்கள் 22 சதவிகிதத்தை ஒதுக்கித் தந்திருக்கிறீர்கள். ஏறத்தாழ, 1,042 கோடி ரூபாய் ஒதுக்கி 22 சதவிகிதத்தை எட்டி இருக்கிறது என்ற புள்ளி விவரத்தை தந்திருக்கிறீர்கள். ஆனால், அதே நேரத்தில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளிலே இருக்கின்ற கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், 3 கோடியே 52 லட்சம் ரூபாய்தான் என்ற புள்ளிவிவரத்தை நீங்கள் தந்திருக்கிறீர்கள். இதைப் பார்க்கின்றபோது, 91 சதவிகிதம்-ஏறத்தாழ ரூ. 1,042 கோடியிலே, ரூ. 944 கோடி ஆசியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதைப் புள்ளி விவரத்திலே நீங்கள் தந்திருக்கிறீர்கள். ஆகவே, இந்த அரசைப் பொறுத்த வரையிலே, இன்றைக்கு புதிதாக பள்ளிக் கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால் பழுதுபார்க்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஏறத்தாழ ரூ. $3\frac{1}{2}$ கோடிதான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, புரட்சித் தலைவருடைய ஆட்சி, தன்னிறைவுத் திட்டம் என்கிற திட்டத்தின் அடிப்படையில் ஒரு பேரூராட்சி ஒன்றியத்திற்கு 10 அல்லது 15 கோடி ரூபாய்க்கு மேலே/கட்டிடங்கள் பழுது பார்க்க, புதிதாக பல்வேறு கட்டிடங்கள் - மரத்தடியிலே இருந்து படித்துக் கொண்டிருக்கிற மாணவர்களின் நிலையைக் கருத்திலே கொண்டு - அன்றைக்கு கட்டித் தந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குக்கூட, ப்ளஸ் 2 படிக்கின்ற மாணவர்கள் இப்போது தேர்வு எழுதுகிறார்கள்......

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே ஒரு பெரிய பெருச்சாளி போகின்றது. யாரையாவது கடித்துவிடப் போகிறது. ஆகையால் அதைப் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது பழைய பெருச்சாளியாக இருக்கலாம். எனவே, கவனமாகப் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழைய பெருச்சாளியோ அல்லது புதிய பெருச்சாளியோ என்பதற்கு இடமில்லை. எந்தப் பெருச்சாளி யாக வேண்டுமானாலும் இருக்கலாம், ஆகவே அன்புக்குரிய நண்பர்கள், சொன்னதை, என்னுடைய பேச்சிலிருந்து, அவர் களுடைய பேச்சுத் தொடரை நீக்கிவிட்டால் சரியாக இருக்கு மென்று நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால், பழைய பெருச்சாளி, புதிய பெருச்சாளி என்ற வார்த்தைகள் இடம் பெறலாமா என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக, இந்த ஆண்டு பிளஸ் டூ தேர்வு எழுதுகிறார்கள். பிளஸ் டூ கணக்குப் பாடத்தில் தேர்வு எழுதுகிற போது, அந்த மாணவர்களுடைய தகுதிக்கு மேலே. கேள்வித் தாள் அமைந்த காரணத்தினாலே,அவர்கள் இன்று அச்சநிலை ஏற்பட்டு, அந்தக் கேள்வித்தாளுக்கு ஏற்ப விடை எழுத முடியாத சூழ்நிலை ஏற்பட்டு நம்முடைய அரசு உயர் அதிகாரிகள், செயலர் மற்றும் இயக்குநர் போன்றவர்களுக்கெல்லாம் தந்திகள் கொடுத்து, இங்கே அனுப்பப்படுகின்ற இந்த நிலையில் ஓராண்டுக்காலம், பிளஸ் டூ படித்துக் கொண்டிருக்கிற அந்த மாணவர்களுடைய கணக்குப் பாடத்தில் அவர்களுடைய தகுதிக்கு மேலே கேள் வித் தாள் அமைந்திருந்த காரணத்தினால், அவர்கள் இந்த ஆண்டு தேர்ச்சி பெற முடியுமா, முடியாதா என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு நல்ல தீர்வினை உரு வாக்கித் தரவேண்டுமென்ற நிலையை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல், இங்கே பல்வேறு கருத்துக்களை கோடிட்டுக் காட்டினார்கள். சுயநிதிக் கல்லூரியைப் பற்றி இங்கே கேலி பேசினார்கள். இங்கே இருக்கின்ற உங்களுக்கு நன்றாகத் தெரியும்; இங்கே பொறியியல் கல்லூரி உருவாகாததன் வாயி லாகத்தான், கர்நாடக மாநிலத்திற்குச் சென்று இங்கே இருக்கின்ற மாணவர்கள் அவர்களிடத்திலே பணத்தைத் தந்து ரூ. 25,000 ரூ. 50,000 நிதியைத் தந்து. அதற்குப் பிறகு நம்முடைய மாணவர்கள் அங்கு படிக்க வேண்டிய ஒரு சூழ் நிலை முன்பு இருந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரி யும். அந்த நிலைமையை மாற்றி, இங்கேயே பொறியியல் கல்லூரியை, தனியார்கள் உருவாக்கிக் கொள்ளலாம். இங்கே மருத்துவக் கல்லூரியை உருவாக்கிக் கொள்ளலாம்; அதிலே தவறுகள் இருக்குமானால். அந்தத் தவறுகளை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு, அரசுக்கு தகுதி இருக்கிறது.

என்ன வேண்டுமானாலும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும், தவறுகள் நடக்கின்ற கல்லூரிகளின் மீது-அது பொறியியல் கல்லூரியாக இருந்தாலும். மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருந்தாலும்கூட, இன்றைக்கு அதனால்தான் கல்வித் துறை ஒரு வியாபாரத் துறையாக மாறியிருக்கிறது என்று கேலி பேசுகிற நிலையை இங்கே பார்த்தோம். அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள்கூட கல்வித் துறையையே மாற்றியிருப்பதாக இங்கே குற்றம் சாட்டினார்கள். ஆனால் நான் இன்றைக்கு கேட்கிறேன். இன்றைக்கு பல்வேறு பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டிருக்கிறதே, அந்த அளவுக்கு அரசாங்கத்தால் உருவாக்குவதற்கு நிதி இங்கே இருக்கிறதா என்றால், ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறீர்கள்.

16-50 மணி

ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயிலுகிறார்கள் என்று சொன்னால், அந்த ஆயிரக் கணக்கான மாணவர்களும் வேறு மாநிலங்களுக்குச் சென்று தான் பயில வேண்டிய ஒரு இக் கட்டான சூழ்நிலை இருந்தது என்பதையும் நீங்கள் மறந்து விடக்கூடாது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு மறைந்த பரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு அந்தத் திட்டத்தை இங்கே அமல்படுத்தி, பொறியியல் துறையாக இருந்தாலும் மருத்துவத்துறையாக இருந்தாலும் தனியாருக்கும் அனுமதி வழங்கலாம் என்ற நிலையை உருவாக்கித் தந்தார்கள். இன்றைக்கு எனக்கு முன்னாலே உரையாற்றிய மாண்புமிகு காங்கிரசு கட்சியினுடைய எதிர்க் கட்சித் துணைத்தலைவர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள், ஊராட்சி மன்றத்திலே நகராட்சி மன்றத்திலே இருக்கின்ற ஆசிரியர்கள் இன்றைக்கு அரசு அலுவலர்களாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அரசுத் துறையிலே அவர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கும் நேரத்தில், அங்கே இருக்கிற பள்ளிக் கூடங்களை பழுதுபார்க்கும் நேரத்தில்' அவைகளைப் பழுதுபார்ப்பதற்கு மட்டும்தான் ஊராட்சி மன்றத்திற்கும், நகராட்சி மன்றத்திற்கும் இன்றைக்கு நிதி ஒதுக்கலாம் என்ற நிலை இருக்கிறது. ஆசிரியர்களே தங்களிடத்தில் இல்லை என்ற காரணத்தினால் அங்கு இருக்கிற ஊராட்சி ஒன்றிய, நகராட்சி மன்றத் தலைவர்கள், அந்தக் கட்டிடங்களைப் பழுது பார்ப்பதில் அக்கறை காட்டாத ஒரு அவல நிலை இருப்பதை இன்றைக்கு நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

இன்று ஓர் ஆசிரியர் பள்ளியை உருவாக்கி இருக்கிறீர்கள். நான்கு மாத காலத்திற்கு முன்னால் இரு ஆசிரியர் பள்ளி என்று சொல்லி அங்கு தேர்ச்சி பெற்ற, இடைநிலை ஆசிரியர்

பயிற்சி பெற்றவர்களை எல்லாம் தேர்வு செய்து, அவர்களுக்கு 1,200 ரூபாய் சம்பளத்தைத் தந்து அவர்களும் இன்றைக்கு பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள் ஆனால், இன்றைக்கு நீங்கள் இதே தேர்ச்சி பெற்று இருக்கிற இடைநிலை ஆசிரியர்களுக்கு— 1,200 ரூபாய் கொடுக்க வேண்டிய ஆசிரியர்களுக்கு 800 ரூபாய் கொடுத்தால் போதும் என்று சொல்லி ஓர் ஆசிரியர் பள்ளியிலே அவர்களைப் பணியிலே அமர்த்தி இருக்கிறீர்கள். அவர்களைப் பணியில் அமர்த்துகிற நேரத்தில் அந்த ஓர் ஆசிரியர் பள்ளியிலே இரண்டு வகுப்புகள்தான் நடைபெறும் என்ற நிலையை இன்றைக்கு சொல்லி இருக்கிறீர்கள். ஒரு கிராமத்தில் ஒரு பள்ளி உருவாகும் நேரத்தில் 5-ஆம் வகுப்பு வரையிலே தான் முதன் முதலில் உருவாக்குகின்ற நிலை தமிழ்நாட்டில் நிலவி வந்தது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அந்த அடிப்படையில் இதே தேர்ச்சி பெற்றவர்களை, பயிற்சி பெற்றவர்களை பல்வேறு உயர்நிலைப் பள்ளி வரையிலும் ஆசிரியர்களாக நியமித்து இருக்கிற ஒரு அவல நிலையை நாம் இன்றைக்கு பார்க்கிறோம் அவர்களுக்கு சம்பளம் இன்றைக்கு 1,200 ரூபாய் என்று சொன்னால், இந்த ஓர் ஆசிரியர் பள்ளியில் பணியாற்றுபவர்களுக்கு ரூ 800 என்ற நிலையை நீங்கள் உருவாக்கி இருக்கும் போது, ஒன்றை ஒரு கணம் நீங்கள் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அதை மாற்றி அமைப்பதற்கு நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு மேல்நிலைப் பள்ளியில் முதுநிலைப் பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே அடிப்படைச் சம்பளம் எப்படி இருக்கிறது என்று சொன்னால், அவர்களுக்கும், காவல் துறை ஆய்வாளர்கள், வேளாண்மைத் துறை பொறியாளர்கள் ஆகியவர்களுக்கும் ஒரே சம்பளம் விதிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இன்றைக்கு முதுநிலைப் பட்டதாரிகளாக மேல்நிலைப் பள்ளியிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் ஓரளவுக்காவது இருக்கிறதா என்றால், ஆய்வாளர்கள், பொறியாளர்களைக் காட்டிலும் தகுதி குறைக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

இங்கே பல கருத்துக்களை உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். குறிப்பாக, இங்கு சிறுபான்மைக்குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. மதத்தைச் சார்ந்தவர்கள் அந்தச் சிறுபான்மைக்குழுவிலே உறுப்பினராக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதில் மொழிவாரியாக உறுப்பினர்களை நியமிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டு இருக்கிறேன். பல்வேறு மொழி பேசுகின்றவர்கள் இங்கே இருக்கிறார்கள். பல்வேறு மொழி பேசுகிற காரணத்தினாலேயும்,

கல்வித்துறை என்கின்ற காரணத்தினாலேயும் மொழியின் சார்பாக பல்வேறு மொழி பேசுகின்ற அனைத்து நண்பர்களுக்கும் வாய்ப்புத் தருகின்ற வகையில் ஒரு திட்டத்தை உருவாக்கி, மொழிவாரி சிறுபான்மையினருக்கு தனிக்குழு அமைத்து, அவர்களுக்கு பாதுகாப்புக் தரவேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1984-வது ஆண்டில் உலகத் தெலுங்கு மாநாட்டை தமிழ்நாட்டில் தமிழக அரசே நடத்த வேண்டுமென்று அன்றைக்குச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே இந்த அரசும் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி, கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இடைநிலை ஆசிரியரைப் பற்றி பல கருத்துக்கள் இங்கே பல நண்பர்களால் கோடிட்டுக் காட்டப்பட்டன. இன்றைக்கு தகுதி அடிப்படையிலே 800 சம்பளம் கொடுக்கப்படுகிற இடைநிலை ஆசிரியர்களுக்கு பயிற்சி போதாது என்ற கருத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி குறிப்பிட்டுக் காட்டியபோது நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். அவர்களுக்கு பயிற்சி போதாது என்ற காரணத்தினாலேயும், அவர்களைப் பணியிலே அமர்த்த வேண்டும் என்ற காரணத்தினாலேயும், அவர்கள் இடைநிலை ஆசிரியர்கள் என்ற காரணத்தினாலேயும் அவர்களுக்கு 800 ரூபாய் சம்பளத்தைத் தந்து, அவர்கள் இரண்டு ஆண்டுகள் தற்காலிகப் பணியாற்றி அதற்குப் பிறகு அவர்களை நிரந்தரமாக ஆக்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இதே தகுதியில் இருக்கின்ற ஆசிரியர்களை 4 மாதங்களுக்கு முன்னாலே நீங்கள் தேர்வு செய்து இருக்கிறீர்களே, அது எந்த அடிப்படையிலே என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்...

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது அன்றைக்கு இருந்த அடிப்படையிலே; அந்த அடிப்படையில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், அதிக அளவில் வேலை இல்லாமல் இருக்கிற ஆசிரியர்களைப் பயன்படுத்தி, அதே நேரத்தில் கிராமத்துப் பள்ளிக்கூடங்களுக்குத் தகுந்த அளவுக்கு ஆசிரியர்கள் கிடைக்கச் செய்வதற்கு, இப்பொழுது ஏற்றுக் கொண்டு இருக்கிற முறைதான் இதுவே தவிர, அன்றைக்கு இந்த முறை கருதப்படவில்லை.

16–55 மணி

திரு. கே.ஏ. செங்கோட்டையன் : அதைப்போல, ஆசிரியர்களை நீங்கள் தேர்வு செய்திருக்கின்றீர்கள். தேர்வு செய்கிறபொழுது, அங்கேயிருக்கிற முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள்—அங்கே ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைநகரத்திலே இருக்கிறார்கள்.

ஆனால், அங்கே தேர்வு செய்வதற்கு அந்த மாவட்டத்திலே இருக்கின்ற முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள் அங்கே தேர்வு செய்வதற்கு—தேர்வு செய்கின்ற இடத்திலே இருக்கிறாரா என்றால் கிடையாது. வேறொரு மாவட்டத்திலேயிருந்து முதன்மைக் கல்வி அலுவலர் ஒருவரை நியமித்து, அவர் தேர்வு செய்கிறார். அந்தத் தேர்வு செய்ததற்குப் பிறகு, அங்கே யார், யார் செலக்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைக்கூட அங்கே தேர்வு செய்யப்பட்டவர்களுக்கெல்லாம் அனுப்ப முடியாமல், இங்கே சென்னைக்குச் சென்று, இயக்குநரிடத்திலே அனுமதி பெற்று, இயக்குநர் அவர்கள் அங்கேயிருக்கின்ற மாவட்டந்தோறும் அனுப்புகின்ற ஒரு அவல நிலையை நாம் இங்கே பார்க்கிறோம். அதைத்தான் எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். தவறு எங்கோ நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றபொழுது, அமைச்சரவர்கள் அதற்குப் பதிலைச் சொன்னார்கள். தகுதி அடிப்படையிலே எடுக்கிறோம், அது சீனியாரிட்டி அல்ல என்று கூடச் சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, அதற்கு என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றனவோ அந்த விதிமுறைகளை பின்பற்றித்தான் அவர்கள் செய்தார்கள். ஆனால், ஏற்கெனவே நடைபெற்ற தேர்வுகளில் சில குறைகள் ஏற்பட்டதாக அரசுக்குப் புகார் வந்த காரணத்தால், ஒரே மாவட்டத்திலே உள்ளவர்களே செய்வதற்குப் பதிலாக, இன்னொரு மாவட்டத்து அதிகாரி, அந்த இடத்திலே மேற்பார்வை செய்து, நடைபெறலாம் என்ற ஒரு கருத்து அன்றைக்கு ஏற்கப்பட்டு, அரசாங்க ஆணை மூலமாக, கல்வித்துறை இயக்குநர் மூலமாக அது நடைபெற்றது. நடைமுறையிலே எப்படிச் செயல்படுத்துவது என்பது, ஏற்படுகின்ற குறைகளை எப்படிக் களைவது என்பதைப் பொறுத்து, உருவாக்கப்படுகிற திட்டமாகும். அதுவும், அது பற்றி ஏதேனும் குறை இருக்குமானால், வழக்கு இருக்கிற காரணத்தால், அந்த வழக்கில் யார் யார் என்னென்ன கருத்தைத் தெரிவிப்பார்கள், முடிவு என்ன வரும் என்பதைப் பொறுத்து, இந்த அரசு அடுத்த முறை அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன் : இதுபோன்ற புகார்கள் வராமல் அரசு பரிசீலனை செய்து, அங்கேயே ஒரு கமிட்டி அமைத்து, தேர்வு செய்தால் நன்றாக இருக்கும் என்ற எங்கள் கருத்துக்களை நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல, மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள்—பெரியார் மாவட்டத்திலே, குன்னத்தூர் என்ற இடத்தில் பெண்கள் உயர் நிலைப்பள்ளியை, நீங்கள் முதன்முதலில் துவக்கி வைத்துவிட்டு வந்தீர்கள். ஆனால், ஏறக்குறைய ஆறு மாத காலம் ஆகிறது.

அந்தப் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் ஒரேயொரு தலைமை ஆசிரியர் மட்டும்தான் அங்கே இருக்கிறார். வேறு ஆசிரியர்களே அங்கே பணியிலே அமர்த்தப்படவில்லை. பெண்களைக்கூட அந்த உயர்நிலைப்பள்ளியிலே சேர்க்கலாமா, வேண்டாமா என்ற ஒரு நிலை, அங்கே நிலவிக்கொண்டிருக்கிற ஒரு அவலநிலையை நாம் பார்க்கிறோம். ஆகவே, அமைச்சரவர்களே திறந்து வைத்திருக்கிற, முதன்முதலிலே உயர்நிலைப்பள்ளியை, அவர்கள் அனுமதி தந்து, அவரே அங்கே வந்து துவக்கி வைத்து விட்டு வந்ததற்குப் பிறகுகூட, இன்றைக்கு அந்த நிலை இருக்கிறது என்று சொன்னால், தமிழ்நாட்டிலே ஆயிரக்கணக்கான இடங்களிலே இதுபோன்ற ஆசிரியர் பற்றாக்குறை இருக்கின்ற ஒரு நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, புளியம்பட்டியிலே —இன்றைக்கு அருமைச் சகோதரர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் உங்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். செவிலியர் பள்ளித் தொழில் பிரிவிலே, செவிலியர் பள்ளிக் கட்டிடம் என்று அங்கே திறக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் திறக்கிற பொழுது, அங்கே முதன்மைக் கல்வி அலுவலர் வருகிறார். சட்டமன்ற உறுப்பினருடைய பெயர் அங்கே கிடையாது. நாடாளுமன்ற உறுப்பினர் பெயர் கிடையாது. ஆனால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் பெயர் அங்கே பொறிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்த அரசாங்கம் இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை, மாற்றுக் கட்சியிலே இருக்கின்றவர்களை மதிக்கிறதா என்பதை நான் இந்த நேரத்திலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இதற்கெல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுத்து....

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவரவர்களே' அதனுடைய பெயரை நான் கேள்விப்படுகின்றபொழுது, செவிலியர் பள்ளி என்று சொல்கிறார்கள். செவிலியர் பள்ளி என்றால், நர்சஸ் டிரெயினிங் ஸ்கூல் என்பது போல அர்த்தம் ஆகிறது. அது என்ன மாதிரியான பள்ளி என்பதுகூட எனக்குத் தெரியவில்லை. இனி, சி.ஈ.ஓ., அவர்களுக்குத் திரு. சின்னசாமி அவர்கள் சொன்ன அந்தச் செய்தியை எழுதிக் கேட்டுத்தான் நான் பதில் சொல்ல முடியும்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புஞ்சைப் புளியம்பட்டியிலே உள்ள கே.வி.கே. அரசு மேல் நிலைப்பள்ளி, அதிலே 14–2–1990 அன்று, தொழில் பிரிவு செவிலியர் பள்ளிக் கட்டிடம் திறப்பு விழா என்று கல் போடப்பட்டிருக்கிறது. அதிலே, புதன்கிழமை என்று போடப்பட்டிருக்கிறது. அரசு மேல்நிலைப்பள்ளி/ கே.வி.கே. அரசு மேல்நிலைப்பள்ளி அந்தக் கட்டிடம். அதிலே, செவிலியர் பள்ளிக் கட்டிடம் என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. தலைமை, அந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்.

அதனுடைய தலைமை தாங்கியிருக்கின்றார்கள். அதிலே கல் போடப்பட்டிருக்கிறது திறப்பாளர் பி.ஏ. சாமிநாதன், எக்ஸ். எம்.பி. முன்னாள் பெற்றோர்—ஆசிரியர் சங்கத் தலைவர் என்றும், அதிலே முன்னிலை வகிக்கின்றவர்கள் கரியண்ணன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர், திரு. நடராஜன், செயலாளர் என்றும் அந்தக் கல் பொறிக்கப்பட்டிருக்கிறது. 14-2-1990 அன்று. எப்படி அந்தக் கல் போடப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சந்தர்ப்பம் கிடைத்த காரணத்தால், அதுபற்றி எல்லா விவரங்களையும் இங்கே பேச வேண்டுமென்ற அவசியம் கிடையாது. என்னிடத்திலே இன்று காலையிலே மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார். நான் இயக்குநருக்கு இன்றைக்கே அனுப்பியிருக்கிறேன். அதுபற்றி விவரம் தெரிந்துகொண்டுதான் நான் ஏதாவது விளக்கம் சொல்ல முடியும். ஏனென்றால், செவிலியர் பள்ளி என்று சொல்லுகின்றபொழுது, அது மேல்நிலைப்பள்ளியிலே எப்படி இடம் பெறுகிறது என்பதே எனக்குத் தெரியவில்லை, விவரம் தெரிந்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுவது நல்லது. நான் தெரியாத நிலையில் இருக்கிறபோது, அது குற்றச்சாட்டா, அல்லவா என்பது பின்னர் தான் தெரியும் அது குறித்து தெரிந்து கொண்ட பிறகு உறுப்பினர் பேசலாம்.

17-00 மணி

திரு. கே.ஏ. செங்கோட்டையன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அடுத்த கருத்துக்கு வருகிறேன். கோவை மாவட்டம் இரண்டாகப்பிரிக்கப்பட்டு, தந்தை பெரியார் அவர்கள் பெயரில் ஈரோட்டைத்தலைமையிடமாகக்கொண்டு புதிய மாவட்டம் அமைக்கப்பட்டது. அங்கே அரசால் பெண்கள் கலைக்கல்லூரி ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று மக்கள் நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனைக் கருத்தில் கொண்டு பெண்கள் கலைக்கல்லூரி ஒன்றைத் துவங்கவேண்டும். தந்தை பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்ட இயக்கம் என்று சொல்கிற நீங்கள் உடனடியாக அதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல பகுதிகளில் இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அதைப்போல அங்கேயிருக்கிற நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று கோருகிறார்கள். ஆகவே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில்

ஏறத்தாழ 25 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கவேண்டுமென்று, அதற்காகப் பணம் கட்டி, வேண்டிய நிலங்களையும் தந்திருக்கிறார்கள். அதைப் போல நடுநிலைப்பள்ளிகள் 20 பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளது. இதுகுறித்து உடனடியாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, பெரியார் மாவட்டத்தில் கல்வித் துறையில் ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் பேசுகிறபோது சிறுபான்மையினர் கமிஷன் பற்றியும், மொழி சிறுபான்மையினர் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். சிறுபான்மையினர் கமிஷன் போடப்பட்டதை நாங்கள் வரவேற்கிறோம். மொழி சிறுபான்மையினர் பற்றி குறிப்பிடுகிறபோது உலகத் தெலுங்கு மாநாடு இங்கே நடைபெற்றது என்று சொன்னார்கள்; அது தவறு. அகில இந்திய இரண்டாவது தெலுங்கு மாநாடு சென்னையில் 1984-ஆம் ஆண்டு பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற நேரத்தில் அன்றைய முதலமைச்சர் எம்.ஜி. ஆர். அவர்கள், இங்கே உலகத் தமிழ் மாநாடு நடத்தப்படுவதைப் போலவே, தமிழ் நாட்டில் அதிகப்படியாகப் பேசப்படுகிற மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளுக்கும் உலகத்தமிழ் மாநாட்டைப் போல மற்ற மாநாடுகளையும் நடத்துவேன் என்றுசொன்னார்கள். அதுமட்டுமல்ல, சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகய்யருடைய பிறந்த நாளை ஒட்டி அந்த உலகத் தெலுங்கு மாநாடு நடத்தப்படும் என்றும் அன்றையதினம் உறுதி அளித்தார்கள். நான் இந்த அரசிடத்திலிருந்து அன்றையதினம் எம்.ஜி.ஆர். அளித்த உறுதிமொழியை நிறைவேற்றுவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய கல்வி வளர்ச்சிக்கான நிதிநிலைக் குறிப்பு குறித்து நேற்றும், இன்றும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஏறத்தாழ 24 பேர் தங்களுடைய கருத்துக்களைப் பல்வேறு கோணங்களில் எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் அனைவரின் கருத்துக்களையும் கேட்ட காரணத்தால், ஒருவர் கருத்துக்கு இன்னொருவர் கருத்து பதிலாகி இருக்கிறது என்பதை உணருகிறேன். ஆனால் அவற்றையெல்லாம் எடுத்துவைத்து, விளக்குவதற்குப் போதுமான நேரம் இல்லை. விவாதம் நடத்த வேண்டுமென்ற முறையில், விளக்கம் செய்ய வேண்டுமென்று நான் கருதாமல், நடைமுறையில் செய்யத்தக்கதாக இருப்பதையும், செய்யமுடியாததாக இருப்பதையும் விளக்குவதன் மூலமாக —

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்ற அந்தக் குறள் அடிப்படையில், அரசுக்கு அவ்வப்போது கிடைக்கிற பல்வேறு விதமான குறிப்புகள், சான்றுகள், வேண்டுகோள்கள் ஆகியவற்றை வைத்து எந்த அளவிற்குச் செயல்படுத்த முடிகிறது என்று, அந்தக் கண்ணோட்டத்தில் இந்த விவாதத்தில் என்னுடைய விடையை அளிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

குறிப்பாக, இந்தக் கல்வி மானியத்தை ஒட்டிய கருத்துக்களில் பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் வரவேற்று இருக்கிறார்கள். தமிழ் உணர்வோடு ஒட்டி வருகிற பல செய்திகளை அவர்கள் வரவேற்றுப் பேசி இருப்பதற்கு நான் என்னுடைய பாராட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

17-05 மணி

மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சிறுபான்மை மக்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய கருத்து இந்த அவையிலே இடம் பெற்றதைப் போல ஒரு கருத்திலே, சில விளக்கங்களைச் சொன்னார்கள். சிறுபான்மை மக்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய கருத்து எதையும், இந்த அரசு என்றைக்கும் மேற்கொள்ளாது. ஆனால் அரசாங்கத்தைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கையைச் சிறுபான்மை என்ற பெயரால் யாரேனும் மேற்கொள்வார்களேயானால், அரசாங்கத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தையே தாங்கள் விரும்புகிறபடி திருப்பிக் கொள்ளக்கூடிய அளவிற்குத் தங்களுக்கு இருக்கிற உரிமையின் அடிப்படையில் யாரேனும் செயல்படுத்துவார்களேயானால், அப்படிச் செயல்படுவதை நிறுத்தவேண்டிய கட்டாயமான நிலைக்கு இந்த அரசு தள்ளப்படுகிற காரணத்தாலேதான், நீதி மன்றத்திலே வழக்கிலே தொடர்ந்து ஈடுபட்டு இருக்கிறது என்பதை நான் முதலிலே ஒரு விளக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பாண்டியன் அவர்கள் வேறு மாநிலத்திலே சட்டத்துறையிலே பயின்றவர்கள் எல்லாம் இங்கே வந்து பதிவு செய்து கொள்கிறார்கள், அதன் காரணமாக மண்ணின் மைந்தர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு குறைகிறது என்ற கண்ணோட்டத்தில், அப்படி ஒரு நிலைமை இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அந்த நிலைமைக்கு ஒரு மாநில அரசு செய்யத்தக்க காரியம் எதுவுமில்லை. ஒன்று, அகில இந்திய அளவிலே, எந்த மாநிலத்திலே தகுதி உள்ளவர் எவர் பட்டம் பெற்றாலும், பார் கவுன்சில் அவர்களை ஏற்றுக்கொள்ளுமானால், அவர்கள் பதிவு செய்துகொண்டு, எந்த மாநிலத்திலும் இடம் பெறலாம் என்ற பொது நியதி, சட்டம் இருக்கிற காரணத்தால், அந்தப் பொது நியதிக்கு உட்பட்டு, மண்ணின் மைந்தர்கள், தாங்கள் முன்னேறுவதற்கு என்ன வழி என்பதைத் தேடிக்கொள்ளவேண்டும்.

ஆனால் பெரும்பாலான மண்ணின் மைந்தர்களுக்கு அந்த உணர்வே இல்லாத ஒரு நாட்டில், மண்ணின் மைந்தர்களுக்கு இருக்க வேண்டிய இயல்பான உணர்வே மங்கியிருக்கிற ஒரு நாட்டில், அந்தக் குறிக்கோளிலே எந்தளவிற்கு வெற்றி பெறுவார்கள் என்று நாம் எளிதாகக் குறிப்பிட முடியாது. இருந்தாலும் அப்படி ஒரு குறை இருக்குமானால், ஊக்கம், முயற்சி, உழைப்பு என்ற அந்த அடிப்படையிலேதான், அந்த வகையிலேதான் வெற்றி காணவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய அண்ணா தி.மு.க. கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் இடைக் காலத்திலே சுயநிதிக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்ட காரணத் தால்தான் தமிழ்நாட்டில் ஏராளமான மாணவர்கள் சுயநிதிக் கல்லூரியிலே சேர்ந்து பயில்கிற வாய்ப்பைப் பெற்றார்கள், அது எங்களுடைய ஆட்சிக்காலத்திலே நடைபெற்ற ஒரு நல்ல காரியம். இல்லையானால், கர்நாடகத்திற்கோ அல்லது வேறு மாநிலத் திற்கோதான் சென்று பயிலவேண்டிய நிலைமை ஏற்பட்டுஇருக்கும் என்று சொன்னார்கள். அந்தப் பொதுக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்தப் பொதுக் கருத்திலே எந்த மாறுபாடும் இல்லை. ஆனால் சுயநிதிக் கல்லூரிகள் என்பதற்கு, கல்லூரியை நடத்துவதற்கான தேவைக்கு உரிய நிதியை அந்த மாணவர்களிடமிருந்து முறையாகப் பெற்று நடத்துவது என்பது தான் பொருள்: செலவுக்குத் தேவையான நிதியை முறையாக மாணவர்களிடத்திலே பெறுவது என்பது ஓரளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆனால் சுயநிதிக் கல்லூரிகள் என்ற பெயரால், தங்களுக்குள்ள வரன்முறையைக் கடந்து, அரசு நிலத்தைக் கையகப்படுத்துவதும், ஒரு சுயநிதிக் கல்லூரியைத் தங்களுடைய மேற்பார்வையிலே வைத்துக்கொண்டு. அரசாங்கத் தின் விதிமுறைகளை மீறி நடந்தாலும் அல்லது capitation fee போன்ற முறையில் பல லட்சக்கணக்கான ரூபாயைக் கட்டாயமாக வசூலிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருந்தாலும் அல்லது சுயநிதிக் கல்லூரிக்காக கட்டப்பட்ட முன் நிதி, அதாவது deposit amount, அதையேகூட அவர்கள் முறையின்றிக் கையாண்டு இருந் தாலும். அவற்றால் ஏற்படுகிற குறைகளுக்கு நடவடிக்கை எடுக் காமல் இருந்தால், அரசு தூங்குகிறது என்றுதான் உலகம் கருதும். எனவே ஏற்படுகிற குறைகளுக்குத்தான் நிவர்த்திக்கான நடவடிக் கையை இந்த அரசு மேற்கொள்ளுகிறதே தவிர, சுயநிதிக் கல்லூரியே கூடாது, அவை அடியோடு மூடப்படவேண்டும் என்ற கருத்து இந்த அரசாங்கத்திற்கு இல்லை. அதை முறைப்படுத்து வதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கையும் அரசியல் நோக்கத்திலே எடுக்கப்பட்டதல்ல.

கடந்த இரண்டு ஆண்டுக்காலமாகவே, தொடர்ந்து அந்தக் கல்லூரிகளைப் பற்றிப் பல குறைபாடுகளை நான் அறிய நேரிட் டிருக்கிறது. நான் அமைச்சரானதற்குப் பின்னரும், இந்தக் கல்லூரிகள் செம்மையாக, சீராக நடைபெற வேண்டுமானால்,

மாணவர்களுக்குக் கிடைக்கிற பயிற்சியின் தரம் குறையாமல் இருக்கவேண்டுமானால், நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, அதற்குப பின்னர் இந்தத் துறையிலே மூலமாகப் பொறியியல் துறையிலே மிகப்பெரிய வல்லுநராக, புகழ்பெற்ற துணை வேந்தராக விளங்கு கிற டாக்டர் குழந்தைசாமி அவர்களுடைய தலைமையிலே குழு நியமிக்கப்பட்டு, எல்லோருமே பொறியியல் துறையிலே, பயிற்சி தரக்கூடிய தகுதிபெற்ற, பேராசிரியர்களைக் கொண்ட அந்தக் குழுதான் பல்வேறு கல்லூரிகளையும் ஆய்வு நடத்தி. அவற்றினு டைய நிலையினை நான்கு படித்தரமாகப் பிரித்து, நான்காவது படித்தரத்திலே உள்ளவை, தொடர்ந்து மாணவர்களைச் சேர்ப்பது நல்லதல்ல என்ற ஒரு ஆலோசனையையும் அவர்கள் வழங்கி யுள்ளனர். அப்படி வழங்கிய ஆலோசனைதான் இந்தத் துறை யால் பின்பற்றப்படுகிறதே தவிர, இந்த அரசாங்கத்தினுடைய கல்வித்துறையோ, பொறியியல் நுட்ப அறிவியல் துறையோ, Technical Education துறையோ, எந்தக் காரணத்தை முன்னிட்டும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு அடிப்படையில், எந்த ஒரு நடவடிக் கையும் எடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

17-10 மணி.

இன்றைக்கு, திரு. வல்லரசு அவர்கள் பேசுகிறபோது பாலி டெக்னிக்குகளிலே 'பிரேக் சிஸ்டம்' அண்மையிலே எடுக்கப் பட்டதை அவர்கள் உணர்ந்துதான் குறிப்பிட்டார்கள் என்று கருது கிறேன். தொழில் நுட்பப் பயிலகத்தில், பாலிடெக்னிக்குகளில் பிரேக் சிஸ்டம் இருப்பதால் ஏற்படுகிற கஷ்டத்தை மாணவர்கள் என்னிடத்திலே சொன்னபோது, ஒரு கருத்து நான் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. நாங்கள் தமிழில் படித்துவிட்டு பாலிடெக்னிக்குகளிலே சேருகிற காரணத்தால், முதல் ஆண்டிலே தேர்வு எழுதுகிறபோது, மொழி அறிவு போதுமான அளவு இல்லாத நிலையில், நாங்கள் தேர்விலே வெற்றிபெற முடிய வில்லை, நாங்கள் ஏழைகளாக இருக்கின்ற காரணத்தால் வேறு விதமாக அந்தப் பயிற்சியை நாங்கள் வளர்த்துக் கொள்ள முடிய வில்லை. மூன்றாவது ஆண்டில் படிக்கின்றபோது இந்தத் தடை இருக்கின்ற காரணத்தால் ஓராண்டு கழித்துத் தேர்வு எழுதுவதாக இருந்தால் நாங்கள் எங்களுடைய சொந்தச் செலவில் படிப்பது, ஏழ்மை நிலையிலே உள்ள எங்களிலே பலருக்கு இடையூறாக இருக்கிறது என்று சொன்னபோது பாலிடெக்னிக் மாணவர்கள் பெரும்பாலும் நடுத்தர வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு, வரு மானம் குறைவான குடும்பங்கள், கிராமத்துப் பிள்ளைகள் என்ற அந்த அடிப்படையிலும் மேலும் சிலமாணவர்கள்தேர்ச்சிபெறாவிட் டாலும்கூட, ஒரு பட்டறை வைத்து நடத்திக் கொள்ளலாம்,

அந்த டிப்ளமா தேவையில்லை என்று கருதக்கூடிய ஒரு சூழ்நிலையிலே அவர்கள் பயிலுகிற காரணத்தாலும் அது உடனே அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் பொறியியல் கல்லூரிகளிலேயும் பிரேக் சிஸ்டம் கூடாது என்று சொல்கிறபோது, அதே நிலை இல்லை என்பதைக் கருத வேண்டும். பொறியியல் கல்லூரியினுடைய பாடத்திட்டங்கள் பல்கலைக் கழகத்தாலேதான் தீர்மானிக்கப்படுகின்றன. பொறியியல் கல்லூரி படிப்பு, Degrees தருகிற படிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், வேறு பல்கலைக் கழகங்களில் பொறியியல் பி.இ. பட்டப் படிப்பு நடைபெறுகிறது. அதிலே B.E. (Clvil). B.E. (Electrical), B.E. ((Mechanical), and B.E. (Electronics) இப்படிப் பலவகை படிப்புகள் படிக்க வேண்டிய, தேர்ச்சித் திறன் மிகுதியாகத் தேவைப்படும் ஒரு படிப்பாக இருக்கின்றது என்றாலும் பல்கலைக் கழகத்தில் அந்த பிரேக் சிஸ்டம் என்பதைத் தளர்த்தி முதல் இரண்டு ஆண்டுகள் வரையிலேகூட தேர்விலே வெற்றி பெறாவிட்டாலும்கூட மாணவர்கள் தொடர்ந்து மேல் வகுப்பில் படிப்பதற்கு அனுமதிக்கிறார்கள் என்றும் அறிகிறேன்.

In Engineering Colleges break system has been introduced by the University. Break System in Engineering Colleges can be removed only by the University, if the University agrees. என்ற ஒரு குறிப்பையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பல்கலைக் கழகங்கள்தான் இதைப் பரிசீலனை செய்து இதனை எடுப்பது நல்லது என்ற ஒரு முடிவிற்கு வருவார்களேயானால் எடுக்கலாம். ஆனால் நல்ல நுண்மையான அறிவு பெறுகிற துறைகளிலே எல்லாம் 'பிரேக் சிஸ்டம்' என்பது உலகம் முழுவதும், எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தேர்விலே அதிக அக்கறை காட்டுவதற்காக ஒரு குறிப்பிட்ட காலத்தில் பெறவேண்டிய தேர்ச்சியை அந்தக் காலக்கட்டத்திலேயே பெற்றுவிடுவதற்காக இந்த முறைகளை வைத்திருக்கிறார்கள். 2 ஆண்டுக்காலம், 3 ஆண்டுக் காலம் பழைய படிப்பை ஒத்திவைத்துப் பின்னர் படிப்பது என்பது நுணுக்கமான தேர்ச்சி பெறுவதற்கு இடையூறாக அமையும் என்ற காரணத்தாலே, இது எந்த வகையிலே பல்கலைக் கழகத்தாலே கருதப்படுகின்றதோ, அந்த வகையிலேதான் தீர்மானிக்கப்பட முடியும் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றொன்று, இங்கே பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். ப்ளஸ் டூ தேர்வு எழுதியவர்களுக்கு அவர்கள் பயின்ற பாடத் திட்டத்தில் 40 விழுக்காடு அளவிற்கு உள்ள கேள்விகளை மட்டுமே கொண்டதாக ஒரு கேள்வித்தாள் அவர்களுக்குத்தரப்பட்டது என்றும் மீதிக்கேள்விகள்

1990 ஏப்ரல் 3] [டாக்டர் க. அன்பழகன்]

எல்லாம் ஏற்கெனவே அவர்களுக்காக தெரிவிக்கப்பட்டிருந்த பாடத் திட்டத்தைக் கடந்த வேறு கேள்விகளாக அவை அமைந்து விட்டன, 'Out of Syllabus' என்ற முறையிலே அமைந்துவிட்டன என்றும் தெரிவித்தார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியவந்த வுடன், அது தேர்வுத் துறைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தேர்வுத் துறை அதிலே உள்ள தேர்வுத்துறை இயக்குநர், அந்த ஒரு பாடத்திற்குள்ள தேர்வாளர்கள் ஆகியவர்கள் கூடி அது பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தால் அதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்களேயானால், அந்தத் தேர்வுத் தாள்களை எந்த வகையில் மதிப்பீடு செய்வது என்பது அவர்களால் தீர்மானிக்கப்படும். அந்த இடையூறிலிருந்து மாணவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அது சாதாரண மாக அவர்கள் மேற்கொள்கிற ஒரு முறை. கேள்வித்தாளில் தவறு ஏற்பட்டுவிட்டாலோ, மாணவர்களுக்கு மிகக் கடுமையான கேள்விகள் அளிக்கப்பட்டு விட்டாலோ. மாணவர்கள் விடை எழுத முடியாத கேள்விகளாக அவை இருந்தாலோ, அவை பற்றி மறுபரிசீலனை செய்து, உரிய முறையிலே மாணவர்களுடைய தகுதியைக் கண்டறிவதற்குஅவர்கள் வழிசெய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

17–15 மணி.

அதேபோன்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் டி.இ.ஒ. போன்ற பணிகளுக்கு சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு செய்யப்படுகிறது. அது அப்படி செய்யப்படக்கூடாது. ஆசிரி யராகப் பணியாற்றியவர்கள்தான் பணி மூப்பு அடிப்படையில் அந்த மேல் நிலைக்கு வரவேண்டுமென்றார்கள். கல்வித் துறை யிலே பதவி உயர்வு எல்லாமே பணி மூப்பு அடிப்படையிலே இருக்குமானால் அந்தக் கல்வித் துறையில் ஏற்பட வேண்டிய சில மாற்றங்களுக்கு உரிய தகுதி உடையவர்கள் அந்தக் கல்வித் துறையின் உள்ளே புகுத்தப்பட மாட்டார்கள். எனவேதான் நீண்ட காலமாக ஒரு மரபு இருக்கிறது. ஐ.ஏ.எஸ். தேர்வு என்று சொன்னால் கூடத் தேர்வு எழுதி வெற்றி பெற்று வருபவர்களும் இருக்கிறார்கள். பணி மூப்பு அடிப்படையில், தகுதி திறமை காரணமாக இந்த நிலைக்கு உயர்த்தப்படுகிற வர்களும் இருக்கிறார்கள். அதேபோல டி.இ.ஒ.வாக வருகிற இந்தப் பதவிக்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷன்—பொதுப் பணித் தேர்வுகள் குழுதான் தேர்ந்து எடுக்க வேண்டும் என்ற ஒரு முறை நீண்ட காலமாக இருக்கிறது. ஆனால் அதற்கு மேற்பட்ட இன் னொரு பொறுப்புக்கு சி.இ.ஒ. பொறுப்புக்கு பணி மூப்பு அடிப் படையிலேதான் பதவி உயர்வு வழங்கப்படுகிறது. எனவே இப்படி ஒரு இணைப்பு முறை நேரிடையாகத் தேர்வு என்ற முறை, மூப்பு அடிப்படையிலே பதவி உயர்வு என்ற முறை, ஆக இந்த இரண்டு முறைகளும் கல்வித் துறை நிர்வாகத்திற்காக

[டாக்டர் க. அன்பழகன்] [1990 ஏப்ரல் 3

இடம் பெற்றிருக்கின்றன. அதிலே எதுவும் பெரிய குறைபாடுகள் காணப்படுமேயானால்தான், அப்படிச் செய்வது சரியல்ல என்பதற்குத் தகுந்த ஆதாரம் கிடைக்குமானால்தான் அவற்றையெல்லாம் மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யலாம் அல்லது எண்ணிப் பார்க்கலாம்.

மற்றொன்று, சிறுபான்மை பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான உருது ஆசிரியர்கள் இல்லை என்ற ஒரு கருத்தை திரு. லத்தீப் அவர்களும் மற்றொரு நண்பரும் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமது அவர்கள் என்று கருதுகிறேன், என்னிடத்திலே தெரிவித்தபோது அப்போதே அந்தத் துறையினருக்குத் தெரிவித்து சிறுபான்மை மொழிப் பாடம் நடத்துவதற்கான ஆசிரியர்கள், அந்த மாவட்டத்திலே கிடைக்காவிட்டால் வேறு மாவட்டத்தில் கிடைத்தால் கூட அவர்களைக்கூட இந்த வேலைக்குத் தேர்ந்து எடுத்து நியமிக்கலாம் என்னும் பொதுவான கருத்தை நான் கூறியிருக்கிறேன். எனவே சிறுபான்மை மொழியினருக்கு உரிய முறையிலே பாடம் நடத்துவதற்கான ஆசிரியர்களைப் போதுமான அளவுக்கு இடம் பெறச் செய்வதற்கு அந்தத் துறை தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னையிலே சில பள்ளிக் கூடங்கள், உருது பயிற்றுவிக்கும் பள்ளிக் கூடங்கள் தொடர்ந்து இயங்க முடியவில்லை என்ற கருத்தை திரு. லத்தீப் அவர்கள் தெரிவித்தார்கள். இடைக் காலத்தில் ஒன்றிரண்டு அரசு அலுவலகங்கள், தற்காலிகமாக, உருது பள்ளிக்கூடத்தின் உபயோகத்திலே பயன்படாமல் இருக்கிற இடத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன. அது நிரந்தரமாக அமைக்கப்படவில்லை. அப்படி அமைக்கப்பட்டிருப்பதைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது விரைவிலே நீக்கப்படும். ஆனால் உருது பள்ளிக்கூடங்களிலே சேருகிற மாணவர்களுடைய தொகை வேகமாகக் குறைந்து வருகிறது. உருது பேசுவோர் பழகுகிற வட்டாரத்திலே, திரு. லத்தீப் அவர்கள் எப்படித் தமிழ் மொழி என்னுடைய குருதியிலே ஊறியிருக்கிறது என்று பெருமையோடு சொன்னார்களோ, அதுபோலப் பல பேர் தமிழிலேயே படித்துக் கொள்ளலாம் என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். இன்னும் சில பேர், வசதி வாய்ப்பு உடையவர்கள் ஆங்கிலத்திலே தங்கள் பிள்ளைகள் படிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்களும் இருக்கிறார்கள். அதன் காரணமாக எண்ணிக்கை குறைகிறது. எண்ணிக்கை குறைகிறபோது சிலஇடங்களிலே, சில வகுப்புகளைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலைமை ஏற்படுகிறது. இருந்தாலும் சிறுபான்மை மொழியினருக்காக விதிவிலக்கு அளித்து, எந்த அளவு அவர்களுடைய பிள்ளைகள் குறைந்த அளவில் படித்தாலும் கூட, வகுப்புகள் நடத்த முடியுமோ அப்படி நடத்த வேண்டும் என்று அந்தத் துறையினரை நான் கேட்டுக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாகவே இந்தக் கல்வித் துறை பற்றிய பல விவரங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் துறையிலே செலவழிக்கப்படுகிற மொத்த நிதியில்—இங்கு தரப் பட்டுள்ள இந்த 1042 கோடியில், ஆசிரியர்களும், அதிலே பத்திலே ஒரு மடங்கு, 12-லே 1மடங்கு என்றிருக்கிற ஆசிரியர்கள் அல்லாத சில பணியாளர்களுக்கும் செலவழிக்கப்படுகிற தொகை 944 கோடி. இது மொத்தத்தில் 91 சதவீதம். திட்டங்கள் என்ற அடிப்படையில் சத்துணவு, இலவச பாடப் புத்தகம், சீருடை முதலியவற்றிற்குச் செலவழிக்கப்படுவது 90 கோடி. அதாவது 8 சதவீதம். அதனால் நேரிடையாக கல்வித்துறையில் பிற செலவு களுக்காக மிச்சப்படுவது 8 கோடி, 1 சதவீதம். அதுதான் கட்டிடங்கள் மற்ற பல்வேறு பணிகளுக்குப் பிரித்து வழங்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரு வேளை இது தவறோ என்று நீங்கள் கருதுவீர்களேயானால் தவறு இல்லை என்பதற்கு நியாயமான விளக்கம் இருக்கிறது. பிள்ளைகள் ஒரு மரத்தடியிலே படித்தாலும்கூட, ஒரு ஆசிரியர் கட்டாயம் தேவைப்படுவார். பள்ளிக்கூடத்திற்கு கட்டிடம் இல்லை என்பது குறைதான் என்றா லும் கிராமத்திலே இருக்கிற பள்ளிகளில் கிராமப் பழக்க வழக்கத்தில் ஒரு மர நிழலில் படித்தால்கூட நல்லது. இல்லை யென்றால் அந்த ஆண்டுப் படிப்பு தவறிப் போனால் அவர்களுக்கு ஒரு ஆண்டு இழப்பு எற்படுகிறது. படிப்பும் தொடர்பு இல்லாமல் விட்டுப் போய்விடுகிறது. ஆகவே முதலிலே ஆசிரியர்கள் தேவை. அடுத்து பள்ளிக்கூடம் நடத்துவதற்கு இடம் தேவை. கட்டிட வசதி சற்றுத் தாமதம் ஆனாலும் அதற்காக நாம் இதை நிறுத்த முடியாது. அந்த முறையில் முதல் பொறுப்பு ஆசிரியர்கள் சம்பளத்திற்குத்தான்—100க்கு ஏறத்தாழ 85 சதவீதம் அல்லது 84 சதவீதம் ஆசிரியர்கள் சம்பளத்திற்குத்தான் செலவழிக்கப் படுகிறது. அடுத்து மற்ற துறைகளிலே செலவழிக்கப்படுகிற பணத்தை எல்லாம் சேர்த்துக் கணக்கிட்டால்—நலத் திட்டங் களுக்கு மற்ற துறைகளினாலும் செலவிடப்படுகிறது.

17-20 மணி.

அவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால்,1175கோடி அளவு கல்வி யோடு தொடர்புடைய செலவுகள். அந்தச் செலவினை வகைப் படுத்திப் பார்த்தால், சம்பளத்திற்கு 80 சதவிகிதம். அடுத்து நலத் திட்டங்களுக்கு 18 சதவிகிதம், கட்டிடங்கள் முதலிய வளர்ச்சிக்கு 2 சதவிகிதம், இவை தவிர, இதற்கு மேல் செல விடப்படுவது. வேளாண்மை ஆராய்ச்சிக் கல்விக்கு 20 கோடி ரூபாய். மீனின வளர்ச்சிக் கல்விக்கு ஒரு கோடி. வேளாண்மை ஆராய்ச்சியிலே கால்நடை வளர்ப்புக் கல்விப் பயிற்சி இவற்றிற்கு 6 கோடி. உடல் ஊனமுற்றோர் நலப் பள்ளிகளுக்கு 3 கோடி, ஆதிதிராவிடர் பழங்குடியினர் இவர்களுடையகல்விக்கு 43கோடி, பின் தங்கிய வகுப்பினர், சீர் மரபினர், மோஸ்ட் பேக்வேர்டு இவர்களுடைய கல்விக்கு 21 கோடி. மொத்தம் 121 கோடி ரூபாய். இந்த வகையிலே பல துறைகளினால் செலவிடப் படுகிறது.

(டாக்டர் க. அன்பழகன்) [1990 ஏப்ரல் 3

ஆகவே இவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால், ஏறத்தாழ 1,297 கோடி ரூபாய் என்ற அளவிற்குக் கல்வி தொடர்பான பணிகளுக்குச் செலவிடப்படுகிறது. அப்படிச் செலவிடுவதிலேகூட, எப்படியோ தமிழ்நாட்டில் ஒரு அடிப்படை நியாயம் எப்போதும் காப்பாற்றப்பட்டு வருகிறது. அதிலே ஒன்று, தொடக்கக் கல்விக்குச் செலவிடப்படுவது 429 கோடி ரூபாய். மிடில் ஸ்கூல் வரையில் ஆகும் செலவு 429 கோடி. உயர்நிலைக் கல்வி, மேல்நிலைப் பள்ளிக்கல்விக்கும் செலவிடப்படுவது 318 கோடி ரூபாய். கல்லூரிக் கல்விக்குச் செலவிடப்படுவது 86 கோடி ரூபாய், 87 கோடி ரூபாய். எனவே, இதனை விகிதாச்சார அளவில் பார்த்தால், பரவலாக மக்களிடத்திலே ஏற்படவேண்டிய எழுத்தறிவு முனைப்பாக உருவாவதற்குத் தொடக்கக் கல்விக்குத்தான் முன்னுரிமை தந்து மிகப்பெரிய தொகையான 429 கோடி—தொடக்கக் கல்விக்குச் செலவிடுவது என்பது சாதாரணமானது அல்ல. அடுத்து, மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகட்கு அந்த விகிதாசார அளவிலே, அந்த வகுப்பு ஆசிரியர்களுடைய சம்பளம் அதிகமாக இருந்தாலும்கூட, விகிதாச்சார அளவிலே அதை நோக்குகிறபோது 318கோடிதான். கல்லூரிக்கு 86 கோடிதான். இதை எந்தக் கோணத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், எழுத்தறியாத மக்களுடைய விகிதாச்சாரம் ஏறத்தாழ 53 சதவிகிதம் இன்றைக்கும் தமிழ் நாட்டிற்கு இருக்கிறது என்பதைக் கருதிப்பார்க்க வேண்டும். அகில இந்திய அளவிலே அது 63 சதவிகிதம். தமிழ் நாட்டிலே 53 சதவிகிதம். அவர்களுக்காகப் பள்ளி சாராக் கல்வித் திட்டத்தின் மூலமாக, முதியோர் கல்வித் திட்டத்தின் மூலமாக, மத்திய அரசு திட்டத்தின் மூலமாக, மாநில அரசு திட்டத்தின் மூலமாக, தனிப்பட்ட அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தேசியத் தொண்டு நிறுவனங்கள், மாணவர் அமைப்புக்கள், ஆகியவற்றின் மூலமாக எல்லாம் ஓரளவு எழுத்தறிவு பரப்பவும், அறியாமையை நீக்குவதற்காகவும் பல திட்டங்கள், அரசாங்கத்தினுடைய நிதியுதவியோடு நடைபெற்று வருகின்றன.

அப்படி நடைபெற்று வந்தாலும்கூட, கிராமங்கள் தோறும் இந்த எழுத்தறியாமையைப் போக்குவதற்கான பணியை 'மக்கள் நலப் பணியாளர்கள்' மூலமாக நிறைவேற்றவேண்டுமென்ற ஒரு திட்டமும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது பல இடங்களிலே நாம் இந்தத் திட்டத்தைத் துவங்கி வைத்து, அந்தப் பகுதியிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், மிக, மிகப் பின் தங்கிய மக்கள், தாய்மார்கள் இவர்களை அழைத்து, 30, 30 பேராக ஒவ்வொரு மாலை வேளையில் வகுப்பு நடத்தி அதன் மூலமாக எழுத்தறிவை உண்டாக்குகிற ஒரு திட்ட முயற்சி நடைபெற்றாலும்கூட, எல்லாக் கிராமங்களிலேயும் நடைபெறுவதற்காக, எல்லா மாவட்டங்களிலும்

1990 ஏப்ரல் 3] [டாக்டர் க. அன்பழகன்]

பரவலாக நடைபெறுவதற்காக ஒரு பெரிய முயற்சி வருங் காலத்திலே உருவாவதற்கு இந்த அரசு திட்டமிட்டு. மக்கள் நலப் பணியாளர்களை அதற்குப் பயன்படுத்தவிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி ஆனந்தன் அவர்கள் இன்று காலையிலே இன்னொரு பிரச்சினையை என்னிடத்திலே தெரிவித்தார்கள். அது 10-ஆம் வகுப்பு கேள்வித்தாள் வெளியானதாக மாணவர்களிடத்திலே ஒரு வதந்தி பரவியிருக்கிறது என்றும் அது ஒரு மோசடியான செயல் என்று கேள்விப்படுகிறேன் என்றும், இருந்தாலும் இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்றும் கேட்டார்கள். எனக்குத் தெரிந்த வரையில், அப்படி எந்த ஒரு கேள்வித்தாளும் வெளிப்பட்டதாக எந்த விதமான சான்றும் இல்லை. ஆனால் கேள்வித்தாள் என்ற பெயரால் போலியாக, இதுதான் வரப்போகிற கேள்வித்தாள் என்று சொல்லி, தேர்வு எழுதுகிற மாணவர்களிடத்திலே சில பேர் விற்று விடுகிறார்கள். அவர்களுக்குக் கேள்வித்தாள் ஏராளம் கிடைக்கிறது. ஏனென்றால் டியூட்டோரியல் பள்ளிகளிலும் பல கேள்வித்தாள் களைத் தயாரிக்கிறார்கள், சில பத்திரிகைகளில் கேள்வித்தாள் வெளியிடப்படுகிறது, இவற்றை மூலமாக வைத்துக்கொண்டு அவர்கள், கேள்வித்தாள் போல ஒன்றைத் தயாரித்து மாணவர் களை ஏமாற்றுவதாகத் தெரிகிறது, எனவே, நான் இதுபற்றி தெரிவிக்கக்கூடிய கருத்து, மேல்நிலைத் தேர்வு 3 இலட்சம் பேரும், பள்ளியிறுதித் தேர்வு 5 இலட்சத்து 70 ஆயிரம் பேரும், எழுதுகிறபோது, இப்படி எங்கேனும் சில முறைகேடுகள் நடை பெற்று மாணவர்கள் ஏமாற்றப்படுவார்களானால் அது உடனடி யாகக் கண்டுபிடிக்க முடியாததாகவே இருக்கும், பின்னர்தான் அந்தச் செய்திகள் பத்திரிகைகளின் மூலமாகவோ அல்லது யாராவது நமக்குத் தெரிவித்தாலோ தெரியவரும். எனவே முதலில் மாணவர்கள் கேள்வித்தாள் தங்களுக்குக் கிடைக்கும் என்று நம்பி அப்படி எதிர்பார்த்து, தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளக்கூடாது என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அப்படி யாராவது கேள்வித்தாள் என்று சொல்லி அவர்களிடத்தில் தந்து அவர்களை ஏமாற்றுவார் களானால் அவர்கள் அதை ஆசிரியர்களுக்கோ, காவல் துறைக் கோ தெரியப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏமாற்றுகிற முயற்சியில் யாராவது தொடர்ந்து ஈடுபட்டால் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும். தகுந்த நடவடிக்கை என்றால் கண்டுபிடித்தால், கண்டுபிடிக்கப்பட்ட அவர்களைக் கைது செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

17-25 மணி

மற்றும் ஒரு கருத்து. மாணவர்கள் தேர்வு எழுதுகிறபோது இ.எஸ்.எல்.சி. தேர்வினை மறுபடியும் நடத்தவேண்டும் என்று ஒரு வேண்டுகோள் இங்கே வைக்கப்பட்டது. காரணம் அவர்கள் சொன்னார்கள், எழுத்தறிவு பெற்று விட்டோம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுவதற்காக இ.எஸ்.எல்.சி. என்று ஏற்கனவே நடத்தப்பட்ட Elemetry school Leaving Certificate வழங்க அப்படி நடத்தவேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கால கட்டத்தில் அப்படி நடத்தப்பட்டதற்குக் காரணம், அந்தச் சான்றிதழை வைத்து ஒரு வேலைக்குப் போவதற்குப் போதுமானதாக இருந்தது. இப்போது 10, 12 ஆண்டுக் காலமாக இ.எஸ்.எல்.சி. தேர்வை வைத்து வேலை பெறுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. ஆனால் அது பள்ளிப்படிப்பிலே ஒரு கட்டமாக இருக்கிறது. அந்த ஒரு காலக் கட்டத்திலே அந்தப்படிப்பில் எட்டாவது வகுப்பு தேறியதாக மாணவர்கள் தெரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு ஒரு Common examination ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெறுகிறது. அந்தப் பொதுத்தேர்வு நடைபெற்று அதன் முடிவு அறிவிக்கப்படுகிற காரணத்தால் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பலனாக எட்டாவது படித்தோம், தேர்வு பெற்றோம் என்று அறிந்துகொள்ள அது ஒரு வாய்ப்பாக இருக்கிறது. அதனால் இ.எஸ்.எல்.சி. என்ற அந்தப் பெயரால் நடத்தவேண்டிய ஒரு அவசியம் அரசுக்கு இப்போது இல்லாமல் இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் மற்றும் ஒன்று. கடந்த ஆண்டு இந்த அரசு பல்வேறு கடமைகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறது. அப்படி நிறைவேற்றப்பட்ட கடமைகளை நான் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஆண்டுவரை துவக்கப் பள்ளிக் கூடங்களில் மாணவர்களுக்குத் தேர்வு எதுவும் நடத்தத் தேவையில்லை என்ற ஒரு மொத்மான ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது அதை மாற்றி மாணவர்களுக்குத் தேர்வு எழுதுகிற ஒரு எண்ண ஓட்டம் ஏற்படவேண்டும் என்பதற்காக முதல் வகுப்பிலிருந்து தேர்வு வைத்துவிடுங்கள். ஆனால் தேர்வுக்கான வெற்றி, தோல்வி என்று அறிவிக்கிற ஒரு முறை மட்டும் வேண்டாம், தேர்வில் பெறுகிற எண்களைப் பெற்றோர்கட்குத் தெரிவியுங்கள் என்ற ஒரு வேண்டுகோள் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

முதல் வகுப்பில் கிராமப்புறத்துப் பிள்ளைகளுக்கும் ஆங்கிலம் பயிற்றுவிக்கவேண்டும் என்ற முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டு இருந்தது. முதல் வகுப்பில் கிராமத்துப் பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தைப் பயிற்றுவிக்கக்கூடிய அளவுக்குத் தகுந்த ஆசிரியர் கிடைப்பது கடினம், பயிற்றுவித்தல், தமிழையே படிக்க முடியாத நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு ஒரு பெரிய சுமையாகத் தோன்றும். பயன் விளையாது என்ற காரணத்தால் 3-வது வகுப்பில்தான் ஆங்கிலம் தொடங்க வேண்டும் என்று கடந்த

ஆண்டு தெரிவிக்கப்பட்டது. இப்போது 3-வது வகுப்பில் ஆங்கிலம் துவங்கப்படும். ஆங்கிலத்திலே ஓரளவு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் மாணவர்கட்கு பயிற்சி கொடுப்பதற்கு என இடைகாலத்தில் ஒரு 2 வாரகாலம், 3 வார காலம் பயிற்சி பெற்ற அந்த ஆசிரியர்கள் அந்தப் பணியை ஏற்றுக்கொள்வார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பயிற்சியே இல்லாமல், ஆங்கிலமே சரியாகத் தெரியாமல் இருக்கும் ஆசிரியர்களைக் கொண்டு ஆங்கிலப் பயிற்சி நடத்தாமல் இருக்குமாறு கவனித்துக்கொள்ள வேண்டும் என்று அந்தத் துறை கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அடுத்து கரும்பலகைத் திட்டம் என்ற ஒரு திட்டத்தின் மூலமாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்களே: பள்ளிகள் எல்லாம் பல்வேறு வகையிலே மிக மிகப் பாழடைந்து போய் இருக்கின்றன கட்டிடங்கள் மோசமாக இருக்கின்றன என்று, அவற்றை மாற்றுவதற்கு இதுவரையில், ஆயிரத்திற்கு மேற்பட்ட தொடக்கப் பள்ளிக்கூடங்களில் ஒரு அறை இருக்கு மானால், மற்றொரு அறை இல்லை என்றால் 2 அறைகளும் சேர்த்துக் கட்டித் தருகிற முறையில், கரும்பலகைத் திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டில் கட்டப்பட்டு இருக்கிறது. அப்படிக் கட்டப்பட்டு இருக்கிற பள்ளி எண்ணிக்கை ஏறத்தாழ 45, 50 சதவீதம்தான். மிச்சம் இருக்கிற பள்ளிகூடங்களுக்கும் தமிழ் நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் நிறைவேறும். கன்னியாகுமரி மாவட்ட உறுப்பினர் சொன்னார் ,'தொடங்குகிற திட்டங்கள் எல்லாம் இங்கே தொடங்கி எங்கள் மாவட்டத்திற்கு வருவதற்கு முன்னால் ஒய்ந்து போய்விடும்'' என்று, இது மத்திய அரசினுடைய உதவியைப் பெற்று செய்கிற திட்டமாக இருக்கிற காரணத்தால் முதல் கால கட்டத்தில் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள ஒன்றியங்களில் ஏறத்தாழ நூற்றுக்கு 20 ஒன்றியங்கள், அடுத்து 2-வது கால கட்டம் நூற்றுக்கு 30 ஒன்றியங்கள் என்று கொடுத்தவர்கள். அவை செயல்பட்ட விதம் கண்டு மேலும் 10 விகிதாசாரம் சேர்த்துக் கொடுத்தார்கள். இனி மூன்றாவது கால கட்டம் மிச்சம் இருக்கிற அனைத்து ஒன்றியங்களிலும் மொத்தத்தில் நூற்றுக்கு 40 ஒன்றியத்தில் இது செயல்படும். ஆகவே இந்தக் கால கட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகளும் ஓரளவு நல்ல பயன்பெறக்கூடிய ஒரு நிலையில் கரும்பலகைத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்பதையும், கடந்த ஆண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிக் கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதையும், மேலும் திட்ட வட்டமான விவரங்கள் வேண்டுமானால், பின்னர் தருகிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் க. அன்பழகன்] [1990 ஏப்ரல் 3

கடந்த ஆண்டு, ஓராசிரியர் பள்ளிகளையெல்லாம் மற்றொரு ஆசிரியரை நியமித்து, இரண்டு ஆசிரியர் பள்ளிகளாக உயர்த்தி விட்டோம். இப்போது, இந்தத் தேதியில் ஓராசிரியர் பள்ளிகளே இல்லை—எங்கேயோ ஓர் ஆசிரியர் ஊரிலே இல்லாமல் இருக்கலாம்—ஓராசிரியர் பள்ளிகளே இன்றைக்கு இல்லை.

17-30 மணி

அடுத்த ஆண்டு தொடங்குகிற 439 பள்ளிக்கூடங்கள் எந்த நிலையிலே தொடங்கப்படுகின்றன என்பதையும் கருத வேண்டும். கடந்த 5 ஆண்டுகாலமாகத் தொடக்கப் பள்ளிகளே தொடங்குவ தில்லைஎன்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டிருந்தது, 'No more Elementary school No more cellege''s. இப்படிப் பல முடிவுகள், அந்த அடிப்படையிலே தொடக்கப் பள்ளிகளேதொடங்காமல் இருந் தாலும்கூட, இந்தத் துறையின் சார்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிறபகுதிகளில், 50 இடங்களில் தொடக்கப்பள்ளிகள் தொடங்க வேண்டுமென்று கடந்த ஆண்டு துவக்கி வைத்தோம். 50 காலனிகளிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பள்ளிக் கூடங்கள் துவக்கப்பட்டன. இந்த ஆண்டு அந்தத் தடை நீக்கப் பட்டு 439 இடங்களில் துவக்குகிறோம். இந்த ஓர் ஆண்டு அது ஓராசிரியர் பள்ளியாகச் செயல்படும். ஏனென்றால், இடம் கிடைக்க வேண்டும்; கட்டிடம் வேண்டும்; அந்தப் பள்ளிக் கூடங்களை நடத்தத் தொடங்கி, செயல்முறைப்படுத்த வேண்டும். 10, 20 பிள்ளைகள் சேர்ந்தாலும் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்த வேண்டும். அடுத்த ஆண்டிலேதான் இரண்டாம் வகுப்பு பிள்ளைகள் சேர்க்கப்படுவது அவசியமாக இருக்கும். ஆகவே, ஓர் ஆண்டு அளவில் ஓர் ஆசிரியர் என்ற காரணத்தால் எந்தக் குறையும் ஏற்படாது. அடுத்த ஆண்டு இரண்டாவது ஆசிரியர் நியமிக்கப்பட்டு, அந்தப் பள்ளிக்கூடங்கள் மேலும் அதிக வகுப்புகளை நடத்தும் நிலை ஏற்படும்.

அதைப்போல, கடந்த காலத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடங் களுக்குத் தலைமை ஆசிரியர் பொறுப்பு இல்லாமல் இருந்தது. 29,491 ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு இருக்கிற ஆசிரியரில் ஒருவர் தலைமை ஆசிரியர் என்று Headmaster என்று சொல்லப் படுவாரே தவிரத் தனிப்பொறுப்பு வழங்கப்படவில்லை. அன்றைக்கு அவர்களுக்கு மாதம் 15 ரூபாய் சிறப்பு ஊதியம் அளிக்கப்பட்டது. கழக அரசு பொறுப்பேற்றவுடன், தலைமை ஆசிரியர் பணி இடங்களைத் தோற்றுவித்தது. அவ்வாறு பணி புரியும் ஆசிரியர்களுக்கு 1,400 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட்டது. 29,491 பள்ளிக்கூடங்களில்—ஏதோ ஒன்று, இரண்டு விட்டுப் போயிருக்கலாம்—தலைமை ஆசிரியர்களாக புதிய பொறுப்பில் அதிகச் சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள்.

அதைப் போல நடுநிலைப் பள்ளிகள் 5,651—இந்த நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பணி ஒன்று உருவாக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு தனிச்சம்பளம், 1,640 ரூபாய் சம்பளத் துவக்கத்தில் அமர்த்தப்பட்டனர். அதற்கு முன்னாலே அவர்கள் மற்ற ஆசிரியர்களுடைய ஊதியத்தைத்தான் பெற்றார்கள். சிறப்பு ஊதியமாக 15 ரூபாய்தான் பெற்றார்கள். 200 ரூபாய் அதிக மாகச் சம்பளம் கிடைக்கக்கூடிய அளவுக்குத் தலைமை ஆசிரியர்கள் பணியை உருவாக்கியது. பள்ளிகளிலே உள்ள பிள்ளைகளினுடைய மொத்த முன்னேற்றத்தில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டு மென்பதற்காகத்தான் 5,651 ஆசிரியர் இதனால் பலன் பெற்றார்கள்.

அதைப்போல ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக அது ஆப்பரேஷன் பிளாக்போர்டுடன் இணைக்கப்பட்ட திட்டமாக 736 ஊர்களில், பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காக ஆய்வு செய்யப் பட்டு அவை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான பணி இந்த ஆண்டு தொடங்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பணி வருகிற ஆண்டு முடிக்கப்படும்.

சென்ற ஆண்டு புதியதாகத் துவக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி எத்தனை என்று கேட்டார்கள். அந்த விவரத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். சென்ற ஆண்டு அரசு பள்ளிகள் 83 நடுநிலைப் பள்ளியிலேயிருந்து உயர் நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டன. மாநகராட்சி, நகராட்சி பள்ளிகலே 4 பள்ளிகள் உயர்த்தப்பட்டன. தனியார் பள்ளிக் கூடங்களில் 23 பள்ளிக்கூடங்கள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இவ்வாறு 110 பள்ளிக்கூடங்கள் கடந்த ஆண்டு உயர்த்தப்பட்டன.

அதைப்போல உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டது; அரசுப்பள்ளிகள் 39; மாநகராட்சி, நகராட்சி பள்ளிகள் 6; தனியார் பள்ளிகள் 29; மொத்தம் 74 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டன.

நல்லாசிரியர் விருது வழங்குவது என்ற முறை பல ஆண்டுக் காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களும் வேறு சில உறுப்பினர்களும், அவர்கள் நல்லாசிரியர் விருது பெற்றால் மேலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பணியாற்றுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டுமென்றெல்லாம் கேட்டார்கள். அது ஒரு கருத்து. மற்றொரு கருத்து இரண்டு ஆண்டுகளுக்குப் பணி நீடிப்பு வழங்கு தாகத் தெரிவித்து விட்டால் நல்லாசிரியர் விருதை யார் வாங்குவது என்பதிலே வரக் கூடிய போட்டி யார் நல்ல ஆசிரியர் என்று தெரியாமலேகூடப் போய்விடும் என்பதாகும். அதையும் குமரி அனந்தன் அவர்கள் தெரிந்துகொண்டு இருப்பார் என்று நம்புகிறேன். இப்போது அது நடுநிலையாக யார் சிறந்த பணியாற்றுகிறார்களோ அவர்

களுக்கு ஒரு மரியாதை என்ற அளவிலே இருக்கிறது. இதிலே சில அட்வான்டேஜஸ். தங்களுக்குச் சில தனிச் சலுகைகள் கிடைக்கிற வாய்ப்புகள் இருக்குமேயானால் அதைப் பெறுவதற்கான போட்டி மிக வேகமாக வளர்ந்து வேறுவிதமான சூழ்நிலைகளை உருவாக்கக் கூடும். இருந்தாலும் விருது தொகையாக அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த 500 ரூபாயிலிருந்து அதை இப்போது ஆயிரம் ரூபாயாக இந்த அரசு உயர்த்தி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையை தட்டும் ஒலி)

17–35 மணி.

அடுத்து. மேல்நிலைப்பள்ளிக் கட்டிடத்திற்கு 1989–90ல் 150 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அது போதுமான தொகை இல்லை என்று சொன்னாலும், ஏறத்தாழ ஒரு பள்ளிக் கட்டிடத்திற்கு ரூ.3 லட்சம் என்று பிரிக்கப்பட்டு 50 பள்ளிகளுக்கு அது வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிக் கட்டிடங்களுக்காக நிதி திரட்ட ஹட்கோ நிறுவனத்திடம் இந்த அரசு கடன் உதவி என்ற முறையில் கேட்டு, 150 லட்சம் ரூபாய் அவர்கள் தருவதாக ஒப்புக் கொண்டு, அது இன்னமும் நிறைவேறாமல் இருக்கிறது. அப்படி அவர்கள் தருவார்களேயானால் அதற்குச் சமதொகையை மாநில அரசு தரவேண்டும். 150 லட்சத்திற்கு 150 லட்சம் என்று சேர்த்து அதை 3 கோடி ரூபாயாக உயர்த்தி, கட்டிடங்கள் கட்டுவதில் இந்த அரசு தீவிரமாக ஈடுபட்டு இருக்கிறது. அதற்கு மேலும், ஆயுள் காப்பிட்டுக் கழகம் வீடுகள் கட்டுவதற்கு கோடிக்கணக்கான ரூபாயை கடனாக ஆகமாநில அரசுக்கு வழங்குகிறது. பிரையாரிட்டி ஸ்கீம் என்ற முறையில், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து, நம்முடைய மாநில அரசு பள்ளிக் கட்டிடங்களுக்காக 100 கோடி ரூபாய் அளவுக்குக்கடன் உதவி எதிர்பார்த்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. அதிலே 30 கோடி ரூபாய் கிடைப்பதற்குக் கூட இடையூறு இருக்கிறது. பள்ளிக் கட்டிடம் என்பது ஏற்கெனவே உள்ள அரசாங்கம் ஏற்றுக் கொண்டக், கொள்கையின்படி, பிரையாரிட்டி, பட்டியலில் இல்லை. அவ்வாறு முன்னுரிமை பட்டியலில் சேர்க்க வைத்து, 30 கோடி ரூபாய் அளவுக்குக், கடன் கிடைப்பதாக இருந்தாலும், 30 ஆண்டுகளில் அதைத் திருப்பிச் செலுத்தி விட ஒத்துக் கொண்டு பள்ளிக் கட்டிடங்கள் கட்டலாம் என்ற முயற்சியிலும் நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் அதிக மதிப்பெண் வாங்கும் மூன்று பேர்களுக்கு மட்டும் பரிசு வழங்கும் திட்டம் ஏற்கெனவே இருந்ததை மாற்றி, ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண் பெறும் மூன்று பேர்களுக்கு, ரூ.3000, 2000, 1000 என்ற வீதத்தில் 15 பரிசுகளை உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அளிக்கும் அளவுக்கு, ஐந்து வகையான

பாடத்திலும் அதிக மதிப்பெண் பெறுகின்ற மாணவர்களுக்கு அந்தப் பரிசுகளை வழங்க முற்பட்டுள்ளோம். மேல் நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் அதைப்போல அந்தப் பரிசுகளை வழங்குவதில் தொகையையும் உயர்த்தி, பாடங்கள்தோறும் பரிசுகள் வழங்குகிற ஒரு புதிய முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக் கிறோம்.

கல்லூரி ஆசிரியர்களின் குறைகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். யு.ஜி.சி. வழங்கிய ஊதிய உயர்வை, வேறு பல மாநிலங்களைவிட முன் கூட்டியே வழங்கியது நமது மாநிலம்தான். இரண்டு மூன்று ஆண்டுகளாக வழங்குகிறோம் என்று சொல்லிக் கொண்டே கைவிடப்பட இருந்த அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டது இன்றைய தமிழக அரசுதான். அந்த வகையில் அந்த நிதியை, ஏறத்தாழ 50-60 கோடி ரூபாய் ஊதிய பாக்கியை அவர்களுக்குத் தர இசைந்து, கொடுத்த வகையில் 16 ஆயிரம் பேர் அதனால் பலன் அடைந்தார்கள்.

அதைப்போல இன்ஜீயரிங் கல்லூரியிலும், தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையங்களிலும் (Polytechnic) பணியாற்றுகிற ஏறத்தாழ 3000க்கு சற்றுக் குறைவாக 2900 பேர் ஏ.ஐ.சி.டி.இ.யால் தீர்மானிக்கப்பட்ட ஊதிய விகித உயர்வை, தமிழக அரசிட மிருந்து கடந்த ஆண்டு பெற்றிருக்கிறார்கள். ஆகவே கடந்த ஆண்டு மட்டும் 19 ஆயிரம் பேர் அந்த வகையில் பய னுற்றார்கள்.

டியூட்டர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்கள் என்கின்ற விளக்குனர்கள், போதகர்கள் என்ற நிலையில் முதலில் கல்லூரிகளில் பணியாற்றியவர்கள் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள், 12 ஆண்டுகள் கழித்துமேல் நிலைக்கு வந்தவர்கள், தொடர்ந்த பணிமூப்புக்கு அந்தப் பணிக்காலம் முழுவதையும் அப்படியே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டபோது சில—நியாயங்கள் அவர்கள் பக்கம் இல்லை என்றாலும்—அவர்கள் ஆற்றிய பணிக் காலத்தில் பாதிக்காலத்தை பணி உயர்வுக்காக கணக்கில் எடுத்துக் கொள்வது என்ற கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அது இனிமேல்தான் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். எனவே அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கும் இந்த அரசு தயாராக இருக்கின்றது.

நான் முதலில் சொன்னதைப் போல, வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் பணியாற்றிய 500க்கு மேற்பட்ட பணியாளர்கள், அவர்கள் பட்டதாரிகளாக இருந்தாலும் கூட,

[டாக்டர் க. அன்பழகன்] [1990 ஏப்ரல் 3

மாதம் 600 ரூபாய் ஊதியத்தில் கடந்த 6-7 ஆண்டுகளாகப் பணியாற்றினார்கள். அவர்கள் எல்லாம் விருப்பம் தெரிவித்து செகண்டரி கிரேடு ஆசிரியர் பணியில் நியமிக்கப்பட்டு பணி நிரந்தரமாகக் கூடிய வகையில் இடைநிலை ஆசிரியர் பணி அவர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது.

ஏற்கனவே இங்கே கொண்டு வரப்பட்ட ஒரு மசோதா பற்றி உங்களுக்குத் தெரியும். விரைவில் அது நிறைவேற இருக்கிறது. மொழிக் காவலர்களுக்கு ரூ. 250 வீதம் உதவித் தொகை வழங்கிவந்த இந்த அரசு இனி ரூ 350 ஆக வழங்க முன்வந்து அந்தத் திருத்த சட்டத்தையும் இங்கே கொண்டு வந்திருக்கிறது.

சிறந்த தமிழ் நூல்களுக்கு வழங்கப்பட்ட பரிசுகள் முதல் பரிசு ரூ. 2000 என்றும் இரண்டாவது பரிசு ரூ. 1000 என்றும் வழங்கப்பட்டு வந்தன. அதை மாற்றி, இந்த ஆண்டிலிருந்து முதல் பரிசு ரூ. 5000 என்றும், இரண்டாவது பரிசு ரூ. 3000 என்றும், மூன்றாவது பரிசாக ரூ. 1000 என்றும் வழங்கத் தீர்மானித்து அந்தப் பரிசுத் தொகையை நாம் உயர்த்தியிருக்கிறோம்.

17-40 மணி

நூலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒரு பெரிய முயற்சி அதாவது நூலக இயக்கம் என்பது பொதுமக்களுடைய ஆதரவோடு, ஒத்துழைப் போடுதான் வளர முடியும். அது மக்களிடத்தில் எந்த அளவுக்குச் சொண்டு சொல்லப்படுறதோ அந்த அளவுக்கு அதற்கு நல்ல பலன் இருக்கும். அந்த முயற்சியிலே இடைக்காலத்திலே ஒரு தொய்வு ஏற்பட்டு இருந்தது, இப்போது கடந்த ஓராண்டுக் காலமாக அந்த முயற்சி தீவிரமாக்கப்பட்டுப் பல மாவட்டங்களில் நூலக மாவட்ட வளர்ச்சி மாநாடு நடத்தப்படுகிறது. மக்கள் தருகிற நன்கொடைப் பொருள்களை வைத்து அந்தந்தப் பகுதிகளில் அதாவது எந்த எந்த நூலகத்திற்குத் தருகிறார்களோ அவற்றுக்கு வழங்கி அந்த இலட்சக்கணக்கான ரூபாய் நன்கொடைப் பொருட்களின் மூலமாக நூலகங்கள் மேம்படுத்தப்படுகின்றன.

நூலகக்கட்டடம், அதற்கென்ற அமைப்புடன் இருந்தால்தான் நூலகம் சிறப்பாக இயங்க முடியும். பல இடங்களில் அவை வாடகைக் கட்டிடத்தில் இருக்குமேயானாலும் இலவசமாகக் கிடைத்ததானாலும் நூலகத்திற்கு ஏற்றதாக இல்லை. அதாவது பத்து பேர் அமர்ந்து படிப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வில்லை என்றால் சரியாக இருக்காது. எனவே நூலகக் கட்டிடங்களைக் கட்டுகிற முயற்சி நடைபெற்று வருகிறது. 1989-90-ல் 28 நூலகக் கட்டடங்கள் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. மேலும் 54 கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரையில்

1990 ஏப்ரல் 3] [டாக்டர் க. அன்பழகன்]

கட்டடங்கள் கட்டுவதற்காக 297 இடங்கள், மனைகள் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டிருக்கின்றன. மேலும் 500-க்கு மேற்பட்ட நூலகங்களுக்கான இடங்கள் பெறப்பட்டு அந்த இடங்களை நூலகத்திற்குத் தருவதற்காக அரசாங்கத்தின் இன்னொரு துறையினுடைய இசைவைப் பெறவேண்டிய நிலையில் இருக்கிறது. அரசுக்குச் சொந்தமான நிலங்களை வழங்குவதற்கான தீர்மானங்கள் உள்ளாட்சி மன்றங்களால் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தத் துறையினுடைய இசைவைப் பெற்று அந்த இடங்கள் எடுத்துக்கொள்ளப்படுமேயானால் அவையெல்லாம் நூலகங்களாக அவற்றுக்குத் தேவையான நல்ல கட்டடங்களாக உருவாகும். அதற்கான வழி வகைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இன்னொன்று, 500 பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் இருந்தால் ஒரு தொடக்கப்பள்ளிக்கூடம் அங்கே உருவாக வேண்டும் என்ற கருத்து இருக்கிறது அதைப்போலவே 5000-க்கு மேற்பட்ட மக்கள் தொகைகொண்ட கிராமங்களுக்கு நூலகங்கள் அமைக்க வேண்டும் என்ற குறிக்கோள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலும் 590 கிராமங்களில், இப்போது நூலகங்கள் இல்லை. அவற்றில் 269 கிராமங்களில், நூலக வழங்கு முனை அதாவது 'டெலிவரி ஸ்டேஷன்' ஏற்படுத்தி, இன்னொரு நூலகத்தோடு இணைத்து 5000-க்கு மேற்பட்ட மக்கள் இருக்கின்ற அந்தப் பகுதிகளில் நூல்களை வழங்க, திரும்பப் பெற ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதும் அண்மையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இனி அடுத்த ஆண்டில் நூலகங்களை மேலும் பல இடங்களில் திறக்கவும், அதை வளர்க்கவுமான அந்தக் கடமையை அந்தத் துறை ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்த ஆண்டு தொடர்ந்து பல திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. ஒன்று எல்லா தொடக்கப் பள்ளிக் கூடங்களிலும் படிப்படியாக பெண்களே தாய்மார்களே ஆசிரியர்களாக இருக்ககக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும் என்பது இந்த அரசு ஏற்றுக்கொண்ட ஒரு கொள்கை. கடந்த ஆண்டு, முதல் இரண்டு வகுப்புகளுக்குப் பெண்களையே ஆசிரியர்களாக நியமிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. ஏறத்தாழ 100-க்கு 90 இடங்களில் முதல் இரண்டு வகுப்புகளுக்கு அங்கேயுள்ள பெண்களே, ஆசிரியைகளே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வகையில் செய்யப் பட்டிருக்கிறது. சில இடங்களில் இல்லாமல் இருக்கலாம். இங்கே பேசிய தர்மபுரி மாவட்ட உறுப்பினர் அவர்கள் கூடச் சொன்னார்கள். அதுபோன்ற மலைப்பகுதி, காட்டுப் பகுதி பெண்கள் செல்ல முடியாத பகுதி போன்றவற்றில

அவ்வாறு ஆண்களை நியமிப்பது தவறு இல்லை. எனவே நியமிக்கப்படக்கூடிய இடங்களில் எல்லாம பெண்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு மூன்றாவது வகுப்புக்கும் தாய்மார்களே ஆசிரியைகளாக இருக்கும்படியான ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் மேற்கொள்ளும்.

ஆனால் அப்படி மேற்கொள்கிறபோது ஆங்கிலம் பயிற்றுவிக்கக்கூடிய நிலையில் இல்லாத தாய்மார்கள் இருந்தால் அங்கே ஆங்கிலம் பயிற்றுவிக்கக் கூடிய ஒரு ஆசிரியரை நியமிக்கவேண்டிய கட்டாயம இருக்கிறது. இருந்தாலும் தாய்மார்களே ஆசிரியர்களாக இருக்கக்கூடிய பள்ளிகளில் மூன்றாவது வகுப்பு ஆங்கிலப் பாடத்தை 4-வது வகுப்பு ஆசிரியர்கள் கூட எடுத்து நடத்திவிட முடியும். எனவே அப்படிப்பட்ட முறையில் அதற்கு ஈடு கொடுத்து தாய்மார்களை, பெண்களை அதிகரிக்க வழிசெய்யப்படும்.

அடுத்து முதல் மூன்று வகுப்பு மாணவர்களுக்குத் தேர்வு நடத்துவது மட்டும் அல்ல; 6 மாதத்திற்கு ஒருமுறை அவர்களுக்குத் தேர்வு நடத்தி, அந்தத் தேர்வில் அவர்கள் பெறுகிற எண்களையும, மதிப்பெண்களையும் அவர்களுடைய பெற்றோர்களுக்குத் தெரிவிக்கிற ஒரு முறையை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு அத்துறைக்குத் தெரிவித்துள்ளது. என்ன காரணம் என்றால தேர்வு எழுதுகிற ஒரு பழக்கமே கூட பிள்ளைகளைப் படிப்பதில் ஊக்கப்படுத்துகிறது. தேர்வு எழுத வைத்து அதிலே சிலர் பெயில் செய்யப்பட வேண்டும்; அல்லது தோல்வி அடையவேண்டும் என்று நான் கருதவில்லை. தேர்வு எழுதவேண்டும்; அதிலே பெறுகிற எண்களுக்காக அந்தப் பிள்ளைகள் பாராட்டப்படுவார்களேயானால், அப்படிப் பாராட்டுவார்கள் என்ற நிலை இருந்தால் 100-க்கு 90 பிள்ளைகள் கொஞ்சம் ஆர்வத்தோடு படிப்பார்கள். ஆகவே இந்த முதல் 4 வகுப்பு, 5-வது வகுப்பு வரையில் உள்ள பள்ளிக் கூடங்களில் தேர்வுகளுக்கு முக்கியத்துவம் இல்லாமல் போய்விட்ட காரணத்தால் 6 மாதத்திற்கு ஒரு முறை அதாவது half yearly தேர்வையும் நடத்தி, அந்தத் தேர்வுகளின் மதிப்பெண்களை அவர்களுடைய பெற்றோர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட இருக்கின்றன.

17-45 மணி

இனி மற்றொன்று. அரசு 439 தொடக்கப்பள்ளிகள் தொடங்குவது மட்டுமல்ல, இதற்கு முன்னாலே தொடக்கப் பள்ளிகளைத் தனியார் தொடங்குவதற்குத் தடை இருந்தது. எந்த ஒரு

தனிப்பட்ட அமைப்பும், அறநிலையத்தாரும் தாங்கள் விரும்புகின்றபடி ஆரம்பப் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கக் கூடாது என்று ஏற்கெனவே தடை இருந்தது. இப்போது அந்தத் தடை நீக்கப்படுகிறது. எந்தத் தொண்டு நிறுவனமும் ஆரம்பப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து பொது நன்மைக்காக நடத்தலாம்.

மற்றொன்று, ஆசிரியர் பயிற்சி மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஏனென்றால் தேவைக்காக ஆசிரியர் பயிற்சி தொடங்கி, தேவையில்லாமலேயே பல ஆயிரம் பேருக்கு ஆசிரியர் பயிற்சி தருகின்ற நிலைமை ஏற்பட்டு, ஆசிரியர் பயிற்சி பெற்றுவிட்டால் எப்படியும் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அதிக எண்ணிக்கையில் ஆசிரியர் பயிற்சி பெறுகிற ஒரு சூழ்நிலை உருவாகிவிட்டது. அப்படியிருக்கின்ற சூழ்நிலையிலேதான் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 வகுப்பு தேறியவர்கட்கு ஆசிரியர் பயிற்சி என்று ஒரு வகுப்பை வைத்து அதற்கென்று ஆசிரியர்களைப் புதிதாக நியமிக்காமல் training without teacher என்பதுபோல ஏற்கெனவே உள்ள ஆசிரியர்கள் தான் அந்தப் பாடத்தை நடத்தவேண்டுமென்று முறை வகுத்து, அப்படி ஒரு முறை ஏற்படுத்தப்பட்டது. அதிலே தகுந்த பயிற்சி தந்ததாக நான் நம்பக்கூடிய அளவுக்கு, அது அமையவில்லை.

மற்றொன்று, ஒரு ஆண்டுக்கு 10 ஆயிரம் 12 ஆயிரம் பேர் அதிலே தேர்ச்சி பெற்றார்கள். அந்த 12 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா என்றால் அரசு ஏற்கெனவே நடத்துகின்ற ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, மாவட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, தனியார் முறையாக நடத்துகிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. இவர்களோடு அரசாங்கத்தினுடைய மேல்நிலைப் பள்ளியிலே ஆசிரியர் பயிற்சி தரப்பட்ட காரணத்தினால் வேலை இல்லாத் திண்டாட்டம் மிகுந்து கடந்த ஆண்டு 33 ஆயிரம் பேர் வேலை தேடுவோர் பட்டியலிலே காத்திருந்தார்கள். 29 ஆயிரம் பேர், ஆசிரியர் பணி கிடைப்பதற்காக நேர்முகத் தேர்வுக்கு வந்தார்கள். 3,300 பேருக்கு வேலை கிடைத்தது. 29 ஆயிரம் பேர் வந்து, 3,300 பேருக்குத்தான் கிடைத்தது. இந்த ஆண்டு பட்டியலைப் பார்த்தால் இன்னும் 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று அதிகமாகும். எனவே அவ்வளவு பேர் வேலையில்லாமல் இருக்கக்கூடிய நிலைமையில் professional course என்ற முறையில் நடத்துவது முறையல்ல என்ற ஒரு காரணத்தினால், இந்த மேல்நிலைப் பள்ளியிலே நடத்துகின்ற ஆசிரியர் பயிற்சி வகுப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஆண்டுக்கு ஏறத்தாழ 4,500 பேர்கள், 5,000 பேர்கள் தகுந்த தேர்ச்சி பெறும் முறையில் அவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி தருவதற்கு மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அரசு உதவி பெறுகிற ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், அரசு உதவி பெறாமலேயே சில முறையோடு நடக்கின்ற ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், இந்தப் பள்ளிகளில்

ஏறத்தாழ 5,000 பேர்களுக்கு மேல் முறையாகவே பயிற்சி பெறுகின்றார்கள். எனவே அந்தப் பயிற்சி போதுமான அளவில் இருக்கின்ற காரணத்தினால், இந்த மேல்நிலைப்பள்ளி பயிற்சி நிறுத்தப்பட்டது தவறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஓர் ஆண்டுக்கு 4,000 பேருக்குப் புதிதாக வேலை கிடைத்தால் அதுவே பெரிய வெற்றிகரமான ஒரு சூழ்நிலையை உருவாக்கும். இப்போது வேலையின்றி இருக்கின்ற (Backlog) தங்கிப்போய் இருப்பவர்களெல்லாம் வேலை பெற வேண்டுமென்றால் குறைந்தது 4,5 ஆண்டுக் காலமாவது ஆகும். ஆகவே அந்தச் சூழ்நிலையை மனதிலே வைத்து, மேலும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைத் தரம் உயர்த்துவதற்காக படிப்பு, பயிற்சி, ஆராய்ச்சி இவற்றோடு சேர்ந்த பயிற்சி நிலையம் நடத்துவதற்காக மத்திய அரசு பெருமளவு உதவி செய்ய முன் வந்திருக்கின்ற காரணத்தினாலேயே ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட மையப் பயிற்சி நிறுவனம், ஏறத்தாழ 30 இலட்சம், 40 இலட்சம் ரூபாய் செலவில் 4 மாவட்டங்களுக்கு உருவாகி விட்டன. இன்னும் 7 மாவட்டங்களுக்கு இந்த ஆண்டு உருவாக இருக்கின்றன. அந்த நிறுவனங்களும் மிகச் சிறந்த முறையில் ஆசிரியர்களுக்கு நல்ல தேர்ச்சி வழங்கப் பயன்படும்.

இரண்டாவது, அந்த மாவட்ட மைய ஆசிரியர் ஆய்வுக் கல்வி பயிற்சி நிறுவனம் ஆசிரியர்கள் அனைவருக்கும் மறு பயிற்சிகளை நடத்தும். 3 மாதத்திற்கு ஒரு முறை ஆசிரியர்களுக்கு, 100, 200 ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு பாடத் துறையிலும் மறு பயிற்சி அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினால் அவர்கள் பெறக்கூடிய அந்தப் பயிற்சி மாணவர்களுடைய கல்வித் தேர்ச்சியை உயர்த்தும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல ஆசிரியர் கல்விப் பயிற்சி இவ்வளவு நாளும் பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியவர்களுடைய மேற்பார்வையில் செயற்பட்டது. கல்லூரி மட்டத்திலே கல்லூரிக் கல்வி இயக்குநருடைய மேற்பார்வையிலேயும், பள்ளி மட்டத்திலே செகண்டரி கிரேட் என்ற அளவிலே பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுடைய மேற்பார்வையிலேயும் இருந்தன. அப்படி ஏறத்தாழ இரண்டையும் சேர்த்து 60, 70 அரசாங்கப் பயிற்சிப் பள்ளிகள் நடைபெற்று வந்தன. இப்போது அவற்றை எல்லாம் தனியாக ஒரு இயக்குநர் இருந்து கவனித்தால் தான் ஆசிரியர் பயிற்சித் தரத்தை உயர்த்தமுடியும். இல்லையென்றால் அவற்றில் தனிக் கவனம் செலுத்தாவிட்டால் ஆசிரியர் பயிற்சித் தரம் குறையும் என்பதற்காக மாநில அளவில் தனியாகவே ஒரு இயக்குநர், ஆசிரியர் பயிற்சி கல்வித்துறை இயக்குநர் என்ற முறையில் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் மேற்பார்வையில் இந்தப் பயிற்சி நிலையங்கள் எல்லாம் கண்காணிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

17-50 மணி

அடுத்து, பணியில் இருக்கும்போது இயற்கை எய்தக்கூடிய ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் ஆகியோரைச் சார்ந்திருப்பவர்களுக்கு, அவர்களுடைய வாரிசுதாரர்கள் என்ற முறையில் வேலை கேட்டுப் பல பேர் விண்ணப்பிக்கிறார்கள். குறிப்பாக, தந்தையார் இறந்துவிட்டார், தாயார் இறந்துவிட்டார், ஆசிரியராக இருந்தார் அதனால் குடும்பத்தைக் காக்க கருணை அடிப்படையில் உடனே எங்களுக்கு வேலை தர வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களிலே பல பேர்களுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படக்கூடிய தகுதி இல்லை. அவர்களுக்கு இருக்கிற தகுதிக்குத் தகுந்தாற்போல, தகுந்த அளவிற்கு வேலை இல்லை. எழுத்தராக நியமிக்க அரசாங்கத்திற்கு விருப்பம் இருந்தாலுங்கூட, வேலைகள் அந்த அளவுக்கு ஏற்படுத்த முடியவில்லை. ஆசிரியர் துறையிலே ஏற்படுகிற அளவுக்குப் போதிய வேலைகள் மற்ற துறைகளிலே ஏற்படுத்த நிதிப் பற்றாக்குறை இடையூராக இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட கம்பாஷனேட் கிரவுன்ட்ஸ்—இரங்கத்தக்க நிலையில் விண்ணப்பிக்கிற அவர்களுக்கு 500 பேர்கள் விண்ணப்பித்தால் 30 பேர்கள், 40 பேர்களுக்குத்தான் 2 ஆண்டுக்காலம், 3 ஆண்டுக் காலத்தில் வேலை தரக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால், அவர்களிலே யாராவது ஆசிரியர் பயிற்சியிலே சேர்ந்து தங்களுடைய தகுதியை உயர்த்திக் கொண்டு ஆசிரியராக வர விரும்புவார்களானால், அரசாங்கம் நடத்துகின்ற இந்த ஆசிரியர் பயிற்சி நிலையங்களிலே ஒவ்வொன்றிலும் இரண்டு இடங்கள் மறைந்த ஆசிரியர்களுடைய பிள்ளைகள் அல்லது கல்வித் துறையிலே பணியாற்றியவர்களுடைய பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர்கள் தவறிப்போன காரணத்தால், அந்த உரிமையின் பேரில் இடம் பெற விரும்புவார்களானால் அவர்களுக்கு இடம் வழங்க இரண்டு இடங்கள் ஒதுக்கி வைக்க இந்த அரசு முன் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

On compassionate grounds two seats are allotted for these people who apply.

அதேபோல் மற்றொன்றை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கிருக்கிற பள்ளிக்கூடங்கள் எல்லாம், என்ன காரணத்தாலோ ஊராருடைய கவனத்திற்கு ஆட்பட்டதாக இல்லை. ஊர் மக்களுடைய கவனத்திற்கும் பள்ளிக்கூடத்திற்கும் நெருக்கமான தொடர்பு ஏற்படவில்லை. சில இடங்களிலே பெற்றோர் ஆசிரியர் சங்கம் இருந்தாலுங்கூட, பல இடங்களிலே தேவையான அந்தக் கவனம் செலுத்தப்படவில்லை. எனவே, இனி எதிர்காலத்தில், பெற்றோர் ஆசிரியர் சங்கம், ஒவ்வொரு பள்ளிக்கூடத்தையும் தகுந்த முறையிலே கவனித்துக்கொள்ளக் கூடிய அளவுக்கும் பள்ளிக்கூடத்திற்குத் தேவையான இன்றியமையாத சில உதவிகளைச் செய்யக்கூடிய அளவுக்கும் கூட, குடி தண்ணீரோ அல்லது ஏதோ கழிப்பறையோ தேவையானால் அமைத்துத் தரவும் அல்லது இவை கூட இல்லையென்பதை

அரசாங்கத்திற்குத் தெரிவித்து நிறைவேற்ற வழி காணவும்—பெற்றோர் ஆசிரியர் சங்கம் செயற்பட வேண்டும். பல உதவிகளை அவர்கள் செய்ய முடியும். பள்ளிக்கூடத்தை நல்லமுறையில் கண்காணிக்க முடியும். எனவே, கட்டாயமாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலேயும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை ஏற்படுத்தவும், உரிய தேர்தல் நடத்தவும் அதே போல பள்ளியை மேம்படுத்துவதற்கு ஒரு செயல் திட்டம் அவர்கள் மூலமாகத் தயாரிக்கவும் இந்த அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

இன்னொன்று, பள்ளிக் கட்டிடங்கள், மற்றவற்றிற்கெல்லாம் அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி போதாது என்பதை நான் முன்னரே உணர்ந்து இருக்கிறேன். ஒரு காலத்தில் எந்த ஒரு செல்வரோ அல்லது நல்ல செல்வாக்கு பெற்றவரோ, புகழ் பெற்றவரோ தம்முடைய பெயர் நிலைக்கும்படியாக ஒரு கடமையைச் செய்ய விரும்பினாலும் பள்ளிக்கூடத்தை அவர்களே ஏற்படுத்தினார்கள். இந்தக் காலத்தில், ஒரு பள்ளிக்கூடத்தை நடத்துவது என்பது பெரிய செலவுள்ள ஒரு துறையாக இருக்கிற காரணத்தால் பலபேர்கள் முன்வரவில்லை. எனவே, ஒரு தொடக்கப் பள்ளிக்கூடமாக இருந்தால், ரூ. 1 இலட்சம் அளவுக்கு யாராவது கட்டிடம் கட்டிக் கொடுத்தால், அவர்கள் பெயர் வைக்கப்படும் — நான் இந்த அறிவிப்பை, ஒரு ஆலோசனை அறிவிப்பாகத்தான் வெளியிடுகிறேன். ஏதாவது சில திருத்தங்களுக்கு என்னுடைய ஆலோசனை என்றைக்கும் உட்படும். ஏனென்றால், அதற்கு அமெண்ட்மெண்ட் உண்டு என்பதற்காகச் சொல்கிறேன் ரூ. 1 இலட்சம் அளவுக்கு நன்கொடை கொடுத்தால், 2 அறைகள் கட்டித் தந்தால், அவர்களுடைய பெயரை அந்த ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்திற்கு வைக்கலாம், ரூ. 2 இலட்சம் நன்கொடை கொடுத்தால் ஒரு நடுநிலைப் பள்ளிக்குப் பெயர் வைக்கலாம். ரூ. 5 இலட்சம் அளவுக்கு நன்கொடை கொடுத்தால் ஒரு உயர்நிலைப் பள்ளிக்குப் பெயர் சூட்டலாம். ரூ. 10 இலட்சம் நன்கொடை கொடுத்தால், ஒரு மேல்நிலைப் பள்ளிக்குப் பெயர் சூட்டலாம். அவ்வளவு பெயர் சூட்டக்கூடிய பள்ளிக்கூடங்கள், கட்டிடம் கட்ட வேண்டிய பள்ளிகள் இருக்கின்றன. எனவே, இதை நான் ஒரு பொது வேண்டுகோளாகச் சொல்வதற்குக் காரணம், பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் நமக்குக் கிடைக்க வேண்டும்; மாணவர்களும் நல்லமுறையிலே பயிற்சி பெறத் தகுந்த கட்டிடங்களை உருவாக்க வேண்டும் என்பதற்குத்தான். அதற்காக, யாராவது ஒருவர் ரூ. 1 இலட்சம், ரூ. 2 இலட்சம் கொடுத்து, ஒரு மேல்நிலைப் பள்ளிக்குப் பெயர் வைக்கச் சொன்னால் அது ஏற்பதற்கு அவ்வளவு பொருத்தமாக இருக்காது. செலவுக்கு ஈடுகொடுக்கக் கூடியதில் ஏறக்குறைய பாதி அளவுக்காவது நன்கொடை கொடுத்தால், அப்படிப்பட்ட பெருமக்களுடைய பெயரை வைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை—பெயர் வைப்பதற்காக மட்டுமல்ல, நிதி கிடைப்பதற்காக இதனை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 3] டாக்டர் கா. அன்பழகன்

அடுத்து, பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளியாக, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவது பற்றி நான் முன்னரே ஒரு எண்ணிக்கையைத் தெரிவித்தேன். இந்த ஆண்டு ஏராளமான விண்ணப்பங்கள் இருக்கின்றன. ரூ. 22,000, கட்டுவதாக, ரூ. 25,000 கட்டுவதாக முன்வந்து பெற்றோர் ஆசிரியர் சங்கச் சார்பாகவோ, பள்ளிக்கூடக் குழுக்கள் சார்பாகவோ, வளர்ச்சிக் குழு சார்பாகக் கட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன்.

200 பேர் மேல்நிலைப்பள்ளி வேண்டுமென்று கேட்டால் 40 பள்ளிகள், 50 பள்ளிகள்தான் தரக்கூடிய நிதி நிலைமை அரசுக்கு இருக்கிறது. மாவட்டத்திற்கு நான்காகத்தான் அதைப் பிரிக்க வேண்டும். இன்னும் என்னால் முடியும் என்றால் தொகுதிக்கு ஒன்று என்ற அடிப்படையிலே கூடப் பிரிக்கலாம். ஆனால் எண்ணிக்கை அந்த அளவுக்கு இல்லை. ஆகவே, மேல்நிலைப்பள்ளி ஒரு வட்டாரத்தில் வருகிறது என்றால் உயர்நிலைப்பள்ளி வேறு ஒரு வட்டாரத்தில் வரட்டும்; நடுநிலைப் பள்ளி ஒரு வட்டாரத்திலே வரட்டும். முடிந்தவரை அதைப் பங்கிட்டுத் தரவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை, ஆனால் நடைமுறையில் இதில் சிக்கல் அதிகம் ஏற்படுகிறது. விரும்புகிறவர்கள் கட்டாயம் எங்கள் ஊருக்கு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி வேண்டும் என்று கேட்கிறார்கள். அப்படித் தனியார் நடத்துகிற பள்ளிக்கூடங்களை உயர்த்த வேண்டுமென்று விரும்பினால், 3 ஆண்டுக் காலத்திற்கு அந்தச் செலவுகளை அவர்களே ஏற்றுக்கொண்டால் இப்போதே உயர்த்திக் கொள்ள லாம். அந்த 3 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு அரசே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். M i im m condition— 3 ஆண்டு காலத்திற்கு ஆசிரியர்களுக்கு, மற்றவற்றிற்கு ஏற்படுகிற செலவை அந்த நிர்வாகமே ஏற்றுக்கொள்ளுமானால், அதனால் ஏற்படுகிற புதிய பொறுப்பை இப்போது அரசு ஏற்றுக்கொள்ளத் தேவை இல்லாவிட்டால், அப்படி உயர்த்துவதற்கு இந்த அரசு அனுமதிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

கடந்த காலத்திலும் இப்படி ஏறத்தாழ 50, 60 பள்ளிகள் இந்த முறையிலே இடம் பெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பகுதிநேர தொழில் கல்வி ஆசிரியர்கள் பணியை வரையறை செய்வது பறறி நான் முன்னரே விடை நேரத்திலே விளக்கிக் கூறி இருக்கிறேன். மறுபடியும் விளக்கத் தேவையில்லை.

அடுத்தப்படியாக, கல்லூரிகள் தொடங்குவது பற்றியும் ஒரு பெரிய தடை இருந்தது. தடை என்றால் இனிமேல் கல்லூரிகள் தொடங்கத் தேவையில்லை என்று இருந்தது. அதற்கும் ஒரு

அதற்கும் ஒருநியாயமான காரணம் இருக்கிறது. ஒரு தொடக்கப் பள்ளிக்கூடத்தில் 4 வகுப்பில் சேர்ந்து 300 பிள்ளைகள் படிப்பார்களானால் 6 ஆசிரியர்கள் தான் இருப்பார்கள். சில இடங்களில் 5 பேர் இருக்கிறார்கள், 4 பேர்கள் இருக்கிறார்கள். அந்த விகிதாச்சாரத்திலே பார்த்தால் 900 பிள்ளைகள், 1000 பிள்ளைகள் படிக்கக் கூடிய ஒரு தொடக்கப் பள்ளியில் எத்தனை கேட்டால் 20 பேர். 1000 பேர் படிக்கிற ஒருஆசிரியர்கள் என்று உயர்நிலைப் பள்ளியில் எத்தனை ஆசிரியர்கள் என்று கேட்டால் 35 பேர்,40 பேர். 1000 பேர் படிக்கிற ஒரு கல்லூரியில் எத்தனை ஆசிரியர்கள் என்று கேட்டால் 95 பேர். இது ஒரு விகிதாச்சாரம்.

நான் கல்லூரிக்கல்வித் துறை இயக்குநரிடம் கேட்டபோது, கல்லூரியில் 12 பேருக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாச்சாரம் தான் அரசு கல்லூரிகளைப் பொறுத்தவரையில் இருக்கிறது என்றார். மேல்நிலைப் பள்ளியிலே 30 பேர்களுக்கு ஒரு ஆசிரியர்; உயர்நிலைப் பள்ளியிலே 40 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் நடுநிலைப் பள்ளியில் 50 பேர்களுக்கு ஒரு ஆசிரியர்; தொடக்கப் பள்ளியில் 60 பேர், 70 பேர்களுக்கு ஒரு ஆசிரியர். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருப்பதால் கல்லூரிக் கல்விக்கு அரசாங்கம் அதிகமாக செலவழிக்கிற நிலைமையில் அந்தக் கல்லூரிக் கல்வியை வளர்ப்பது என்பது இயலாத காரியம்.

கல்வியினுடைய இன்றியமையாமையைப் பற்றி எண்ணுகிற போது கூட,எல்லோரும் பட்டதாரி ஆகவேண்டுமென்ற ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ள என்னால் இயலாது. ஆர்வம் உள்ளவர்கள் பட்டதாரி ஆக வேண்டுமென்று விரும்பினால் மேற்படிப்பு படிக்கலாம். மக்கள் எல்லோரும் கல்வி கற்றவர்கள் ஆகவேண்டுமென்றால், அது வேறு. எல்லோரும் பட்டதாரி ஆக வேண்டுமென்றால்அரசாங்கத்தாலே மட்டும் அதை நிறைவேற்ற, செயல்படுத்த முடியாது.சோவியத் நாட்டிலும் எல்லோரும் பட்டதாரி ஆகியிருக்கமாட்டார்கள்.அமெரிக்காவிலும் எல்லோரும் பட்டதாரி ஆகியிருக்கமாட்டார்கள். ஆனால் அந்த நாடுகளிலே வாழ்க்கைக்கு வேறு வழிகள், தகுந்த தொழில்கள் அவரவர்களுக்கு ஏற்றவகையில் பல கோணங்களிலே இருப்பதால், பட்டதாரி ஆகாதது ஒரு குறையாகத் தெரியவில்லை. ஆனால் நம்முடைய நாட்டில் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கே பட்டதாரி ஆகவேண்டுமென்ற எண்ணம் நீண்டநாட்களாக நம்முடைய மனதிலே பதிந்து விட்டதால், பட்டதாரி ஆகவேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. இப்போது பட்டதாரி ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் சொன்னதைப்போல, வேலை கிடைக்காத நிலைமை நாடெல்லாம் இருக்கிறது. இருந்தாலும் கூட ஒரு மேனியா என்று சொல்லுவார்கள். ஒரு எண்ணம், ஏதோ பட்டதாரி ஆகாத காரணத்தால் தன் வேலை கிடைக்கவில்லை என்பது போன்ற ஒரு எண்ணத்திலே தள்ளப்பட்டு பட்டதாரி ஆக முயற்சி செய்கிறார்கள்.

அதே நேரத்தில் விகிதாச்சாரத்தைப் பார்த்தால் நம்முடைய நாட்டில் பட்டதாரி ஆகிறவர்களுடைய எண்ணிக்கையைப், பார்த்தால், பள்ளியில் படிக்கிற 14 வயதுள்ளவர்கள் ஒரு இலட்சம் பேர் இருந்தால் பட்டதாரி ஆகிறவர்கள் ஏறத்தாழ ஆயிரம் பேர் அல்லது இரண்டாயிரம் பேர்தான். ஆக விகிதாச்சாரத்தில் அதிக அளவில் இல்லை. ஆனால் மக்களுடைய எண்ணத்திலே என்ன இருக்கிறது என்றால் கல்லூரியிலே படிக்காத காரணத்தால்தான் வேலை கிடைக்கவில்லை என்ற ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. அதனாலே கல்லூரிகளை விரும்புகிற இடங்களிலே எல்லாம் ஏற்படுத்த முடியுமா என்றால், அதற்கு ஆகிற செலவை வைத்துப் பார்க்கிறபோது, அவ்வளவு எளிது அல்ல. அதைவிடக் கல்வியை வளர்க்கத் தேவையான அடிப்படையான பணி நமக்கு அதிகமாக இருக்கிறது.

அண்மையில் பொறியியல் கல்லூரிகள் பல இடைக் காலத்திலே ஏற்பட்டுள்ளன. அந்தமுறை போல 'சுயநிதி' கல்லூரிகள் என்ற அந்த பெயர் இல்லாமல் un-aided Government recognised colleges என்ற முறையில் unaided ஆக உருவாக்குவதை அரசு ஏற்கலாம் என்று கருதுகிறது. Self finance institution என்று சொன்னால் ஒரு தவறான கண்ணோட்டம் அதற்கு ஏற்படுகிறது. எப்படியும் நிதி சேர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஆகவே, இதையே விதிமுறைகளுக்கு உட்பட்டு, அரசாங்கத்தின் உதவியைப் பெறாமல், மாணவர்களின் கட்டணத்தை மட்டும் சற்று அதிகம் வைத்து, படிக்கிறவர்களுக்கு 'ஃபீசை' சற்று அதிகம் வைத்துக் கொண்டு நடத்தலாம். அரசாங்கம் ஏற்றுக்கொண்ட சில அற நிலையங்கள் அல்லது அறக்கட்டளைகளை வைத்திருப்பவர்களுக்கு, பெரிய நிதியை சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு அவர்களுடைய விண்ணப்பத்தின் அடிப்படையில் பரிசீலனை செய்து அனுமதி அளிக்கலாம். அப்படிக் கடந்த காலத்தில் 2,3 கல்லூரிகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு கூட அப்படி விண்ணப்பம் வருமானால் ஆய்வுசெய்து அனுமதிக்கப் படும்.

(18-00 மணி)

அடுத்து தனியார் தொழில் கல்லூரிகள் சரியாகச் செயல்பட வில்லை என்றும், அங்குள்ள ஆசிரியர்கள் பலர் தொல்லைக்கு ஆளாகிறார்கள், அவர்கள் அவர்களுடைய வேண்டுகோளை அரசுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்றும் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். எனவே, ஆசிரியர்களுடைய துன்பம், தொல்லை, வேலையிலிருந்து திடீரென்று நீக்கப்படுதல், இப்படிப்பட்ட முறை கேடுகள் நடக்காமல் இருக்க தனியார் கல்லூரிகளை முறைப்படுத்துவதற்கான சட்டம் செயல்படும் முறையைப் பரிசீலிப்பதற்காக அரசு கல்விச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்ற வுடன் தேவையான திருத்தங்களுடன் கூடிய, உரிய சட்டங்களை இந்த அரசு நிறைவேற்றும்.

அதுபோல, அரசு நடத்துகின்ற பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அங்கே 15,20 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்ட கருவிகள் கடந்த 10,12 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து பயன்படுத்தப்படும் நிலை இருக்கிறது. புதிய, தரமான, நவீன கருவிகள் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கின்ற 58 பாலிடெக்னிக்குகளிலும், தனியார் பொறுப்பில் இருக்கின்ற பாலிடெக்னிக்குகளிலும் இடம் பெற வேண்டும். குறிப்பாக அரசு நடத்துகின்ற பாலிடெக்னிக்குகளில் தரமுள்ள பயிற்சி தந்தால் அங்கே படித்து வரும் மாணவர்கள் அவர்களாகவே சொந்தமாக தொழில் நடத்தக்கூடிய அளவுக்கு ஊக்கத்தைப் பெறுவார்கள். அதற்கு உலக வங்கியிலிருந்து கடன் கிடைக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேறு மாநிலங்களுக்கு அந்த வகையில் கடன் வழங்கியிருக்கிறார்கள். உதாரணமாக உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் 100 கோடி ரூபாய், 150 கோடி ரூபாய் என்கிற அளவில் அந்தந்த மாநிலத்திற்குத் தகுந்தவாறு உலக வங்கியிடமிருந்து கடன் பெற்றிருக்கின்றன. தமிழக அரசும் தன்னுடைய விண்ணப்பத்தை உலக வங்கிக்கு மத்திய அரசு மூலம் தந்திருக்கிறது. 80 அல்லது 100 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 5 ஆண்டுக்குள், தமிழ்நாட்டிலுள்ள பல்தொழில் பயிலகங்கள் அத்தனையும் தரம் உயர அதன் மூலம் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க முடியும்.

இன்னொன்று பற்றியும் இங்கே பேசப்பட்டது. அரசுப் பணியாளர்களிடம் பின்பற்றப்படும் வைப்பு நிதி முறையை, ப்ராவிடன்ட் பண்ட் முறையைத் தனியார் தொழில் நுட்பப் பயிலகப் பணியாளர்களுக்கும் பின்பற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். எந்தத் துறையாக இருந்தாலும் சம நிலையில் வைத்துப் பார்க்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், ஏற்கெனவே தனியார் வைப்பு நிதிக்கணக்குகள் எல்லாம் 1–4–1986 முதல் அரசு கணக்கில் வைத்துச் செயல்படுத்த ஆணை இடப்பட்டுள்ளது. இதனை உதவி பெறும், மானிய உதவி பெறும் பயிலகப் பணியாளர்களுக்கும் அரசு விரிவுபடுத்த முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த ஆண்டு நுழைவுத் தேர்வு நடைபெற்றது பற்றி பல்வேறு உறுப்பினர்கள் தங்கள், தங்கள் கண்ணோட்டத்தோடு கருத்துக்களைத் தெரிவித்தார்கள். Aptitude test என்ற அடிப்படையில அமையாமல் அது போய்விடுகிறது என்றும் நேர் முகத் தேர்வுக்கு அழைத்தால்தான் அது முழுமையாக வெற்றி பெறும் என்றும் இங்கே சொன்னார்கள். எப்படிப் பார்த்தாலும் ஒரு நுழைவுத் தேர்வு plus aptitude test என்று இரண்டு டெஸ்ட் வரத்தான் செய்யும். அப்படி வருகின்றபோது favouritism இடம் பெறவாய்ப்பிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒரு நிமிடத்தில்,

1990 ஏப்ரல் 3] [டாக்டர் க. அன்பழகன்]

இரண்டு நிமிடத்தில், ஐந்து நிமிடத்தில் ஒருவனுடைய aptitude ஐக் கண்டுபிடிக்க முடியாது. எவ்வளவு நாள் பழகினாலும் என்னுடைய aptitude-ஐ இன்னொருவர் கண்டுபிடிக்க முடியாது. அப்படி இருக்கும் போது 5 நிமிடத்திற்குள்ளாக aptitude-ஐக் கண்டுபிடிப்பது என்பது சற்று சிக்கலான ஒன்றுதான். ஆனால் இதனை நடத்துகின்ற வல்லுநர்களிடம் இதுபற்றிக் கேட்டபோது தேர்வுக்கான கேள்விகளை அமைக்கும்போதே, aptitude-ம் அதிலேயே சேர்ந்து தகுதிபெறும் வகையில் அதன் பலன் கிடைக்கும் வகையில் அதனை அமைக்கிறோம் என்று சொன்னார்கள்.

அடுத்தபடியாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொன்ன ஒரு கருத்துக்காகச் சொல்கிறேன். கிராமத்திலுள்ள ஏழையெளிய மாணவர்களைவிட நகரத்தில் உள்ள மாணவர்கள் மதிப்பெண்கள் அதிகம் பெற்று, அதிக இடம் பெற நேரிடுகிறது என்று இங்கே தெரிவிக்கப்பட்ட கருத்தைப் பொறுத்தவரையில், அதிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் மீது அக்கறை உள்ள நிபுணர்களைக் கேட்டபோது, அண்மைக் காலங்களில் நகர்ப் புறத்து மாணவர்கட்கு ஈடாக கிராமங்களிலிருந்து வருகின்ற மாணவர்களும் நல்ல முறையில் தேர்வு எழுதி, இடம் பெற்று வருகிறார்கள் என்று சொன்னார்கள்.

(18-05 மணி)

எல்லோரும் வர மாட்டார்கள். இந்தத் தேர்வு எவ்வளவு பேர் எழுதுகிறார்கள்? கிராமங்களிலே 100 பேர்கள் படித்தால் இந்தத் தேர்வு எழுத வருகிறவர்கள் 10 பேர்கள்தான். நகரங்களிலே 100 பேர் படித்தால் 20 பேர்கள் இந்த தேர்வு எழுத வருகிறார்கள். இந்தப் பத்து பேரும் இருபது பேரோடு போட்டியிடும் போது சம நிலையில் நிற்கக்கூடிய அளவுக்குக் கிராமப் புறத்து மாணவர்களும் வளர்ச்சி பெற்று இருக்கிறார்கள். என்ற கருத்தை டாக்டர் குழந்தைசாமி அவர்கள் தெரிவித்தார்கள். இதில் 36,000 பேர் தேர்வு எழுதி 3,000 பேர் எடுக்கப்படும் நிலையில் அல்லது 30,000 பேர் தேர்வு எழுதி 3,500 அல்லது 4,000 பேர் எடுக்கப்படும் நிலைமையில், எட்டுக்கு ஒருவர் என்று எடுக்கப்படும்போது கிராமத்துப் பிள்ளைகளும் ஏறத்தாழ பெற வேண்டிய அளவுக்கு இடம் பெறுகிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதிலே அடிப்படையிலே இருக்கிற உண்மை வகுப்புவாரி அடிப்படையிலே இடம் பிரித்துக் கொடுக்கும் காரணத்தாலே, பரவலாக அனைத்துத் தரப்புக்கும் கிடைக்கும் நிலைமை இருக்கிறது.

அந்த நுழைவுத் தேர்வு எழுத உரிமைபெற குறைந்தபட்சம் ஒவ்வொரு பாடத்திலும் 65 மதிப்பெண்கள் பெற்று மொத்தத்தில் 70 சதவிகிதம் வர வேண்டுமென்பதைக் குறைத்து, பிற்பட்ட வகுப்பாக (Backward class) இருந்தால் மொத்தத்தில் 65 சத விகிதம் பெற்றால் போதும் என்றும், மிகவும் பிற்பட்ட

[டாக்டர் க. அன்பழகன்] [1990 ஏப்ரல் 3

வகுப்பாக (Most Backward class) இருந்தால் 60 சதவிகிதம் பெற்றால் போதும் என்றும், அவர்களும் தேர்வில் கலந்து கொள்ளலாமென்று, நுழைவுத் தேர்வுக்கான குறைந்தபட்ச மதிப்புகளும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமென்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகர்ப்பகுதி மாணவர்கள் நிறைய மதிப்பெண்கள் பெற்றுவிடுகிறார்கள், கிராமப்பகுதி மாணவர்கள் குறைவாக மதிப்பெண்கள் பெறுகிறார்கள் என்பது சாதாரணமாக நிலவுகிற யதார்த்தமான உண்மை. ஆனால் நிபுணர்களைக் கேட்கிற நேரத்தில், கிராமத்தில் இருக்கிறவர்களும் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற நிலைமையைச் சொன்னதால் அந்த முறையிலே எந்தவித மாற்றமும் தேவையில்லை என்ற கருத்திலே அமைச்சரவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் கிராமப்புறத்தில் வாழ்கிற மக்களுக்குப் போதிய பல்வேறு வசதிகள் இல்லாத நிலையில் அவர்களுடைய கல்வித் தரமும், அறிவுத் திறனும் சரியான முறையில் வளர வசதியில்லாத நிலையில் நகர்ப்பகுதி மாணவர்களோடு போட்டி போடக்கூடிய நிலைமை குறைவாக இருக்கிறது. இப்படிப்பட்ட மாணவர்கள் தேர்விலே போட்டியிடும்போது, அவர்களுக்கு 'கிரேஸ் மார்க்' என்ற முறையில் 5 மார்க்கோ, 10 மார்க்கோ போட்டால், அவர்கள் நகர்ப்புறத்து மாணவர்களோடு போட்டியிடுவதற்கு வசதியாக இருக்கும். அதை இந்த அரசாங்கம் பரிசீலிக்குமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை அந்தக் குழுவுக்கு தெரிவிக்கப்படும். ஏனென்றால் அதை அரசாங்கமே தீர்மானிக்க முடியாது. அந்தக் குழு இந்தக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்ய வேண்டுமென்று குழுவைக் கேட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதை நான் முடிவு செய்ய முடியாது, என்ன காரணம் என்றால், இப்படி மார்க் போடுவது முறைப்படி சரிதானா என்ற கேள்வி எழலாம். அதைப்போல ரூரல் ஏரியா என்று எதைக் குறிப்பிடுவது என்பதில் வேற்றுமைகள் வரலாம், காஞ்சிபுரம் ரூரல் ஏரியாவா, உத்திரமேரூர் ரூரல் ஏரியாவா அல்லது சென்னை நகரத்தைத் தவிர எல்லாமே ரூரல் ஏரியாவா, திருச்சி அர்பன் ஏரியாவா, லால்குடி ரூரல் ஏரியாவா இப்படி டிஸ்கிரிமினேஷன் செய்வது எப்படி அமைப்பது என்பதில் சில வேற்றுமைகள் இருக்கின்றன. இதையெல்லாம் ஆய்ந்து ஒருவேளை அவர்கள் அப்படிச் செய்ய முடியுமானால் பிறகு அவர்கள் ஆலோசனைப்படி அரசு அதை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

1990 ஏப்ரல் 3]

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நுழைவுத் தேர்வைப் பொறுத்தவரையில் கிராமங்களிலே இருந்து வருகிற முதல் தலைமுறை மாணவர்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் தர வேண்டுமென்ற கருத்து பரவலாக இருக்கிறது. ஆகவே அதன் அடிப்படையிலாவது அந்தக் குழுவுக்குப் பரிந்துரை செய்து, கிராமப்புறப் பகுதிகளிலிருந்து வருகிற முதல் தலைமுறை மாணவர்களுக்கு இந்தச் சலுகையை நீட்டிப்பதற்கு அரசு முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, முன்னர் சொன்னதுபோல இவைகள் எல்லாம் அந்தக் குழுவால் ஆய்வு செய்யப்பட வேண்டும். அந்தக் குழுவை ஆய்வு செய்யும்படி நாங்கள் கேட்டுக் கொள்வோம்.

அண்மையிலே சத்துணவுத் திட்டம் கல்வித் துறையோடு இணைக்கப்பட்டிருந்தாலும் கூட, அது ஊரக சமூக நலத்துறையோடு வைத்து நிர்வகிக்கப்படுவதுதான் நிர்வாகத்திற்கு நல்லது என்ற ஒரு கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது, அப்படி ஒரு மாற்றம் நிகழுமானால் சத்துணவுத் திட்டத்தைக் கல்வித் துறையிலே இருந்து மாற்றும் போது, இப்போதிருக்கும் மாவட்டக் கல்வி அதிகாரி பதவித் தரத்தில் தற்போது கள அதிகாரிகளாக அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களையும் சத்துணவுத் திட்டத்தோடு அனுப்ப முடியாத நிலையில் கல்வித்துறை இருக்கிற காரணத்தால், கல்வித்துறையிலே நிர்வாகப் பணியாளர்கள் குறைவாக இருக்கிற காரணத்தால், அவர்களை கல்வித்துறையிலேயே முதன்மைக் கல்வி அலுவலரின் தனி உதவியாளர், PA to CEO என்ற பதவியில் இருத்திக்கொண்டு, அவர்கள் மூலமாக இப்போது நடைபெறும் கல்வித்துறை மேற்பார்வைப் பணியை மேலும் சிறக்க வைக்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

18.10 மணி

அதுமட்டுமல்லாமல் அண்மையிலே Sports என்ற முறையில் விளையாட்டுத் துறையை வளர்ப்பதற்காக தமிழ்நாட்டில் 3 கல்லூரிகளில் விளையாட்டுக்கான பட்டப்படிப்பு உருவாக்கப்படுகிறது. அதேபோல ஒய்.எம்,சி.ஏ. கல்லூரி போன்ற உடற்பயிற்சிக் கல்லூரியில் உடற்பயிற்சித் தரத்தை வளர்ப்பதற்கான சில முயற்சிகளும், அதாவது புதிய வகுப்புகள் தொடங்க வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளும் இருக்கிறது. இதையெல்லாம் சேர்த்து உடற்பயிற்சித் துறையில், விளையாட்டுத் துறையில் இப்போது அந்தத் துறையில் உள்ளவர்கள் எடுத்துக்கொண்டு இருக்கிற முயற்சிகள் காரணமாக வளர்ச்சிக்கான பல பணிகள் ஏற்றுக்

கொள்ளப்பட்டு இருக்கின்றன. அந்தப் பணிகள் நிறைவேறினால் இந். விளையாட்டுத் துறை (Sports Department) நல்ல முறையிலே, சிறந் முறையிலே தமிழ்நாட்டுப் பிள்ளைகளை பயிற்சி பெற வைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. கல்வித் துறையோடு சேர்ந்த துறைகள் பல பல இருக்கின்றன. கல்வி வளர்ச்சியையொட்டி பண்பாட்டு வளர்ச்சித்துறையும் இருக்கிறது. அதையொட்டி இயல் இசை நாடக மன்றமும் இந்தத் துறையோடு நெருக்கமானதாக இருக்கிறது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையோடு அந்தத் துறை நடத்தப்பட வேண்டுமென்று அவரிடத்திலே கேட்டுக்கொள்ளப்பட்டது. இருந்தாலும் அதுவும் இந்த நிர்வாகத்தையொட்டி வருகிற ஒன்று.

அதேபோல எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், அதுவும் இந்தத் துறையோடு சேர்ந்தது. ஏனென்றால் இயற்கையாக மக்கள் பயன்படுத்துகிற மரபு வழிப்பட்ட எரிசக்திகள் எல்லாம் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு சேதம் அடைகிற காரணத்தால் இதுவரையில் மரபு வழியில் அல்லாமல், ஆனால் மக்களுக்குத் தேவையான இயற்கை சக்தி அதிகம் தரக்கூடிய சூரிய வெப்பம், சூரிய ஒளி, காற்று, இயற்கையில் உள்ள தாவர சக்தி, கழிவுப் பொருள் போன்றவை அபரிமிதமான எரிசக்தியை தம்முள் அடக்கிக் கொண்டு இருப்பதைக் கருத்தில் கொண்டு Wind Mill பல இடங்களில் ஏற்படுத்துவதற்கு, காற்று ஆலைகளை ஏற்படுத்தி அவை மூலமாக மின் சக்தி உற்பத்தி செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றிற்கு திருநெல்வேலி மாவட்டத்தில் கயத்தாறு போன்ற பகுதியில், அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்துக்கு செல்கிற கூடங்குளம் வட்டாரத்தில் எங்கெங்கு இயற்கைக் காற்று மிக அதிகமாகத் தொடர்ந்து வீசுகிற ஒருவாய்ப்பு இருக்கிறதோ அங்கு அந்தக் காற்று விசிறியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்கிற ஒரு முயற்சி இன்றைக்கு வேகமாக நடந்து கொண்டு இருக்கிறது.

இதுபோன்று தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மாதிரி செயற்பாடு முறையை மேற்கொண்டு அதன் மூலமாக கிராமத்து மக்கள் கூட சாண எரிவாயு சாதனங்களைக் கொண்டு தங்களுக்குத் தேவையான எரிசக்தியை உருவாக்கிக் கொள்கிற அந்த முயற்சி எல்லாம் இதிலே இடம் பெற்று இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட பல்வேறுவிதமான நிறுவனங்கள், அமைப்புகள், அறிவியல் வளர்ச்சிக்கான மையங்கள், பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம், மாநில அளவில் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கான அமைப்பு மன்றம், முதலான அமைப்புகள் செயற்படுகின்றன. தொழில் முனைவோர்களுக்கான ஆலோசனை வழங்குகின்ற தொழில் நுட்ப ஆய்வு மையம்

தர்மபுரி மாவட்டத்திலே இயங்குகின்றது. இப்படிப்பட்ட அறிவியல் எரிசக்தி தொடர்பு உடைய பணிகள் கூட இந்தத் துறையோடு தொடர்புடையதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாண்புமிகு உறுபபினர்கள் எடுத்து வைத்த அத்தனைக் கருத்துக்களுக்கும் நான் விடை சொல்லக்கூடிய அளவுக்கு நேரம் இல்லாவிடினும், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த அத்தனை கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. அந்தக் கருத்துக்களை இந்தத் துறையின் இயக்குநர்கள், இந்தத் துறையின் அலுவலர்கள் ஆய்வு செய்து, அவற்றிலே எவை எவை நிறைவேற்றத் தக்கதாக இருக்கின்றனவோ, நிறைவேற்றக் கூடியனவாக இருக்கின்றதோ அவற்றை நிறைவேற்ற முயற்சிப்பார்கள் என்பதை நான் தெரிவித்து, எனவே அந்த அளவில் அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் விடை அளித்ததாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கோ. வீரையன்: பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏறத்தாழ 28 மாவட்டக் கல்வி அலுவலகங்களிலே மாவட்டக் கல்வி அதிகாரிகள் இல்லாத நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்தப் பணி இடங்களை இந்தக் கல்வி ஆண்டிலேயாவது நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

18.15 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, காலையிலேயே நான் அதை விளக்கி விடை சொன்னேன். ட்ரிபியூனலில் இருக்கிற ஒரு வழக்கு காரணமாக 'பி' குரூப், 'ஏ' குரூப் என்று உள்ள ஆசிரியர்கள் ஏற்கெனவே அன்றைக்கு டிஸ்ட்ரிக்ட் போர்டில் இருந்து வந்த ஆசிரியர்கள், அரசாங்க ஆசிரியர்கள் ஆகிய இந்த இரண்டு பகுதியினர் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என்று இருக்கிறார்கள். அவர்களிலே ஒரு பிரிவினர் வழக்கு போட்டு, இப்போது டி.இ.ஓ. பதவிக்கு புரமோஷன் வழங்குவதாக இருந்தால் தங்களுடைய வழக்கிற்குத் தீர்ப்புச் சொல்லப்பட்ட பின்னர்தான் வழங்க வேண்டும் என்ற தடை உத்திரவை அவர்கள் பெற்று இருக்கிறார்கள். தீர்ப்பாயம் என்று சொல்லப்படுகிற ட்ரிப்யூனலிலே வழக்கு இருக்கின்ற காரணத்தால், அவர்கள் விதித்த தடை உத்தரவு இருக்கின்ற காரணத்தால், அதை நீக்குவதற்கு அரசு தொடர்ந்து முயற்சிக்கிறது. தீர்ப்பாயம், விரைவிலே தீர்ப்பு வழங்கப் போகிறோம், வழங்கியவுடன் நீங்களே முடிவெடுத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்துள்ளார்கள். விரைவாக தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். டி. இ. ஓ. நியமனம் ஆகாதது இந்தத் துறையினால் ஏற்பட்ட துவக்கம் அல்ல என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் தனியார் மேல்நிலைப் பள்ளிகளை இப்பொழுது நடத்தினால் மூன்றாண்டுகளுக்குப் பிறகு அரசு அதற்கான மானியம் வழங்குமென்ற ஒரு செய்தியை இங்கே சொன்னார்கள். ஏற்கெனவே மூன்றாண்டுகளாக நடத்திக் கொண்டிருக்கின்ற தனியார்களுக்கு இந்த ஆண்டு வழங்க வேண்டிய மானியத் தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; தலைவர் அவர்களே இப்பொழுது நான் திட்டவட்டமாகத் தெரிவித்ததைப்போல அப்பொழுது தெரிவிக்கப்படவில்லை. சிலபேர் நிரந்தரமாக நடத்துவதாகவும் பெற்றிருக்கிறார்கள்; சிலபேர் இரண்டு ஆண்டுகள் நடத்துவதாகவும் பெற்றிருக்கிறார்கள். அப்பொழுது எந்த அடிப்படையிலே பெற்றுக்கொண்டார்களோ அந்த அடிப்படையிலே பரிசீலிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளி, கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் போன்றவற்றிலே பணியாற்றுகின்ற அந்த ஆசிரியர் பெரு மக்களுடைய பணிப் பாதுகாப்பு குறித்து இந்த அரசினுடைய நிலை என்னவென்பதை மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; தலைவரவர்களே, இப்பொழுது உறுப்பினருடைய நிலைதான் என்னுடைய நிலையும்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு கொள்கை அறிவிப்புகள் இருந்தாலும், கொடைக்கானலில் அமைக்கப்பட்டிருக்கிற அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டுமென்ற முறையில்தான் மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அதை ஆரம்பித்தார்கள் அதை இப்பொழுது மாற்றி, சென்னைக்குக் கொண்டு வர வேண்டுமென்ற நிலையை எடுத்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. மீண்டும் பரிசீலனை செய்து அந்த பல்கலை கழகத்தை மாற்றாமல, கொடைக் கானலிலேயே நடத்துவதற்கு ஆவனசெய்ய மறுபரிசீலனை செய்வதற்கு முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்; மாண்புமிகு தலைவரவர்களே, அந்தப் பல்கலைக் கழகம் கொடைக்கானலிலேயே இருக்கவேண்டுமென்றுதான் நான்கூடத் தொடர்ந்து ஆசைப்பட்டேன். ஆனால் அந்தப் பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகின்றவர்கள்

அதனுடைய துணைவேந்தர் உட்பட, கொடைகானலில் இருந்தால் மாணவிகள் வந்து தங்க மாட்டார்கள், ஆய்வுகள் நடக்காது பல்கலைக் கழகக் கட்டிடம் கட்டுவதற்கு நிதி கிடைத்தால் கூட, கட்டுவதற்குப் போதுமான இடமில்லை. தண்ணீர்த் திட்டம் நிறைவேற்ற வேண்டுமானால் கூட தேவையான தண்ணீருக்கு ஏறத்தாழ ஐம்பது, அறுபது இலட்சம் ரூபாயிலே திட்டம் வேண்டும். ஒரு சாலை போடவேண்டுமானால் எண்பது இலட்சம் ரூபாய் ஆகும். இதையெல்லாம் பல்கலைக் கழகத் திட்டம் என்று வைத்துக்கொண்டு, நாங்கள் செய்தாலும்கூட அதற்குப் பின்னரும் கொடைகானலில் வந்து தங்கியிருந்து இந்தப் பல்கலைக் கழகத்தை நல்லமுறையில பயன்படுத்திக்கொள்ளக் கூடியவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும், என்று துணைவேந்தராக இருக்கிற அம்மையார் உட்பட பலரும் தெரிவித்ததற்குப் பின்னர் தான்,வேறுபல ஆலோசனைகள் நடத்திப் பார்த்து, எதுவும் ஏற்றதாக அமையாத நிலையில், பல்வேறு மகளிர் கலலூரிகள் இருக்கின்ற வட்டாரத்திலேதான் ஒரு மகளிர் பல்கலைக் கழகம் மகளிருக்காக மட்டும் சிறப்பான முறையிலே பல்வேறு ஆய்வுகளை நடத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும் என்ற காரணத்தால், Patronage தேவை, புரவலர்கள் சூழல் தேவை என்பதால் இடமாற்றம் தீர்மானிக்கப்பட்டது. பல்கலை கழகம் இருந்து, அதற்கு ஆதரவான சூழ்நிலை இல்லா விட்டால், அது கொடைக் கானலிலே அல்ல, ஊட்டியிலே இருந்தாலும் பயன்படாது. எனவே அது பயன்படுவதற்கேற்ற இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அது சென்னையிலே அமைவது அதிக வாய்ப்புடையதாக இருக்குமென்றுக் கருதுகிறேன். It is a peculiar type of University intented for Women only. It is not like any other University. என்று உணர்ந்துதான் சென்னையில் அமைத்திட எண்ணப்பட்டுள்ளது. மற்ற பல்கலைக் கழகம் என்றால் எங்கிருந்தாலும் நடக்கும். மகளிர், பலபேர் படித்தவர்கள் வந்து இருந்து பயன் படுத்தினால் தவிர இதில் ஒரு வளர்ச்சியைக் காண முடியாது. அந்த அடிப்படையிலேதான் தொடர்புடையோர் அனைவரும் ஏறத்தாழ ஏற்றுக்கொண்ட கருத்தாக இந்தக் கருத்து இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. உ.ரா. வரதராசன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூலகத்திற்கான கட்டிடங்களைப் பற்றியெல்லாம் கல்வியமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். நூலகத்திற்குத் தேர்வு செய்யப்படுகின்ற நூல்களைப பற்றி பிரச்சினைகளெல்லாம் இங்கே வந்தன ஆகவே, அதைப் பொறுத்து, அனைத்துக் கட்சிகளினுடைய பிரதிநிதிகள், எழுத்தாளர் பெருமக்கள், வெளியீட்டாளர்கள், அவர்களுடைய பிரதிநிதிகள், கல்வித்துறையினுடைய வல்லுனர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு உயர்மட்ட ஆலோசனைக் குழு அந்த நூல்களைத் தெரிவு செய்வதுபற்றி ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவரவர்களே, ஏற்கெனவே ஒரு உயர் மட்டக் குழுவில் துணைவேந்தர் திரு. குழந்தைசாமி தலைமையில் 10, 12 பேராசிரியர்கள், கல்லூரி முதல்வர்களெல்லாம் இடம் பெற்றிருக்கிறார்கள். ஒரு பெரிய குழு இருக்கிறது. குழு ஒவ்வொரு புத்தகத்தையும் பக்கம் பக்கமாகப் புரட்டுவதாகயிருந்தால் பேராசிரியர் வேலையை விட்டுவிட்டுத்தான் வர வேண்டும். இருந்தாலும்கூட அவர்கள் வகுக்கின்ற பொது முறை—பொது நெறிமுறை அடிப்படையிலேயும், எழுத்தாளர்கள் தாங்களே அச்சிட்டு வெளியிடுகிற புத்தகங்களைச் சற்று அதிக எண்ணிக்கையிலே வாங்குகிற முறையிலேயும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏதேனும் குற்றம் குறைகள் இருந்தால் அது நிச்சயமாக பரிசீலிக்கப்படும் நிவர்திக்க வழி செய்யப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, 439 சிற்றூர்களில், 500 க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இடங்களில் புதிய ஓராசிரியர் பள்ளிகள் துவங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் சொல்லும்போது 300 மக்கள் தொகை உள்ள கிராமங்களிலும் ஓராசிரியர் பள்ளிகளைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அப்படிப்பட்ட கிராமங்கள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலேயே நான்கு கிராமங்கள் அப்படி உள்ளன. தொடர்ந்து முயற்சி பண்ணினாலும் பள்ளிகள் வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, அதுசம்மந்தமாக அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: துணைத்தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முயற்சிகள் படிப்படியாக நடக்கவேண்டும். படிப்படியாக என்ற வார்த்தையே இதற்காகத்தான் கண்டுபிடிக்கப்பட்டது. 500–லிருந்து 400–க்கு வர வேண்டும். 400–லிருந்து 300–க்கு வர வேண்டும். அப்புறம் உங்கள் ஊருக்கும் வரும்.

திரு. கோ. பூவராகன்: தலைவர் அவர்களே, தற்போது செகண்டரி கிரேட் ஆசிரியர்களை மிகவும் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் பகுதியில் அவரவர்களுக்கு உள்ள விகிதாச்சாரப்படி எடுக்கவில்லை என்று அறிகிறேன். அதை வற்புறுத்தி அந்த விகிதாச்சாரத்தின்படி எடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா? அடுத்து, அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். தனியார் துறையில் ஏதாவது பணம் அளித்தால் கல்லூரிகளை ஆரம்பிப்பதில் சங்கடம் இல்லை என்றார்கள். செங்கல்வராயன் பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூட்டில் ஏராளமான பணம் இருக்கிறது. அங்கே இந்த ஆண்டே ஒரு பொறியியல் கல்லூரி ஆரம்பிக்க என்ன சங்கடம் இருக்கிறது? அவர்கள் மனது வைத்தால் ஏன் அதை நடத்திக்கொடுக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்; துணைத் தலைவர் அவர்களே, இரண்டு கருத்துகளுக்கும் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, ஆசிரியர்கள் தேர்வில் வகுப்புவாரி அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பின்தங்கியவர்கள், பின்தங்கியவர்கள் பொது என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். என்னிடத்தில் துறையினர் கூறிய விவரப்படி ரோஸ்டர் முறையில், மோஸ்ட் பாக்வார்ட் என்பது இடம் பெற்று இருக்கிறது. ரோஸ்டர் முறை என்பது இன்னும் டீடெய்ல்ட் விவரமாக ஆனது. 1,2,3 என்றால் ஒன்று எந்த கம்யூனிடி இரண்டு எந்த கம்யூனிட்டி, மூன்றுஎந்தஎந்த கம்யூனிட்டி என்று ரோஸ்டர் முறையில் இருக்கிறது. அதன்படி செய்கிறோம் என்று அவர்கள் எனக்கு சொன்னார்கள். அதிலே எம்.பி.சி இடம் பெற்றிருக்கிறது. அப்படியும் தவறி இடம் பெறவில்லை என்றால் அடுத்த முறை சட்டத்தில் தேவையான திருத்தங்களைக் கொண்டுவந்து, விதிமுறைகளைத் திருத்தி எம்.பி.சி. இடம் பெறச் செய்யப்படும். எனக்குத் தெரிந்தவரையில் எம்.பி.சி விகிதாச்சாரப்படி இடம் பெற்று இருப்பதாக இலாகாவினர் தெரிவித்தார்கள். அப்படி இடம்பெறவில்லை என்றால் அதை விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து செங்கல்வராயன் பாலிடெக்னிக்கை பொறியியல கல்லூரியாக மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அது ஒரு ஆலோசனை. ஆனால், அரசு உதவி செய்யவேண்டுமென்று அந்த வேண்டுகோளில் இருக்கிறது. 30 லட்சம் ரூபாய் பாலிடெக்னிக்கிற்கு உதவித் தொகை வழங்கப்பட்டால், பொறியியல் கல்லூரியானால் 60 லட்சம், 70 லட்சம் ரூபாய் வழங்கவேண்டுமென்ற நிலை வரும். அதற்கு நிதி இருக்குமானால் தடையே கிடையாது. அதற்கு அவர்களிடத்தில் நிதி இல்லையென்றால் பரிசீலனை செய்து, முடியுமானால் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் என். பழனிவேல், ஜி. பழனிச்சாமி, டி.சி. விஜயேந்திரையா, எஸ்.டி. உகம்சந்த், எஸ்.எஸ். ராமசுப்பு ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; பேரவை முன்னுள்ள கேள்வி; ''மானியக் கோரிக்கை எண் 17-கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 10,42,02,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.